

வி. தெந்திரியாக்கோவ்

மருமகன்

பியோதர் சொலவேய்க்கோவ் சிரிப்பும் மகிழ்ச்சியும் மிக்க விறுவிறுப்பான இளைஞன். எல்லோருடனும் நன்கு பழகக்கூடியவன். தொலைவிலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஸ்தேஷா ரியாஷ்கிஞ என்ற ஒரு பெண்ணை அவன் காதலிக்கிறுன்.

இருவரும் மணம் முடித்துக் கொள்கிறுர்கள். என்றென்றும் இன்பமாகவே வாழ்ந்திருக்க வேண்டும். ஆனுல் ரியாஷ்கின்களுடைய குடும்பத்தின் அற்பத்தனமும் பேராசையும் பியோதருக்குச் சிறிதும் ஒத்துவரவில்லை.

பியோதரால் அவனது புதிய இல்லத்தையும் மனைவியையும் விட்டு விலகக் கஷ்டமாய்த்தான் இருக்கிறது. ஆயினும் வேறு வழியில்லை, அவன் பிரிய வேண்டியதாகிறது.

இளம் எழுத்தாளர் தெந்திரியாக்கோவுக்கு 1954ல் பெயரும் புகழும் பெற்றுத் தந்த இந்தப் புதினத்தின் கதைச் சுருக்கம் இதுவே.

பத்திரிகைகளிலும் இலக்கிய வட்டாரங்களிலும் வாசகப் பெருமக்களிடையிலும் மிகவும் விரிவாக விவாதிக்கப் பெற்ற புத்தகமாகும் இது.

வி. தெந்திரியாக்கோவ்

மருமகன்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா
தயாரிப்பு: யு. ரெப்ரோவ்

Вл. Тендряков
НЕ КО ДВОРУ
на тамильском языке

ஒரு வாரமாய் வெண்பனி சற்று உருகி வந்தது. ஆனால் இப்பொழுது இலேசாக வீசிய காற்று, இளகிய வெண்பனிப் பெருக்குகள் இறுகப் போது மானதாய் இருந்தது. இரவு வானத்தில் விண்மீன் கள் குளிரொளி பரப்பிக் கண் சிமிட்டின. பசியின் கனல் வீசும் ஓநாய்க் கண்களையொத்த பச்சைப் பொறிகள் ஜொலிக்க நிலவொளியில் வெண்பனி மாயமாய்ப் பளிச்சிட்டது.

மணி சரியாக இரண்டு—இரவின் மிகவும் நிசப் தமான நேரம். கிராமத்தில் ஒரு ஜீவனையும் காண முடியவில்லை. நாய்களுங்கூட மறைவிடங்களில் பதுங்கிவிட்டன. தேநீர் குடிப்பதற்காக வீட்டுக் குச் சென்ற வயது முதிர்ந்த காவலாளர், கணப் பொழுது கண்ணயரலாமென்று கணப்படுப்பருகே படுத்துவிட்டார் போலும். வெண்பனி மூடிய கூரை வெள்ளி போலப் பளபளத்தது. இருண்ட வானத்தை நோக்கி எழுந்து நடுவழியில் உறைந்து விட்ட நீராவி போல, மரங்கள் நின்றுகொண் டிருந்தன. கிராமம் ஆள் அரவமின்றி சொப்பன உலகின் கோலம் பூண்டு சிந்தையைக் கவர்ந்தது.

ஒரேவொரு வீட்டில் மட்டும் விளக்குகளின் ஒளி எல்லா சன்னல்களிலும் பிரகாசித்தது; சன்னல்களின் குறுக்கே நிழல்கள் பாய்ந்தோடின; இரட்டைக் கண்ணாடிகளையுடைய கதவுகளையும் தாண்டிக் கொண்டு பேச்சுக் குரல்கள் வெளியே கேட்டன.

கதவு படீரென அடித்துக்கொண்டது. கிழவர் ஒருவர் தெருவாயிலின் முகப்பிலே வந்து நின்றார்.

கம்பங்களைப் பிடித்துக் கொண்டு தடுமா ிய படி படிகளில் இறங்கினார். பலர் காலிலும் மிதி பட்டு உருவான பாதையில் தள்ளாடி நடந்து வந்து இரு புறமும் சாய்ந்தாடியவாறு நின்றார். கரகரப்பான குரலில் அவர் பாடத் தொடங் கினார்: ''பொன் மலை என் மலையானால்....'' ஆனால் நிசப்தத்தால் கலக்கமடைந்து பாட்டை நிறுத்தி விட்டு, தட்டுத்தடுமாறிய வண்ணம் வாயில் முகப்பின் பக்கம் திரும்பிப் பார்த்தார். குப்புறக் கவிழ்ந்த காலி வாளி ஒன்று நடைபாதையில் தட தடத்தது; கதவு திறக்கப்பட்டது. ஒளிப் பிரவாள மாகிவிட்ட திறந்த வாயில் வழியே கூட்டமாய்ப் பலரும் வெளியே வந்தனர். உலர்ந்த வெண்பனி அவர்களுடைய காலுக்கடியில் நறநறத்தது.

''தாத்தா! இக்னத் தாத்தா! எங்கே இருக் கிறீங்க?''

''கூச்சலிட்டுக் கூப்பிட வேண்டியதில்லை, பக்கத்திலேதான் நிற்கிறான்—துள்ளிக் கிளம்பத் தயாராயிருக்கிறான்.''

''இவானவ்னு வீட்டுச் சரக்கு நல்ல வேகங் கொண்டதுதான்!''

''உனக்கு நல்லாத் தெரிந்திருக்கணும் — வேண்டிய மட்டும் மூழ்கி எழுந்தாயே!''

பலத்த குரல்கள் இரவின் நிசப்தத்தையும் விந்தையையும் பிளந்து கொண்டு ஒலித்தன.

விடைபெற்றுக் கொண்ட விருந்தினர்களை வழியனுப்புவதற்காக ஒரு இளைஞனும் ஒரு பெண் ணும் ஒரே மேல்கோட்டினுள் ஒண்டிக் கொண்டு வெளியே வாயில் முகப்புக்கு வந்தனர்.

''பெரியவரை நேரே வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று அந்த இளைஞன் கூவினான். ''எங்காவது வெண்பனியிலே சுருட்டிப்படுத்துத் தூங்கிவிடுவார். இரவில் அவர் இங்கேயே இருந்து விட்டுப் போவதுதான் நல்லது.''

''நானா?... வேண்டாம், வேண்டாம்!... நான் நன்றாய் நடக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறேன்! ஆமாம்!''

''சரி, சரி... வா தாத்தா.... எல்லாப் பேறும் பெற்று இன்பமாய் வாழுங்கள்!''

''தொட்டில் நிறையட்டும்!''

உலர்ந்த வெண்பனி கீச்சிட்டு நறநறத்து எழுப்பிய ஒலி தொலைவிலே மெள்ள மறைந்தது. கிழவரின் கரகரத்த குரல் அங்கிருந்து மிதந்து வந்தது: ''பொன் மலை என் மலையானால்....'' இடையில் அப்படியே நின்றுவிட்டது. திரும்பவும் கிராமத்தில் நிசப்தமும் இனிமையும் குடிகொண்டன.

''ஸ்தேஷா, எல்லாம் ஒரு வகையாய் முடிவடைந்தது... இனி நம்ம வாழ்க்கை ஆரம்பமாகிறது'' என்றான் அந்த இளைஞன். மெய் சிலிர்த்தபடி அவள், கோட்டினுள் அவனுடன் மேலும் நெருக்கமாய் ஒண்டிக் கொண்டாள்.

திருமணம் ஆர்ப்பாட்டமின்றி அமைதியாக நடைபெற்றது. விருந்தினர்கள் அதிகம் பேர் இல்லை. அவர்களும் இரவெல்லாம் தொடர்ந்து கொண்டாடுவதற்குப் பதிலாய், சற்றுச் சீக்கிரமாகவே முடித்துவிட்டு விடைபெற்றுக் கொண்டனர்.

2

டிராக்டர் வேலைக் குழுவின் தலைவனான பியோதர் சொலவேய்க்கோவ் இனிய சுபாவமுடைய குதூகலமான இளைஞன், எளிதில் சிரித்து மகிழக் கூடியவன். வேலை முடிந்ததும் நடனமாடுவதென்றாலும், வாட்டசாட்டமான டிரைவர் ஒருவருடன் தனது பலத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதென்றாலும் உடனே தயாராய்க் கிளம்பிவிடுவான். உயரமானவன், சுறுசுறுப்பும் துடிப்பும் மிக்கவன், மென்னிறச் சுருட்டை முடிகளுடையவன். நன்கு நடனமாடுவான், மற்போரிலும் சிறந்தவன், பெண்களின் அபிமானத்துக்குரியவன்.

பியோதரின் வேலைக்குழு பணி புரிந்து வந்த குரொம்த்ஸோவோ கிராமத்தில் கிராம சோவியத்தின் செயலாளராக வேலை செய்த கலீனா ஸிலோபினாவும், பள்ளி ஆசிரியையாக இருந்த உருட்டை முக ஸோயா அலெக்ஸாந்திரவ்னாவும் நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்த போதெல்லாம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்வது வழக்கம்.

''அற்பப் புத்தி கொண்ட அசட்டுப் பெண்'' என்பாள் முன்னவள். மற்றவள் மூடிமெழுகாமலே கூறிவிடுவாள்: ''தளுக்கு நடை நடந்து ஆடவர் கவனத்தைக் கவர முயல்வதே இவள் தொழில்!'' இதைவிடப் பெருங் குற்றம் இருக்க முடியாதென்று இருவருக்கும் நினைப்பு. ஆனால் பியோதர் அவ்வாறு நினைக்கவில்லை. முதல் நாள் மாலை அவன், பைன் தோப்பு வழியே ஸோயாவை அழைத்

துச் சென்று பள்ளிக்கூடக் கட்டிடத்துக்குக் கொண்டுபோய் விடுவான். மறு நாள் மாலை கலீனு வைக் கிராமத்தின் எதிர்முனையில் இருந்த கொடி படர்ந்த அவளுடைய வீட்டுக்கு அழைத்துச் செல்வான். ஆனால் இயந்திர, டிராக்டர் நிலையத் துக்கு விவசாய நிபுணராக வேலைக்கு வந்த புதிய பெண், பியோதரை எதிர்பார்த்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எடுப்பான உயர்-கழுத்துடைய ஆடை அணிந்து கொண்டதை அவர்கள் அறிந் திருந்தால் இருவரும் என்ன சொல்லியிருப்பார் களோ தெரியாது. இந்தப் புதிய பெண் பியோத ரைச் சந்தித்ததும் ஏதோ தற்செயலாகக் கூறுவது போல் சொல்வாள்:

''பியோதர், மெய்யான திறமை உன்னிடம் நிறைய இருக்கிறது, தெரியுமா? அதை ஏன் வளர்த்துக் கொள்ளாமல் அசட்டையாய் இருக் கிறாய்? இன்று ஒத்திகைக்காக மன்றத்துக்குப் போக லாம் வா.''

இது போன்ற நேரங்களில் பியோதர் தன் னுடைய ஆற்றல்கள்மீது தனக்குத் தனி மதிப்பு உண்டாவதை உணர்வான். ஒத்திகைக்குச் சென்று 'ஜிப்ஸி' நடனம் ஆடுவான். ஒத்திகை இல்லாமற் போனால், எவ்வித தயக்கமுமின்றித் திரைப்படங் கள் பார்க்கத் தயாராய்க் கிளம்பிவிடுவான்.

ஆனால் லாரி டிரைவர் வாஸ்யா லியுபீமவின் சொற்களில் சொல்வதெனில், பியோதர் ''அப் படியே சக்கரத்தின் இருசுவரை ஆழமாய் அழுந்திவிட்ட'' காலம் ஒன்று வந்தது.

குளிர்காலம் ஆரம்பித்து முதன்முதலாய் வெண்பனி பெய்ததும் குரொம்த்ஸோவோ கிராமம் வழக்கமான அதன் ''போரடி விழா'' கொண்டாடும். விழாவின் பெயர் பழங்காலத்தியதுதான், ஆனல் விழாவைக் கொண்டாடும் முறை நவீனமானது. கிராம மன்றத்தில் சொற்பொழிவுகளும் அமெச்சூர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். பிறகு நாற்காலிகளைத் தள்ளி வைத்துவிட்டு மேஜைகளைப் போடுவார்கள்; விருந்துண்டு பானங்கள் அருந்துவார்கள். பொழுது விடியும் வரை இளைஞர்களும் யுவதிகளும் நடனமாடுவார்கள்.

பல மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமங்களிலிருந்தும் குக்கிராமங்களிலிருந்தும் ஆடவரும் பெண்டிரும் இந்த நடனங்களுக்கு வருவார்கள். யாவும் முறைப்படி மாண்புடன் ஆரம்பமாகும், பிறகு பெருங் கூச்சலும் கும்மாளமுமாய் முடிவுறும். ரேடியோலாவை மூலையிலே தள்ளிவைத்துவிட்டனர். பேத்யா ரீழிக்கவ் அவருடைய அக்கார்டியன் வாத்தியத்தை வெளியே எடுத்தார். நடனமாடியோர் காலைத் தட்டி எழுப்பிய ஓசையில் சன்னல்கள் படபடத்தன. பியோதர் அதிகம் ஆடவில்லை. திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டதற்குப் பிற்பாடே நடனமாடத் தொடங்கினன். ஆனல் தொடங்கியதும், எல்லோரும் பரவசத்துடன் பல காலம் பேசத் தக்க வகையில் சிறப்பாய் ஆடினன்.

காய்கரொதீஷ்சே வட்டாரத்தில் சுஹ்ஞ ஆற்றுக்கு அப்பாலுள்ள சுகப்லீனவோ கிராமத்

திலிருந்து சிமோவ் என்ெருரு டிராக்டர் டிரைவர் வந்திருந்தான். வாஸ்யா லியுபீமவைத் தவிர வேறு யாருக்கும் அவனைத் தெரியாது. சிமோவுடன் நீல நிறப் பட்டாடை அணிந்த ஒரு பெண்ணும் வந்திருந்தாள் — எழிலாடும் இன்முகமும் மேல்நோக்கிய மோவாயும் விம்மியெழுந்த மார்பும் அமைதி குலையாத சாவதானமான அங்க அசைவுகளுமுடையவள். பெருந்தலையும் பருத்துப் புடைத்த கன்னத்து எலும்புகளும் கொண்டு லட்சணமின்றி கட்டைகுட்டையாயிருந்த அந்த சிமோவுக்குச் சிறிதும் பொருத்தமற்றவளாகக் காணப்பட்டாள். வழக்கத்துக்கு மாருய் இம்முறை பியோதர் அதிக வற்புறுத்தலின்றியே நடனமாட முன்வந்து விட்டான். வட்டத்தினுள் புகுந்து ருஷ்ய நடனம் ஒன்றை ஆடத் தொடங்கினுன். கால்களை மடித்து நுனிவிரல்களில் அமர்ந்தும் தாவிக் குதித்தும் ஆடினுன்; பிறகு கணீரென சீழ்க்கையடித்துக் குதிகால்களைத் தரையில் தட்டிச் சரளமாய்த் தாளம் போட்டு ஆடினுன்; பரிச்சயமில்லாத அந்தப் பெண்ணெதிரே சென்று கடைசி முறையாகத் தட்டித் தாளமிட்டு நின்று, அவளைத் தன்னுடன் சேர்ந்தாடும்படி அழைத்தான். அவள் சிறிதும் பதட்டமின்றி அமைதி குழைய அசைந்து, முதுகிலே தொங்கிய அந்த நீண்ட சடை கணப் பொழுதுகூட அதிராத வண்ணம் அவ்வளவு இலாவகமாய் ஆடி, வட்டத்தைச் சுற்றி வந்து சிமோவின் பக்கத்தில் தனக்குரிய இடத்தில் திரும்பவும் நின்ருள்.

பொது நடனம் ஆரம்பமானதும் பியோதர் நேரே அந்த நீல ஆடை அணிந்த பெண்ணிடம் சென்றான்.

நீண்ட இமைகளையுடைய அவள் கண்கள் அகன்று விரிந்து நீலமாயிருந்தன. வெளியே இருந்த கடுங்குளிரால் சிவந்துவிட்ட அவளுடைய கன்னங்களிலிருந்த சிவப்பு இன்னமும் மறைய வில்லை. அவளுடைய நீல ஆடையின் கழுத்துக் குள் தெரிந்த உட்குழிவு அவன் கண்ணில் பட்டது. ஆனால் பியோதர் அவளுடன் நடனமாடிய முழு நேரமும், வீட்டுப் புகையிலையின் மெல்லிய நெடி இருவரையும் பின்தொடர்வதுபோல் அவனுக்குத் தோன்றியது.

''சுகப்லீனவோவில் எல்லா இளைஞர்களும் இப்படித்தானா?'' என்று அவன் சிழோவின் பக்கம் தலையை ஆட்டிக் காட்டி, குறும்புத்தனமாய் அவள் காதுக்குள் கேட்டான்.

''இப்படித்தானா என்றால்?''

''எலும்பும் தோலுமாய், அரைப்பட்டினி கிடந்த மாதிரி.... இங்கே குரொம்த்ஸோவோ வில் பார்த்து இன்னும் கொஞ்சம் நல்ல ஆளாய்ப் பிடித்துக் கொள்ளக் கூடாதா?''

அவளுடைய கண்கள் இளநகை புரிந்தன, ஆனால் உடனே அவற்றின்மீது இமைகளைத் தாழ்த்திக் கொண்டு விட்டாள்.

''உன்னைப் போல் ஒரு ஆளையா?''

''ஆமான், ஏன் கூடாது?''

நடனம் முடிவடைந்ததும் அவள் சிழோவிடம்

திரும்பிச் செல்லாமல், ஏதோ தற்செயலாய் நிற்பவள் போல் பியோதரின் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தாள். தன்னுடைய நினைப்பு தவருகி விடுமோ என்ற மனக் கிலேசம் சிறிதுமின்றி அமைதியாக இருந்தாள். பக்கத்தில் தான் இருப்பது பியோதருக்கு இன்பமளித்தது என்பதில் அவளுக்குத் துளிக்கூட சந்தேகமில்லை. அவள் நினைத்தது தவறல்ல — அன்று மாலை முழுதும் அவன் அவளை விட்டு நகரவேயில்லை.

ஒரு மூலையிலிருந்து சிமோவின் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன. ஆனால் பியோதர் கிஞ்சிற்றும் அசங்கவில்லை. யார் வேண்டுமென்று அவள் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்?

வெண்பனி பெரும் பெரும் திவலைகளாய் மெள்ள விழுந்து அவளுடைய பொசுபொசுப்பான சால்வையிலும் எடுப்பான ஆட்டுத்தோல் கோட்டின் தோள்களிலும் படிந்தது. பியோதர் அவளுடைய கரத்தை மெள்ள அழுத்தினன். அவளுடைய வீட்டுக்குப் போய்ச் சேர நெடுந் தொலைவு நடக்க வேண்டியிருந்தது. இருவரும் வாய் பேசாமல் அடி பிறழாது இணையாக நடந்தனர். அவளுடைய மௌனத்தில் மதிப்புக்கும் சிறப்புக்குமுரிய ஏதோ ஒன்று தொனித்தது. பியோதர் தனக்குப் பழக்கமில்லாத ஒரு கூச்சத்தால் தான் பீடிக்கப்பட்டதை உணர்ந்தான். வழக்கமான அவனுடைய வேடிக்கைப் பேச்சும் சிரிப்பும் இப்பொழுது பொருத்தமற்றவையாகத் தோன்றின. முன்னால் ஒரு சில தப்படிகளுக்கு மேல் அவர்களால்

பார்க்க முடியவில்லை; பொலபொலவென விழுந்த வெண்பனி அவர்களை யாவற்றிடமிருந்தும் துண்டித்து ஒதுக்கிவிட்டது. அவர்களுடைய காலடி ஓசையையுங்கூட மந்தமாக்கிவிட்டது. ஒளி வெள்ளத்தில் திகழ்ந்த மண்டபமும் அதன் இசையும் கூச்சலும் சிரிப்பொலியும் இரவில் கண்ட கனவு மாதிரி பின்தங்கிவிட்டன. இப்பொழுது அவர்கள் வெண்பனிப் பெருக்கினிடையே அமைதியானதோர் உலகில் தனிமையில் விடப்பட்டது போலிருந்தது. ஆனால் இது அவர்களுக்கு அச்சமூட்டுவதாயில்லை, கதகதப்பான இன்ப உணர்ச்சியே ஊட்டிற்று—ஏனெனில் இருவரும் சேர்ந்தல்லவா இருக்கிறார்கள், இதைவிட வேறு என்ன வேண்டும்?

அவளுடைய சொந்த கிராமத்துக்கு பியோதர் அவளை அழைத்துச் சென்றான். இருவரும் பிரியாவிடை பெற்றுக் கொண்டனர். இருட்டில் அவளைத் தன்னருகே இழுத்து அவளுடைய குளிர்ந்த கன்னத்தில் கண்ணுக்கு நேர் கீழே அவன் முத்தமிட்டான். திரும்பவும் அந்தத் தூய வெண்பனிக்காற்றில், மக்கிய புகையிலையின் இலேசான நெடி வீசுவதை உணர்ந்தான். ஆனால் இதுவும்கூட இன்பகரமாய்த்தான் இருந்தது—கிராம வீட்டில் குடும்ப வாழ்க்கையின் சுகானுபவத்தையே இது அவனுக்கு உணர்த்திற்று.

கலினா ஸ்லோபினாவும் ஸோயா அலெக்ஸாந்திரவ்னாவும் திரும்பவும் நண்பர்களாகிவிட்டனர். இனி அவர்களிடையே தகராறு ஏற்பட வழி

யில்லை—இருவரில் யாரையும் இப்பொழுது பியோதர் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் விடவில்லை. தவருமல் இரண்டு நாளுக்கு ஒரு முறை அவன் பன்னிரண்டு கிலோமீட்டர் நடந்து சுகப்லீனவோவுக்குச் செல்வது வழக்கமாகிவிட்டது.

கலீஞவுடனும் ஸோயாவுடனும் இயந்திர, டிராக்டர் நிலையத்தின் விவசாய நிபுணருடனும் அவனுக்கிருந்த உறவு வெறும் விளையாட்டே யன்றி உண்மை விவகாரமல்ல.

ஸ்தேஷா மாற்றமின்றி எப்பொழுதும் அவனை அதே முறையில்தான் வரவேற்ருள். அவனுடைய கையைப் பற்றித் தனது மிருதுவான கதகதப்பான கைகளில் வைத்துக் கொண்டு, கவிழ்ந்த இமைகளுக்கு அடியிலிருந்து இதமான அன்பைப் பொழியும் பார்வையால் அவனை நோக்குவாள். உன்ஞல் என்னைவிட்டுப் பிரிய முடியாது, என்னுடன் இருப்பது உனக்கு இன்பமாயுள்ளது எனக்குத் தெரியும், நானும் இன்பமடைகிறேன், அதை நான் மறைக்க விரும்பவில்லை—என்று அவனிடம் கூறுவது போலிருக்கும், அந்தப் பார்வை.

ஒரு நாள் பியோதர் தனது நண்பன் வாஸ்யா லியுபீமவிடம் சற்று வெளிப்படையாகவே தன் மனக்குறையைத் தெரிவித்துவிட்டான்: ''இந்த ஸ்தேஷா நல்ல பெண்தான், ஆஞல் வாழ்வின் சலசலப்பையும் துடிப்பையும் அவளிடம் அதிகம் காண முடிய்வில்லை. பேச எதுவும் இல்லை போலிருக்கிறது—வாய் திறக்க மாட்டேன்கிருள்.'' இதைச் சொல்லியதும் ஏன் இப்படிப் பேசினேம்

என்று மனத்துக்குள் வருத்தப்பட்டுக் கொண்டான். அடுத்த ஒரு வாரத்துக்கு இது பற்றி அவனுக்கு வெட்கமாயிருந்தது. தான் சொன்னது ஸ்தேஷாவின் காதுக்கு எட்டிவிடுமோ என்று அஞ்சினான். விபரீதமாகத்தான் இருந்தது — அவன் நெஞ்சு படபடக்கவில்லை, இரத்தவோட்டமும் ஒழுங்காய்த்தான் இருந்தது; ஆனால் ஸ்தேஷாவைப் பார்க்கவில்லையெனில் நாள் முழுதும் தவியாய்த் தவிக்க நேர்ந்தது! அவனை ஏதோவொன்று அவளிடம், கதகதப்பான அவள் கைகளிடம், அமைதி குடிகொண்ட அந்தக் கண்களிடம் இழுத்துச்செல்வது போலிருந்தது. ஆகவே இரண்டு நாட்களுக்கு ஒரு முறை, தவறாமல் அவன் பன்னிரண்டு கிலோமீட்டர் நடந்து அங்கே சென்றுவிட்டு, மறுபடியும் பன்னிரண்டு கிலோமீட்டர் நடந்து திரும்பி வந்தான்.

கிராமத்தின் ஓரத்தில் உயரம் குறைவாய்க் கட்டைகுட்டையாய் இருந்த ஒரு வீட்டில் அவள் வசித்து வந்தாள். கிராம வெண்ணெய் ஆலையில் சரிபார்க்கும் குமாஸ்தாவாக இருந்தாள். பியோதர் முதல் முறை அவளுடைய பெற்றோர்களைச் சந்தித்ததுமே அவனுக்கு அவர்களைப் பிடித்துவிட்டது.

அவளுடைய தந்தை — பெரிய மூக்கும் வலுவான உடலும் பருத்த எலும்புகளுமுடைய கிழவர் — திடமுடிவுக்கு வந்துவிட்டவரின் தோரணையில் ஒரு நாள் தனது முரட்டுக் கையால் மேஜையில் ஒரு தட்டு தட்டிப் பேசினார்.

''பழங் காலமாயிருந்தால், நீ பேசுவதற்கு முன்னல் நான் இதைப் பற்றி பேச முற்படுவது பொருத்தமாய் இராது'' என்ருர் அவர். ''ஆனல் இந்நாட்களில்தான் யாரும் இதையெல்லாம் பொருட்படுத்துவதில்லையே. ஆகவே, இளைஞனே, நான் சொல்வதைக் கேள். எப்பொழுதும் நீ எங்கள் ஸ்தேஷாவைச் சுற்றிக்கொண்டிருக்கிருய். என்னுடைய கிழவிக்கும் எனக்கும் ஆட்சேபமில்லை. நாங்கள் வசதியாக வாழ்கிருேம், பலரைவிட நல்ல நிலையிலே இருக்கிருேம், குறைபட்டுக் கொள்ள ஒன்றுமில்லை. எங்களுடைய வீட்டை நீதான் பாரேன்—ஒரு பாதி உபயோகமில்லாமல் காலியாய் இருக்கிறது. நீ இங்கேயே வந்துவிடு, எங்களுடன் வாழலாம். எல்லாருமாய்ச் சேர்ந்திருந்தால் எல்லாருக்கும் நல்லது.''

ஸ்தேஷாவுக்கு முகம் செக்கச் சிவந்துவிட்டது, கண்களைக் கவிழ்த்துக் கொண்டு விட்டாள். அவள் தாய்—உருண்டு திரண்ட மிருதுவான முகமும் மகளுடைய கண்களைப் போலவே நீலமாயிருந்த கண்களைச் சுற்றிலும் மெல்லியச் சுருக்கங்களுமுடைய கிழவி—அன்பு தவழ அவனைப் பார்த்துத் தலையாட்டினர்.

''ஆமாம், இங்கேயே வந்துவிடு, அதுதான் நல்லது. கடவுள் எங்களுக்கு மகனைக் கொடுத்து வைக்கவில்லை. நீ எங்களுக்கு மகனுகிவிடு.''

வெளியே வந்ததும் பியோதர் தனது ஆட்சேபங்களை எடுத்துரைத்தான்:

''கூட்டுப்பண்ணையையும் என்னுடைய இயந்திர, டிராக்டர் நிலையத்தையும் துறந்துவிட்டு வருவது எனக்கு மிகவும் கடினம். பல காலமாய் அங்கே வேலை செய்து வருகிறேன். முதலில் சாதாரண டிரைவராக இருந்தேன், இப்பொழுது வேலைக்குழுத் தலைவனாகி விட்டேன். எல்லா டிரைவர்களும் எனக்கு நன்கு பழக்கமாகி நெருங்கியவர்களாகிவிட்டனர்.''

''என் வீட்டைவிட்டுப் பிரிந்து வருவது எனக்கு இன்னும் பன்மடங்கு கடினமாய் இருக்குமே'' என்று ஸ்தேஷா கூறினாள். ''இங்கே உனக்கு வேண்டிய வேலை கிடைக்கும். எங்களிடம் டிராக்டர் டிரைவர்கள் போதிய அளவு இல்லை. உடனே உன்னை வேலைக்குழுத் தலைவராக்கிவிடுவார்கள்.''

குளிர்காலத்தில் டிராக்டர்கள் பிரித்துப் பழுதுபார்க்கப்படும்போது, பியோதர் இயந்திர, டிராக்டர் நிலையத்துக்கு அருகே ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தங்குவது வழக்கம். டிராக்டர்கள் வயல்களில் வேலை செய்யத் தொடங்கியதும், தூரத்து உறவினரான குரொம்த்ஸோவோவின் கொல்லுப் பட்டறையாளர் குஸ்மா மோகவுடன் தங்கிவிடுவான்.

பியோதரின் தந்தை ஏழாண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டார். அவனுடைய தாய் குரொம்த்ஸோவோவிலிருந்து சுமார் நாற்பது கிலோமீட்டர் தொலைவில் ஓர் ஒதுக்குப்புற வனாந்தரக் குக்கிராமமான ஸயோசிச்சியேயில் வசித்து வந்தார். வயதாகிவிட்டதென்றாலும் அவர் உள்ளூர் கூட்டுப்

பண்ணையில் வெண்சணலை உலர்த்துவது, புல் அறுப்பது போன்ற வேலைகளைச் செய்து வந்தார். உண்மையில் அவர் வேலை செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. வார்க்குத்தாவில் சுரங்க இஞ்சினியராக இருந்த அவருடைய மூத்த மகன் நிறைய பணம் அனுப்பி வந்தான். ஆனால் வெள்ளாட்டையும் சிறிய உருளைக்கிழங்குக் கொல்லையையும் கவனித்துக் கொள்வதைத் தவிர வேலை வேறு எதுவுமின்றி வீட்டில் உட்கார்ந்திருக்க அவருக்குச் சங்கடமாயிருந்தது.

மாதம் ஒரு தரம் பியோதர் பணியாரமும் சர்க்கரையும் தேயிலையும் வாங்கிக் கொண்டு தாயாரைப் பார்த்துவிட்டு வரப் புறப்படுவான். அங்கே மரம் வெட்டி வந்து அறுத்து, விறகாய் உடைத்து அடுக்கி வைப்பான்; வெள்ளாட்டுக்குப் புல் அறுத்து வருவான்.

''மகனே, அலுவலகத்திலுள்ளவர்களைப் பார்த்துப் பேசேன். எங்கள் பண்ணைக்கு மாற்றிக் கொண்டு வந்து விடலாம்'' என்று தாய் அவனை அடிக்கடி வற்புறுத்தி வந்தார்.

ஆனால் பியோதர் இங்கே வேலைக்கு வர விரும்பவில்லை. அவன் டிராக்டர் டிரைவர், இவ்வேலையில் முழு ஈடுபாடு கொண்டவன். இங்கே வனத்தினால் ஒதுக்கித் தள்ளப்பட்டுள்ள இந்நிலங்களில் இயந்திரங்கள் பாதி நாளுக்கு வேலையின்றி சும்மாயிருக்கின்றன. குரொம்த்ஸோவோ நிலங்களில் வேலை செய்தபின் இந்த ஒதுக்குப்புற குக்கிராமத்துக்கு வர யார்தான் விரும்புவார்? ஆனால் இதைச்

சொல்லி தாயின் மனத்தைப் புண்படுத்த விரும்பாத அவன், தான் இங்கு வர தனது நிலையத்தில் அனுமதிக்க மாட்டார்கள் என்று கூறி வந்தான்.

நன்கு பழக்கமாகிவிட்ட இடத்தை விட்டு இப்பொழுது அவன் பிரிய வேண்டியதாகியது. ஸயோசிச்சியேவில் வசிக்கத் தனக்கே விருப்பமில்லாதபோது ஸ்தேஷாவை அங்கே அழைத்துச் சென்று தன் தாயுடன் இருக்கலாமென நினைப்பதற்கில்லை. குஸ்மா மோகவின்மீது அவளைச் சுமத்துவதும் சரியல்ல. சொந்த வீட்டைக் கட்டிக்கொண்டு வசிக்கலாம்தான்—கூட்டுப் பண்ணை அவனுக்கு உதவி செய்யும். ஆனால் அதற்கு அவகாசம் வேண்டுமே. ஸ்தேஷா தனக்கென ஓர் இல்லமின்றி பிறத்தியாருடன் ஓரிரண்டு ஆண்டு தங்க சம்மதிப்பாளா?

அவளுடைய கிராமத்துக்கே சென்றுவிடுவதென பியோத்ர் முடிவு செய்தான்.

அவன் நண்பர்கள் யாரும் திருமணத்துக்கு வரவில்லை; வெவ்வேறு கிராமங்களில் இருந்த ரிப்பேர் பட்டறைகளில் எல்லோருக்கும் அவசர வேலைகள் இருந்தன. அவனுடைய தயாரும்கூட வர முடியவில்லை. அறுபது வயதாகிவிட்ட அவ்வன்னை, சந்தர்ப்பவசத்தால் எப்பொழுதாவது கிடைக்கக் கூடிய லாரிகளில் உறைபனியிலே பயணம் செய்வதென்பது முடியும் காரியமல்ல. குரொம்த்ஸோவோ பண்ணையில் ஒரு குதிரை கேட்டு வாங்க அவனுக்கு விருப்பமில்லை. சொந்த ஊரை விட்டுச்

சென்றது குறித்து பியோதரின் மீது குரொம்த் ஸோவோ பண்ணையின் தலைவருக்குக் கோபம். இன்னமும் பழக்கமாகாத அந்நியனாகவே இருந்த புதிய பண்ணையிலும் கேட்பதற்கில்லை. கேட்டிருந் தால்கூட அனேகமாய்க் கிடைத்திருக்காது; மரங் கள் ஏற்றி வருவதில் எல்லாக் குதிரைகளும் மும் முரமாய் ஈடுபட்டிருந்தன. பியோதரின் தாயார் அவனுக்குத் தேன் ஒரு ஜாடியும், வீட்டில் தயாரிக் கப்பட்ட பீர் ஒரு குடுவையும், மணமகளுக்கு அன்பளிப்பாக பட்டுச் சால்வை ஒன்றும் அனுப்பி னார். வருகிற மருமகளுக்கென்று பல காலத்துக்கு முன்பே இந்தப் பட்டுச் சால்வையைத் தனியே எடுத்து வைத்திருந்திருப்பார். சுகப்லீனவோ வுக்குச் சென்ற ஒருவர் மூலம் அவர் இவற்றை அனுப்பி வைத்தார். தனது ஆசிகளைத் தெரிவித்து ஒரு கடிதமும் எழுதியிருந்தார். திருமணமானதும் இருவருமாகச் சேர்ந்து புகைப்படம் பிடித்துத் தனக்கு அனுப்பும்படிக் கேட்டிருந்தார்.

சுகப்லீனவோவிலிருந்து ஒரு சிலரே திருமணத் துக்கு வந்தனர். அவர்கள் எல்லோருமே வெகு காலத்துக்கு முன்பு மணமான வயோதிகத் தம்பதி கள். கிழவர் இக்னுத் ஒருவர் மட்டும்தான் தனியாக வந்திருந்தார். சுகப்லீனவோ கூட்டுப் பண்ணையின் தலைவியான அவர் மனைவி அழைக்கப் பட்டிருந்தபோதிலும், வரவில்லை.

சுவையான பலவும் மேஜை தாங்காத அள வுக்கு நிறைய குவிக்கப்பட்டிருந்தன. சாராயம் பஞ்சமின்றி வழங்கப்பட்டது. எனினும் ஆரவார

மும் குதூகலமும் அதிகம் இருக்கவில்லை. விருந்தினர்கள் உள்ளே வந்து தலையைக் காட்டிவிட்டு கதவருகே நின்றனர்—அவர்களுங்கூட அதிகம் பேர் இல்லை; நீண்ட நேரம் தங்காமலே விடை பெற்றுக் கொண்டு விட்டனர். வேடிக்கை பார்த்தோரில் பெரும்பாலோர் சன்னல் வழியே எட்டிப் பார்த்த சிறுவர் சிறுமியராவர். அவர்களையும் கூட கடுங்குளிரும் அகால நேரமும் விரைவில் வீட்டுக்கு விரட்டிவிட்டன.

அவனுடைய சொந்தத் திருமணத்தில்கூட பியோதர் நடனமாடவில்லை.

3

திருமணத்தை இல்லற வாழ்வின் துவக்கமாகச் சொல்வார்கள். மணமக்கள் இருவரும் பதிவு செய்து கொள்கிறார்கள், கொண்டாட்டம் நடைபெறுகிறது, ஒரு புதிய குடும்பம் உருவாகி விடுகிறது.

குடித்தனம் நடத்துவதற்கு வேண்டிய சாமான்களும் வசதிகளும்தான் உண்மையில் இல்லறத்தின் துவக்கம் என்பது பியோதரின் உணர்வுக்கு எட்டவேயில்லை. அவனும் சரி ஸ்தேஷாவும் சரி அலமாரிகள், திரைச்சீலைகள், சமையல் பாத்திரம் போன்ற அற்ப விஷயங்கள் குறித்துப் பேசியதே இல்லை. இவை பற்றிக் குறிப்பிடுவது கூட தமது புனித உணர்வுக்கு இழுக்கு உண்டாக்குவதாகத் தோன்றியிருக்கும். அவள் வருங்கால மனைவியாக இருந்தாள், அவன் வருங்காலக் கண

வனுக இருந்தான்—அதற்குமேல் அவர்கள் பார்க்க முடியவில்லை, பார்க்க விரும்பவுமில்லை. திருமணம் வரையில் இவ்வாறுதான் இருந்தது, திருமணத்தின்போதும் இவ்வாறுதான் இருந்தது. மறுநாள் காலையிலும் இதே உணர்வுடன்தான் விழித்தெழுந்தனர். ஆனுல் இருவரும் கணவனும் மனைவியுமாக இருந்தாக வேண்டும் — சிறிது காலத்துக்கோ, ஓரிரண்டு ஆண்டுக்கோ அல்ல, வாழ்நாள் முழுதும் இருந்தாக வேண்டும். குடித்தனம் அமைத்தாக வேண்டும்.

வீட்டில் ஒரு பாதி இளம் தம்பதிகளுக்குத் தரப்பட்டது. கூட்டுப் பண்ணை விவசாயத்துக்குமுன்பெல்லாம், பியோதரும் ஸ்தேஷாவும் நினைத்துக்கூட பார்க்க முடியாத அந்தப் பழங்காலத்தில், குதிரைச் சேணம் தொங்கிக் கொண்டிருந்த அந்த ஆலவடிச் சுவரின் கொக்கிகளில் பியோதரின் சைக்கிள் மாட்டித் தொங்கவிடப்பட்டது. அவனுடைய ரேடியோப் பெட்டிக்கு மேஜையின் மீது ஓரிடம் கிடைத்தது. காலை முழுதும் வேலை செய்து அவன் கூரைமேலிருந்த வெண்பனியை அகற்றிவிட்டு ஏரியலைப் பொருத்தினுன்.

ஸ்தேஷாவுக்குப் பெண்வழிச் சீராக ஒரு பெரிய மரப் பெட்டி கிடைத்தது. இருப்புத் தகடுகளால் இணைத்துக் கட்டப்பட்டிருந்த அந்த விவசாயக் குடும்பப் பெட்டி காலத்தால் கருகியிருந்தது. பேராசை பிடித்த வாய் மாதிரி அதன் சாவித்துளை விரிந்து அகன்றிருந்தது. பழங்காலத்தில் குடும்பச் சொத்தின் காப்பிடமாகவும் இல்லத்தின்

ஆதாரமாகவும் இருந்த அது, மெய்யாகவே கொள்ளுத்தாத்தா காலத்திய பெட்டியாகும். துரு நறநறக்கச் சினங் கொண்டு கிரீச்சிட்டு அது தனது இளம் எஜமானிக்குத் தன்னுள்ளிருக்கும் பொக்கிஷங்களைத் திறந்து காட்டிற்று. புகையிலை, ஆட்டுத்தோல், பண்டைக் காலத்திய துணிகள்—இவற்றின் வீச்சம் பீறிட்டுக் கிளம்பி மூக்கைத் துளைத்தது.

அன்று குரொம்த்ஸோவோ விழாவில் பியோதர் முதன்முதலாய் ஸ்தேஷாவைச் சந்தித்த போது அவள் போட்டிருந்த அழகான உயரடிப் பாத அணிகளும் அந்த நீலநிற ஆடையும் பெட்டியினுள் யாவற்றுக்கும் மேலாய் இருந்தன. குடும்பப் பொக்கிஷப் பெட்டியிலிருந்து வெளிக்கிளம்பிய இந்தப் புகையிலை நெடியைத்தான் அன்று அவள் தனது நேர்த்தியான ஆடையின் மடிப்புகளிலே கொண்டு வந்திருந்தாள்.

எடுப்பான அந்தப் பாத அணிகளுக்கும் சட்டைக்கும் அடியில் கணுக்கால் தோல் பூட்சு ஒரு ஜதை இருந்தது. இந்த ஜதையும் நாகரிகமானது தான்—ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு வழக்கிலிருந்த மோஸ்தரில் நடுத்தர உயரமுள்ள அடிகளும் கூர் முனையும் மடித்து விடப்பட்ட வாயும் கொண்டிருந்தது. அதற்கடியிலிருந்து பெண்களது குளிர்காலக் கோட்டு ஒன்று வெளிவந்தது. இடுப்பில் ''டக்குப்'' பிடித்து எண்ணற்ற மடிப்புகளாகத் திரட்டப் பெற்றிருந்த அது, பத்து கிலோவுக்குக் குறையாத எடை இருந்திருக்கும். இது போன்ற

கோட்டுகளைச் சிறு பிள்ளையாக இருந்த காலத்தில் தான் பார்த்திருந்தது பியோதருக்கு அரைகுறை யாக நினைவில் இருந்தது. அதன்பின் பூ வேலைப் பாடுகளையுடைய ஆடைகளும் சாதாரண ஆடை களும் வரிசையாக வெளிப்பட்டன. முடிவில் யாவற்றுக்கும் அடியில் சிவப்பு, மஞ்சள், நீலப் பின்னல் பூப் பட்டைகளுடன் கண்ணைப் பறிக்கும் வண்ண வகைகளில் திகழ்ந்த பழங்காலத்திய கைத்தறி ஆடைகள் இருந்தன.

இவை யாவும் முற்றத்தில் தொங்கவிடப்பட் டன. கட்டு குலையாத அவளுடைய இளம் உட லின் ஒவ்வொரு அசைவையும் வெளிக்காட்டிய பழஞ் சட்டை ஒன்றை அணிந்து, ஸ்தேஷா ஒரு கோட்டைக் கெட்டியாகத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, அவளுடைய தாய் கூடயிருந்து உதவி புரிய, தூசியையும் புகையிலை நெடியையும் பலமாகத் தட்டியெடுத்தாள்.

''வேண்டாம், வேண்டாம், பலமாய்த் தட்டாதே, துணி பிய்ந்துவிடும்.''

கிழவர் மீசையின் இரு முனைகளையும் மெள்ளக் கடித்துக் கொண்டு வாயில் முகப்பிலே வந்து நின்றார். தளர்ந்து தொங்கிய புருவங்களுக்கு அடி யில் தெரிந்த அவருடைய மங்கிய சிறு கண்கள் இரண்டிலும் மனநிறைவு ஒளிர்ந்தது.

பியோதரால் வியப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''இவையெல்லாம் நமக்கு எதற்கு?'' என்று வேலியிலே தொங்கிய பழங்காலத்திய ஆடைகளைச்

சுட்டிக் காட்டிக் கேட்டான். ''இந்தப் பஞ்ச வர்ண ஆடையில் நீ கிராமத்திலே நடந்து போக முடியாது — சிறுவர்கள் கூச்சலிட்டு உன் பின்னுல் ஓடி வருவார்கள். வேண்டுமானுல் எங்காவது கொண்டுபோய் இவற்றை விற்றுவிட்டு வரலாம்.''

கிழவரின் கன்னத்து எலும்புகளில் சென்னிறம் தோன்றியது.

''எங்களிடம் இருப்பதை நல்லபடி பயன்படுத்திக் கொள்கிறேம். உனக்கு வழங்க இதைவிடச் சிறப்பானது எங்களிடம் எதுவுமில்லை. வேண்டுமானுல் தெருவிலே கொண்டுபோய் எறி—அது உன் விவகாரம்.''

''ஏன் தெருவிலே கொண்டுபோய் எறியணும்? வட்டார மன்றத்துக்கு இவற்றைத் தரலாம், உபயோகமாய் இருக்கும் — நாடகங்களில் வர்த்தகர்களது மனைவிமார்களுக்கு இவை பொருத்தமான உடுப்புகளாகிவிடும்.''

''இவற்றைச் சம்பாதித்துச் சேர்த்தது நீயல்ல, தானம் செய்ய முன்வந்துவிட்டாய்'' என்று ஸ்தேஷாவின் தாயார் கோபப்பட்டுக் கொண்டார். ''இந்த ஆடைகள் என்னுடைய பாட்டியிடம் இருந்தவை, பிறகு என் தாய்க்கும் அவரிடமிருந்து எனக்கும் வந்து சேர்ந்தவை. இது போன்ற பின்னல் வேலைப்பாடுகளை இக்காலத்தில் எங்காவது பார்க்க முடியுமா? உபயோகமாய் இருக்குமாம்... யாருக்கு? நாடக மேடையில் அணிந்து கொள்ளக் கொடுத்து விடலாமாம்!''

''அம்மா, பியோதர் வேடிக்கையாகச் சொன்னதை நீ உண்மையென நினைத்துக் கொண்டு விட்டாயே'' என்று ஸ்தேஷா ஆறுதலாகக் கூறினாள். ''இவை வீட்டில் இருந்தால் ஒன்றும் கெட்டு விடாது, சமயத்துக்கு உதவியாக இருக்கும்.'' காரியவாத தோரணையில் அவள் பேசினாள்.

''உனக்கு நல்ல மனைவி கிடைத்திருக்கிறாள், திறமைசாலி'' என்றார் அவள் அன்னை. ''சிறந்த நிர்வாகி!''

ஆயினும் கிழவியின் குரலிலிருந்தும் கிழவரின் முகத் தோற்றத்திலிருந்தும் இருவருக்கும் இன்னமும் கோபம் தணியவில்லை என்பதை பியோதர் காண முடிந்தது. சில்லறை சச்சரவு, எளிதில் புலப்படாது தோன்றி நொடிப் பொழுதில் மறைந்து மறக்கப்படக்கூடியது என்றாலும் சச்சரவுதானே, இல்லற வாழ்க்கையில் எதிர்படும் பிணக்குதானே.

மாலைக்குள் யாவும் ஒழுங்கு செய்யப்பட்டு விட்டன. ஸ்தேஷாவால் தரை தேய்த்துத் துடைக்கப்பட்டு, அறைகள் இனிமை தரும் புதுக் கோலம் பூண்டுவிட்டன. மேஜை மீது சாதாரண வெள்ளைத் துணி விரிக்கப்பட்டிருந்தது. ஓரங்கள் பின்னப்பட்டு பூக்களையுடைய மற்றொரு மேஜை விரிப்பு இருந்தது பியோதருக்குத் தெரியும். ஸ்தேஷா அதை விசேஷ காலங்களில் உபயோகிப்பதற்காகத் தனியே எடுத்து வைத்துவிட்டாள். தேய்த்து மெருகேற்றப்பட்ட ரேடியோப் பெட்டி மேஜை விரிப்பின் மீது பளபளத்தது. சன்னல்களில்

பின்னல் திரைகள் தொங்கின. வீட்டின் முதியோர் பகுதியிலிருந்து எடுத்து வரப்பட்ட செடித் தொட்டி ஒன்று சன்னல் மேடையில் காட்சியளித்தது. கண்ணை உறுத்திய அந்தப் பெரிய மரப் பெட்டி நீளமான வண்ணத் துணியால் மூடப்பட்டிருந்தது. விளக்கின்மீது வீட்டில் செய்யப்பட்ட காகித மூடாக்கு பொருத்தப்பட்டிருந்தது. மேற்புறம் பச்சையும் உட்புறம் வெள்ளையுமான புதிய விளக்கு மூடாக்கு ஒன்று வாங்கிவர வேண்டுமென்று பியோதர் தன் மனத்துள் குறித்துக் கொண்டான்.

சட்டையைக் கழற்றி வைத்துவிட்டு சுற்றிலும் பார்த்தபோது அவனுக்கு ஒரு சுகானுபவம் உண்டாயிற்று. ஆம், இல்லற வாழ்வின் சுகம்! ரேடியோப் பெட்டி, விளக்கு, வெண்ணிற மேஜை விரிப்பு—அற்பப் பொருள்கள்தான், ஆனால் இல்லத்தின் அவசியமான ஒரு கூறு இவற்றால் தான் உருவாகிறது. வசதி குறைவான சுகமில்லாத பிரம்மச்சாரி வாழ்க்கை நடத்தியது போதும்—இதமான இல்லறச் சூழ்நிலையும் தனக்கே உரிய சொந்தக் குடித்தனமும் கிட்டிவிட்டன.

ஸ்தேஷா படுக்கையின் ஓரத்தில் அமர்ந்து முகத்தைச் சுளித்தபடி சீப்பால் கூந்தலை வாரிக் கொண்டிருந்தாள். இப்பொழுது அவள் தனக்கு மிகவும் நெருக்கமானவளாகிவிட்டாள், இந்த இல்லற சுகத்தின் ஓர் அங்கமாகிவிட்டாள் என்று தோன்றியது அவனுக்கு. அருகே சென்று கரத்தால் அவளை அணைத்துக் கொண்டான். நேற்று

வரை தன் கை பட்டதும் மெய் சிலிர்த்துப் போன அவள் இப்பொழுது, அவனை ஒதுங்கச் செய்து, ''கொஞ்சம் இரு — சீப்பு உடைந்து போகும்'' என்று சாவதானமாய்க் கூறினாள்.

இதனால் பியோதர் வியப்புறவுமில்லை, வருத்தப் படவுமில்லை. இருவரும் ஏற்கனவே இல்லறத் தம்பதிகளாகிவிட்டவர்கள். இல்லற வாழ்வில் இதெல்லாம் அன்றாட நடைமுறைக்குரிய சாதா ரண சம்பவம்.

4

காய்கரொதீஷ்சே இயந்திர, டிராக்டர் நிலை யத்தில் விரைவில் பியோதரைப் பற்றித் தெரிந்து கொண்டனர். நிலையத்தின் டைரக்டர் தானே நேரில் புதிய ஆளை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டுவதெனத் தீர்மானித்தார். அலுவலகத் தின் கதவுக்கு வெளியே பியோதர் காத்திருந்த போது, உள்ளே தனது பெயர் அடிபடுவதைக் கேட்டான்.

''நம்மிடம் வர நேர்ந்தது எப்படி?''

''சுகப்லீனவோப் பெண் ஒருத்தியை மணம் புரிந்து கொண்டு இங்கே பெண்ணின் பெற்றோர் களுடைய வீட்டுக்கே வந்துவிட்டான்.''

''நல்ல பெண்! நமக்கு ஒரு தொழிலாளி கிடைக்கச் செய்துவிட்டாள்.''

நிலையத்தின் டைரக்டரான அனஸ்தாஸ் பாவ் லவிச் பருத்த உடலும் அதிகாரமான பலத்த குரலும் ஆர்ப்பாட்டமான கம்பீர நடையுமுடை

யவர். ஆனால் பியோதரை ஆடம்பரமற்ற உள்ளன்போடு வரவேற்றார். சில நிமிடங்களுக்கெல்லாம் அவனுடன் அன்யோன்யமாய்ப் பேசத் தொடங்கிவிட்டார்.

டிராக்டர்களின் ஆழமான தடங்கள் பதிந்திருந்த அந்த விசாலமான முற்றத்தின் வழியே இருவரும் நடந்து சென்றனர். ''பியோதர், உனக்குத் தெரியாததல்ல'' என்றார் அவர். ''எனக்கு நினைவிலிருக்கிறது, சிறுபிள்ளையாக நான் கிராமத்தில் ஓடித் திரிந்தபோது அங்கே ஒருவர் இருந்தார். 'வானம்பாடி' என்று அவரைக் கூப்பிடுவார்கள். 'ஓய், வானம்பாடியாரே, அருமையான அழகான குதிரையாக இருக்கிறது, ஏன் இப்படித் தாம்புக் கயிற்றுச் சேணத்தை மாட்டி அடிக்கிறீர்? நீர் ஒன்றும் ஏழ்மைப்பட்டவரல்லவே. கொஞ்சம் நல்ல சேணம் வாங்கிப் போடக் கூடாதா?' என்று அவரைக் கேட்பார்கள். எல்லோருக்கும் அவர் ஒரே பதிலைத்தான் சொல்வார்: 'எல்லாம் இது போதும். நல்ல தோலில் சேணம் போடுகிறோம் என்பதற்காக குதிரை ஒன்றும் சிறப்பாய் இழுத்துவிடப் போவதில்லை.' பியோதர், எங்களுடைய இயந்திர, டிராக்டர் நிலையம் ஓரளவுக்கு இந்த வானம்பாடியாரின் பண்ணை போன்றதுதான். இந்தக் குதிரைகளைப் பாரேன்!'' இரட்டை இரட்டையாக வரிசையாக நின்ற காட்ரிபில்லார் டிராக்டர்களை அவர் சுட்டிக்காட்டினார். ''ஆனால் இவற்றின் ஜோடனைகள் சிறிதும் ஒவ்வாத பழங்காலத்தியவை. கட்டடம் கட்ட

வசதியில்லை, தற்காலிகமான கொட்டகைகளைப் போட்டு ரிப்பேர் தொழிற்கூடங்களை இப்பொழுதுதான் அமைத்திருக்கிறோம். இளைஞனே, நீ காம்சமோல்* உறுப்பினன், இன்னல்களைக் கண்டு பீதியுறுகிறவனல்ல. அதனால்தான் ஒளிவுமறைவின்றி உன்னிடம் யாவற்றையும் கூறுகிறேன். நீ எப்பேர்பட்டவன் என்பது எனக்குத் தெரிகிறது. உன் கண்கள் இதனைத் தெரியப்படுத்திவிடுகின்றன. நல்ல மாதிரியான ஊழியர்கள் இருக்கும் வரை இதையெல்லாம் பொருட்படுத்தாமல் மூழு மூச்சுடன் முன்னேறிச் செல்லலாம்.''

கிராமக் கொல்லுப் பட்டறை மாதிரி ஒரு சிறிய கட்டடம் இருப்பதை பியோதர் கண்ணுற்றான். அதன் கதவு திறந்திருந்தது, உள்ளே இருட்டில் வெல்டிங் பொறியின் பச்சை ஜுவாலை தெரிந்தது. இதற்கு அருகே சோபையற்ற நீளமான இரு கட்டடங்கள் இருந்தன. குதிரை லாயங்களாகவோ கொட்டாய்களாகவோ இருந்திருக்கலாம். இவைதான் தொழிற்கூடங்கள் என்று பியோதர் ஊகித்துக் கொண்டுவிட்டான். அதன் பின்னல் சிவப்பும் நீலமுமான கம்பைன்கள் இரட்டை இரட்டையாகச் சேர்ந்து நீண்ட வரிசையில் நின்றன. சக்கரங்களின் உச்சிவரை அவை வெண்பனியிலே புதைந்திருந்தன.

வானம்பாடிப் பண்ணைதான், சந்தேகமில்லை

---

* இளைஞர் நிறுவனமான இளங் கம்யூனிஸ்டுக் கழகம்.

என்று பியோதர் மனத்துக்குள் கூறிக் கொண்டான். என்னுடைய இயந்திர, டிராக்டர் நிலையத்தை விட்டுவிட்டு இங்கு வந்து சேர்ந்தேனே—வேட்டைப் பருந்து போய் வானம்பாடி கிடைத்திருக்கிறது.

''இளைஞனே, இங்கு நானும் புதிதாக வந்தவன்தான்'' என்று டைரக்டர் தொடர்ந்து ஆர்வமாய்ப் பேசினார். ''ஒரு மாதத்துக்கு முன்புதான் நான் நியமிக்கப்பட்டேன். தொழிலாளர்களுடைய தேவைகளைப் பற்றி கவலைப்படாமலே இருந்துவிடுகிறார்கள். ஆனால் என்னுடைய கண்ணோட்டம் இதுதான்: நீ பொறுப்பாளியாக இருக்கும் வரை, தேர்ச்சி வாய்ந்த சிறந்த ஊழியர்களுக்காக கையிலுள்ள கடைசித் துட்டையும் செலவிடத் தயங்காதே— முடிவில் அது ஒட்டிக்கு இரட்டியாகப் பயனளிக்கும்.''

இந்த வெண்ணெய் எல்லாம் வேண்டியதில்லை, நான் ஒன்றும் ஓடிவிட மாட்டேன் என்று பியோதர் புழுக்கத்துடன் மனத்துள் கூறிக்கொண்டான்.

''உன்னுடைய டிராக்டர்கள் இதோ இருக்கின்றன—ஒரு டிரைவரும் இதோ இருக்கிறார். சிழோவ், இதோ உன்னுடைய வேலைக்குழுவின் புதிய தலைவன்— சொலவேய்கோவ். பெயரை ஏற்கனவே நீ கேள்விப்பட்டிருப்பாய்—ரொம்ப நல்ல ஆள். சரி, இருவரும் ஒருவரையொருவர் தெரிந்துகொள்ளுங்கள், நான் போய்வருகிறேன்.''

டைரக்டர் திரும்பவும் பியோதருடன் கை குலுக்கி விடைபெற்றுக் கொண்டார். உடனே

சிமோவ் எதிர்ப்பக்கம் திரும்பி, கிரீஸ் கந்தலால் இஞ்சினுடைய ஹவுஸைத்தேய்க்க ஆரம்பித்தான்.

ஸ்தேஷாவின் பழைய வேட்பாளன் இந்த இயந்திர, டிராக்டர் நிலையத்தைச் சேர்ந்தவன் என்பது பியோதருக்குத் தெரிந்ததுதான். ஆயினும் இங்கே தான் சிமோவுடன் வேலை செய்ய வேண்டியிருக்கும் என்பது ஏனோ இதுவரை அவன் மனத்தில் உதிக்கவே இல்லை. சிமோவைப் பற்றிய நினைவே இல்லாமல் அவனை அறவே மறந்திருந்தான்.

"இப்படிப் பாரப்பா! உனக்கு முதுகுப்புறம் மட்டும்தானா இருக்கிறது, முகம் இல்லையா?"

"என்ன வேண்டும்?" சிடுசிடுப்போடு சிமோவ் திரும்பிப் பார்த்தான்.

"இவ்வளவுதான் வேண்டும். என்ன சேதி? அறிமுகம் பெறுவோம்—என் பெயர் பியோதர்."

நீட்டிய கரத்தை இரண்டொரு விநாடிக்குக் கடுப்புடன் பார்த்துவிட்டு பிறகு வேண்டாவிருப்புடன் சிமோவ் அதைப் பிடித்துக் குலுக்கினான்.

"சரி, என்ன சேதி? போதுமா?"

"கடுப்பு இல்லாமல் பேசலாமே. இன்மொழியையும் இன்முகத்தையும் விரும்புகிறவன் நான்."

"என்னைப் பிடிக்கவில்லையானால், ஏன் என்னிடம் பேச வருகிறாய்?"

சிமோவ் திரும்பவும் கிரீஸ் கந்தலைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"சரிதானப்பா, இருவரும் ஒன்றாய் வேலை செய்தாக வேண்டும். கொஞ்சம் இந்தப் பக்கம்

திரும்பி நல்ல தனமாய்ப் பேசு. பழுதுபார்க்கும் வேலைகள் எந்த நிலையில் உள்ளன?''

எரிச்சலாய்த் தோளைப் பாதியளவுக்குத் திருப்பி தொழிற்கூடத்தின் கூரையைச் சிழோவ் ஏறிட்டுப் பார்த்தான்.

''எல்லா வேலையும் செய்தான பிறகு ஓடி வந்து நாட்டாண்மை புரிய விரும்பும் தலைவனை தெரியாதா எங்களுக்கு?''

''அப்படியா சேதி? எல்லா வேலையும் செய்து முடித்தாச்சா? அப்போ, நீ வேகமாய்த் தேய்த்துத் துடைக்கும் இந்த டிராக்டர் யாருடையதாம்?''

''இரண்டு டிராக்டர்கள் வேலை செய்யப் பட்டுத் தயாராகிவிட்டன. இந்த ஒன்று மட்டும் பாக்கியிருக்கிறது. அவ்வளவுதான்.''

''வேலை முடிந்து விட்டதாகவா அர்த்தம் இதற்கு? குளிர்காலம் முடிவுறப் போகிறது, மார்ச் மாதம் பிறக்கப் போகிறது. இரண்டு டிராக்டர்கள் பழுது பார்க்கப்பட்டுவிட்டனவாம், மற்றொன்று இன்னும் தொடப்படவில்லையாம். இதைக்காட்டிலும் மோசமான நிலைமை வேறு வேண்டுமா?''

''விசைக் கம்பிகளாக நினைத்துக் கொண்டு பேசும் உன் போன்ற ஆட்கள் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கிறேன்.''

''டாங்கிலே பெட்ரோல் இருக்கா?''

''இருக்கு. தொழிற்கூடத்திற்கு எடுத்துச் செல்லணும்.''

''அப்பொ, புறப்படு போவோம். டிராக்டரை எடு.''

சிழோவ் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

''உன்னுல் முடியாதென்றுல், நான் எடுக்கிறேன். கொஞ்சம் நகரு.''

தோளால் மெள்ள தள்ளி சிழோவை ஒரு பக்கமாய் ஒதுங்கச் செய்துவிட்டு, ஸ்டார்ட்டிங் விசையிலே கையை வைத்து தனது உடலின் முழுப் பளுவையும் கொண்டு கீழே அழுத்திஞன். இஞ்சின் வீரிட்டு ஒலித்து இரண்டு மூன்று தரம் இரைந்து விட்டு ஓய்ந்து நின்றது.

''இஞ்சினில் என்ன கோளாறு?''

''நீதானே தலைவன், உனக்குத்தான் நன்ருய்த் தெரிந்திருக்கணும்.''

''நீ சொல்வது உண்மைதான். ஹுடைத் திற, பார்ப்போம்.''

அவசரமின்றி சிழோவ் சாவதானமாய் ஹுடைத் திறந்தான். பியோதர் உள்ளே இஞ்சினைப் பார்த்துவிட்டு சீழ்க்கை அடித்தான்.

''இதைப் பாரப்பா, நான் டிராக்டர் டிரைவர், புகைபோக்கித் துடைப்பவனல்ல. இதை நீ தொழிற்கூடத்துக்கு எடுத்துச் செல்வதற்குமுன், இஞ்சினை நன்ருய்த் துடைத்துக் கிழவரின் வழுக்கைத் தலை மாதிரி பளபளக்கச் செய்ய வேண்டும், தெரியுதா?... நான் சொன்னது காதில் விழுந்ததா?''

''விழுந்தது, விழுந்தது.''

''சரி, நான் சொன்னபடி செய்.''

பாக்கெட்டில் கையை விட்டுக்கொண்டு, திரும்பிப் பார்க்காமலே அலட்சியமாய்ச் சீழ்க்கையடித்தபடி பியோதர் அங்கிருந்து நடந்து சென்றான்.

இயந்திர, டிராக்டர் நிலையத்தில் இனி அவனுக்கு வேலை ஒன்றும் இருக்கவில்லை. ஆயினும் நாற்பது நிமிடங்கள்வரை அங்குமிங்கும் நடந்து யாவற்றையும் கவனமாய்ப் பார்த்துத் தெரிந்து கொண்டான். தொழிற்கூடங்களுக்குள் சென்று சுற்றிப் பார்த்தான். பிறகு அலுவலகத்தினுள் சென்றான். அங்கு செயலாளராகவும் தட்டெழுத்துப் பொறியாளராகவும் வேலை செய்து வந்த மாஷென்காவுடன் வேடிக்கையாய்ப் பேசிக் குலாவினான். சென்னிறக் கன்னங்களையுடைய குண்டு முகமும் சுருட்டையாக்கப்பட்ட வெண்பட்டு முடிகளும் கொண்ட அவள் வெண்ணிறக் கழுத்திலே மணிமாலை அணிந்திருந்தாள்.

சிமோவின் டிராக்டருக்கு அவன் திரும்பி வந்தபோது, அது அப்படியே விடப்பட்டிருந்ததைக் கண்டான். ஹூடு திறந்தபடியே இருந்தது; இஞ்சின் பார்க்கச் சகிக்காத முன்பிருந்த அதே நிலையில்தான் இருந்தது; கிரீஸ் நூற்கந்தல் துருவேறிய சக்கரக் கால்மீது மிக அலட்சியமாய் வீசியெறியப்பட்டிருந்தது.

தொழிற்கூடத்தில் கடைசல் இயந்திரத்துக்குப் பின்னால் கணப்படுப்புக்கு அருகே இருண்ட மூலை ஒன்றில் சிமோவ் காலை மடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டான். பியோதரை எரித்துவிடுவது போல அவன் சீற்றத்தோடு

வெறித்துப் பார்த்தான். பியோதர் மிக அமைதிடாகச் சென்று அவன் பக்கத்தில் உட்கார்ந்து, மெள்ள ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு தணிவான குரலில் சற்றுக் கடுமையாகவே கேட்டான்:

''சரி—நீயே சொல், எந்நேரமும் நாம் உன்னை விழுந்து பிடுங்கிக் கொண்டுதான் இருக்கணுமா?''

''என்னைத் தனியே விடமாட்டாயா? என்ன வேண்டும் உனக்கு? ஒரு நிமிடம் நான் நிம்மதியாய் உட்காரக் கூடாதா? இங்கேயும் வந்து விட்டாயே சனியன் மாதிரி!''

''கோபப்படாதே. நாம் சேர்ந்து வேலை செய்யப் போவது இன்றைக்கோ, நாளைக்கோ, ஒரே ஒரு வாரத்துக்கு மட்டுமோ அல்ல — காலமெல்லாம் சேர்ந்து வேலை செய்தாக வேண்டும். நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பழைய கோபதாபங்களை எல்லாம் மூட்டை கட்டி ஒரு மூலையிலே போட்டுவிட வேண்டும். உன்னுடன் அசட்டுப் பேச்சு பேசிக்கிட்டிருக்க எனக்கு நேரமில்லை. அப்படிச் செய்வேன் என்று நினைக்காதே. உன்னைவிட மோசமான ஆட்களையெல்லாம் நான் சமாளிச்சிருக்கேன்.''

பலரும் அவ்வழியே குறுக்கிலும் நெடுக்கிலும் சென்றனர். ஆனால் யாரும் அவர்கள் இருவரையும் கண்டு கொள்ளவே இல்லை. ஆப்த நண்பர்கள் இருவர் சற்று நேரம் கதகதப்பாய் உட்கார்ந்து

புகை பிடிக்கிறார்கள் என்று தோன்றும்படி இருவரும் அருகருகே உட்கார்ந்து மெள்ள பேசிக் கொண்டிருந்தனர்.

''என்னை எரித்துவிடுவது போலப் பார்த்துப் பயனில்லை. இதனால் உனக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.''

''என்னைப் பயமுறுத்திவிடலாம் என்று நினைக்காதே. உன்னைக் கண்டு நான் பயந்துவிடப் போவதில்லை.''

''நான் ஒன்றும் பயமுறுத்தவில்லை. நல்ல தனமாய் இந்த விவகாரத்தைப் பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்பதே என் விருப்பம்.''

மின்களஞ்சிய - மின்னேற்றப் பிரிவிலிருந்து டைரக்டர் வெளியே வந்தார். அவருடைய திறந்த கோட்டு அடித்தகட்டிலே உராய்ந்தது. கணப் படுப்பு அருகே இருவரும் உட்கார்ந்திருப்பதை அவர் பார்த்தார்.

''குளிருக்கு அடக்கமாய் உட்கார்ந்து பேசுகிறீர்களா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார். ''இவ்வளவு சீக்கிரமாய் நெருங்கிய நண்பர்களாகி விட்டீர்களே.''

''எங்களைப் பிரித்திட முடியாது, இணை பிரியாதவர்களாகிவிட்டோம்'' என்று பவித்திரமாய்ப் பியோதர் பதிலளித்தான்.

''நல்லதுதான், குளிர் காய்ந்துவிட்டுத் திரும்பவும் வேலையை ஆரம்பியுங்கள்.''

அவர் சென்றதும் பியோதர் சிகரெட்டை விட்டெறிந்துவிட்டு எழுந்தான்.

"புறப்படு போவோம்."

பார்வையைத் தரைமீது கவிழ்த்துக் கொண்டு ஜோசூராவும் எழுந்தான்.

5

பழைய பள்ளிக்கூடக் கட்டடம் காய்கரொ நீஷ்சே கிராம எல்லைக்கு வெளியே இயந்திர, டிராக்டர் நிலையத்தின் பக்கத்தில் இருந்தது. இந்தப் பள்ளிக்கூடத்தைக் கட்டியவர் குழந்தைகளுக்குச் சூரிய வெளிச்சமும் சுத்தமான காற்றும் நிறைய வேண்டும், சுற்றிலும் புல்லும் மரங்களுமாய் இருப்பது அவசியம் என்று நினைத்தது முற்றிலும் நியாயமே. வெளிகளின் நடுவில் அமைந்த அந்தக் கட்டடம் பெரும் பெரும் சன்னல்களும் மிகவும் உயரமான மேல்தளங்களும் பெற்றிருந்தது. ஆனால் குழந்தைகளை உள்ளன்புடன் நேசித்த அவர், துரதிஷ்டவசமாய்க் கணப்படுப்புகள் போன்ற சாரமற்ற அற்ப விவரங்களில் நாட்டமில்லாதவராக இருந்துவிட்டார். விசாலமான சன்னல்களும் உயரமான மேல்தளங்களும் கொண்ட வகுப்பறைகளின் வட்டமான கணப்படுப்புகள் மட்டும் சின்னஞ்சிறியவை. இந்த அடுப்புகளின் கதவுகள் எளிதில் உள்ளே கைநுழைந்துவிடாதபடி அவ்வளவு சிறிதாயிருந்தன. கோடையில் சன்னல்கள் வழியே உள்ளே அடித்த வெய்யில் உலைக்களம் போல அறைகளைக் கொதிக்கச் செய்தது. குளிர்காலத்தில் கட்டடம் ஐஸ் கிடங்கு போல

ஜில்லிட்டது. ஆழமான வெண்பனியில் நெடுந் தொலைவு நடந்து பள்ளி வந்து சேர்வதற்குள் குழந்தைகள் படாத பாடுபட வேண்டியிருந்தது. ஆசிரியர்களும் கல்வி அலுவலகத்தினரும் அந்தக் கட்டட அமைப்பாளரை ஓயாமல் சபித்து வந்தனர். முடிவில் கிராமத்தின் மையத்தில் ஒரு புதிய பள்ளிக்கூடம் கட்டப்பட்டது — சாதாரண சன்னல்களையும் சாதாரண மேல்தளங்களையும் நல்ல கணப்படுப்புகளையும் கொண்ட சாதாரண இரண்டடுக்குக் கட்டடம் அது. பழைய பள்ளிக் கூடக் கட்டடம் இயந்திர, டிராக்டர் நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் ஒரு பாதி டைரக்டருக்கும் பிரதம மெக்கானிக்குக்குமான குடித்தனப் பகுதிகளாகவும், மற்றொரு பாதி டிரைவர்கள் வசிப்பதற்கான விடுதியாகவும் மாற்றப்பட்டது.

முன்பு வகுப்பறையாக இருந்த அறையின் சுவர் ஓரங்களில் எண்ணெய்ப் பிசுக்கேறிய அகலமான பலகைகள் வரிசையாய்ப் பொருத்தப்பட்டிருந்தன. நடு மையத்தில் ஒரு பெரிய பெட்ரோல் டிரம் இருந்தது. இது தற்காலிகக் கணப்படுப்பாக்கப்பட்டு, அதிலிருந்து மேலே எழுந்த நீளமான கரிய இருப்புக் குழாய் மேல்தளம் முழுதும் நீண்டு சென்றது. சில நாட்களுக்கு முன்புதான் வாங்கி வரப்பட்ட புதிய மெத்தைகள் இந்தப் பலகைகள்மீது விரிக்கப்பட்டிருந்தன. இன்னமும் தலையணைகள் கிடைத்தாகவில்லை; ஆனால் அவற்றுக்கு வேண்டிய மெல்லிறகுகளை

வாங்கி வரும்படி டைரக்டர் ஏற்கனவே உத்திர விட்டிருந்தார்.

பகற் பொழுது பூராவும் பியோதர், ஸ்தேஷா வையோ, வீட்டையோ பற்றிய நினைவில்லாத வனாகவே இருந்து விட்டான். ஆனால் கோட்டைச் சுருட்டி அதன்மேல் தலையை வைத்து, கணப்படுப் புக் குழாயையும் சுவரிலும் மேல்தளத்திலும் தெரிந்த அதனுடைய விநோத நிழலையும் உற்றுப் பார்த்தபடி படுத்ததும், அன்று திங்கட்கிழமை தான் என்பதை வேதனையுடன் உணரலானான். ஞாயிறு வருவதற்கு இன்னும் ஐந்து நாட்களைக் கழித்தாக வேண்டும்! வீட்டைப் பார்க்காமலே, ஸ்தேஷாவைப் பார்க்காமலே இன்னும் ஐந்து நாட்கள் இருந்தாக வேண்டுமே!

சன்னல்களில் படிந்திருந்த ஆவி வழியே இர வின் கருமையைத் தவிர வேறு எதையும் பார்க்க முடியவில்லை. ஒரு மூலையில் ஒருவர் அக்கார்டியனை வைத்துக் கொண்டு ஒரே மெட்டைத் திரும்பத் திரும்ப இசைத்துக் கொண்டிருந்தார். டிரைவர் களில் சிலர் மேஜையைச் சுற்றிலும் அமர்ந்து இரவு உணவு அருந்திக் கொண்டிருந்தனர். கரி பிடித்துக் கன்னங் கரேலென்றிருந்த கெட்டிலிலிருந்து தே நீரை ஊற்றித் தமது குவளைகளை நிரப்பிக் கொண் டனர்.... அங்கே ஸ்தேஷா இந்நேரம் அவளுடைய படுக்கையின் ஓரத்திலே உட்கார்ந்து முகத்தைச் சுளித்தபடி அடர்த்தியான கூந்தலை வாரிக் கொண் டிருப்பாள்—தன்னந் தனியே இருப்பாள். அங்கே ரேடியோப் பெட்டியும், வர்ணப் பூச்சில்லாவிடி

லும் தேய்த்துச் சுத்தம் செய்யப்பட்ட தரையில் நீள்விரிப்பும், சன்னலில் அந்தச் செடியும் இருக்கும் —அதிக செலவில்லாதவை ஆயினும் அளவிலா சுகம் தரும் இவை யாவும் அவனுக்குரிய சொந்த இல்லத்தில் விளக்கொளியிலே இதமாய் ஒளிரும்.

நாளைக்கு நான் விளக்கு மூடாக்கு ஒன்று வாங்கிவிட வேண்டும் என்று எண்ணினான். எல்லாக் கடைக்கும் போய்ப் பார்ப்பேன், அலசி ஆராய்ந்து நல்லதாய் ஒன்றைத் தேடிப் பிடிப்பேன்.

மறு நாள் வந்தது, ஆனால் எந்தக் கடையின் பக்கமும் தலைகாட்டவில்லை. அவனுடைய வேலைக் குழுவைச் சேர்ந்த மேலும் மூன்று டிரைவர்கள் கிராமங்களிலிருந்து வந்து சேர்ந்தனர். அன்று முழுதும் வேலை செய்து அவர்கள் இஞ்சினைப் பிரித் தெடுத்துச் சுத்தம் செய்து தேய்த்துப் பளபளப் பாக்கினர். பியோதர் அவர்களுடைய வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான். விளக்கு மூடாக்கு அவன் நினைவிலே ஒரு மூலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. உண்மையில் அதை அவன் மறந்து விடவில்லை, ஆனால் நேரமில்லாததால் இன்னொரு நாளைக்கு வாங்கலாமென்று ஒத்திப் போட்டு விட்டான்.

சிமோரவ் வாய் மூடிய மௌனியாக, கடுகடுக் கும் முகத்தோடு, கண்களை மேலே உயர்த்தாமலே வேலை செய்தான். ஆனால் சொன்ன வேலையை மறுபேச்சின்றி செய்து முடித்தான்.

டிராக்டர் சரிவர கவனிக்கப்படாமல் பழு தடைந்திருந்ததென்றாலும், அது வேலை செய்யத்

தொடங்கி ஓராண்டுதான் ஆகியது. அதைச் சரி செய்ய அதிக வேலைகள் தேவைப்படவில்லை—சுத்தம் செய்து, பிரித்து எண்ணெயிட்டுக் கோத்து, புதிய பேரிங்குகள் போட்டதும் யாவும் சரியாகி விட்டன.

சிமோவின் கடுகடுப்பும் சுற்றிலுமிருந்த பழக்கமில்லாத புது ஆட்களும் சேர்ந்து எந்நேரமும் அவனை வீட்டைப் பற்றியே நினைத்து ஏங்கும்படிச் செய்தன. ஒரேவொரு நாளைக்குப் போய் வருவதானாலும், புத்தார்வம் பெற்றுப் புது மனிதனாய்த் திரும்பி வரலாமே. தான் ஒன்றும் பெண்டாட்டியையே எந்நேரமும் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் ஆளல்லவே!

''தோழர் சொலவேய்க்கோவ்!''

மாஷென்கா அவன் பின்னால் வந்து நின்றாள். தூக்கிவிடப்பட்ட அவளுடைய கோட்டுக் காலரின் அணில் ரோமத்துக்குள் முகவாயைப் புதைத்துக் கொண்டு நின்றாள்.

''உன்னைத் தேடிக்கிட்டு ஓர் ஆள் வந்திருக்கு'' என்று அவள் வெடுக்கென அறிவித்தாள்.

''மாஷென்கா, நீ முன்னால் போ, உலகின் கோடிக்கு வேண்டுமானாலும் உன் பின்னால் வர நான் தயார்!''

''இந்த மாதிரிப் பேச்சு எனக்குப் பிடிக்காது. உன்னைப் பார்ப்பதற்காக வந்திருப்பது உன் மனைவியாக்கும்.'' தோளை ஒரு உலுக்கு உலுக்கி மாஷென்கா எதிர்ப் பக்கம் திரும்பி நடந்தாள்.

ஸ்தேஷா அவளுடைய புதிய கம்பளி பூட்சும் புதிய கோட்டும் போட்டுக் கொண்டு அலுவலகத்தில் உட்கார்ந்திருந்தாள். பொசபொசப்பான சால்வையைத் தலையில் அடக்கமாய் இழுத்துப் போர்த்தியிருந்தாள்; வெள்ளை மூக்கும் அவளுடைய சிவந்த கன்னங்களில் ஒரு பகுதியும் மட்டும் வெளியே தெரிந்தன. உணர்ச்சிகளை அதிகம் வெளிக்காட்டாமல் கட்டுப்படுத்திக் கொண்டு, இருவரும் ஒருவரையொருவர் வரவேற்றுக்கொண்டனர்—அங்கே பலரும் பக்கத்தில் இருந்தனர்.

''வெண்ணெய் ஆலையிலிருந்து ஒரு லாரி வந்தது, அதில் ஏறி வந்தேன்.'' சற்றிலும் பல பேர் இருந்ததால் ஸ்தேஷாவுக்கு வெட்கமாயிருந்தது.

''அது என்ன கொண்டு வந்தது?''—இது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது போல பியோதர் கருத்துடன் அவளைக் கேட்டான்.

''ஒன்றுமில்லை, காலியாகத்தான் வந்தது. எங்களுக்கு அது கொப்பரைகள் கொண்டு வந்தது.''

இருவரும் வெளியே முற்றத்துக்குச் சென்றனர். ஸ்தேஷா அவன் தோளைக் கெட்டியாகப் பிடித்து அவன்மீது சாய்ந்து கொண்டாள்.

''பியோதர், நீ இல்லாமல் நான் தனிமையால் வாடுகிறேன். இப்பொழுதுதான் மணம் புரிந்துகொண்டோம், அதற்குள் நீ ஓடி வந்துவிட்டாய்.''

''ஞாயிற்றுக்கிழமை எப்பொ வருமென்று தவித்துக் கொண்டிருக்கிறேன். நீயாவது வீட்டிலே

திருக்கிறாய், நான் வீட்டை விட்டுவந்து இங்கே தங்க வேண்டியிருக்கிறது.''

''அனுமதி வாங்கிக்கிட்டு வரக் கூடாது—ஒரே ஒரு வாரத்துக்கு? நீதான் அவசரப்பட்டுக் கொண்டு உடனே இங்கு ஓடி வந்துவிட்டாய் — இருவருமாய்ச் சேர்ந்து இருக்க அவகாசமில்லாமலே போய்விட்டது.''

கதகதப்பான உணர்ச்சியும் கவலையும் தோய்ந்த பார்வையை உயர்த்தி அவனை உற்று நோக்கினாள். ஒரு நாளும் அவன் தன்னை விட்டுப் பிரியமாட்டான் என்று முன்பு அவளது பெண் மனத்தில் இருந்த உறுதியை இப்பொழுது அவள் பார்வையில் காண முடியவில்லை. அவன் இங்கே வந்துவிட்டான்—அவள் மனம் அமைதி இழந்து விட்டது; இங்கே யாராவது ஒரு பெண்ணுடன் குலாவிக் கொண்டிருப்பான் என்றுகூட நினைக்கத் தோன்றியது; இவனைப் போன்றவர்கள் குறித்து நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லையே. அவன் தன் கரங்களால் அவளைக் கட்டியணைத்து அவளுடைய சந்தேகக் கண்களிலே முத்தமிட விரும்பினான். ஆனால் சுற்றிலும் பலரும் இருந்த இந்த முற்றத்தின் நடுவிலே அதைச் செய்வது எப்படி?

''ஸ்தேஷா, நீ சொல்வது சரிதான், நான் அவசரப்பட்டு ஓடி வந்துவிட்டேன். உன்னுடன் சில நாட்கள் இருந்திருக்க வேண்டும்.''

ஒரு மணி நேரம் வரை இருவரும் வீட்டைப் பற்றிய சிறு விவகாரங்களையெல்லாம் பேசியபடி அந்த முற்றத்தில் மேலும் கீழுமாய் நடந்தனர்.

விளக்கின் மூடாக்கு, உடல் நலமின்றி தீனியைத் தின்னுமல் வைத்துவிடும் சிறிய பன்றிக் குட்டி முதலான பலவும் குறித்துப் பேசினர்.

அன்று மாலை பியோதர் டைரக்டரின் அலுவலகத்துக்குச் சென்று ஒரு வாரம் ஓய்வு கேட்டான்.

''இளம் மனைவி அல்லவா?'' என்று கூறி டைரக்டர் கண்ணைச் சிமிட்டினுர்.

''மனைவியை இங்கு குறிப்பிட வேண்டியதில்லை. உண்மை என்னவெனில், ரிப்பேர் வேலைகள் அனேகமாய் முடிந்துவிட்டன. இங்கு எனக்கு இப்பொழுது அவ்வளவாக வேலை ஒன்றுமில்லை.''

''ஷிபானவின் வேலைக்குழுவுக்கு உன்னைத் தலைவனுகப் போட வேண்டுமென நினைத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது எல்லாமே அனேகமாய்த் தயார் நிலையில் உனக்குக் கிடைத்துவிட்டன. உன்னுடைய டிராக்டர்கள் யாவும் புதியவை.''

''என்ன?''

''சரி, சரி, எனக்குப் புரிகிறது. வீட்டுக்குப் போக உனக்கு அனுமதி தருகிறேன், ஆனுல் அங்கேயும் நீ வேலை செய்தாக வேண்டும். உன்னுடைய சுகப்லீனவோ கூட்டுப்பண்ணையின் தலைவரை உனக்குத் தெரியுமா?''

''வர்வாரா ஸ்திப்பானவ்னுவையா? அவரைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனுல் இன்னமும் நேரில் சந்தித்ததில்லை.''

''அவர் உயிரை விட்டு வேலை செய்கிருர்; வேலையில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார்.

ஆயினும் பண்ணையில் வேலைகள் சரிவர நடைபெற வில்லை. சென்ற ஆண்டில் நமது டிராக்டர்கள் வேறு எந்த நிலங்களைக் காட்டிலும் சுகப்லீனவோ நிலங்களில்தான் அதிக காலம் வேலையின்றி சும்மா யிருந்தன என்று கேட்டிருக்கிறேன். அதற்குப் பெருமளவு நமது டிரைவர்களையே குறை சொல்ல வேண்டுமென்பது உண்மைதான்—மறுக்கவில்லை. இங்கு வருகிறவன் ஓராண்டுப் பயிற்சியே பெறு கிறான், பிறகு அவனை சுயேச்சையாக வேலை செய்யும்படி விட்டுவிட வேண்டியிருக்கிறது. ஆனால் வர்வாராவும் இந்த இளைஞர்கள் ஒழுங் காய் வேலை செய்கிறார்களா என்று கவனித்து, அவர்களை வேலை வாங்கியிருக்க வேண்டும். நான் இங்கு வந்து அதிக காலமாகவில்லை, எனினும் வர்வாராவுக்கு நமது இளைஞர்களைப் பிடிக்க வில்லை என்பதைத் தெரிந்து கொள்ள இதற்குள் போதுமான சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. மாட்டுத் தொழுவங்களுக்குப் பக்கத்தில் எரு மலை போலக் குவிந்து கிடக்கிறது. அதை வயல் களுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தாக வேண்டும். குதிரைகளால் இவ்வேலை பூராவையும் செய்ய முடியாது. நீ உதவி செய்ய வேண்டும்! ஆனால் உன்னுடைய ரிப்பேர் வேலைகள் யாவும் முடிவுறும் வரை உன்னைப் போக விடமாட்டேன். விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் இத்னை நீ ஏற்றுத்தான் ஆகவேண்டும். தம்பி, எனக்கும் ஒரு விருப்பமும் உறுதிப்பாடும் உண்டு.''

விடுதியில் சிமோவைத் தவிர மற்றெல்லோரும் தூங்குவதைக் கண்டான். சிமோவ் மட்டும் வெந்து கெட்டியான முட்டையை உப்பில் துவைத்து இரவு உண்டி அருந்திக் கொண்டிருந்தான்.

தன் மனைவி கொண்டு வந்திருந்த வீட்டுத் தயாரிப்புகளை பியோதர் எடுத்துப் பரப்பி வைத்தான் — தயிர் - கேக்குகளும் பணியாரங்களும் மற்றும் பல சுவையான பண்டங்களும் இருந்தன.

''கெட்டில் சூடாய் இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''இல்லை, ஆறிவிட்டது.''

''அட பாவமே.... இந்தா, இவற்றைக் கொஞ்சம் சாப்பிட்டுப் பார்க்கிறாயா? என்னுடைய பணியாரங்களைச் சாப்பிட்டால் வயிற்றுக்கு எதாவது செய்யும் என்று பயமாயிருந்தால், அருகில் வராதே.''

''நன்றி, எனக்கு வேண்டாம்.''

''இதோ பார், எப்பதான் நீ கோணங்கித் தனத்தை விட்டுவிட்டு நல்ல தனமாய்ப் பழகப் போகிறாய்? இதை கொஞ்சம் சாப்பிட்டால் என்ன ஆயிடுமாம், ஏன் இந்தப் பிடிவாதம்? இவ்வளவு நேரத்துக்குப் பிறகு சாப்பிடுகிறாயே —எங்கேயாவது. போயிருந்தாயா?''

சிமோவுக்கு முகம் சிவந்துவிட்டது.

''எங்குமில்லை, திரைப்படத்துக்குதான் போயிருந்தேன்.''

''தனியாகவா?''

''இல்லை — வேறு சில இளைஞர்களுடன்.''

அது உண்மையல்ல. மாஷென்காவுடன் அவன் திரைப்படம் பார்க்கப் போயிருந்தான். மாலை முழுதும் அவள் அவனுடையை வேலைக்குழுத் தலைவனை சொலவேய்க்கோவ் எவ்வளவு பொல்லாதவன் என்று அவனிடம் விளக்கிக் கூறிக் கொண்டிருந்தாள்.

அன்று இரவு பியோதரும் சிமோராவும் அடுத்தடுத்திருந்த இரு பலகைகளிலே படுத்துத் தூங்கினர்.

6

பியோதரும் அவன் மாமனும் சேர்ந்து நீராவிக் குளியல் குளித்தனர். பிறகு வீட்டில் தயாரான சாராயம் குடித்தனர். இப்பொழுது பியோதர் படுக்கையில் படுத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

சுத்தமான அவனுடைய உள்ளுடுப்புகளின் நுண்மை அவனுக்கு மிக இனிமையாக இருந்தது. தலைக்கு அருகே விளக்கு ''உஸ்'' ஸிட்டது. கழுத்துக்கு அடியில் தலையணையின் உறை குளிர்ச்சி அளித்தது—வெண்பனியின் மணம் அதில் கமழ்வதாக நினைக்கும் அளவுக்கு அது தூய்மையாய் இருந்தது. ஆம்—இல்லத்தின் சுகமே சுகம்!

படித்தபடியே காதைத் தலையணையிலிருந்து மேலே தூக்கி கவனமாகக் கேட்டான்—கதவு திறக்கப்படும் சப்தமா அது? ஸ்தேஷா வருகிறாளா? ''சரி, எழுந்திரு—நேரமாகிறது, சாப்பிட

லாம்'' என்பாள். ''வஜ்ஜிரம் தடவியது மாதிரி அந்தப் புத்தகத்துடன் ஒட்டிக்கொண்டிருக் கிருயே.'' அவளுடைய குரலில் சிறிதளவு காய்ப்பும் ஏச்சும் கலந்திருக்கும் — மனைவியின் குரலாய் ஒலிக்கும்! இல்லை, சப்தமே இல்லை, இன்னும் அவள் வரவில்லை. திரும்பவும் அவன் புத்தகத்தில் கவனம் செலுத்தினுன்.

அவனுக்குப் பிடித்த எழுத்தாளர்கள் யார் என்று கேட்டால் பியோதர் ''லெவ் தல்ஸ்தோய், சேகவ்'' என்று பதிலளிப்பான்; அல்லது நிறைய படித்தவன் என்பதாகக் காட்டிக் கொள்ளும் பொருட்டு, குஸ்தாவ் ப்ளபேரைப்பற்றிப் பேசத் தொடங்குவான். ஆனுல் இதெல்லாம் வெறும் பேச்சுக்காகத்தான்; உண்மையில் அவன் அதிகம் படிக்க விரும்பியது டூமாஸாும் ஜூல்ஸ் வெர்னே யும்தான்.

விளக்கு மெல்ல 'உஸ்'ஸிட்டது.... கண் ணுடியின் பக்கம் சுரு மீன்கள் நீந்திச் சென்றன; அவை கப்பலுக்குள் உற்று நோக்கின; ஆவி உரு வங்களைப் போல ஜெல்லி மீன்கள் பசுமையான நீரில் மிதந்து கொண்டிருந்தன.... ஸ்தேஷா சமையலறையில் இருந்தாள். அடுப்பருகே நின்று விட்டு இங்கே வருவாள். அவளுடைய முகம் செக்கச் சிவந்திருக்கும், தொட்டால் சுடும்.... இவ்வளவு நேரம் அங்கே என்ன செய்கிருள்?

ஆம், இல்லத்தின் சுகமே சுகம்! சிறிது காலம் இதை விட்டுச் செல்வதுங்கூட—இயந்திர, டிராக்

டர் நிலையத்தில் தங்கி அங்கே பலகையில் படுத் துறங்குவதும்கூட — நல்லதுதான். மிருதுவான தலையணையும் மேஜை விரிப்பும் சுகமான படுக்கை யும் பெற்று முழு நேரமும் இங்கேயே இருந்துவிட் டால், இவை அவனுக்குப் பழகிப் போய்விடும், சலிப்பூட்டுவனவாகிவிடும், அவனுடைய மனைவி யுங்கூட சற்று மாற்றுக் குறைந்தவளாகிவிடுவாள். ஆனால் தொழிற்கூடத்தில் ஒரு வாரம் தங்கி முரட்டு மெத்தையிலே படுத்துத் தூங்கி, அடுப்பருகே இருந்துவிட்டு சிவந்த முகத்துடன் வரும் ஸ்தே ஷாவை நினைத்து நினைத்து நெஞ்சு உருகினால், பிறகு தூய்மையான சாதாரண தலையணை உறையும் மட்டிலா மகிழ்ச்சி அளிக்கிறது; யாவும் இனிமை மிக்கதாயுள்ளது; தரையில் கிடக்கும் விரிப்பிலுங்கூட இன்பம் குடிகொண்டுள்ளது. இல்லத்தின் சுகமே சுகம்!

புத்தகத்தைப் பியோதர் மார்பின்மீது நழுவ விட்டுவிட்டான். கூரையைப் பார்த்து முறுவ லித்த வண்ணம் படுத்திருந்தான்....

மிருதுவான கம்பளிப் பூட்சுக் காலால் ஓசை யின்றி நடந்து ஸ்தேஷா உள்ளே வந்தாள்.

''எழுந்திரு, சாப்பிட நேரமாகிறது.''

பியோதர் பதில் கூறவில்லை. அவன் முகத் தில் மெல்லிய புன்னகை பூத்திருந்தது; அவ னுடைய சுருள் முடிகள் நெற்றில் சரிந்திருந்தன. அவன் தூங்கிக் கொண்டிருந்தான்.

7

கேட்டிலிருந்து வீட்டு வாயிலுக்குச் சென்ற நடைபாதையிலிருந்து வெண்பனியை அகற்றிவிட்டார். கிணற்றைச் சுற்றிலுமிருந்து பனிக்கட்டியை உடைத்தெடுத்துவிட்டார். கிழவர் சிலான்திய் பெத்ரோவிச் இப்பொழுது கையில் ஒரு கோடரியுடன் முற்றத்திலே நின்றுகொண்டிருந்தார். முரட்டு ரோமத் தொப்பிக்கு அடியிலிருந்து அவர் கண்கள் அந்தப் பெரிய கேட்டின் குறுக்கு உத்திரத்தை உற்று நோக்கின. ஒரு பைன் மரத் துண்டு அவர் காலடியில் கிடந்தது.

அதிகாலைப் பொழுது—இதற்குள் அவர் நடைபாதையிலிருந்து வெண்பனியை அகற்றிவிட்டு, கிணற்றின் சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்துவிட்டு, நடுவில் தொய்ந்துபோய்த் தொங்கிக் கொண்டிருந்த அந்தப் பழைய உத்திரத்தை எடுத்துவிட்டுப் புதிய உத்திரம் ஒன்றைப் போடுவது குறித்து இப்பொழுது சிந்தனை செய்து கொண்டு நின்றார். பியோதருக்கு நெஞ்சு குறுகுறுத்தது — கிழவர் வேலை செய்து கொண்டிருக்க இப்படி நான் தூங்கி விட்டு வருகிறேனே என்று மனசாட்சி குத்திற்று.

சிலான்திய் பெத்ரோவிச்சைப்பற்றி ஏற்கனவே அவன் சிற்சில விவரங்களைக் கவனித்திருக்கிறான். பக்கத்து வீட்டுக்குச் சென்றுவிட்டு சாலையில் கிடைத்த தேய்ந்த குதிரை லாடத்தை எடுத்துக் கொண்டு திரும்பி வருவதைப் பார்த்திருக்கிறான். ஆலவடியில் நீண்ட பெட்டி ஒன்று இருந்தது.

அது அறை அறையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சில அறைகள் அகலமாய் இருந்தன; மற்றவை கையுறையால் மூடி அடைத்துவிடும்படியாக அவ்வளவு குறுகலாகவும் ஆழமாகவும் இருந்தன. தேய்ந்துபோன அந்தக் குதிரை லாடம் இந்தக் குறுகிய அறை ஒன்றில் பத்திரமாய் வைக்கப் பட்டது. கிழவரின் ஆயுட்காலத்தில் அது எதற்கும் தேவைப்படப் போவதில்லை. என்ருலும்—யாருக் குத் தெரியும்—ஒரு சந்தர்ப்பத்தில் அதுவும் உத வியாக இருக்கலாம்; ஆகவே பத்திரமாய் இருக்கட் டும், அதனுல் நஷ்டம் ஒன்றும் இல்லை. ''அப்பா, பன்றிக் கொட்டிலின் ஒரு பக்கம் லொடலொ டத்துப் போய்விட்டது, இருப்புப் பட்டை இருந் தால் அடித்துச் சரிசெய்துவிடலாம்'' என்ருே, ''உங்களிடம் ஆணி இருக்கிறதா? கண்ணுடிக்கு அடியில் ஒரு படம் மாட்ட வேண்டுமென்கிருள் ஸ்தேஷா'' என்ருே கூறினுல் போதும், உடனே கனமான இருப்புப் பட்டையும் சிறிய ஆணியும் சிலான்திய் பெத்ரோவிச்சின் பெட்டியிலிருந்து வெளிவந்து விடுமென்று பியோதருக்குத் தெரியும்.

கிழவர் அதிக முயற்சி இல்லாமலே அந்தப் பைன் துண்டின் ஒரு முனையைத் தூக்கி, சிறிதும் பிசகாமல் கனகச்சிதமாய்க் கோடரியை வீசி அதனைச் சீவி ஒழுங்கு செய்தார். மனத்துள் அவ ரைப் பாராட்டியவாறு பியோதர் வாயில் முகப்பி லே நின்ருன். அதைப் பார், கனமான மரம் அது; அவரைவிட நான் கொஞ்சம் பலசாலிதான்;

இருந்தாலும் அவரைப் போல என்னுல் இந்த வேலையைச் செய்ய முடியுமா என்பது சந்தேகம் தான்.... சதக்சதக்கென்று கோடரி மரத்தினுள் பதிந்தெழுந்தது; மஞ்சள் நிறச் செதிள்கள் சிதறிச் சப்தமின்றி வெண்பனியில் விழுந்தன.

''அப்பா, உதவிக்கு வரட்டுமா நானும்?'' என்று கேட்டான் பியோதர்.

சிலான்திய் பெத்ரோவிச் மரத் துண்டைக் கீழே போட்டுவிட்டு, வியர்த்திருந்த நெற்றி யிலிருந்து தொப்பியைப் பின்னுல் தள்ளி விட்டுக் கொண்டார்.

''வேண்டாம், நானே செய்துவிடுகிறேன்; அரை மணி நேர வேலைதான்.''

சிலான்திய் பெத்ரோவிச் நெட்டையாக இருந்தார்; விரிந்த தோள்களும் வாலிபரைப் போன்ற நிமிர்ந்த உருவமும் கொண்டு, வீண் அசைவு எதுவுமின்றி கருமமே கண்ணுய் வேலை செய்தார். கிழவர் சிறந்த உழைப்பாளியாக இருக்கிருர் என்று எண்ணமிட்டபடி பியோதர் வெளியே சென்ருன். இந்தக் குடும்பமே நல்ல உழைப்பாளிக் குடும்பம்.

வர்வாரா ஸ்திப்பானவ்ஞ பண்ணை அலுவலகத்தில் இல்லை. அவரைத் தேடிக் கொண்டு பியோதர் பண்ணையின் பிற பகுதிகளுக்குச் சென்ருன்.

இங்கு ஒன்றும் பிரமாதமாயில்லை என்று நினைத்தான். குரொம்த்ஸோவோவைப் போல இல்லை.

பசுத் தொழுவத்துக்கும் பக்கத்தில்—கதவி லிருந்து சுமார் இருபது தப்படிகளில்—குன்று போல உரம் குவிந்திருந்ததைக் கண்டான். அதன் மேல் வெண்பனி மூடியிருந்தது. அட கடவுளே, கோடை காலத்திலேகூட உரத்தை இங்கே விட்டு வைத்திருக்கிறார்களே என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான். நாற்றமும் சகதிக் குட்டை யும் அடையாய் மொய்க்கும் ஈயும் சகிக்க முடிய வில்லையே — இவர்கள் குடியானவர்கள்தானா!

அருகாமையில் பெண்கள் வண்டியிலிருந்து புல்லை இறக்கிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர்—குட்டையாக இருந்தார், கையுறைகள் இல்லாமல் உறைபனியில் கைகள் செக்கச் சிவந் திருந்தன—புல்லின் உச்சியில் நின்று கவட்டைக் கோலால் புல்லைத் திரை திரையாக எடுத்து பரணியின் வாய்க்குள் விட்டெறிந்து கொண் டிருந்தார்.

''இப்படிப் போடணும்! நேரத்தை வீணுக் காமல் இப்படிச் செய்யணும்!'' என்று அவர் கூச்சலிட்டார். இதர இரு பெண்களும் விழித்துக் கொண்டு அவர் பக்கத்தில் நின்றனர்.

''வணக்கம்!'' என்று உற்சாகக் குரலில் பியோ தர் கூறிவிட்டு ''வர்வாரா ஸ்திப்பானவ்னுவை எங்காவது பார்த்தீர்களா?'' என்று அவர்களைக் கேட்டான்.

கவட்டைக் கோலால் புல் திரையை எடுத்தெறிந்த அந்தப் பெண் தன் வேலையை நிறுத்தினுர்,

''அவரிடம் என்ன வேண்டும்?'' என்று சற்றுக் கரகரப்பான குரலில் கேட்டார்.

''அவருடன் பேச வேண்டும்.''

''பிரஸ்கோவ்யா, இந்தா கோலேப் பிடித்துக் கொள்.''

ஆடையின் அடி விளம்பைக் கெட்டியாகக் கால்களுடன் சேர்த்துப் பிடித்துக் கொண்டு புல்லின் உச்சியிலிருந்து தாறுமாருய்ச் சரிந்து கீழே வந்து நின்ருர். பிறகு பியோதரின் பக்கம் திரும்பி அவனேத் தொப்பி முதல் கால் பூட்சுவரை ஏற யிறங்கப் பார்த்தார். அருகில் நின்று அவரைப் பார்த்ததும், 'பிரம்மாண்ட உருவம்' என்பதாகவே எண்ணத் தோன்றும். உண்மையில் அவர் குட்டையானவர், பியோதரின் தோளளவுகூட வரவில்லே. ஆனுல் அவர் முகம் அகலமானது; ஆடவர் சாயலுடன் கரடுமுரடாய் வார்க்கப் பெற்ற வடிவம் கொண்டது. ஊடுருவிப் பார்க்கும் சிறிய குறுகுறுப்பான சாம்பல் நிறக் கண்கள் இந்த அகன்ற முகத்தில் எடுப்பாய்த் தெரிந்தன. அவர் கைகள் பெரியவை, தோள்கள் விரிந்தவை. ஒன்றுக்கொன்று இசைவில்லாத உறுப்புகள் கொண்டவராயினும் உறுதியாகச் சேர்த்து இணேக்கப்பட்டவர் என்பார்களே, அத்தகையோரில் இவரும் ஒருவர்.

''நான்தான் வர்வாரா ஸ்திப்பானவ்ஞ. என்ன வேண்டும்?''

குரொம்த்ஸோவோ கூட்டுப் பண்ணேயின் தலேவர் பழவெல் பொலிக்கார்ப்பவிச் இப்படியா

இருந்தார்? குள்ளமான மெல்லிய உருவும், நரை முடிகளுமுடையவர். மரியாதையாகவும் நயமாகவும் பேசுவார். முழங்கால் பூட்சு அணிந்து பக்குவமாகவும் அழகாகவும் அடியெடுத்து வைக்கும் அவருடைய நடையும்கூட நயமாய் இருக்குமே. சாந்தமான குரலில் பேசுவார், எல்லோரையும் அருமையாய்த் ''தம்பி'' என்றோ, ''தங்கச்சி'' என்றோ அழைப்பார். இந்தத்''தம்பி''—பாவெல் பொலிக்கார்ப்பவிச்சைவிட பல ஆண்டுகள் மூத்தவரான ஆஜானுபாகு உருவமுடைய தாடிக்காரராக இருப்பார்—பண்ணைத் தலைவருடைய சொல் பாராட்டுச் சொல்லாயிருப்பின் பூரித்துப் புளகாங்கிதமடைந்து விடுவார்; கண்டனச் சொல்லாயிருந்தால் வெட்கித் தலை குனிந்து விடுவார்.

''என் பெயர் பியோதர் சொலவேய்க்கோவ். டிராக்டர் வேலைக்குழுவின் தலைவன்.''

''சிலான்திய் ரியாஷ்கினுடைய மாப்பிள்ளை தானே?''

''ஆம்.''

வர்வாரா ஸ்திப்பானவ்னு அவனை உற்றுப் பார்த்தார். நேசபாவமிக்கப் பார்வையல்ல அது.

''கெட்டிக்கார்கள்தான்—நல்ல ஆளாய்த் தேடிப் பிடித்துவிட்டார்கள். ஆனால் ஸ்தேஷா கண்ணுக்குக் கவர்ச்சியான பெண்தான்—கொழு கொழுன்னு மூக்கும் முழியுமாய் இருப்பாள், தேனொழுகப் பேசுவாள்.... மனைவி மனதுக்குப் பிடித்தவளாய்த்தானே இருக்காள்?''

''அவளை மாற்றிக் கொள்ளுகிற உத்தேசம் தற்போதைக்குக் கிடையாது.''

''அது சரிதான். இனி நீ வந்த வேலையைச் சொல்லு.''

''அங்கே எரு ஏராளமாய்க் குவிந்திருக்கிறது'' என்று பியோதர் தலையை அசைத்து அந்த எருமேட்டைச் சுட்டிக்காட்டினன்.

''வண்டிகளில் ஏற்றி சென்று வயல்களில் அடித்துவிடுவோம்.''

''எங்களுடைய உதவி இல்லாமலா? உங்களுக்காக நாங்கள் நூறு டன் எரு ஏற்றிச் செல்ல வேண்டுமென்று ஒப்பந்தம் கூறுகிறதே.''

''இந்த வேலையில் நீங்கள் எல்லோரும் கை தேர்ந்தவர்களாயிற்றே! ஏழெட்டு மண்வெட்டி அளவு உரத்தை எடுத்துச் சென்று ஒரு வண்டிச் சுமையாகக் கணக்கு எழுதுவிடுவீர்கள். உரத்தை யார் அளந்து சரி பார்க்க முடியும்? முடிவில் உங்களுடைய டன்-கிலோமீட்டர்களில் பில் வந்து சேரும், பண்ணை பணத்தைக் கட்டியாக வேண்டும்.''

''வர்வாரா ஸ்திப்பானவ்ன, எனக்குத் தெரியும்; கூட்டுப்பண்ணைத் தலைவர்களில் பழைய ரகத்தவரும் உண்டு, புதிய ரகத்தவரும் உண்டு.'' பியோதர் அவனுடைய வேடிக்கைப் பேச்சை நிறுத்திக்கொண்டு, காரியார்த்த முறையில் பேசத் தொடங்கினன். வர்வாரா ஸ்திப்பானவ்ன பக்கவாட்டிலே உற்று நோக்கிய வண்ணம் கவனமாய்க் கேட்டார்.

''பழைய ரகத்தவர், புதிய ரகத்தவர்.... நுறை கூறுவதென்ருல் தயக்கமின்றி சீக்கிரமாய் முன்வந்துவிடுகிறீர்கள். ஆனால் உங்களுடைய நிலையை நீங்களே கொஞ்சம் பரிசீலனை செய்து பாருங்கள். உங்களுடைய இயந்திர, டிராக்டர் நிலயத்திடமிருந்து வேலை வாங்குவதற்குள் தலை நரைத்துவிடும் போலிருக்கு.... சரி, வேலையைத் தொடங்குங்கள், பார்க்கலாம். ஆனால் இப்பொழுதே சொல்லி விடுகிறேன்—ஒவ்வொரு சுமையையும் நான் நேரில் வந்து பார்ப்பேன். ஒவ்வொன்றும் நிறையளவாக இருந்தாக வேண்டும்.''

''இதுவல்லவா சரியான பேச்சு! எரு எந்தெந்த வயலுக்குப் போய்ச் சேர வேண்டுமென்பதை விவசாய நிபுணரிடமிருந்து தெரிந்து கொண்டு விட்டேன். நீங்கள் ஒரு குதிரை கொடுத்தீர்களானல், நான் போய் சாலைகள் எந்நிலையில் இருக்கின்றனவென்று பார்த்துவிட்டு வரலாம்.''

''லாயத்துக்குச் சென்று, வசிலியோக்கை எடுத்துச் செல்லுமாறு நான் சொன்னதாகச் சொல்லு.''

லாயத்துக்கு அருகே காவலாளரின் குடிசையில் சிலான்திய் பெத்ரோவிச்சும் ஒரு வண்டிக்காரரும் கனமான ஆட்டுத்தோல் கோட்டுகள் அணிந்து, வீரல் விட்ட கணப்படுப்பு ஒன்றின் எதிரே அமர்ந்து அடுப்பின் புகை போதாதெனத் தமது சிகரெட்டுப் புகையையும் விட்டுக் கொண்டு அரைத் தூக்க நிலையிலே இருந்ததை பியோதர் கண்டான். பைன்கிளைகளது ஆவியின் நெடி மூக்கில் ஏறியது. வீட்டிலே அத்தனைக் கண்டிப்பு மிக்க

வராகவும் முக்கியத்துவம் வாய்ந்தவராகவும் இருந்து வந்த சிலான்திய் பெத்ரோவிச், இங்கு பெஞ்சின் ஒரு முனையிலே அடக்கவொடுக்கமாய்க் குந்தியிருந்தார். சலிப்புற்றவராகவும் மூலையிலே ஒதுக்கப்பட்டவராகவும் காணப்பட்டார்.

''வசிலியோக்கை எடுத்துச் செல்ல வந்திருக்கிறேன், எங்கே அது?'' என்று பியோதர் கேட்டான். ''எடுத்துச் செல்லும்படி வர்வாரா ஸ்திப்பானவ்னு கூறினார்.''

''உள்ளே போய் அவிழ்த்துக் கொண்டு போ. சேணம் இங்கேதான் எங்கோ பெஞ்சுக்கடியில் இருக்கிறது. ஏனையவையும்கூட் இங்குதான் இருக்கும்'' என்று சிலான்திய் பெத்ரோவிச் பதிலளித்தார்.

பியோதர் குனிந்து பார்த்தான். ''ஏனையவை'' என்பது குதிரையை வண்டியில் பூட்டுவதற்கான சேண உறுப்புகளைக் குறிப்பிட்டது. யாவும் பெஞ்சுக்கடியில் குவிந்து கிடந்தன. அவன் ஒன்றைப் பிடித்து இழுத்ததும் எல்லாமாய்ச் சேர்ந்து வெளியே வந்தன.

''இதென்ன கந்தல்கூளம்! எங்கள் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் சேதார இரும்புக் கூளங்கள் விற்கும் கிழவர் கொர்தேய்கூட அவருடைய சாமான்களை இன்னும் கொஞ்சம் பாங்காய் வைத்திருப்பாரே. சுவரில் ஒரு கம்பைக் கட்டி இவற்றைத் தொங்கவிடக் கூடாதா?''

''அப்படிச் செய்யும்படி யாரும் எங்களிடம் சொல்லவில்லையே'' என்று சிலான்திய் பெத்ரோவிச் பதற்றமின்றிக் கூறினார்.

''சொல்லித்தானு செய்ய வேண்டும்? முற்றத் திலே கம்புகள் ஏராளமாய் இருக்கின்றன. ஒரு சில நிமிடங்களுக்கு மேல் ஆகாது. இங்கே நான் புதிதாக வந்தவன்—இருந்தாலும் கணப் பொழுதில் இந்த வேலையைச் செய்து விடுவேனே.''

''சரி, சரி, போதிய அளவு குத்திக் காட்டி விட்டாய்; போதும், நிறுத்து. எங்களை நாட்டாண்மை செய்ய இன்னெருரு ஆள் வந்தாச்சாக்கும்.''

அந்த வண்டிக்காரர் வியப்புடன் பியோதரைப் பார்த்தபடி எழுந்து நின்ருர்.

''இளைஞன் சொல்வது சரிதான். யாரும் நம்மை அதிகாரம் செய்தாலொழிய நாம் எதுவும் செய்வதில்லை. சிலாந்திய் உன்னுடைய கோடரியைக் கொடு, நான் ஒரு கம்பை வெட்டி வந்து பொருத்தி விடுகிறேன்.''

''எனக்குக் கைகள் இல்லாமற் போய்விடவில்லை. நானே செய்து விடுவேன்.''

சிலாந்திய் பெத்ரோவிச் கோபமாய் எழுந்து வெளியே சென்ருர். மறு நிமிடமே பனி உறைந்து வழவழப்பாயிருந்த நீண்ட கம்பு ஒன்றுடன் திரும்பி வந்தார். புகை மூட்டம் போன்ற உறை பனிக் காற்றும் அவருடன் உள்ளே வந்தது.

''பியோதர்—குட்டிப் பயல் நீ, எனக்குப் பாடம் கற்பிக்க வந்துவிட்டாயே'' என்று அவர் உறுமினர். ''எங்களை அதிகாரம் பண்ணலாம் என்று நினைக்கிருய்?''

முரட்டு முடிகள் அடர்ந்த சிறு குதிரையான வசிலியோக்கில் ஏறி, இச்சம்பவத்தைப்பற்றி

சிந்தித்தவாறு, கிராமத்துக்கு வெளியே சென்றுன் பியோதர். வேடிக்கைதான்—இரு வேறு ஆட்களாக அல்லவா இருக்கிருர். வீட்டில் எந்நேரமும் அலுக்காமல் ஏதாவது வேலே செய்துகொண்டிருக்கிருர்; ஆனுல் கூட்டுப்பண்ணையில் வேலே செய்யாமல் உட்கார்ந்தே காலமோட்டுகிருர்.

பியோதர் திரும்பி வந்தபோது இருட்டிவிட்டது. குதிரையை லாயத்திற்குக் கொண்டு போய், வைக்கோலால் அதைத் தேய்த்து விட்டான். பிறகு தோளில் சேணத்துடன் கதவருகே வந்தவன், வெளியே அவனுடைய மாமனுர் பேச்சுக் குரலேக் கேட்டு அப்படியே நின்று விட்டான்.

''முடியாது, நான் செய்த வேலே ஊதியத்துக்கு உரியதாகக் குறிக்கப்பட்டாக வேண்டும். ஊதியமில்லாமல் ஏன் நான் வேலே செய்யணும்? இந்தக் குடிசை வெட்ககரமான அலங்கோல நிலேயில் இருந்தது—சேணங்கள் எல்லாம் காலடியில் கந்தல்கூளமாய்க் கிடந்தன. இப்பொழுது யாவும் கண்ணேப் பறிக்கும்படி கச்சிதமாகிவிட்டன. உள்ளே சென்றதும் நொடிப் பொழுதில் வேண்டியதை எடுத்துக்கொண்டு திரும்பிவிடலாம்.''

''இரண்டு ஆணியை அடித்துவிட்டு பெரிய வேலே செய்து விட்டதாக இப்படிப் பேரம் பண்ணலாமா?'' — கரகரப்பான குரல், சலிப்பும் கண்டனமும் தொனிக்கக் கூறியது.

''நான் பேரம் பண்ணவில்லே. நான் செய்த வேலேயைக் குறித்துக் கொள்ளும்படிதான் கூறுகிறேன். அதற்கு எனக்கு உரிமை உண்டு! யாரும்

கவலைப்படவே இல்லை, சுண்டு விரலைக்கூட அசைக்கவில்லை. இப்பொழுது நன்றி தெரிவிப்பதற்குப் பதில், எனக்கு ஊதியம்கூட இல்லாதபடிச் செய்யலாமென்று பார்க்கிறாயே.''

''இப்படி நினைக்கிறவர் இந்த வேலையைச் செய்திருக்க வேண்டியதில்லையே.''

பியோதருக்குச் சங்கடமாயிருந்தது—கிழவர் திரும்பினாரானால், யாவற்றையும் கேட்டுக் கொண்டு தான் நிற்பதைப் பார்த்துவிடுவார். சப்தமில்லாது மற்றொரு கதவுக்கு நடந்து, வெளியே பேசிக்கொண்டிருந்த இருவர் கண்ணிலும் படாமல், தொலைவில் அவர்களை கடந்து சென்றான்.

ஆனால் சிலான்திய் பெத்ரோவிச் இதில் வெட்கப்படுவதற்கு எதுவும் இருந்ததாய் நினைக்கவில்லை. அன்று மாலை வீட்டுக்கு வந்ததும், தனது கோட்டின் முடிச்சுகளைக் கோபமாய் இழுத்தபடி இந்த விவகாரம் குறித்து உடனே பேசத் தொடங்கிவிட்டார்.

''பியோதர், நீ அளவுக்கு மீறி ஊக்கம் காட்டிப் பயனில்லை. அதற்காக உனக்கு போனஸ் கிடைத்துவிடாது. அவர்கள் விரும்புவதெல்லாம் எல்லாரும் ஊதியமில்லாமலே வேலை செய்ய வேண்டுமென்பதுதான்.''

அலெவ்தீனா இவானவ்னா பசுமாட்டுக்காகக் கழுநீர் வாளியை எடுத்துச் சென்றவர், அப்படியே நின்றுவிட்டார்.

''இப்பொழுது என்ன தவறு நடந்தது?''

''ஒன்றுமில்லை. எப்பொழுதும் நடப்பதுதான். நன்றி தெரிவிப்பதற்குப் பதில் தலையிலே குட்டு கிறார்கள். அவர்களுக்காக ஒரு வேலை செய்தேன், ஊதியத்துக்குரியதாக அதைக் குறித்துக் கொள்ள முடியாதென்கிறார்கள்.''

''நீ ஏன் வேலை செய்தாய்?''

''உதவ விரும்பினேன், மனசாட்சி கேட்க வில்லை—செய்தேன்.''

''மனசாட்சி... உனக்கு ரொம்ப அதிகமாகி விட்டது. மனசாட்சியை வர்வாரா மதிப்பதில்லை யே. நீ மட்டும் ஏன் கவலைப்படணும்? முன்பு நீ சறுக்கு வண்டி செய்ய மறுத்தபோது வர்வாரா ஏசியது நினைவில்லையா?''

''ஆமாம்—நம்மக் கூட்டுப் பண்ணையில் எப்பொழுதுமே இப்படித்தானே—எதாவது செய் தால் நம்மை நாமே கொள்ளையிட்டுக் கொள் வதாகிவிடும், செய்யாவிடில் ஏச்சும் பேச்சும் கிடைக்கும்.''

''புதிதாய் நடைபெறுவதல்லவே இது.''

சிலான்தியின் கவிழ்ந்த பார்வையிலிருந்து கிழ வருக்குத் தன்மீது கோபம் என்பதை பியோதர் காண முடிந்தது. சாதாரணமாய் நியாய புத்தி யுடன் நடந்து கொள்ளும் இந்தப் பெரியவர் அற்ப விஷயத்துக்காக இப்படி அலட்டிக் கொள்கிறாரே என்று அவனுக்கு வெட்கமாயிருந்தது. கடைக் கண்ணால் ஸ்தேஷாவைப் பார்த்தான்—தன் தந்தை யைப் பற்றி அவளுக்கும் வெட்கமாய்த்தான் இருக் குமென நினைத்தான். ஆனால் அவள் எதுவும் நடை பெறாதது போல மனக் கிலேசம் சிறிதுமின்றி

இரவுச் சாப்பாட்டுக்காக மேஜைமீது விரிப்பைப் போட்டுக் கொண்டிருந்தாள். பெற்ரோரை எதிர்த்து அவள் பேசுவதில்லை என்பதை ஏற்கனவே அவன் கவனித்திருக்கிருன்—பெற்ரோர் சொல் மீருத அடக்கவொடுக்கமான மகள் அவள்.

வீட்டில் அவனுக்குரிய பகுதிக்குச் சென்று ரேடியோவுக்கு அருகே அமர்ந்து மாஸ்கோ நாடக மன்றம் ஒன்றிலிருந்து அஞ்சல் செய்யப்பட்ட நிகழ்ச்சியை இரவு நெடுநேரம் வரைக் கேட்டுக் கொண்டிருந்தான். தனக்குப் பின்னல் நடந்து சென்ற ஸ்தேஷாவின் மிருதுவான காலடி ஓசை அவனுடைய மனக் கடுப்பைத் தணியச் செய்தது. நான் வாழ்வது அவளுடன்தானே என்று நினைத்த போது அவனுக்கு ஆறுதலாயிருந்தது. வயதான கிழங்கள் முணுமுணுத்தால் முணுமுணுக்கட்டுமே — அவர்கள் எப்பொழுதுமே இப்படித்தானே.

8

நாளாவட்டத்தில் யாவும் அவனுக்குப் பழக்கமாகிவிட்டன.

காய்கரொதீஷ்சே இயந்திர, டிராக்டர் நிலையத்தின் நெரிசலான சோபையற்ற தொழிற்கூடம் அவனுடைய தொழிற்கூடமாகிவிட்டது. சிழோவ் நல்ல நண்பனுகிவிட்டான்.

வர்வாரா ஸ்திப்பானவ்னுவையும் பியோதர் நன்கு தெரிந்து கொள்ளலானுன். ஆரம்பத்தில் அவனுக்கு விளங்காத புதிராகவே இருந்தது.

வர்வாரா மிகவும் கண்டிப்பானவர்தான்; எல்லோரும் அவரை மதித்து நடந்தனர், அவர் கோபப்படுவாரே என்று பயந்து வேலை செய்தனர். ஆயினும் பண்ணையில் எங்கு திரும்பினாலும் ஒழுங்கீனம் தான் மலிந்திருந்தது. அவனும் அவனுடைய டிராக்டர்களும் இருந்திராவிடில், மலைமலையாய்க் குவிந்திருந்த அந்த உரம் இன்னமும் மாட்டுத் தொழுவங்களுக்கு அருகே அப்படியேதான் கிடந்திருக்கும். ஆரம்பத்தில் அவனுக்கு இது விளங்காத புதிராகத் திகைப்பூட்டி வந்தது — ஆனால் பிற்பாடு அவன் இந்தச் சிக்கலின் மூலகாரணத்தைப் புரிந்துகொண்டுவிட்டான். ஆம், வர்வாரா ஸ்திப்பானவ்னா கண்டிப்பானவர்தான், எல்லோரும் அவரைக் கண்டு பயந்தனர். ஆனால் அவருடைய வேலைக்குழுத் தலைவர்கள் திறனற்றவர்கள்; தகுதி வாய்ந்த துணைவர்கள் அவருக்கு யாருமில்லை. ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் இருந்து, எல்லாவற்றையும் பார்த்து, எல்லாவற்றையும் தானே செய்ய முயன்றார்—ஆனால் அவருக்கு இருந்தவை இரு கண்களும் இரு கைகளும்தான்.

வீட்டிலே ஓயாமல் காதில் விழுந்த முணுமுணுப்புங்கூட அவனுக்குப் பழக்கமானதாகி விட்டது: ''எந்நேரமும் நம்மைத் தூற்றுவதே வேலையாகிவிட்டது.... அப்படி நாம் என்ன செய்து விட்டோம்....'' எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் ஒதுங்கிச் செல்ல முயன்றான். வயது முதிர்ந்த பழம் பிறவிகள், இவர்களிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

யாவும் அவனுக்குப் பழக்கமான மாமூலாகி விட்டன—ஒன்றேவொன்று மட்டும்தான் ஆரம்பத்தில் இருந்த அதே புதுமையோடும் கவர்ச்சியோடும் மாற்றுக் குறையாமல் அப்படியே இருந்தது.

வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பியதும் இன்னமும் அதே இன்பத் துடிப்பால் பூரிப்புற்றுன். அந்த அமைதியும், சுகமும், நீராவிக் குளியலுக்குப் பிறகு அவன் முகத்தைை வருடும் அந்த அப்பழுக்கற்ற தலையணை உறையும், அடுப்படியிலிருந்து வரும் ஸ்தேஷாவின் சிவந்த கன்னங்களும் முன்பு போலவே அவனை இன்பத்தில் திளைக்கச் செய்தன.

ஸ்தேஷா நாளுக்கு நாள் புத்தழகும் புதுப்பொலிவும் பெறக் கண்டான். அவளுடைய உருவத்தில், அசைவில் ஒரு புதிய நளினம் இருந்தது—முன்பு மங்கையாய் இருந்தவள் இப்பொழுது மனைவியாகிவிட்டாள். தலையை அவள் திருப்பியதும் சுருட்டையான சிறிய கருந் தளிர்கள் அவளுடைய கழுத்திலே படிந்து நின்றன, சடையொன்று அவளுடைய விம்மிய மார்பிலே விழுந்து தவழ்ந்தது. ''பியோதர் — கொஞ்சம் விறகு கொண்டுவாயேன்!'' ''எந்தன் பைங்கிளியே!'' அந்த ஒரு சில நிமிடங்களுக்குக்கூட விட்டுப் பிரிய அவனுக்கு மனம் வராது.

இதெல்லாம் மாமூலாகிவிட முடியுமா? எவ்வளவு காலம் அனுபவித்தாலும் அலுக்காதது தானே இன்பம்? கிழவரும் கிழவியும் ஓயாது

முணுமுணுத்ததை அவன் பொறுத்துக் கொள்ள முடிந்ததற்கு இதுதானே காரணம்! அவன் வாழ்ந்தது ஸ்தேஷாவுடன்—அவர்களுடனல்ல.

ஸ்தேஷாவைப் பொறுத்தவரை அவள் ஒரு போதும் முணுமுணுக்கவே இல்லை. முணுமுணுத்துக் கொள்ள அவளுக்கு எந்தக் காரணமும் இல்லை. கிழவரும் கிழவியும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கூட்டுப் பண்ணையிலேதான் வேலை செய்ய வேண்டியிருந்தது. ஆனால் ஸ்தேஷாவுக்குக் கூட்டுப் பண்ணையுடன் எவ்வித சம்பந்தமும் கிடையாது. அவளுடைய வெண்ணெய் ஆலை—வெளியே விரிந்து நீண்ட கூரையுடைய ஒரு பழைய கட்டடம் அது—கிராமத்துக்கு வெளியே இருந்தது. தினமும் காலையில் ஸ்தேஷா அங்கே போய் விடுவாள். பல நாட்களில், இடையில் பகற் பொழுதில் வீட்டுக்கு வந்து செல்வதற்குக்கூட அவளுக்கு அவகாசம் கிடைக்கும். அந்தி நேரத்தில் பியோதர் வீட்டுக்குத் திரும்புகையில், அவள் வீட்டிலே ஓடியாடி வேலை செய்து கொண்டிருப்பாள் — கிடங்கறையிலிருந்து ஆலவடிக்கு ஓடுவாள், பசுவுக்குத் தீனி கலப்பாள். ஸ்தேஷாவின் வேலைகள் சிரமமின்றி அமைதியாக நடைபெற்று வந்தன. அவள் தனது வேலைகளைப் பற்றி அதிகம் பேசுவதில்லை. உடைகளை மாற்றிக் கொள்கையில் கொட்டாவிகளுக்கிடையே எப்பொழுதாவது சொல்வாள்: ''கடைவதற்காக இன்று லுப்கோவோவிலிருந்து பால் கொண்டுவந்தார்கள்.... புளித்துப் போன பால்—இந்தக் குளிர்காலத்

நிலேயே இப்படியென்ருல், கோடையிலே என்ன செய்வார்களோ, தெரியவில்லை.'' அவ்வளவுதான் —அதற்குமேல் பேசுவதற்கு ஒன்றும் இருக்காது. அவள் வெளியே சென்று வேலை செய்கிருள் என்பதையே பியோதர் சில சந்தர்ப்பங்களில் மறந்துவிடுவான்.

இவ்வாருக வசந்தத்தின் நடுப் பகுதிவரை அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

சிலான்திய் பெத்ரோவிச் எதையும் அறை குறையாக விடாமல் முறைப்படி வேலை செய்பவர். ஒரு நாள் அவர் அந்தப் பழைய பிர்ச் மரத்திலே ஏணியைச் சாய்த்து வைத்து மேலே ஏறி மைனுக் கூட்டுப் பெட்டியை எடுத்து வைத்துக் கொண்டு, மீசையின் முனையைக் கடித்தபடி கவனமாய் ஆராய்ந்தார். மைனுவுக்குப் பெட்டி செய்து வைப்பது சிறுபிள்ளைகளது விளையாட்டு வேலையல்ல—பண்ணையின் ஓர் அங்கமாகும் இந்தப் பெட்டி. குருவிப் பெட்டி இல்லாத பண்ணை பெயர்ப் பலகை இல்லாத கூட்டுப்பண்ணை அலுவலகத்தைப் போன்றதாகும்—பெயர்ப் பலகை வைப்பதற்குக் கூட வக்கில்லாதவர்கள் நல்ல நிலையில் இருக்க முடியாது. குருவிப்பெட்டியைச் சரிசெய்து மாட்டி விட்டால், பிறகு யாவும் குற்றங் குறையின்றி பாங்குடன் இருப்பதாய்க் கூறலாம். ஆகவே பனியிலும் வெயிலிலும் அடிபட்டிருந்த அந்தப் பெட்டியை சிலான்திய் பெத்ரோவிச் மிகவும் கவனமாய்ச் சரிசெய்யத் தொடங்கினர்.

ஆனால் கூட்டுப் பண்ணைக்கு வசந்தத்தோடு கூட புதிய பல தொல்லைகளும் வந்து சேர்ந்தன.

வர்வாரா ஸ்திப்பானவ்னு பியோதரை அலுவலகத்துக்கு வருமாறு கூப்பிட்டனுப்பி, மேஜை இருவருக்கும் இடையிலிருக்க, தனது பருத்த முஷ்டியின்மீது முகவாயையைப் பதித்துக் கொண்டு அமர்ந்து, அவனிடம் உருக்கமாய்ச் சொன்னார்:

''பியோதர், நீதான் எங்களுக்கு உதவ வேண்டும். நீ எருவை எடுத்துச் சென்று கொட்டினாய்; நேர்மையுடன் வேலை செய்தாய்; குறை சொல்ல எதுவும் விட்டு வைக்கவில்லை. சரி, திரும்பவும் நீதான் எங்களுக்கு உதவியாக வேண்டும். கூதிர்ப் பருவம் எங்களுக்கு எப்படி இருந்தது என்பது உனக்குத் தெரியும்; நீ உலகின் எதிர்முனையிலே இருக்கவில்லை, இங்குதான் இருந்தாய்.... அறுவடைக் காலம் பூராவும் ஓயாத மழை. தானியத்தை நாங்கள் உலர்த்தியபோது, அதிலிருந்து தண்ணீர் வழிந்தோடிற்று. நாங்கள் விதைத் தானியத்தை அதிலிருந்துதான் எடுத்து வைக்க வேண்டியிருந்தது. தானிய அலுவலகத்தினர் இருக்கிறார்களே — நாசமாய்ப் போக—குளிர் காலம் முழுதும் இழுத்தடித்து வந்தனர். எங்களுடைய தானியத்தை விதைக்கலாமா, கூடாதா என்று அந்தக் கிறுக்கர்கள் ஜோசியம் பார்த்துக் கொண்டிருந்தனர்.... அப்பொழுதே 'கூடாது' என்று சொல்லியிருந்தால், என்ன செய்வதென்று எனக்குத் தெரிந்திருக்கும். ஆனால் இவ்வளவு

காலம் சும்மாயிருந்துவிட்டு இப்பொழுது வேலை தொடங்குகிற நேரத்தில், தரக் குறைவாயிருக்கிறது, விதைக்கக் கூடாது என்கிருர்கள்! அவர்களுடைய தலையிலே இடி விழ! எங்களுக்கு விதை கிடைத்திருக்கிறது, வட்டார நிர்வாகக் குழு நல்ல விதையாகக் கொடுத்திருக்கிறது. ஆனால் அதை நிலையத்திலிருந்து இங்கு கொண்டு வந்து சேர்த்தாக வேண்டுமே. பியோதர், நீதான் எங்களுக்கு உதவி செய்ய வேண்டும். டைரக்டரிடம் பேசி டிராக்டரை அந்த நிலையத்துக்கு அனுப்பச் சொல். இரண்டே தடவை அடித்தால் போதும், உங்கள் நிலையத்தின் டிராக்டர்கள் எங்கள் பண்ணையைக் காப்பாற்றிவிடும்.''

பியோதர் ஆலோசித்துப் பார்த்தான். நிலையத்துக்கு இங்கிருந்து நாற்பது கிலோமீட்டருக்கு மேலிருக்கும். சாலைகள் சேறும் சகதியுமாய், ஆய்ச்சல் குழி விழுந்திருந்தன; உருகியோடிய பனிப் பெருக்கால் பாதி அளவுக்கு அரிக்கப்பட்டிருந்தன. இச்சாலைகளில் டிராக்டர் போய் வருவதே பெரிய காரியமாயிருக்கும்; முழுச் சுமை கொண்ட சறுக்கு வண்டியை வேறு இழுத்து வருவதென்பது நடைபெறும் காரியமன்று. எவ்வளவு பெட்ரோல் வேண்டியிருக்கும் தெரியுமா....

''வர்வாரா ஸ்திப்பானவ்னு, என்னுல் முடியும் காரியமல்ல இது'' என்ருன். ''நீங்களே யோசித்துப் பாருங்கள்—முடியாதென்பது உடனே விளங்கும். „КД" டிராக்டரால் இச்சாலைகளில் போக

முடியாது, அதனுல் இவற்ருல் சுமையை இழுக்கவே முடியாது.''

''பெரிய டிராக்டரை அனுப்பினுல்? 50 குதிரைத் திறன் கொண்ட அது யானை போன்றதாயிற்றே, எந்தச் சுமையையும் அதனுல் இழுக்க முடியுமே.''

''டீசல் டிராக்டரை அனுப்பி ஆபத்தில் மாட்டிக் கொள்ளக் கூடாது. சாலைகள் இருக்கும் நிலையில் நடுவழியில் அது பழுதாகி நின்று விடாதென்று யாராலும் கூற முடியாது. நம்மிடம் இருப்பது அது ஒன்றுதான், கிளோவர் நிலங்களை உழ இப்பொழுது எந்நேரமும் அது நமக்கு வேண்டியிருக்கும். உங்களுக்கு விதை வந்து சேர்ந்து விடும், ஆனுல் அதை விதைப்பதற்கு எதுவும் இருக்காது. வர்வாரா ஸ்திப்பானவ்னு, அது நல்லதல்ல.''

''வேறு என்னதான் செய்வது? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!''

''எல்லாக் குதிரைகளையும் உபயோகியுங்கள் — ஒன்று பாக்கியில்லாமல் உங்களிடமுள்ளவை யாவற்றையும் உபயோகியுங்கள்!''

வர்வாரா ஸ்திப்பானவ்னு சந்தேகத்தை வெளியிடும் பார்வையுடன் பியோதரை உற்று நோக்கினுர், ஆனுல் அதில் நம்பிக்கை ஒளியும் சிறிதளவு கலந்திருந்தது.

''எல்லாக் குதிரைகளையுமா.... ஆம், செய்யலாம், சுலபமான வழிதான்; நானும் ஆலோசித்துப் பார்த்ததுதான். ஆனுல் எல்லாக் குதிரைகளையும் உபயோகிக்கலாமா? இது குறித்துத்தான் நான்

நழம்பிக் கொண்டிருக்கிறேன். எல்லாவற்றை யும் உபயோகிக்க எனக்குப் பயமாயிருக்கிறது. இந்த வேலையில் ஈடுபடுத்தி அவற்றைக் களைப் படையச் செய்துவிட்டால், பிற்பாடு என்ன செய் வது? மூடிமெழுகிப் பேச வேண்டியதில்லை—உன்னு டைய டிராக்டர்களை நம்பி மோசம் போகக் கூடாது. அவை எங்களை நட்டாற்றில் விட்டுவிடும் —சென்ற ஆண்டின் அனுபவத்திலிருந்து சொல் கிறேன். ஒரு நாள் வேலை செய்துவிட்டு இரண்டு நாட்கள் சும்மாய் நின்றன. எல்லா டிரைவர் களும் இயந்திர, டிராக்டர் நிலையத்தைப் பார்க்க ஓடிவிட்டனர் — உபரி உறுப்புக்கள் வேண்டு மென்று. அப்பொழுது குதிரைகள்தான் எங்களைக் காப்பாற்றின. பியோதர், அப்பட்டமாய்ச் சொல்லிவிடுகிறேன்—விதைப்புக் காலத்தில் குதி ரைகள் இல்லையேல் எனக்குப் பயமாயிருக்கும்.''

''வர்வாரா ஸ்திப்பானவ்ஞ, வேலைக்குழுத் தலைவன் சொலவேய்க்கோவைப் பற்றி உங்களுக் குத் தெரியாது! டிராக்டர்கள் நிச்சயம் வேலை செய்யும்—அதற்கு நான் பொறுப்பு. சத்தியமா செய்ய வேண்டும்? — சொல்லுங்கள், உடனே செய்து தருகிறேன்! விதையை எடுத்துவர உங் கள் குதிரைகளை உடனே அனுப்புங்கள்! இங்கே வயல்களில் அவை உங்களுக்குத் தேவைப்படப் போவதில்லை! டிராக்டர்களுடன் நான் பத்து ஆண்டுகளாய் வேலை செய்து வருகிறேன்—என் வாழ்வில் ஏறத்தாழ ஒரு பாதியை அவற்றுடன் கழித்திருக்கிறேன். டிராக்டர் டிரைவர் என்ற

முறையில் நான் உங்களுக்கு உறுதி மொழி தருகிறேன் என்றால், அது சாதாரண விஷயமல்ல.''

''அப்படியா?''

ஆனால் அவர் ஒத்துக் கொண்டுவிட்டார் என்பதை அவருடைய குரலின் தொனியிலிருந்தே பியோதர் தெரிந்துகொள்ள முடிந்தது. அவருக்கு பியோதரிடம் முழு நம்பிக்கை உண்டாகவில்லை தான்; ஆனால் வேறு வழி இல்லையே, என்ன செய்வது?

9

கொட்டகைக்கு அருகே சாம்பல் நிறத் திட்டுகளாக ஒதுங்கியிருந்த பனிப் பெருக்குகள் மறைந்தன. பிறகு சன்னலுக்குக் கீழே கரிய காய்கறிப் பாத்திகளுக்கிடையே சிறு அருவிகளாக நீர் ஓடி, சுத்தமான மஞ்சள் மணல் தடத்தை விட்டுச் சென்றது. விரைவில் இந்தப் பாத்திகள் அவற்றின் பளபளப்பான கரிய நிறத்தை இழந்தன; மண் கட்டிகள் சாம்பல் பூத்த நெருப்பையொத்த மேனி பெறலாயின. ஈரம் மறைந்து நிலம் உலர்ந்து வந்தது.

கிளோவர் வயல்களை உழுவதற்காக பியோதர் தனது டீசல் டிராக்டரை அனுப்பினான். அதனுடன்கூட தானும் சென்று அதிகாலையிலிருந்து இரவு நெடு நேரம்வரை அங்கேயே இருந்தான். பிறகு ஒரே அழுக்குமயமாகி, களைத்துப் போய்—ஆனால் அடங்காத ஆர்வத்துடன்—வீட்டுக்குத் திரும்பினான்.

''கண்ணே, பசி தாள முடியவில்லை, ஒருமுழுக் கழுதையையே சாப்பிட்டுவிடலாம் போலிருக்கிறது; கால்களோ நிற்க முடியாதபடி களைத்துப் போய்விட்டன.'' ஸ்தேஷா அவன் பக்கமாய்ச் சென்றபோது அவளைக் கிள்ள முயன்றான். பதிலுக்கு ஓர் அறை கிடைத்ததும் வீடு அதிரும்படிச் சிரித்தான்.

ஒரு நாள் பியோதர் ஆறி வெதவெதவென்றாகிவிட்ட தனது சூப்பை வேகமாய்க் கரண்டியால் அள்ளிக்குடித்தபோது, ஸ்தேஷா அவனுக்கு எதிரே அமர்ந்து, தனது வெண்ணிறக் கரங்களை மேஜைமீது ஊன்றிக் கொண்டு, மகிழ்ச்சியுடன் ஓரளவு கண்டனமும் கலந்த புன்னகையோடு தன் கணவனை உற்று நோக்கினாள். யாரோ விரட்டிக் கொண்டு ஓடி வருகிற மாதிரி ஏன்தான் இப்படி அவசர அவசரமாய் அள்ளிக் கொட்டிக்கொள்ள வேண்டுமோ தெரியவில்லை என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

''ஆமாம்—சொல்ல மறந்து விட்டேனே. நம்முடைய சொந்த நிலத்தை உழுவதற்கு இன்னும் எத்தனை காலம் காத்திருப்பதாம்? எப்பொழுதோ இவ்வேலையைச் செய்து முடித்திருக்க வேண்டும். கூட்டுப் பண்ணை நிலங்களை அப்பொழுதே உழ ஆரம்பித்தாகிவிட்டது, நம்முடையது மட்டும் இன்னும் தொடப்படவில்லை. நீ வர்வாராவிடம் போய் ஒரு குதிரை வாங்கிவர வேண்டுமென்று அப்பா சொல்கிறார். நீ கேட்டால்

வர்வாராவால் மறுக்கமுடியாது. உன்னை விரோதித்துக் கொள்ள வர்வாரா விரும்ப மாட்டார்.''

''ஸ்தேஷா, முடியாததைச் செய்யச் சொல்கிறாயே. விதை பூராவும் நிலையத்திலிருந்து கொண்டுவந்து சேர்க்கப்படும்வரை, யாருக்கும் குதிரை கொடுப்பதில்லை என்று பண்ணையின் நிர்வாகக் குழு முடிவு செய்திருக்கிறது. வர்வாரா ஸ்திப்பானவ்னாவுக்குங்கூடத்தான் சொந்த நிலம் இருக்கிறது. ஆனால் அவர் ஒன்றும் குதிரை எடுத்துக் கொள்ளவில்லையே. எல்லோரையும் முந்திக்கொண்டு நாம் முன்னிலையிலே போய் நிற்க முயல்வது சரியல்ல.''

''அப்படியென்றால், நாம் உழாமலே இருந்து விட வேண்டுமா?''

''என்ன செய்யலாமென்று யோசித்துப் பார்ப்போம், ஸ்தேஷா. உழுவதற்குப் பதிலாய் கொத்தி விட்டால் என்ன? இவ்வருடம் கூட்டுப் பண்ணை சங்கடமான நிலையில் சிக்கிக் கொண்டுவிட்டது. விதையெல்லாம் அங்கே நிலையத்தில் இருக்கிறது, ஆனால் இங்கே வசந்தம் வந்துவிட்டது.''

''கொத்துவதா? கால் ஹெக்டருக்கு அதிகமான நிலத்தை கொத்துவது யார்? நீயா செய்யப் போகிறாய்? காலை உண்டியை அவசரமாய் அள்ளிப் போட்டுக் கொள்வதற்குக்கூட உனக்கு நேரமில்லை. பல நாட்களில் கோட்டுப் பைக்குள் ஒரு துண்டு ரொட்டியை எடுத்து வைத்துக் கொண்டு கிளம்பி விடுகிறாய், அதன்பின் ஆளைக் காண முடிவதில்லை. கொத்தப்போவது யார்? நானா?

அல்லது அம்மாவா? அப்பாவுக்குத்தான் எழுபது வயதாகப் போகிறது. இது போன்ற ஒரு வேலை யை அவரால் செய்ய முடியுமா?''

''ஸ்தேஷா, கொஞ்ச நாள் காத்திரு, தானியத் தைக் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறோம்.''

''எவ்வளவு காலம் காத்திருப்பதாம்? கூட்டுப் பண்ணை நிலங்களில் விதை தெளிக்கிறாய், ஆனால் நம்முடைய சொந்த நிலத்தைக் கவனியாது விட்டு வைக்கிறாய்!''

''ஸ்தேஷா, இதைக் கேள். நான் போய்க் குதிரை கொடு என்று கேட்கமாட்டேன்—அவ்வளவு தான். நீ என்ன நினைத்துக் கொண்டாலும் சரி, நான் போய்க் கேட்கப் போவதில்லை. என்னுடைய மனசாட்சி இடந்தராது.''

ஸ்தேஷாவின் மலர்ந்த உதடுகள் மெல்லிய கோடாகச் சுருங்கிவிட்டன; அவற்றின் ஓரங்கள் துடித்தன. பியோதர் அவளுடைய கண்களில் கண்ணீர் ததும்பக் கண்டான்.

''உன்னுடைய மனசாட்சியைப்பற்றி ரொம்ப தான் பேசுகிறாய்! ஆனால் நீ இங்கே சாப்பிட வருகிறபோது மட்டும் அது உன்னை உறுத்துவதாய்த் தெரியவில்லையே!''

அவளுக்குப் பின்னால் கதவு படீரென அடித்துக் கொண்டது.

பியோதர் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அந்த சூப்பு சுவை இழந்துவிட்டது. ஒன்றுமில்லை, பெண்களே இப்படித்தான், காரணமில்லாமலே அலட்டிக் கொள்வார்கள் என்று

தனக்குத் தானே கூறிக் கொண்டான். விரைவில் அமைதியடைந்து விடுவாள்.... குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் சிறு பூசல். சற்று நேரத்தில் திரும்பி வருவாள், யாவும் சரியாகி விடும்.... உள்ளக் குமுறலான இது போன்ற சமயங்களில் எப்பொழுதும் அவன் நாடிச் செல்லும் அந்த ரேடியோப் பெட்டியிடம் சென்று மாஸ்கோ வானொலிக்குத் திருப்பினான். உச்ச ஸ்தாயியில் ஒரு குரல் பாடிக் கொண்டிருந்தது:

> **தந்திடுவேன் இவ்வுலகையே வேண்டினும்**
> **உந்தன் நீல விழிகளுக்கே....**

உடனே அதை நிறுத்திவிட்டு, எழுந்து கத வருகே சென்றான். ஆனால் மறுகணமே திரும்பிவிட்டான். கிழவர் அங்கே சோகமிக்க மோன நிலையில் உட்கார்ந்து பூட்சுக்குப் பாதம் தைத்துக் கொண்டிருப்பார், அல்லது கெட்டிலுடன் அதன் மூக்கைப் பொருத்திப் பற்றவைத்துக் கொண்டிருப்பார். கிழவி கெட்டியாக மூடிய உதடுகளை மெள்ளத் திறந்து ''இளைஞன் போனஸ் பெறலாமெனப் பார்க்கிறான்'' என்று முணுமுணுப்பாள். ஸ்தேஷா அழுது கொண்டுதான் இருப்பாள்.... ஏன் அவள் அப்படிச் சீறி விழுந்தாள்? ஆற அமர ஆலோசித்து அமரிக்கையாகப் பேசியிருக்கக் கூடாதா? அப்படி என்ன குடியா முழுகிப் போச்சு?.... பாழாய்ப்போன நிலம்! அதை உழ முடியாமலே போனால்தான் என்னவாம், பட்டினி கிடந்தா சாகப் போகிறார்கள்?

பூட்சுகளை உதறியெறிந்துவிட்டுப் படுக்கை மீது விழுந்தான். தலையணையில் முகத்தைப் பதித்துக் கொண்டு ஸ்தேஷா வந்து விடுவாள் என்று நெடுநேரம் காத்திருந்தான். ஆனால் அவள் வரவேயில்லை, தூக்கமும் வர மறுத்துவிட்டது.

எழுந்து அங்குமிங்கும் நடந்தான். அடுத்த அறையில் இருப்பவர்களுடைய காதில் விழட்டுமே என்று நாற்காலிகளைத் தடதடவென்று இழுத்துப் போட்டான். ஒரு கலப்பையை இணைத்துப் பொறுத்துவதற்காக அன்று தனது வேலைக்குழுவினருக்கு உதவியபோது தன் சட்டையின் கை கிழிந்து போனது அவனுக்கு நினைவு வந்தது. அதைத் தைப்பதெனத் தீர்மானித்தான். ஸ்தேஷா வந்து பார்க்கட்டும்! வாய் பேசமால் தைத்துக் கொண்டிருப்பேன் — கணவனைக் கவனியாது விட்டுவிட்டோமே என்று வெட்கப்படட்டும் அவள்.

ஊசிகளும் நூலும் இருந்த பழைய பிஸ்கட் டப்பாவைத் திறந்தான். பொருத்தமான நிறமுள்ள நூலைத் தேடுகையில் காம்சமோல் உறுப்பினர் சீட்டு ஒன்று உள்ளே இருப்பதைக் கண்டான்.

ஸ்தேஷாவை அவன் விழாக் கொண்டாட்டத்தில் சந்தித்தான். அவளைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு அது ஏற்ற இடமல்ல. பிற்பாடு, அவள் எப்படி இருந்தாளோ அதுவே போதுமென்று முழு மகிழ்ச்சியுடன் தன் மனத்துக்குரியவளாக அவளை ஏற்றுக் கொண்டான். அவனுக்கு அவள் ஸ்தேஷாவாகவே இருந்தாள். இருவரும்

மணம் முடித்துக் கொண்டனர். அவள் வேலை செய்து வந்தாள் என்பதும், இந்த வேலையில் திருப்தி கொண்டவளாகவே காணப்பட்டாள் என்பதும் அவனுக்குத் தெரியும். அவள் காம்சமோல் உறுப்பினளா, இல்லையா என்று கேட்க வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு உதிக்கவே இல்லை.

அந்த உறுப்பினர் சீட்டு அழுக்குப் படாமல் சுத்தமாயிருந்தது, புத்தம் புதியதாய்த் தோன்றியது. ஆனால் அது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அளிக்கப்பட்டதாகும். அதிலிருந்த படம் அவளை மிகவும் இளையவளாகக் காட்டிற்று—சாதாரணமான முகம்தான், புருவங்களை நெரித்துக் கொண்டிருந்தாள். இப்பொழுது இன்னும் கவர்ச்சியாய் இருக்கிறாள். உறுப்பினர் கட்டணம் மூன்று மாதங்களுக்கு மட்டுமே கட்டப்பட்டிருந்தது. உறுப்பினர் உரிமை தானாகவே பல காலத்துக்கு முன்பே ரத்தாகிவிட்டது. நான்கு ஆண்டுகளாய் இந்தச் சீட்டு கேட்பாரற்று இங்கே கிடக்கிறது.

பியோதர் இந்தச் சீட்டைப் பார்த்துச் சிந்தித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். என்னுடைய மனைவி இவள், மூன்று மாதங்களாய் இருவரும் கணவனும் மனைவியுமாய் வாழ்ந்து வருகிறோம். அவளைப் பற்றி எனக்குத் தெரியாத விவரங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கும்....

ஸ்தேஷா வரவேயில்லை. வீட்டில் அவளுடைய பெற்றோர்களது பகுதியிலே படுத்துக் கொண்டு விட்டாள்.

10

...அவர்களுக்குக் குதிரை தேவையென்றதும் உடனே கொடுத்துவிட வேண்டும், கூட்டுப் பண்ணை எக்கேடு கெட்டால் என்ன....

அவள் தனக்குத் தேடிப் பிடித்திருக்கும் வேலையைத்தான் பாரேன்—ஆடாது அசங்காது செய்யக்கூடிய சுத்தமான சுலபமான வேலே. கூட்டுப்பண்ணையில் வேலே செய்வதைவிட வெளியே கிடைக்கும் எந்த வேலையும் நல்லதுதான் என்ற நினைப்பு.

காம்சமோல் சீட்டை ஏதோ பழங்குப்பை மாதிரி ஊசிகளோடும் நூலோடும் சேர்த்து எங்கோ ஒரு மூலையில் போட்டுவிட்டாள்....

என்னதான் ஆனுலும் அன்பானவள், நல்லவள். ஒதுக்கித் தள்ளிவிடக் கூடியவளல்ல.

ஆறு ஆண்டுகளாய் பியோதர் டிராக்டர் வேலைக்குழுக்களுக்குத் தலைமை தாங்கி வருகிறுன். கிராமப்புறத்து டிராக்டர் டிரைவர்கள் சாமான்யமானவர்களல்ல, எளிதில் அவர்களைச் சமாளித்துவிட முடியாது. தமது மதிப்பையும் முக்கியத்துவத்தையும் நன்கு உணர்ந்தவர்கள், சுயேச்சை நிலையைச் சிறிதும் விட்டுக்கொடுக்காதவர்கள். பியோதர் எல்லா வகையானவர்களுடனும் பழக வேண்டியிருந்தது. பெட்ரோல் நெடி வீசும் முஷ்டி சில சமயங்களில் அவனுடைய மூக்குக்கு அடியில் வந்து நிற்கும்: ''பியோதர், எங்களை நாட்டாண்மை செய்யலாமென்று நினைக்காதே—

நாங்கள் பணிந்துவிட மாட்டோம்!'' ஆனால் மேலிடத்து உதவிக்காக ஓடாமலே, பியோதர் இத்தகையோரையும் சமாளித்துவிடுவான். ஆட்களை நிர்வகிக்கும் சாமர்த்தியம் அவனிடம் இருந்தது; விரைவில் அவர்கள் சாந்தமடைந்துவிடுவார்கள். பெண்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்—அவர்கள் அவன் தலைமையில் மிக நன்றாய் வேலை செய்தனர். எப்பொழுதுமே மிகவும் சுலபமாய் அவர்களை அவன் சமாளித்து விடுவான். இடையிடையே ஓர் இதமான சொல், ஒரு தமாஷான பாராட்டு—சொன்னால் போதும்—உடனே சர்க்கரைக் கட்டியாகிவிடுவார்கள். இந்த ஸ்தேஷாவும் இவர்களைப் போன்றவள்தானே? அவளிடத்தும் இதே போல இதமாகப் பேசி நிலைமையைச் சரி செய்ய ஓர் வழி காண முடியாதா, என்ன? இவ்வளவு தொல்லைக்கும் காரணம் என்ன? ஒரு குதிரை தானே? ஏன், அவன் சரியானபடி நிலைமையை எடுத்துரைத்தால், குதிரை வேண்டாம் என்று ஸ்தேஷாவே முந்திக் கொண்டு வந்து சொல்லிவிடுவாளே. பியோதர், பியோதர்—எதற்காக இப்படி நீ மனம் உடைந்துபோய் நிற்கிறாய்? உன்னுடைய மனைவி அவள் — நல்லபடியாகப் பேசி அவளை வழிக்குக் கொண்டு வருவதற்கான முறை உனக்குத் தெரியாமலா போய்விட்டது? என்ன முட்டாள் தனம்!

மதியம் உணவு நேரம் வரும்வரை காத்திருக்க முடியாமல் அவன் துடியாய்த் துடித்துப் போய் விட்டான்.

ஸ்தேஷா வீட்டில்தான் இருந்தாள், வியக்கத் தக்கவாறு பவ்யமாக நடந்து கொண்டாள்.

''வந்துவிட்டாயா? தொட்டாற்சிணுங்கியே, வா, வா! இன்று முழுதும் இந்தப் பக்கம் தலைகாட்ட மாட்டாய் என்றல்லவா நினைத்திருந்தேன்! பாடாய்ப் படுத்தி வைக்கிறாயே! சரி, சரி—வா, சாப்பிட உட்காரு.''

அவளிடம் என்ன சொல்வது என்று அன்று காலை பூராவும் அவன் ஒத்திகை நடத்திப் பார்த்திருந்தான். தனக்குள் வாதாடியும், பதில்கள், முறையீடுகள், வேடிக்கைப் பேச்சுகள் யாவற்றையும் சொல்லிப் பார்த்தும் தன்னைத் தயார்ப்படுத்தியிருந்தான். ஆனால் இப்பொழுது இவற்றுக்குத் தேவையில்லாமற் போய்விட்டது. ஸ்தேஷா கோபதாபமின்றி சாந்தமாயிருந்தாள். பியோதர் வியப்புற்றுவிட்டான், என்ன செய்வதென்று புரியாமல் கொஞ்சம் கலக்கமும் அடைந்துவிட்டான்.

''புரிந்து கொள்ளமாட்டேன்கிறாயே, ஸ்தேஷா நீயே யோசித்துப் பார் — நீ சொன்னாயே— அதை நான் எப்படிச் செய்ய முடியும்? இது சரியான நேரமல்லவே.''

''என்னா அது? —ஓகோ, குதிரையா? கவலைப் படாதே, விட்டுத்தள்ளு. நீ செய்ய விரும்பவில்லை, அதனால் அப்பாவே செய்துவிட்டார். இப்பொழுது அவர் உழுது கொண்டிருக்கிறார். அந்தப் பக்கமாய்த்தானே நீ வந்தாய். ஆனால் பார்க்காமலே வந்திருக்கிறாய், உனக்கு இதிலே அக்கறை இருந்தால்தானே.''

''என்ன?—குதிரை எப்படி கிடைத்தது? எங்கிருந்து?''

''எங்கிருந்து கிடைக்குமாம்? வர்வாராவிடம் போய்க் கேட்டு வாங்கி வந்தார். நீதான் கேட்டால் மதிப்புக் குறைந்துவிடும் என்று நினைத்தாய்—மனசாட்சியைப் பற்றி பேசினுய்!... உட்காரு, இன்று கோழி சூப்பு செய்திருக்கிறேன், நாள் தவருமல் உப்பிலிட்ட இறைச்சியைச் சாப்பிட்டு உனக்கு அலுத்துப் போயிருக்கும்.''

வழக்கம் போல் அவள் அமைதியின் உருவாய், கருத்துள்ள இல்லத்தலைவியாய், சப்தமின்றி அடி வைத்து அறையில் அங்குமிங்கும் நடந்து வேலை செய்தாள். அலுவலக வேலைக்காக அவள் அணிந்திருந்த சட்டையில் அழுக்குப் பட்டுவிடாதபடி அந்தப் பளுவான இருப்புக் கடாயை நாசுக்காய்த் தூக்கி வந்து மெள்ள மேஜைமீது வைத்தாள். இவள்மேல் கோபங் கொள்ள முடியுமா? இவளைப் பற்றி தவருக நினைக்க முடியுமா?

இருந்தபோதிலும் பியோதர் வாய் பேசாமல் மௌனமாகவே சாப்பிட்டு முடித்தான். அவன் மனதை ஒரு சந்தேகம் அரித்துக் கொண்டிருந்தது: ''வர்வாரா ஸ்திப்பானவ்ஞ இதைச் செய்யக் காரணம் என்ன? சிலான்திய் பெத்ரோவிச்சும் சரி, அலெவ்தீஞ இவானவ்ஞவும் சரி அப்படியொன்றும் வர்வாராவின் தனி அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்கள் அல்லவே. ஏதோ கள்ளத்தனம் நடந்திருக்கிறது....''

சாப்பிட்டதும் அவன் மூலே வழியாய்ச் சென்ருன், நேரில் பார்த்துவிட்டுப் போகலாமென்று. ஸ்தேஷா சொன்னது உண்மைதான், விளேயாட்டல்ல. கரிய உழவு சால்கள் வரிசையாய் ஓடின; காகங்கள் அவற்றின் மீது தத்திச் சென்றன. கலப்பையின் பிடிமீது கவிழ்ந்து கொண்டு, கிழவர் தத்துப்புத்தென்று தள்ளாடி நடந்தார்.

ஏதோ தவறு நேர்த்துள்ளதென்ற சந்தேகம் பியோதர் மனத்துள் மேலும் மேலும் பலமடைந்தது. நேரே பண்ணே அலுவலகத்துக்குச் சென்ருன்.

வர்வாரா ஸ்திப்பானவ்ஞ அவனேப் பார்த்து விட்டுச் சுளித்த முகத்துடன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டார்.

''ஆம், குதிரை கேட்டாய் — கொடுத்து விட்டேன்'' என்ருர், பியோதரின் முகமனேப் பொருட்படுத்தாமலே.

''நாஞ? குதிரை கேட்டேஞ?''

''நீ கேட்கவில்லே என்று சொல்ல விரும்புகிருய்? இன்று காலே சிலான்திய் பெத்ரோவிச் இங்கு வந்து சரியாக ஒரு மணி நேரம் என் உயிரை வாங்கிஞரே. யாரையும் நாங்கள் ஒழுங்காய் நடத்தவில்லே, கூட்டு பண்ணேக்காக நீ இராப்பகலாய் உழைக்கிருய், ஆஞல் உனக்கு நாங்கள் தயவு காட்டவில்லே என்று முறையிட்டார். அவருடைய வார்த்தைகளேயே சொல்கிறேன் கேள்: 'தயவு காட்டும்படி பியோதர் சொல்லச் சொன்ஞன்.'' இப்பொழுது ஒரு குதிரை தரத் தயங்கிஞல், பிற்பாடு பெரிய நஷ்டம்தான் ஏற்படுமென்று என்னேப்

பயமுறுத்தும் அளவுக்குச் சென்றார். நஸ்தாஸ்யா பெஸ்துஜேவாவுக்கு ஐந்து சிறு குழந்தைகள், கணவர் இல்லாதவர், உடல் நலமற்றவர்—அவருக்குக்கூட முடியாதெனச் சொல்லிவிட்டேன். ஆனால் உனக்குக் கொடுத்தேன். வேறு வழியில்லை.... ஒரு குதிரை களைப்புற்று வேலைக்கு உதவாமற்போனாலும் பரவாயில்லை, வயலில் நடைபெற வேண்டிய முக்கிய வேலைகள் தடைப்பட்டுவிடக் கூடாதென்று உனக்கு மட்டும் கொடுத்தேன்.''

''வர்வாரா ஸ்திப்பானவ்னா, குதிரை வேண்டுமென்று நான் கேட்கவே இல்லை!''

ஆனால் வர்வாரா ஸ்திப்பானவ்னா எதிர்ப் பக்கம் திரும்பிக் கணக்கருடன் பேசத் தொடங்கிவிட்டார்:

''இதைக் கொஞ்சம் சொல்லுங்கள். இந்த மிச்சத் தொகையை ஏன் வரவுக் கணக்கிலே சேர்த்து எழுதியிருக்கிறீர்கள்?''

''வர்வாரா ஸ்திப்பானவ்னா! நான் சொல்வதைக் கேளுங்கள்! அந்தப் பக்கம் திரும்பிக் கொள்ள வேண்டாம்! இதை நீங்கள் கேட்கத்தான் வேண்டும்!''

''என்னிடம் கூச்சல் போட்டுப் பயனில்லை. உன் குடும்பத்தார் உனக்குத் தவறிழைத்தார்கள் என்றால், அவர்களிடம் போய்க் கூச்சல் போடு.''

சூடுபட்ட பூனை மாதிரி பியோதர் அடித்து மோதிக் கொண்டு அந்த அலுவலகத்திலிருந்து வெளியே வந்து, நேரே வீட்டை நோக்கி வேகமாய் நடந்தான்.

குதிரை வயல் ஓரத்துக்கு வந்து சேரும் வரை அவன் காத்திருந்தான். அடிக்கொரு முறை தனது பெருந் தலையை ஆட்டியபடி அது அருகே வந்ததும், அதன் லகானைப் பிடித்துக் கொண்டான்.

''அப்பா, போதும் நிறுத்துங்கள்!''

''என்ன வேண்டும் உனக்கு?'' கிழவரின் மங்கிப் போன அந்தப் பழைய இராணுவக் குல்லாய் அவர் தலைக்குப் பெரியதாய் இருந்தது. அதன் பிளந்த விளிம்பு அவருடைய மூக்கின்மேல் சரிந்து கவிழ்ந்தது.

''குதிரையை அவிழ்த்துக் கொடுங்கள்!''

உதவிக்காகக் காத்திராமல் தானே அதை ஏர்க் காலிலிருந்து அவிழ்த்தான். குதிரை ஓர் அடி முன்னால் வந்து அப்படியே நின்றது—லகான் கலப்பைப் பிடியோடு கட்டப்பட்டிருந்தது.

''நல்லாயிருக்கு உன் வேலை! எங்களுக்கு வந்து வாய்த்தவனே! ரொம்ப ரொம்ப நன்றி! யார் வீட்டிலே இருக்கிறோம், யார் சாப்பாட்டைச் சாப்படுகிறோம் என்பதைக்கூட மறந்துவிட்டாயே நீ.... அந்த லகானைப் போட்டுவிடு — அது என்னுடையது, பண்ணையுடையதல்ல.''

பியோதர் குதிரையின் லகானைக் கழற்றி முனைகளைத் தரையிலே கிடாசினான்.

குதிரையை ஓட்டிச் சென்ற அவன் பின்பக்கம் திரும்பி ''நீங்கள் என் பெயருக்கு இழுக்கு உண்டாக்குவதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க மாட்டேன்!'' என்று கூச்சலிட்டான். ''உங்களுடைய சாப்பாடு உங்களிடமே இருக்கட்டும்!

எனக்கும் என் மனைவிக்கும் வேண்டிய அளவு நான் சம்பாதிக்கிறேன்!''

குதிரையை லாயத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு, வயல்களிலே வேலை செய்த டிராக்டர்களிடம் சென்றான். இரவு நெடுநேரம்வரை அங்கேயே இருந்தான்.

11

நன்றாய் இருட்டிவிட்டது.

கிராமப்புறத்தைத் தவிர பிற இடங்களில் எல்லாம் மறக்கப்பட்டுவிட்ட ஒரு பழைய பாட்டின் நாதம் காதில் விழுந்தது. அதை இசைத்தவர் கிராமத்துக்கு வெளியே சென்றதைத் தொடர்ந்து மெள்ள அது தொலைவிலே மறையலாயிற்று. ஐந்து கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஸோபலெவ்க்கா கிராமத்தில் ஒரு திருமணம் நடைபெற்றது. பியோதர் ஒரு முறைகூட பார்த்திராத இலியா ஸிபுஞேவ் நாளை காலை இல்லற வாழ்க்கை தொடங்கிவிடுவார். வாயில் முகப்புகளிலே சிகரெட்டுகள் ஆயாசமாய்க் கனன்று மெள்ளத் தணிந்தன. சாலையில் எதிரும் புதிருமாய் இருந்த தமது வேலிகளில் சாய்ந்து நின்றபடி இரு பெண்கள் ஊர்வம்பு பேசினர். சாலை வழியே சென்ற இரண்டொருவரின் தலைக்கு மேல் அவர்கள் தமது பேச்சைப் பரிமாறிக் கொண்டனர். யாரோ செக்லித்தேயா என்றொரு பெண்ணைப் பற்றி வம்பளந்து கொண்டிருந்தனர்.

அவள் இப்படிப்பட்டவள், அப்படிப்பட்டவள், மூக்கு உருளைக்கிழங்கு மாதிரி இருக்கும், முக மெல்லாம் புள்ளி விழுந்து பார்க்கச் சகிக்காது, இத்தகைய ஒரு கோட்டானிடம் இந்த ஆடவர்கள் என்னதான் கண்டுவிட்டார்களோ, தெரியவில்லை....

அன்றாட கிராம வாழ்க்கை—இராப் பொழுதுக்காக எல்லாரும் அவசரமின்றி நிதானமாய்த் தயார் செய்து கொண்டிருந்தனர். இன்னும் ஒரு மணி நேரத்தில் யாவரும் அயர்ந்து தூங்கி விடுவார்கள்.

ஒரு வீடு — கிராமத்திலுள்ள பலவற்றில் ஒன்று—அதன் ராஸ்பெரிப் புதர்களிலே புதைந்து கிடந்தது. பியோதர் தயங்கியபடி அதனை நெருங்கிய போது அதன் இருண்ட சன்னல்கள் அவனைக் கடுப்புடன் நோக்கின. இந்த வீட்டினுள் அவன் நுழையாதிருந்தால், இதனைக் கடந்து நேரே நடந்துசெல்ல முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். ஆனால் முடியவில்லை. இனி திரும்பிச் செல்வதோ, கடந்து செல்வதோ எளிதில் நடைபெறக் கூடியதல்லவே.

பியோதார் ஜாக்கிரதையாகக் கதவைத் தள்ளிப் பார்த்தான். அது அசையவில்லை. தாழிடப் பட்டிருந்தது. என்ன செய்யலாம்? திரும்பி விடுவதா? தட்டுவதா? இரண்டும் சங்கடமானவை.

இதுவரை நான் வசித்து வந்தது இங்குதான், வேறு எங்குமில்லை....அவன் பலமாகத் தட்டினான்.

நீண்ட நேரம் வரை பதிலில்லை. முடிவில் சல சலப்பு கேட்டது.

''யார் அது?'' பியோதர் சற்று தாராளமாய் மூச்சு விட்டான்—வந்தது கிழவருமல்ல, கிழவி யுமல்ல, ஸ்தேஷாதான். அதுவரை நல்லதுதான்.

''நான்தான்.... கதவைத் திற.''

நிசப்தம். ஒரு சிலுசிலுப்பு அவன் உடலெங் கும் பாய்ந்தோடிற்று. பிறகு குபீரென்று எங்கும் சுட்டது.

இறுதியில் தாழ்ப்பாள் தள்ளப்பட்டது. கதவு திறந்தது. திரும்பிச் செல்லும் காலடிகளின் ஓசை கேட்டது — கூர்மையாகவும் கடுகடுப்புடனும் ஒலித்தது.

பியோதர் உள்ளே நுழைந்து தனக்குப் பின்னால் கதவை மூடினான்.

''புல்லில் நெளியும் பாம்பாய்ப் பிறந்தவனே, வந்துவிட்டாயா நீ? எதற்காக வந்தாய்? இங்கு என்ன வேண்டும், உனக்கு?... எங்களையெல்லாம் விட ஊரிலிருப்பவர்கள்தானே உனக்கு ரொம்ப வேண்டியவர்கள்! போ வெளியே! உன்னைப் பார்க்கச் சகிக்கவில்லை எனக்கு, வயிற்றைக் குமட்டுகிறது! உன்னைப் போன்ற ஒரு முரடனைத் தேடிப்பிடித்துக் கொண்டேனே!''

''ஸ்தேஷா! ஒரு நிமிடம் சும்மாய் இரு.... ஸ்தேஷா, போதும் நிறுத்து.... நான் சொல் வதைக் கேள், கொஞ்சம் முயற்சி செய்.''

அவள் கூந்தல் கலைந்து அலங்கோலமாயிருந் தது; இருட்டில் அவள் முகம் அரைகுறையாகவே

தெரிந்தது; அவளுடைய குரல் ஆத்திரத்தால் அதிர்ந்து நடுங்கியது, உச்சத்துக்கு உயர்ந்து கிரீச்சுக் கூச்சலாகிவிட்டது. வீடு தூக்கத்தில் ஆழ்ந்து நிசப்தமாயிருந்தது; பியோதர் சப்தமின்றி மெள்ளப் பேச விரும்பினுன். இந்தச் சூழலில் அவளுடைய கூச்சல் கர்ணகடூரமாய் இருந்ததோடு கூட, பீதியூட்டுவதாயும் இருந்தது.

''நான் சொல்வதைக் கேள்....''

''நீயும் ஒரு கணவன்தானு? இம்மாதிரியான ஒரு முட்டாளை நான் ஏன் கண்ணெடுத்துப் பார்த்தேனே! பெரிய காரியம் செய்துவிட்டாயல்லவா, அதனுல் அடங்காத மகிழ்ச்சி கொண்டு உள்ளே வருகிருயாக்கும். இதோ இருக்கேன், பார் என் அழகை!''

''ஸ்தேஷா!''

''உன் நண்பர்களில் யாரும் உன்னை உள்ளே அழைத்துக் கொள்ளவில்லையாக்கும், இங்கே ஓடி வந்துவிட்டாய்!''

''ஸ்தேஷா, இந்த மாதிரி பேசாதே, நிறுத்து!''

''ஐயோ!.. அம்மா!... வெட்கங்கெட்டவன், மோசக்காரன், அப்பாவை ஏசினுன், இப்பொழுது என்மேல் பாய்கிருன்!... இன்னும் சாகாமல் இருக்கிறேனே! என் சொந்த வீட்டிலா இப்படி நடக்கணும்!''

''அழாதே! அழாதே! நான் சொல்வதைக் கேள்!''

ஆனுல் ஸ்தேஷா நிறுத்தவில்லை, மார்பைப் பிடித்துக் கொண்டு ஓவென்று அலறினுள்.

''நான் என்ன செ-ய்-தேன், ஏன் இந்தத் தண்-ட-னை என-க்-கு!''

கதவு திறந்தது. அவளுடைய தாய் சட்டைக்கு மேல் ஒரு பழைய கோட்டைப் போர்த்திக் கொண்டு அங்கே வந்து நின்றார்.

''தெய்வமே, ஏசுநாதரே!... ஸ்தேஷா, என் செல்வமே, என்ன இதெல்லாம்? என் கண்மணியே! ...சிலான்திய்? சிலான்திய்!... குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருக்காதே! உன் மகள் கொலை செய்யப்படுகிறாள்!... அந்தத் தடியன் குடித்துவிட்டு அட்டகாசம் செய்கிறான்!''

பியோதருக்குக் கோபம் தாங்க முடியவில்லை.

''கிழட்டுப் பிணமே, நீ போ வெளியே! உனக்கு இங்கு வேலை இல்லை!''

''சிலான்திய்!''

''ஐயோ! அம்-மா! அப்-பா!''

சிலான்திய் பெத்ரோவிச் வெள்ளை உள்ளுடுப்புகளுடன் நெடுநெட்டையாய்க் காணச் சகிக்காத உருவமாய்த் தட்டுத் தடுமாறியபடி உள்ளே வந்தார். தன் மகளின் கையைப் பற்றிக் கொண்டு, தன் மனைவியைக் கதவருகே தள்ளினார்.

''வெளியே வா, வந்துவிடு! ஸ்தேஷா, நீயும் வந்துவிடு! இதையெல்லாம் பிற்பாடு தீர்த்துக் கொள்வோம்.... குடியைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பே, உன்னை மடக்கத் தக்க வழி காண்கிறேன், பார்!''

''நான் பிடித்துத் தள்ளுவதற்கு முன்னால் போய்விடுங்கள்!''

"தக்க வழி காண்கிறேனா, இல்லையா, பார்!"

மூடப்பட்ட கதவுக்குப் பின்னாலிருந்து கிழவி யின் குரல் ஒலித்தது:

"ஐயோ, யாவற்றையும் நொறுக்கி விடு வானே! உள்ளே இருக்கும் நல்ல சாமான்களை எல்லாம் உடைத்து விடுவானே!"

பிறகு நிசப்தமாகிவிட்டது.

நெடுநேரம் பியோதர் அசையவில்லை.

இந்த மாதிரிகூட நடக்குமா.... இனி நான் என்ன செய்வது? போய்விடுகிறேன், உடனே கிளம்பிவிடுகிறேன். எங்கே போவது?... என் குழுவினரிடமா, டிராக்டர் டிரைவர்களிடமா.... அவர்கள் ஏன் வந்தாய் என்று கேட்பார்களே; என்ன நடந்ததென்த் தெரிந்துகொள்ள விரும்பு வார்களே. அவர்களிடம் சொல்லி, ஊரெல்லாம் பேச்சைப் பரவவிடுவதா? எல்லோர் முன்னிலை யிலும் என் குட்டைப் போட்டு உடைப்பதா? வேண்டாம், பொழுதுவிடிகிற வரை இங்கேயே இருப்பதுதான் நல்லது!

இருண்ட அறை—அரைகுறையாகத் தெரிந்த ஸ்தேஷாவின் மங்கிய உருவம், தோள்களிலே கோட்டைப் போர்த்தியிருந்த அவளுடைய தாய், உள்ளுடுப்புகளுடன் கத்தரிக்கோல் போல மெல்லி யதாயும் விரைத்துமிருந்த அவள் தந்தையின் உருவம்—இந்தச் சிம்மசொப்பனத்தை விரட்டி யடிக்கும் பொருட்டு விளக்கை ஏற்றினான்.

கலைந்த படுக்கை, தரைமீது விரித்திருந்த பாய், மேஜை மீதிருந்த வெள்ளை விரிப்பு, மஞ்சள்

வார்னிஷ் பூசப்பட்ட ரேடியோப் பெட்டி, காகித மூடாக்குடன் கூடிய விளக்கு—எல்லாம் தெரிந்தன. இந்த விளக்குக்கு மேற்புறம் பச்சையும் உட்புறம் வெள்ளையுமான மூடாக்கு வாங்க வேண்டுமென்று இருந்தேனே என்று ஏக்கத்துடன் நினைத்தான்.... பீதிக்கும் திகைப்புக்கும் இடைப்பட்ட ஓர் உணர்ச்சி பியோதரை மூழ்க்கடித்தது. கதையின் முடிவு இதுதானா?

அவன் நின்ற அந்தத் தரை ஸ்தேஷா தேய்த்துச் சுத்தம் செய்தது. அவளுடைய கைகள்தான் அந்த மேஜை விரிப்பை விரித்துப் போட்டன. அவளுடைய தாய் அதன் ஓரங்களை மடித்துத் தைத்தார். நீள் விரிப்பும் கண்ணை உறுத்தும் அந்தப் பெட்டியும் அதோ இருக்கின்றன. அந்தக் கூச்சல் அவன் நினைவுக்கு வந்தது: ''யாவற்றையும் நொறுக்கிவிடுவானே! உள்ளே இருக்கும் நல்ல சாமான்களை எல்லாம் உடைத்து விடுவானே!'' தன்னுடைய இல்லத்தில் அவன் சந்தோஷமாய் இருந்து வந்தான். இப்பொழுது அவன் கண்ணில் பட்ட ஒவ்வொன்றும்—அந்த வெள்ளை விரிப்பு, நீள்விரிப்பு எல்லாமே — அவனைப் பார்த்து ஸ்தேஷாவின் குரலில் அலறின: ''பாம்பாய்ப் பிறந்தவனே! எதற்காக இங்கு வந்தாய்?''

இல்லம்தான்—ஆனால் அவனுடையதல்ல.... காலைவரை இங்கு இருக்கலாம், பிறகு எங்கு செல்வதென ஆலோசித்தாக வேண்டும்....

வீட்டில் பெற்றோர்களது பிரிவில் ஒரு சிறு அறையில் கட்டில் ஒன்று இருந்தது—நிக்கல் தகடு

அடித்த அகலமான, நேர்த்தியான கட்டில். மிருது வான மெத்தையும், தலையணைகள் ஓர் அடுக்கும், ஆட்டு ரோமத்தாலான நல்ல போர்வையும் அதில் இருந்தன. ஆயினும் கிழவரும் கிழவியும் எப்பொழுதும் பெரிய கல் கணப்படுப்பின் மேடையிலோ, அடுப்புப் பரணியிலோ ஒரு பழைய கோட்டை அடியில் போட்டுப் படுத்துக் கொள் வார்கள். ஸ்தேஷா இரவின் எஞ்சிய பகுதியை அந்தக் கட்டிலில் கழித்தாள்.

ஆத்திரம் தாங்காமல் சில மணி நேரம் அழுது கொண்டிருந்தாள். முரடன், தடியன்—சொந்த மனைவியைவிடவா இவனுக்கு இந்த வர்வாரா உயர்ந்தவளாகிவிட்டாள்? கொஞ்சம் கொஞ்ச மாய்க் கண்ணீர் அவளுடைய கோபத்தைத் தணித் தது; கோபத்தினிடத்தில் வெட்கமும் அச்சமும் மேலிட்டன.... இதனால் என்ன நேருமோ? யாவும் இதோடு முடிவுற்றுவிட்டால் என்ன செய்வது? திரும்பவும் தாரைதாரையாகக் கண்ணீர் பீறிட் டது—ஆத்திரக் கண்ணீரல்ல, சோகக் கண்ணீர். இன்பமாய் வாழலாமென அவள் எண்ணியிருந்த தெல்லாம் இப்படிப் பொய்த்துவிட்டதே.

இன்ப வாழ்வை ஸ்தேஷா அவளுடைய சொந்த முறையிலே மனத்துள் சித்திரம் தீட்டி வைத் திருந்தாள்.

அவள் பிறந்தது இந்த வீட்டில்தான். இங்கே யேதான் அவளது இளம் வாழ்க்கை பூராவையும் கழித்திருந்தாள். எப்பொழுதாவது உனக்குப் பெருந் துன்பங்களோ, பெரிய இன்பங்களோ

ஏற்பட்டதுண்டா என்று யாராவது அவளைக் கேட்க நேர்ந்திருந்தால், சுலபமாய்ப் பதில் கூற முடியாமல் விழித்திருப்பாள். பெருந்துன்பங்களா? பெரிய இன்பங்களா?.... அப்படி எதுவும் ஏற்பட்டதாக அவளுக்கு நினைவில்லையே. அவளுடைய பதினேழாவது பிறந்த நாளன்று பெற்றோர்கள் அவளுக்கு நீலப் பட்டாடை ஒன்று கொடுத்தார்கள் — இன்னமுங்கூட விசேஷக் காலங்களில் அதைத்தான் அவள் அணிந்துகொண்டாள். அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் எதாவது புதிதாக ஒன்றை அவளுக்கு வாங்கிக் கொடுத்தனர். இவை அவளை மனம் மகிழச் செய்தன. எல்லாவற்றையும்விட அந்த நீலப் பட்டாடைதான் அவளுக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளித்தது. இவற்றைக் காட்டிலும் பெரிய இன்பங்களை அவள் கண்டதில்லை.

பள்ளிக்கூட ஆண்டுகள். பதினன்கு வயதானதுமே அவள் பெரியவளாக, திருமண வயது வந்தவளாகத் தோன்றினாள். அந்த வயதுக்கு அதிக உயரமுடையவளாக, சிவப்புக் கன்னங்களுடன் பருவ மங்கைக்குரிய உருவுடையவளாக இருந்தாள். பள்ளிக்கூடப் பாடங்களை நன்றாகத்தான் படித்து வந்தாள்—கணிதம் ஒன்றைத் தவிர்த்து. கணக்குகளைப் பார்த்ததும் அவளுக்குச் சிந்தனை நின்றுவிடும். மொத்தத்தில் அவள் ஏனையோருக்குச் சப்பை இல்லை—வகுப்பில் ஏறத்தாழ நடுத்தர நிலையிலே இருந்தாள். பள்ளிக்கூட இசைக்

குழுவில் சேர்ந்திருந்தாள்; கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பாடினாள்.

பெரும்பாலான இளைஞர்களும் யுவதிகளும் பண்ணையை விட்டு வெளியே சென்றுவிட முயன்றனர். பையன்கள் தமது இராணுவக் காலப் பணிக்காகப் புறப்பட்டுச் சென்றவர்கள் கிராமத்துக்குத் திரும்பி வருவதில்லை. பெண்கள் ஏதாவது நிர்மாண வேலைக்கோ, தொழிற் பள்ளிக்கோ போய்விடுவார்கள்; அல்லது வட்டாரத் தலைமை ஊரில் குமாஸ்தாவாகி 'பைல்' கட்டுகளை வைத்துக் கொண்டு வேலை செய்யத் தொடங்கிவிடுவார்கள். ஸ்தேஷா எட்டாவது படிவத்தை முடிக்காமலே நின்றுவிட்டாள்—அதற்குள் மாலைநேரப் பொழுதுபோக்குகளில் ஈடுபட ஆரம்பித்துவிட்டாள்; பையன்கள் அவளை வீட்டுக்கு அழைத்து வந்து விடுவது வழக்கமாகிவிட்டது. மேஜை முன்னால் உட்கார்ந்து சிறுமியைப் போல சமன்பாடுகளை வைத்துக் கொண்டு தீர்வு காண்பதற்கு அவளுக்கு வெட்கமாய் இருந்தது—அவளுக்கு ஏன் இதெல்லாம்? இந்த ''x''களும் ''y''களும் எந்நாளும் அவளுக்குத் தேவைப்படப் போவதில்லை.

ஸ்தேஷா வீட்டை விட்டகன்று வெளியிடங்களுக்குச் செல்லவில்லை; அங்கேயேதான் இருந்தாள். ஆனால் அப்பாவும் அம்மாவும் சேர்ந்து ஒரே குரலில் தீர்மானமாய் இதனைக் கூறி வந்தனர்: கூட்டுப் பண்ணையில் வேலை செய்வதில் எவ்வித பயனுமில்லை. ஆகவே அவள் ஆலையில் வேலை

தேடிக் கொண்டாள்— சுலபமான நல்ல வேலே. பால் வந்து சேர்ந்ததும் அதைச் சரிபார்த்து ரசீதுகள் எழுத வேண்டும், அவ்வளவுதான். அங்கு அவளேயன்றி ஐந்தே பேர்தான் வேலே பார்த்து வந்தனர்—எல்லோரும் வயதான பெரிய வர்கள், குடும்பஸ்தர்கள்.

தொடக்கத்தில் அவள் தனது பழைய நண்பர் களுடன் தொடர்பு வைத்திருந்தாள். அவர் களுடன் சேர்ந்து பொழுதுபோக்கினுள்; ஒதுக்குப் புறமான மூலேகளில் அவர்களுடன் இரகசியங்கள் பேசினுள். கலேநிகழ்ச்சிகளில் முன்பு போலவே பாட்டுகள் பாடி வந்தாள். காம்சமோலிலுங்கூட சேர்ந்து கொண்டாள். எல்லோரும் சேர்ந்தனர், அவள் மட்டும் ஏன் சேராமல் இருக்க வேண்டும்? ஆனுல் விரைவில் அவள், புல் அறுப்பது குறித் தோ, வயல்களுக்கு எரு அடிப்பது குறித்தோ விவாதித்த இந்தக் கூட்டங்கள் விருந்துகளேயும் நடனங்களேயும் போல சுவையாயில்லே என்பதைக் கண்டாள். அவளே அறியாமலே அவளுடைய பழைய நண்பர்களிடமிருந்து சிறிது சிறிதாய் விலகி வந்துவிட்டாள். தவிரவும் மிகச் சிலரே வெளியிடங்களுக்குப் போகாமல் கிராமத்தில் தங்கியிருந்தனர்.

வீட்டிலிருந்து ஆலேக்கு, பிறகு திரும்பவும் வீட்டுக்கு—தினமும் அதே பாதையில் ஆக்னியா ஸ்திரிகுஞேவாவின் வீட்டையும் பியோத்தர் ஷிபா னவின் வேலியையும் பண்ணே அலுவலகத்தையும் கடந்து நடந்தாள்.... உப்புச் சப்பற்றதாகத்தான்

இருந்தது, சந்தேகமில்லை. ஆனால் எப்பொழுதும் அவளிடத்தில் உறுதியான ஒரு நம்பிக்கை இருந்து வந்தது—மற்றவர்கள் பலரும் ஆயுள் முழுதும் கன்னிகளாகவே இருக்க நேரலாம், ஆனால் ஒரு போதும் அவளுக்கு அந்தக் கதி ஏற்படாது! ஏற்ற வன் ஒருவனை அவள் தேடிக் கொள்வாள், அதிக காலம் காத்திருக்க வேண்டியதில்லை, விரைவிலே தேடிக் கொண்டுவிடுவாள்!

அவளுடைய பெற்றோர்களைப் போல வாழ அவள் விரும்பவில்லை. நாள் முழுதும் அவர்கள் வீட்டிலும் காய்கறித் தோட்டத்திலும் வேலை செய்த வண்ணமாய் இருப்பார்கள். செடி நடுவதும் தண்ணீர் ஊற்றுவதும்தான் வேலை. பிறகு சந்தைக்குச் சென்று தேன், இறைச்சி அல்லது உருளைக் கிழங்கு விற்றுப் பணம் சேர்ப்பதிலேயே கருத்தாயிருப்பார்கள். சாப்பிடப் போதுமானது இருந்தது, புதிய துணிகளும் சாமான்களும் வாங்க வேண்டிய பணம் இருந்தது. ஆயினும் அவர்கள் மட்டரகமான ஆடைகளே அணிந்து கொள்வார்கள். ஏன், இரவில் தூங்கும்போதுகூட வசதியாகப் படுத்துக் கொள்ளமாட்டார்கள்—கணப் படுப்பு மேடையிலோ, அடுப்புப் பரணியிலோ படுத்துவிடுவார்கள். குடிசை சொகுசின்றி இருந்தது; கறுத்துப்போன இரு சாமிப் படங்களையும் தேதி கிழித்தெடுக்க வேண்டிய காலண்டரையும் தவிர்த்து, வேறு எதுவுமின்றி சுவர்கள் அம்மணமாய் இருந்தன. ஆனால் அவர்கள் மேற்கொண்டு எதுவும் வேண்டுமென்ற விருப்பமில்லாது முழுத்

திருப்தியுடன் இருந்தனர். ''வேறு பலருடன் ஒப்பிடுகையில் நாம் வசதியாகத்தான் இருக்கிறோம்; குறைப்பட்டுக் கொள்வது பாவம்'' என்று அடிக்கடி கூறிக் கொள்வார்கள்.

வயது முதிர்ந்தவர்கள், அவர்களிடம் அதிகம் எதிர்பார்க்க முடியுமா? மாறுமல் பழைய முறையிலேயே என்றென்றும் வாழ்ந்தால் போதுமென நினைக்கிறார்கள்.

ஆனால் அவள் திருமணம் செய்து கொண்டதும் தன் விருப்பப்படி யாவற்றையும் அமைத்துக் கொண்டுவிடுவாள். அவளுடைய கணவன் நிச்சயம் ஆசிரியர் அல்லது விவசாய நிபுணராகத்தான் இருப்பார்—கல்வியறிவும் பண்பாடுமுள்ள அவர் புத்தகங்கள் படிப்பார், சந்தா கட்டி பத்திரிகைகள் தருவிப்பார். அவர்கள் டச்சுக் கணப்படுப்பு இருக்கும் அறை அடங்கலாய் வீட்டில் ஒரு பாதியில் வசிப்பார்கள். சன்னல்களில் பின்னல் திரைச் சீலைகள் இருக்கும். கிராமபோனும் அதன்மீது பின்னல் வேலைப்பாட்டு வட்ட லேசும் இருக்கும். பீங்கான் பாத்திரங்களுக்காகக் கண்ணாடி அலமாரி ஒன்று இருக்கும்.

அவள் கண் முன்னால் யாவும் தெளிவாகத் தெரிந்தன.... அதிகாலையில், கதிரவன் உதிக்கையிலேயே அவள் எழுந்து விடுவாள். அவளுடைய கணவனும் மகனும் (ஆம், அவளுக்கு ஆண் பிள்ளைதான் பிறக்கும்) தூங்கிக் கொண்டிருப்பார்கள். சப்தமின்றி அவள் காய்கறித் தோட்டத்துக்குள் போவாள். அவளுடைய வெறும் பாதங்களில்

குளிர்ந்த பனி நீர் பட்டதும் ஜிலீரென்றிருக்கும்; முட்டைக்கோசின் மொடமொடப்பான மடல்களில் பளபளக்கும் பனித்துளிகள் உருண்டோடும்; தக்காளி இலைகளின் வாசனை காற்றிலே கலந்திருக்கும். அங்குள்ளவை யாவும் அவளைச் சேர்ந்தவை; ஒவ்வொன்றும் அவளுடைய கைவன்மையை ஓரளவு வெளியிடுவதாய் இருக்கும்.... மாலையில் விருந்தினர்கள் வருவார்கள்-கிராமத்தைச் சேர்ந்த அவளுடைய உறவினர்களல்ல, நாட்டுப்புறத்து ஆட்களல்ல; அவளுடைய கணவனின் நண்பர்கள் வருவார்கள். மேஜையைச் சுற்றிலும் அமர்ந்து அவர்கள் தேநீர் அருந்துவார்கள், அரசியல் பேசுவார்கள்; அவள் மூலையில் உட்கார்ந்து பின்னல் வேலை செய்து கொண்டிருப்பாள், அல்லது தேநீரை ஊற்றிக் கொடுத்துச் சுவையான பலவற்றையும் இன்னும் எடுத்துக் கொள்ளும்படி விருந்தினர்களை வற்புறுத்துவாள்: '' இன்னும் கொஞ்சம் தேன் போட்டுக் கொள்ளுங்கள், நிறைய இருக்கிறது. இவ்வருடம் எங்கள் தேனீக்கள் ரொம்ப நன்றாய் வேலை செய்திருக்கின்றன.''

இன்பமாய் வாழ்வாள்—அமைதி, நிறைவு, தனக்கென ஓர் இல்லம் இவ்வளவும் பெற்ற அவள் வாழ்வில் இனிமை பொங்கி வழிந்தோடும்.

ஆனால் எல்லாமே அவள் திட்டமிட்டிருந்தபடி நடந்தேறவில்லை. அவளுடைய கணவன் கண்ணுக்கினிய இளைஞன்தான் என்றாலும், ஆசிரியரோ விவசாய நிபுணரோ அல்ல; சாதாரணக் கூட்டுப் பண்ணை விவசாயியைவிட அப்படி ஒன்றும்

உயர்ந்தவனாய் இல்லை. புத்தகங்கள் படிக்கிறான், அடிக்கடி வீட்டுக்குப் பத்திரிகைகள் கொண்டுவருகிறான் என்பது மெய்தான். ஆனால் அவனுடைய நண்பர்களை வீட்டுக்கு அழைத்து உபசரிப்பது அவளுக்கு இனிமை தருவதாயில்லை. தேநீருக்கும் அரசியல் பேச்சுக்கும் பதிலாய் பீரிலும் வோட்காவிலும்தான் நாட்டம் கொண்டிருந்தனர், பெட்ரோலைப் பற்றிய விவாதத்தையே விரும்பினர்.

முற்றிலும் தனக்குப் பொருத்தமான கணவனெனக் கூற முடியாது.

தான் மனைவியாக வாய்த்தது பியோதருக்குக் கிடைத்த ஒரு பெரிய அதிர்ஷ்டம்தான் என்ற ஒரு நினைப்பு அவள் மனதுக்குள் இருந்து வந்தது—அவள் நினைத்திருந்தால் எளிதில் அவளுக்கு வேறு ஆள்கிடைத்திருக்குமே. இதனால்தான் இப்பொழுது அவள் தனக்குப் பெரும் குற்றம் இழைக்கப் படுவதாய் எண்ணி மனம் பொருமினாள்: பியோதர் அவளுடைய பெற்றோர்களையும், அவனுடைய இல்லத்தையும் மனைவியையும்விட அந்நியர்களை அல்லவா உயர்ந்தவர்களாகக் கருதுகிறான்! வர்வாரா போன்றவர்களுடைய பேச்சைக் கேட்டல்லவா ஆடுகிறான்!

மறுநாள் காலையில் வழக்கம்போல் வேலைக்குச் சென்று, மசிக் கறை படிந்த அவளுடைய மேஜையின் பின்னால் உட்கார்ந்திருந்தாள். கதவு திறக்கப் பட்ட போதெல்லாம் திடுக்குற்று நிமிர்ந்து பார்த்தாள்—உள்ளே வருவது பியோதராகத்தான்

இருக்கும், முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு மன்னிப்பு கேட்கும் முறையில் பேசுவான் என்று அவள் திடமாய் நம்பினுள்.

இரும்புத் தகடு போட்ட கூரைமீது அடித்த வெய்யிலில் அந்தச் சிறிய அலுவலகம் மூச்சுத் திணறும்படிச் சூடேறியிருந்தது. புளித்த மோரின் வீச்சம் தாங்க முடியவில்லை. அவளுக்கு வேலை ஒன்றும் இருக்கவில்லை—புழுக்கமாயிருந்தது, சாலைகள் இன்னும் மோசமாகவே இருந்தன, கூட்டுப் பண்ணை எதுவும் பால் அனுப்பவில்லை.

ஸ்தேஷா அவளிடத்தில் அமர்ந்து நெடுநேரம் காத்திருந்தாள். ஆனால் பியோதர் வரவில்லை.

திடீரென அவளுக்கு வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. தலை சுற்றியது....

12

பொழுது விடிந்ததும் நான் இதற்கு எதாவது ஒரு வழி கண்டாக வேண்டுமென நினைத்தபடி பியோதர் தூக்கத்திலே ஆழ்ந்தான். ஆனுல் அவன் எந்த வழியும் காண முடியவில்லை.

உழுத வயல்களில் மேலும் கீழுமாய் நடந்தான், ஒவ்வொரு டிராக்டரிடமும் சென்றுன். பிறகு நன்கு உலர்ந்த ஓர் இடத்தை வந்தடைந்தான். வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. மல்லார்ந்து படுத்து, கண்களின்மீது தொப்பியை இழுத்து விட்டுக் கொண்டு நீல வானத்தை வெறிக்கப் பார்த்தான்.

அம்மாவைப் போய்ப் பார்க்கலாமா? பல காலமாய்ப் போகவே இல்லை. திருமணத்துக்கு முன்பு ஒரு மாதம்கூட தவற விட்டதில்லை.

அவனுடைய தாயின் உருவம் அவன் மனக் கண்முன் தோன்றிற்று. மங்கிய சால்வையால் போர்த்தப்பட்ட தலையை முன்னால் கவிழ்த்துக் கொண்டு, முன்கைகளைப் பின்புறம் நீட்டிக் கூனிய படி விசுக்விசுக்கென்று அடியெடுத்து வைத்து, விரைந்து செல்வதைக் கண்டான். வேலைக்குழுத் தலைவர் யாரையாவது வழியில் சந்தித்தால் நிச்சயம் அந்த ஆளிடம் சொல்வதற்கு அவருக்கு ஏதாவது விஷயம் இருக்கும்: "உனக்கெல்லாம் என்ன நினைப்பு? கண்கள் இல்லையா, என்ன? லப்பாத்தினுடைய இடத்துக்குப் பின்னால் ஓட்ஸ் வயலில் வெள்ளாடுகள் புகுந்து மேய்கின்றன. வேலிகளைச் சரி செய்வதற்குக்கூட உனக்கு நேரமில்லை— என்னைப் போன்ற கிழவி உன்னுடைய வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு வண்டியை ஓட்டிச் செல்லும்படியான அளவுக்கு அங்கே ஓட்டை இருந்தது. அதைச் சிறிதளவு அடைத்துவிட்டு வந்தேன்." இனி கவலைப்பட வேண்டியதில்லை என்பது உடனே அந்த ஆளுக்குத் தெரிந்துவிடும்: தாரியா சொலவேய்க்கோவா "அதைச் சிறிதளவு அடைத்தார்" எனில், இனி எந்த வெள்ளாடும் அவ்விடத்தில் நுழைய முடியாதென நிச்சயமாய்க் கூறிவிடலாம். ஆகவே அலுக்கும்வரை ஏசட்டுமென அவர் கூறுவதை அந்த ஆள் பணிவுடன் கேட்டுக் கொள்வான்.

ஆம், திட்டுவதென்றால், அவன் தாய்க்கு ரொம்பப் பிடிக்கும். அவனுடைய தந்தை அவரிடம் மாட்டிக் கொண்டு விழிப்பது வழக்கம். சாப்பிடுவதற்காக அவர் வீட்டுக்கு வந்ததும், திட்டுவதற்குப் புதியதாய் எதாவது வைத்திருப்பார்: கூரையில் கசியுது, அல்லது விறகுக் கட்டினை தவறான இடத்தில் வைத்துவிட்டார், அல்லது ஈர விறகைக் கொண்டு வந்தார் என்று வசைபாட ஆரம்பிப்பார். அவருடைய கணவர் இதனைப் ''பாட்டுடன் கூடிய சாப்பாடு'' என்பதாகச் சொல்வார். பியோதருக்கும்கூட எவ்வளவோ அடி விழுந்திருக்கும். ஆம், அவனுடைய தாய் எந்நேரமும் எதாவது குறை சொல்லிக் கொண்டுதான் இருப்பார், அவருடன் வாழ்வது கடினம்தான்—ஆனால் கிராம மக்களுக்கு அவர்மீதுதான் உயிர்.

அவரிடம் போய்ச் சொல்லலாமா—அவர் புரிந்து கொள்வார்; வழக்கம் போலத் திட்டுவார் தான், ஆனால் புரிந்து கொள்வார்.... வேண்டாம்! என்றால் அவரிடம் இதையெல்லாம் சொல்ல முடியாது. இப்பொழுது அவருக்கிருப்பது ஒரேவொரு இன்பம்தான்—தான் பெற்ற பிள்ளைகள் நன்றாயிருக்கிறார்கள் என்ற ஒன்றேதான். பிள்ளைகளுடைய சுகத்தையே தனது சுகமாய்க் கொண்டு மனம் மகிழ்கிறார். அவரிடம் போய் என்னுடைய இன்னல்களைச் சொல்லி வருந்தச் செய்வதா?... தொலைவிலிருந்து பார்க்கையில் எதுவும் பத்து மடங்கு பெரியதாகவே தெரியும். வேண்டாம், பியோதர்! உனக்கு நீதான் வழி தேடிக் கொள்ள

வேண்டுமே தவிர, அம்மாவைப் போய்த் தொந் தரவு செய்யக் கூடாது.

பியோதரைப் பார்த்ததுமே வர்வாரா ஸ்திப் பானவ்ளு அவனுடைய துயரத்தை உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். ''ஏன் இப்படிச் சோக உருக்கொண்டிருக்கிருய்?'' ஆனுல் அதற்குமேல் அவர் கேள்வி கேட்கவில்லே. குதிரையை பியோதர் திருப்பிக் கொண்டுவந்தது அவருக்குத் தெரியும், ரியாஷ்கின்களின் குடும்பத்தையும் அவருக்குத் தெரியும். ஆகவே அவர் சொன்னதெல்லாம் இவ்வளவுதான்: ''என் வீட்டுக்கு வா. இருவரும் சேர்ந்து வேலே செய்கிருேம், ஆனுல் அலுவலகத்துக்கு வெளியே ஒருவரையொருவர் இன்னும் தெரிந்து கொள்ளவில்லே. இது நல்லதல்ல! என்னுடைய கிழவனுக்குக் கொண்டாட்டமாய் இருக்கும். தயிர்ச் சட்டி கிடைத்த பூனே மாதிரி சந்தோஷப் படுவான். வீட்டுக்கு விருந்தினர் வருகிருர் என்ருல் மேஜைமீது ஒரு பாட்டில் என்றல்லவா அர்த்தம். அவனுக்கு அப்படி ஒரு பலவீனம்.''

வர்வாராவின் வீடு மிகச் சிறியது—இரண்டே இரண்டு சிறு அறைகள்தான். துண்டு மரங்களாலான சுவர்கள் நன்கு தேய்க்கப்பட்டு பளபளப் பாயிருந்தன. பியோதர் கூனிக் குனிந்தே வாயிற் படிக்குள் நுழைய வேண்டியிருந்தது.

''ஏன் அப்படிப் பார்க்கிருய்?'' என்று வர்வாரா கேட்டார்.

''நீங்கள் இன்னும் கொஞ்சம் நல்ல வீடாய் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாதா?''

''அது முறையல்லவே. எவ்வளவோ பேர் இதையொத்த வீட்டில்தானே வசிக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டித் தராமல், பண்ணையை எனக்கு மட்டும் புது வீடு கட்டச் சொல்வது சரியல்ல. காட்டிலே புதைந்து கிடைக்கிறோம், சூரிய ஒளி கூரைகளுக்கு மேலே படுவதுடன் நின்றுவிடுகிறது. எங்கள் கிராமம் முழுதுமே கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கு முன்பு மட்டுமல்ல, புரட்சிக்கும் முன்பே கட்டப்பட்டதாகும். இன்னும் நாங்கள் வீடுகள் கட்டும் நிலைக்கு வந்தாகவில்லை.''

''தவறு யாருடையது? குரொம்த்ஸோவோவில் முழுமுழுத் தெருக்களாய்ப் புதிய வீடுகள் கட்டப்பெற்றுள்ளனவே.''

''யாருடைய தவறு? என்னுடையதாகவே இருக்கலாம்....'' அவர் தன் கணவர் பக்கம் திரும்பினார். ''திரும்பவும் தரையைக் கூட்டாமலே விட்டிருக்கிறாயே!''

''தினமுமா இதைச் செய்ய வேண்டும்?'' என்று சிறிதும் தயக்கமின்றி சிரித்துக்கொண்டே அவர் கேட்டார்.

வர்வாரா ஸ்திப்பானவ்னாவின் கணவர் ஒற்றை நாடிச் சரீரமுடைய கிழவர். அவருடைய நரைத் தாடி அங்கொன்றும் இங்கொன்றுமாய் முளைத்திருந்தது. கவலையின் சாயலற்ற அவரது முகச் சுருக்கங்கள் அடிக்கடி புன்சிரிப்பாய் ஒன்று சேர்ந்துவிடும். அலெவ்தீனா இவானவ்னாவுக்கும், ஆகவே திருமணத்தின் மூலம் தனக்கும், அவர்

தூரத்து உறவினர் என்பது பியோதருக்குத் தெரியும். இக்ணுத் அவன் திருமணத்துக்கு வந்திருந்தார். மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் குடித்துவிடவில்லை என்றாலும், எல்லோருக்கும் முதலாய் அதன் விளைவுகளை வெளிக்காட்டிக் கொண்டார்.

''என்னுடைய இல்லத்தலைவியாக வாய்த்த இவன் படுமோசமாயிருக்கிறான்'' என்று தலையை ஆட்டிக் கொண்டே வர்வாரா கூறினார்.

''அப்படி என்றால் வேறு நல்லத் தலைவியாகப் பார்த்துக்கொள்ளேன்....இளைஞனே, நான் சொல்வதைத் தெரிந்துகொள், உன் மனைவி ஊரில் ஒரு முக்கியஸ்தராய் இருப்பதைவிடக் கொடுமை வேறு வேண்டியதில்லை. எந்நேரமும் 'இக்ணுத், தரையைக் கூட்டு', 'இக்ணுத் கணப்படுப்பைப் பற்றவை' என்ற பாட்டுதான் — நாயினும் கேடான வாழ்வு!''

''இதைப் பற்றி பேச ஆரம்பித்தவன், ஒளிக்காமல் யாவற்றையும் கூறிவிடலாமே—பசுவைக் கவனித்துக் கொள்வதும் நீதான், ரொட்டி தயாரிப்பதும் நீதான்.... இந்த வேலைகளை எல்லாம் கற்றுக் கொண்டுவிட்டான். ஏன், என்னையும்விட மிக நன்றாய்ப் பணியாரங்கள் தயாரிப்பான்! சோம்பேறி—அது ஒன்றுதான் இவனிடமுள்ள குறை. ஒரு கிளாஸ் கொடுக்கவில்லை என்றால், எதுவுமே செய்யமாட்டான். சில நேரங்களில் வீட்டில் ஒரு துண்டு ரொட்டிகூட இருக்காது. வீட்டு வேலைகளை நன்றாகத்தான் செய்கிறான்—இத்துறையில் ஒரு தனி சாமர்த்தியம்கூட பெற்றிருக்கிறான்—

ஆனால் பெண்ணுக்கு இருப்பது போல இதில் அவனுக்கு முழு நாட்டம் இல்லை.''

பண்ணையிலே கடுமையாகவும் கண்டிப்பாகவும் இருந்துவந்த வர்வாரா, இங்கு வீட்டில் இனிய சுவாபமுடைய வேறொரு பெண்ணாக உருமாறிவிட்டார். வேடிக்கையாகக் குறைப்பட்டுக் கொண்டபோது, அவருடைய குரல் இதமாகவும் மென்மையாகவும் ஒலித்தது.

''சரி, நான் போய்க் கொண்டுவரட்டுமா, வர்வாரா?'' என்று கிழவர் அவருக்கு நினைவுபடுத்தினார்.

''இந்த வேலை என்றால்தான் தயங்காமல் கிளம்பிவிடுவாயே—இந்த வயதிலேயும் ஏன்தான் இந்தத் துடிப்போ! சரி, சீக்கிரமாய் வந்து சேரு.''

இக்னாத் தாத்தா கணப்படுப்புக்குப் பின்னால் கையை விட்டுத் துளாவி ஒரு காலி பாட்டிலைத் தேடியெடுத்து, பியோதரைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியபடி அதைச் சட்டைப் பையில் செருகிக் கொண்டு அங்கிருந்து மறைந்தார்.

இனி வர்வாரா ஏன், எப்படி என்றெல்லாம் கேள்விக்கு மேல் கேள்வி போடத் தொடங்கிவிடுவாரென பியோதர் நினைத்தான். பருவநிலையைப் பற்றி பேசுவதற்காக அவர் என்னை வீட்டுக்கு அழைத்து வரவில்லையே.

ஆனால் வர்வாரா ஸ்திப்பானவ்னாவுக்குக் கேள்வி கேட்கும் உத்தேசமில்லை; தன்னைப் பற்றி பேச ஆரம்பித்தார்.

''கூட்டுப் பண்ணையை நான் சரிவர நிர்வகிப்பதில்லை என்கிறார்கள். நான் என்ன செய்வது, நீயே சொல். மெய்யான கல்வி ஞானம் எதுவும் எனக்கில்லை. புத்தகங்கள் வாங்கிப் படித்து இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து கொள்ள முயலுகிறேன் என்பது உண்மைதான். ஆனால் முன்பு போல நான் இளம் வயதினனல்ல. படித்துக் கிரகித்துக் கொள்வது சுலபமாயில்லை.''

இக்னாத் தாத்தா சீக்கிரமாகவே திரும்பி விட்டார்.

''இதோ வந்துவிட்டேன்!'' என்று வாயிற்படியிலிருந்து கத்தினார். பிறகு உக்கிராண நிலவறைக்கும் மேஜைக்குமிடையே ஓடியோடி வேலை செய்ய முற்பட்டார்.

எல்லோரும் அமர்ந்து கொண்டனர்.

''பொல்லாதது, பொல்லாதது! ஒரு போடு போடலாமா?'' என்று, நிரம்பிய கிளாசின்மீது கவிழ்ந்து போலி அடக்கத்தோடு இக்னாத் பெருமூச்செறிந்தார்.

''நீங்கள் இதில் சேரப் போவதில்லையா?''—பியோதர் வர்வாராவைக் கேட்டான்.

''வேண்டாம், என்னை வற்புறுத்தாதே.''

''இரண்டு பேர் இருக்கிறோம், போதும்; பார்த்துக்கலாம்! வர்வாரா நம்முடன் பேசிக்கொண்டு உட்கார்ந்திருக்கட்டும். மருகனே! உன்னுடைய நலத்துக்காக! தூரத்து உறவிலே நீ எனக்கு மருகனாயிற்றே, தெரியுமல்லவா உனக்கு?''

வழக்கமான உரையாடல் ஆரம்பமாயிற்று.

விதை, விதைப்பு வேலைகள், பெட்ரோல் சப்ளை, ஊழியர் பற்றுக்குறை முதலானவை குறித்துப் பேசினர்.

''விதைப்புக் காலம் அப்படி ஒன்றும் கடின மானதல்ல, அதைச் சமாளித்துவிடலாம்'' என்றார் வர்வாரா. ''ஆனால் புல் அறுக்கையில்தான் இருக்கிறது தொல்லையெல்லாம்! எங்கள் புல் வெளிகள் காடுகளிலே இருக்கின்றன. அவற்றில் பாதிப் பரப்பை தாத்தா காலத்தில் உபயோகித் தாரே அந்தப் அரிவாளால்தான் அறுத்தாக வேண்டும். அப்பொழுது எங்களுடைய பழையப் பாட்டைப் பாட ஆரம்பித்து விடுவோம்— போதிய ஊழியர்கள் இல்லை, போதிய கரங்கள் இல்லை என்பதே பேச்சாகிவிடும். எப்பொழுதும் இதே கதைதான், என்ன செய்வது—நம் நிலை அப்படி ஆகிவிட்டது.... எல்லாரும் முழுமூச்சுடன் வேலையில் இறங்கி, பண்ணையை நல்ல நிலைக்குக் கொண்டுவந்து ஊழியர்களுக்கு அவர்களது வேலை நாள் அளவைகளுக்கு நல்லபடியாக ஊதியம் கிடைக்கும்படிச் செய்தார்களானால், நம்மை விட்டுச் சென்றவர்கள் யாவரும் திரும்பவும் நம் மிடம் ஓடி வருவதைக் காண்போம். பண்ணையில் இருப்பவர்கள் எல்லோரிடத்தும் திரும்பத் திரும்ப நான் இதைத்தான் கூறி வருகிறேன், ஓயாமல் கத்திக் கொண்டிருக்கிறேன் — நமது முழுச் சக்தியையும் திரட்டி இதில் இறங்கலாம், மெய்யாகவே முயற்சி செய்து பார்க்கலாம் என்று டமாரம் அடித்து வருகிறேன். சில பேர்

காது கொடுத்துக் கேட்கிறார்கள், வேறு சிலர் காதைக் கெட்டியாக மூடிக் கொள்கிறார்கள். நம்மிடம் இத்தகையோர் சிலர் இருக்கிறார்களே, என்ன செய்வது—மூக்குக்குஅப்பால் பார்வையைச் செலுத்தஇவர்களுக்கு விருப்பமில்லை. தானிய மணிகளுடன் சேர்ந்திருக்கும் பதர் போன்றவர்கள்.''

''சூசகமாய் என் குடும்பத்தாரைச் சுட்டிக் காட்டுகிறீர்கள், இல்லையா?'' என்றான் பியோதர்.

''சுட்டிக்காட்டத் தேவையில்லையே. என்னைப் போலவே உனக்கும் தெரிந்ததுதானே இது.... தம்பி பியோதர், பியோதர், அருமையான ஆள் நீ, ஆனால் இன்னும் விவரம் தெரியாதவனாய் இருக்கிறாய்! தவறான சாலையிலே திரும்பி விட்டாய். இந்த ரியாஷ்கின்களிடம் போகலாமா நீ? இனிப்புக் கனியான அந்த ஸ்தேஷா இல்லாமல் உன்னால் வாழ முடியாதென்றால், நீ அந்த விஷ விருட்சத்திலிருந்து அவளைப் பறித்திருக்க வேண்டும். தனியே பிரித்துக் கொண்டு வந்திருந்தால், அவளை நீ ஒழுங்குபடுத்தியிருக்கலாம். ஆனால் நீ அங்கேயே சென்று விட்டாய்; மூன்று பேரும் சேர்ந்து உன்னைத் திண்டாட வைக்கின்றனர். அவர்கள் உன்னைத் தங்கள் வழிக்கு ஒழுங்குபடுத்தி விடாதபடி பார்த்துக் கொள்!''

பியோதர் ஒன்றும் சொல்லவில்லை.

''சிலான்திய் என்றுமே பணக்காரராய் இருந்ததில்லை—அதற்கு வேண்டிய முயற்சி அவரிடம் இருக்கவில்லை. பெரிய கருமியாக இருந்திருப்பாரென நினைக்கிறேன். ஏனையோரைக் காட்டிலும்

அப்படி ஒன்றும் சாமர்த்தியமில்லாத ஒருவர், வெறும் பேராசையினுல் மட்டும் பணக்காரராகி விட முடியாது. பணக்காரராவதற்குப் பணத்தை விட்டுப் பிடிக்கும் துணிவு இருந்தாக வேண்டும், கெட்டியாகப் பிடித்துக் கொள்பவராக மட்டும் இருந்தால் நடுவழியில்தான் நிற்க வேண்டும். சிலான்திய் இத்தகையவர்தான்.... அன்று நாங்கள் கூட்டுப் பண்ணையைத் துவக்கியபோது, அடேயப்பா, இவரைப் போன்றவர்கள் என்ன பாடுபடுத்திஞர்கள், தெரியுமா? நடுத்தர விவசாயிகள் — ஆம், அதற்கு மேல் அவர்களைச் சொல்வதற்கில்லை—ஆனுல் உள்ளுக்குள் மெய்யான குலாக்குகள்,* கூட்டுப் பண்ணையின் தீராப் பகைவர்கள்! இன்றெல்லாம் இவர்களைப் பகைவர்கள் என்று சொல்ல முடியாது—ஆனுல் வழியில் குறுக்கிடும் முட்டுக்கட்டைகளாக இருந்து வருகிருர்கள். இவர்களால் பெரிய கேடு உண்டாகவில்லை என்றுலும், சர்க்கரத்தின் இருசில் படிந்த மணலாக நம்மை வருத்துகிருர்கள்..''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால், ஓட்டம் பிடிப்பதைத் தவிர எனக்கு வேறு வழி இருப்பதாய்த் தெரியவில்லையே.''

''இல்லை, இல்லை, அவ்வாறு நான் சொல்லவில்லை. அழுகிவிட்ட ஈறிலிருந்து புல்லைப் பிடுங்க முயற்சி செய் என்றுதான் கூறுகிறேன். ஆரம்பத்

---

* குலாக்கு—மற்றவர்களது உழைப்பைச் சுரண்டும் மணக்கார விவசாயி.

திலேயே நீ இதைச் செய்திருக்க வேண்டும். இப்பொழுது செய்வது மேலும் பல மடங்கு கடினமாகத்தான் இருக்கும். ஓ, எனக்குத் தெரியும்—அவள் தந்தையிடமிருந்து நீ குதிரையை வாங்கிச் சென்றதற்காக ஸ்தேஷா ரகளை செய்தது எனக்குத் தெரியும். உன்னைவிட அவளுடைய பெற்றோர்களையே அவள் அதிகமாய் நம்புகிறாள். இளைஞனே, அதனால்தான் இதையெல்லாம் உன்னிடம் கூறுகிறேன்—ஓநாய்களுடன் வாழ்பவன் அவற்றைப் போலவே ஊளையிடக் கற்றுக் கொள்வான் என்பார்களே, அந்த மாதிரி ஆகிவிடக் கூடாதே என்று இதையெல்லாம் கூறுகிறேன். நீ போராடியாக வேண்டும்!''

''என்னுடைய போராட்டம் எல்லாம் முடிவுற்றுவிட்டது. சகிக்க முடியாத ரகளையாகி விட்டது—நினைக்கவே வெட்கமாய் இருக்கிறது.''

''இந்த மாதிரி அனுபவம் ஏற்படத்தான் செய்யும், தப்ப முடியாது.... இதையெல்லாம் நீ பெரிதாக்கி மனதைப் புண்படுத்திக் கொள்ளக் கூடாது. உன்னையே நீ வருத்திக் கொள்ளலாகாது. சந்தோஷமாய் இருக்க விரும்பினால், விடாமல் போராடு, தாக்கிக் கொண்டே இரு. ஆனால் உன் உள்ளத்தைக் கெட்டியாக்கி கொள்ள வேண்டும், என்ன நடந்தாலும் மனத்தைத் தளர விடக் கூடாது.''

இவ்வளவு நேரமும் இக்ஞத் தாத்தா ஒன்றுமே பேசவில்லை, ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் பாட்டில் கவனிக்கப்படாமல்

விடப்பட்டிருந்தது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே இப்பொழுது அவர் பேசினார்.

''இதெல்லாம் சரியாகிவிடும். குடும்பங்களில் இது போன்ற நிகழ்ச்சிகள் சகஜம். இதற்காக நீ அளவுமீறி மனத்தை வாட்டிக் கொள்ளக் கூடாது. இன்னொரு கிளாஸ் ஊற்றிக்கொள்வோம்!''

''அது சரி, ஆனால் நீ இதை நினைவில் வைத்துக் கொள்'' என்றார் வர்வாரா, இக்னாத் பக்கம் திரும்பி. ''இதைப் பற்றி கிராமத்திலே யார் காதுக்கும் உன் மூலம் ஒரு வார்த்தைகூட எட்டக் கூடாது, அப்படி எதாவது நடந்தால் நான் சும்மாய் விடமாட்டேன்!... பெண்களின் வேலைகளைக் கற்றதோடு அவர்களுடைய பழக்கங்களையும் கற்றுக்கொண்டு விட்டாய் நீ—இதை மறைத்துப் பயனில்லை. வம்புப் பேச்சு என்றால் உனக்கு ரொம்பப் பிடிக்கும். தாடி முளைத்த வம்புக்காரி ஆயிற்றே!''

''யார், நானா? வர்வாரா, வர்வாரா, உனக்கு நாக்குத் துடிப்பு அளவு மீறிவிட்டது. என்னைப் பற்றி இவ்வளவு மோசமாய் யாரும் பேசி நான் கேட்டதில்லை!''

''சரி விடு. மனமுடைந்த ஓர் ஆள் நம் எதிரே இருப்பதை மறந்து விடாதே.''

''நான் அவனுக்கு ஒரு நண்பனா, இல்லையா? நீயே சொல்—நான் ஒரு நண்பன் அல்லவா?'' இதற்குள்ளாகவே பாட்டில் அதன் வேலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டது.

இருட்டாயிருந்த சன்னலில் யாரோ மெள்ளத் தட்டும் சப்தம் கேட்டது.

''யார் அங்கே? பியோதர், உனக்காகத்தான் இருக்கும். என்னைப் பார்க்க வருகிறவர் எவரும் சன்னலில் தட்டமாட்டார், நேரே உள்ளே ஓடி வந்துவிடுவார்.''

வர்வாரா எழுந்து சென்ருர், மறுகணமே திரும்பி வந்து பியோதரைப் பார்த்துத் தலையை ஆட்டினுர்: ''உனக்காகத்தான். நீ புறப்படு.''

வெளியே, சன்னலுக்கு அருகே, துண்டு மரங்களாலான சுவரில் தலையைச் சாய்த்து ஸ்தேஷா நின்று கொண்டிருந்தாள். கதகதப்பான மாலை தான் என்ருலும், அவள் தனது கம்பளிச் சால்வையை நன்கு இழுத்துப் போர்த்தியிருந்தாள்.

இருவரும் வாய் பேசாமல் வேகமாய் அந்த வீட்டிலிருந்து நடந்து சென்றனர். கண்ணுக்குத் தெரியாதபடி மூலையில் திரும்பிய பிறகே அவர்களுடைய வேகம் குறைந்தது. இனி வாதம் ஆரம்பித்துவிடும்—பியோதர் தன் மனைவியைப் பார்த்தான். அவள் கன்னங்களிலிருந்து சிவப்பு மறைந்திருந்தது; அழுது அழுது கண்கள் சிவந்திருந்தன; அவற்றில் வரண்ட ஒரு பளபளப்பு தெரிந்தது.

''உனக்கு என்ன, ஊரார் வீட்டுக்கெல்லாம் போய்ப் பேசிக் கொண்டும், குடித்துக் கொண்டும் உட்கார்ந்திருக்கிருய்! வர்வாராவுக்கு ஏற்ற வேலை தான்.... அவரிடம் புகார் சொல்லப் போயிருந்தாயாக்கும். யாரிடம் போவது என்று தெரிந்து வைத்திருக்கிருயே. இருந்திருந்தும் வர்வாரா

விடமா போக வேண்டும்! எங்கள் குடும்பத்தை யே நஞ்சென வெறுக்கும் கிழட்டுச் சூன்யக்காரி ஆயிற்றே—அவரிடமா போக வேண்டும்! உனக் கும் அதே வெறுப்பைத்தான் ஊட்டிவிடுவார்!''

சால்வையின் ஓரத்தைக் கடித்தபடி ஸ்தேஷா மௌனமாய்க் கண்ணீர் வடித்தாள்.

''எவ்வளவு வேண்டுமானாலும் நீ அழுது பார், ஆனால் ஒன்றை மட்டும் நான் தெளிவாகச் சொல்லி விடுகிறேன்'' என்றான் பியோதர், கடுமையான குரலில். ''உன்னுடைய வீட்டில் இனி நான் இருக்க மாட்டேன். இரண்டு பேருமாய்ச் சேர்ந்து வெளி யே போய்விடுவோம், இல்லையேல் நான் தனியே போய்விடுகிறேன். உன்னுடைய பெற்றோர் வீட் டின் பக்கம் இனி தலை வைத்துப் படுக்க மாட் டேன். இது என்னுடைய இறுதி முடிவு.''

''எல்லாம் இந்த வர்வாரா செய்த வேலை! ஐயோ.... அவர் கழுத்தைத் திருகிப் போட வேண்டும்! கிராமத்தில் இது வரை எங்கள் மேல் மண்ணை வாரிப் போட்டு வந்தது போதாதென்று, இப்பொழுது என் வாழ்வையே குலைத்துவிடப் பார்க்கிறாரே! எதற்காகவாம்? அப்படி என்ன அவருக்குத் தீங்கு செய்துவிட்டேன்? என்மேல் ஏன் அவருக்கு இந்தக் குரோதம்?''

''அவரைத் திட்ட வேண்டாம். அவருக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நான்தான் தவறு செய்துவிட்டேன் — உன்னுடைய பெற்றோர் வீட்டுக்கு வந்து வாழ நான் ஒத்துக் கொண்டது ஒரு பெரிய தவறு. ஸ்தேஷா, இரண்டு பேருமாய்ப்

போய்த் தனியே வாழ்வோம், வந்துவிடு நீ. கிராமத்திலே இயந்திர, டிராக்டர் நிலையத்துக்குப் பக்கத்தில் தனிக் குடித்தனம் போய் விடுவோம், வா நீ.''

''நான் எங்கும் வரப் போவதில்லை! இங்கு உனக்கு என்ன குறை? ஏன் தனியே போக வேண்டும் என்கிறாய்? உன்னுடைய வேலையைத் தவிர வேறு கவலை எதுவுமின்றி இங்கு வாழவில்லையா நீ? இங்கு வாழ்வதில் உனக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? காய்கறித் தோட்டம், மாடு... எல்லாம் இருக்கிறது. அங்கே போனால் உன்னுடைய சம்பளம் மட்டும்தானே இருக்கும்?''

''ஸ்தேஷா, அதெல்லாம் நீ ஒன்றும் கவலைப் படாதே. அங்கேயும் நமக்கு வேண்டியவை யாவும் கிடைக்கும்.''

''ஆமாம், எனக்குத் தெரியாதா, என்ன? பேசிப் பயனில்லை! இப்பொழுது நான் எங்கும் வருகிற நிலையில் இல்லை. உனக்கு அக்கறை இருந்திருந்தால் காரணம் உனக்கே தெரிந்திருக்கும்.... ஆனால் வர்வாராவுக்கு எந்த அளவுக்கு மனசாட்சி இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் உனக்கும் இதயம் இருக்கிறது! இன்று அலுவலகத்தில் எனக்குத் தலை சுற்றியது, குமட்டிக் கொண்டு வந்தது.... அம்மா தொட்டுப் பார்த்தார்.... வயிற்றிலே பிள்ளையுடன் நான் வீட்டை விட்டுத் தனியே எப்படி வந்திருப்பேன்? அம்மாவை விட்டுப் பிரிந்து முன்பின் தெரியாத தாதியை வேலைக்கு அமர்த்திக் கொள்வதா? உனக்கு வேண்டியது

கிடைத்தால் போதும், பிறத்தியார் கஷ்டத்தைப் பற்றி நீ கவலைப்பட மாட்டாய்.''

திரும்பவும் ஸ்தேஷா அழுதாள். பியோதர் வாய் பேசாமல் நின்றான்.

இதே நிலையில்தான் இருவரும் வீட்டுக்குள் நுழைந்தனர்—அவள் மௌனமாய் அழுதாள், அவன் சோக உருவாய் உம்மென்று இருந்தான். அவர்களை வாயிற்படியிலே சந்தித்த அலெவ்தீனா இவானவ்னா வாய் திறக்கவில்லை — இருவரும் உள்ளே சென்றபின் பொல்லாப்புடன் அவர்களை உற்றுநோக்கினர்.

குழந்தை வரப் போகிறது. இன்னும் பிறக்கவில்லை—அதற்குள் அவர்களுடைய வாழ்விலே பங்கு கொள்ளத் தலைப்பட்டுவிட்டது.

13

இரவில் நடைபெற்ற அந்த ரகளைக்குப்பின் தன் மாமனாருடனும் மாமியாருடனும் ஒரே வீட்டில் இருந்து, ஒரே அடுப்பில் சமைத்துச் சாப்பிடுவது எப்படி, தினமும் அவர்களை நேருக்குநேர் சந்திப்பது எப்படி என்பது பியோதரின் கற்பனைக்கும் மீறியதாய் இருந்தது. ஒருவரையொருவர் பார்க்க வேண்டியிருக்குமே, அப்பொழுது எதாவது பேசியாக வேண்டுமே.

பேச வேண்டாம், அவர்களுடைய பேச்சைக் காதால் கேட்டாலே போதுமே, மனிதனுக்கு வேறு உபத்திரவம் வேண்டியதில்லையே.

''நமது கூட்டுப் பண்ணையில் ஊழியர்களை அவர்கள் கவனித்துக் கொள்வதே இல்லை. கடுகளவும் சிரத்தை இல்லை!''

''வேறு என்ன எதிர்பார்க்கிறாயாம்?'' என்று சிலாந்திய் பதிலளிப்பார்.

''பசுவுக்கு புல் அறுக்க வேண்டிய காலம் வந்து விடும். திரும்பவும் நாம் அவ்வளவு தூரம் நடையாய் நடந்து சவீனியே இடைவெளிக்கோ, அவ்தோத்தினு பள்ளத்துக்கோதான் போக வேண்டியிருக்குமா?''

''வேறு என்னவாம்?... இங்கேயே ஆற்றுக்குப் பக்கத்தில் நமக்கு ஒரு நல்ல புல்வெளியைத் தருவார்கள் என்று நினைக்கிறாய்?''

''நல்ல இடங்கள் ஏராளமாய் இருக்கின்றன.''

''அப்படியென்றால் வர்வாராவிடம் போய்க் காலில் விழுந்து கேட்டுப் பாரேன்; நமக்கு நல்ல இடமாய்க் கொடுப்பாள் — கொடுப்பாள்!... குஸ்மின் இடைவெளி இருக்கிறதல்லவா, அங்கே சென்று அடிக் கட்டைகளைத் தோண்டியெடுத்து விட்டுப் புல் அறுக்கத் திட்டமிடுகிறார்கள்—நம் போன்றவர்களுக்கு ஏற்ற புல்வெளிதானே!''

''இடுப்பொடிய இவர்களுக்காக வேலை செய்யணும்—இவர்களுக்கு வேண்டியது அவ்வளவு தான்!''

அவர்களுடைய பேச்சு எப்பொழுதுமே இப்படித்தான் முடிவுறும். நாள் தவறாமல் இதே பாட்டுதான்! தலைவேதனை!

அலெவ்தீனு இவானவ்னு புகார் கூறுமல் மனநிறைவோடு பேசும்போதுகூட இப்படித்தான் தலைவேதனையாய் இருக்கும். ''நம்முடைய பன்றி யின் எடை இப்பொழுதே சுமார் நூறு கிலோ கிராம் ஆகிவிட்டது—கூட்டுப் பண்ணையிலுள்ள நோஞ்சான்களைப் போன்றதல்ல இது.'' சாலையில் கிடக்கும் துருப் பிடித்த ஆணிகளையும் கீல்களையும் தோல் சேணத் துண்டுகளையும் பொறுக்கியெடுத்துப் பத்திரப்படுத்தி வைக்கும் கிழவரின் பழக்கமும்கூட அவனுக்கு வேதனையையே உண்டாக்கியது. இவர்களைப் பற்றியவை யாவுமே வேதனை தருவதாகவே இருந்தன! இங்கே எப்படி அவன் வாழ்வது?

வெளியே போய்விடலாமென்றுல்—இவர்களிடமிருந்து முறித்துக் கொண்டு கிளம்பிவிடலாமென்றுல்—ஸ்தேஷாவிடமிருந்தும் முறித்துக் கொண்டாக வேண்டும். அதுவும் இது போன்ற நேரத்தில்....

அங்கே இருப்பது சாத்தியமற்றதாகத் தோன்றியது—ஆனால் தோற்றத்தில்தான். நாட்கள் ஓடி மறைந்தன, பியோதர் ரியாஷ்கின்களது வீட்டிலேயேதான் இருந்து வந்தான்.

நேருக்குநேர் ஒருவரையொருவர் கண்டு கொள்ளாமலே இருந்து வந்தனர். ஆனால் அவர்களுடைய பார்வை தன் முதுகில் துளைப்பதுபோல் கடுப்பாய் இருந்ததை பியோதர் அடிக்கடி உணர முடிந்தது. அத்யாவசியமானலன்றி அவர்கள் பேசிக் கொள்வதில்லை. ''ஸ்தேஷா என்னை விறகு

உடைக்கச் சொல்கிறாள், கோடரி எங்கே இருக்கிறது?'' இப்பொழுதெல்லாம் அவன் கிழவரை ''அப்பா'' என்று கூப்பிடுவதில்லை. அவன் வாயில் இச்சொல் நுழைய மறுத்துவிட்டது. நேரடியாகக் கூப்பிட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாதபடிப் பார்த்துக் கொள்ள முயன்றான்.

ஸ்தேஷா ஓய்ந்து ஒடிந்திருந்தாள், கவர்ச்சி இழந்திருந்தாள்—காரணம் கர்ப்பமாயிருந்தாள் என்பது மட்டுமல்ல. எப்பொழுதுமே கவிழ்ந்து கொண்டிருந்த அவள் பார்வையில் அச்சம் மறைந்திருந்தது; சோகமும் அனலெனக் கனன்ற ஆத்திரமும் குடிகொண்டிருந்தன. பியோதரின்மீதுகூட அவளுக்கு அவ்வளவு ஆத்திரமில்லை—''அந்தக் கிழட்டுச் சூன்யக்காரி வர்வாரா''வின்மீதுதான் அவளுக்குத் தாங்க முடியாத ஆத்திரம். நாளுக்கு நாள் அவளுடைய கணவனிடமிருந்து மேலும் மேலும் பிளவுண்டு விலகிச் சென்றாள்.

பியோதர் சில நேரங்களில் அவளை இரகசியமாய்க் கடைக் கண்ணால் உற்றுப் பார்ப்பான். அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டு மனம் விட்டுப் பேசிப் பார்த்தால் என்ன?... வேண்டாம், பேசாமல் இருப்பதே மேல். பேச்சு அழுகையாகி விடும்; நான் இடைமறித்துப் பேச வேண்டிவரும்; உடனே அவள் ஓவென்று அலர ஆரம்பித்துவிடுவாள்; அவளுடைய அப்பாவும் அம்மாவும் உள்ளே ஓடி வந்துவிடுவார்கள். இரவில் ஸ்தேஷா சுவர் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு அவன் அருகே படுத்திருக்கையில், பியோதர்

துயரம் தாளமாட்டாமல் ''போதும், பொறுக்க முடியாது என்னால்! போதும்!'' என்று வாய்விட்டுக் கத்தாதிருக்கும் பொருட்டு மணிக்கட்டுகளைக் கடித்துக் கொள்வான்.

வயல்களில் டிராக்டர்களுடன் இருக்கையில் பியோதரால் வேடிக்கையாய்ப் பேசவும் சிரிக்கவும் முடிந்தது. மாஷென்காவுடன் ஊடாடி சிமோவைத் தன்மீது பொறாமை கொள்ளச் செய்ய முடிந்தது. விடுதியில் எண்ணெய்ப் பிசுக்கேறிய பலகையில் தூங்கியபோதுகூட அவனால் சந்தோஷமாய் இருக்க முடிந்தது.... உண்மை தெளிவாக விளங்கிற்று—அவன் இருக்கும் இல்லம் தவறான இல்லம். கொடுமை, கொடுமை!

மேலும் மேலும் அவன் மனத்தை ஓர் எண்ணம் உறுத்தி வந்தது: முடிவின்றி என்றென்றும் இப்படியே இருக்க முடியாது; என்றேனும் முடிவுற்றே ஆக வேண்டும். எப்பொழுது? எப்படி?

ஆனால் நாட்கள் உருண்டோடின, அப்படியும் ஒரு முடிவு ஏற்படுவதாயில்லை.

தரையைப் பார்த்தபடி ஸ்தேஷா அவனைக் கேட்டாள்: ''நாளைக்கு நீ வேலைக்குப் போகாமல் அனுமதி பெற்றுக் கொள்ள முடியுமா?''

''ஓ, முடியுமே'' என்றான்—அவள் முதலில் பேசினாளே, அதுவும் சாந்தமாய்ப் பேசினாளே என்ற நன்றியுணர்வுடன் ஆவலாய்ப் பதிலளித்தான்.

''சவீனியே இடைவெளிக்குச் சென்று அப்பா புல் அறுக்கப் போகிறார். நீயும் போய் உதவி

செய்தால் நல்லது. பாலை நாம் சாப்பிடுகிறோம் அல்லவா?''

''சரி, போகிறேன்'' என்றான், மனத்தில் துளிக்கூட மகிழ்ச்சியின்றி.

பொழுது விடியுமுன்பே சிலான்திய் பெத்ரோவிச்சும் பியோதரும் கிளம்பிவிட்டனர்.

சவீனியே இடைவெளி பதினைந்து கிலோமீட்டருக்கு அப்பால் இருந்தது. மக்கிப்போன ஊசி இலைகள் குவிந்து மிருதுவாயிருந்த அந்தப் பாதை, அடர்ந்த காட்டின் ஊடே சென்றது. கடினமான ஒரு வேலையை எப்படியேனும் செய்து முடிக்க வேண்டுமென்று உறுதி பூண்டவர்களாய் இருவரும் பல்லைக் கடித்துக் கொண்டு நடந்தனர். பலமாய் அவர்கள் உள்ளுக்கிழுத்து வெளியே விட்ட மூச்சைத் தவிர வேறு ஓசை எதுவும் கேட்கவில்லை. நெருங்கிய நண்பர்களும்கூட இது போன்ற இடத்தில் பேசிக் கொள்ள விரும்பமாட்டார்கள். பியோதர் இருமுறை வாய்விட்டுச் சபித்தான்—முறிந்த கிளையின் கூர்முனையில் முகத்தை மோதிக் கொண்ட போதும், ஒரு வேரில் இடறித் தடுமாறியபோதும். கிழவர் ஒரேவொரு தரம்தான் வாயைத் திறந்தார். ஆழமான குறுகிய பிளவின்மேல் போடப்பட்டிருந்த கரடுமுரடான பலகையின்மீது செல்லும்போது ''நான் போய்ச் சேரும்வரை காத்திரு, இருவரையும் தாங்காது இது'' என்றார். புல்வெளியை வந்தடையும் வரை இந்த ஒரு சந்தர்ப்பத்தைத் தவிர்த்து அவர் பேசாமல் மௌனமாகவே இருந்தார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இங்கு மரங்கள் வெட்டப்பட்டுவிட்டன. மின்சார ரம்பங்கள் ஓலமிட்டன; பைன் மரங்கள் புயலின் முன்னறிவிப்பாய் வீசும் காற்றைப் போல ஓலமிட்டுச் சாய்ந்து விழுந்தன; முறுக்கேறிய துண்டு மரங்களை டிராக்டர்கள் அடிமரக் கட்டைகள்மீதும் ஒடிந்து கிடந்த கிளைகள்மீதும் இழுத்துச் சென்றன.

இப்பொழுது இவ்விடம் வெறிச்சோடிப் போய் நிசப்தமாயிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாய்த் தனி மரங்கள் ஒருசில நின்று கொண்டிருந்தன. இவை தவறிப்போய் வெட்டாமல் விடப்பட்டவையல்ல; தாய் மரங்களாய் விட்டு வைக்கப்பட்டிருந்தன. வெட்டிக் காலியாக்கப்பட்ட நிலத்திலே விதைகளைச் சிதறடித்துப் புதிய காட்டைத் தோற்றுவிப்பதே இவற்றுக்கு அளிக்கப்பட்டிருந்த பணி. முன்பு இவை தமது சகாக்களுடன் நெருக்கமாய்ச் சேர்ந்து இங்கு நின்று கொண்டிருந்தன; சூரிய ஒளி இல்லாமல் கீழே விடப்பட்டுவிடுவோமோ என்று அஞ்சி எல்லாமாகச் சேர்ந்து வானோக்கி உயர்ந்து வளர்ந்து கொண்டிருந்தன. இப்பொழுது காடு மறைந்து விட்டது; இந்த ஒருசில மரங்கள் மட்டும் தெரிந்தெடுக்கப்பட்டு வெட்டாமல் விடப்பட்டிருந்தன. கிளைகளின்றி நின்ற இவை உச்சிமுடிவரை கொய்துவிடப்பட்ட மாதிரி, கம்பங்கள் போலத் தோற்றமளித்தன. உச்சியிலே மட்டும் தழைகள் அல்லது ஊசி இலைகளாலான சிறு முடியைப் பேணிக்காத்து வந்தன. ஆனால் அவற்றின் அடியைச் சுற்றிலும் கருகிய

அடிக் கட்டைகளிடையே அகன்ற இலைகளை யுடைய இளம் மரங்கள் வளர்ந்து வந்தன. மண் குழைவாகவும் ஈரமாகவும் இருந்த இடங்களில் புதர்கள் மண்டிக் கிடந்தன. கூட்டுப் பண்ணைப் புல்வெளிகளிலிருந்து கிடைக்கக்கூடிய புல்லை அதிகம் நம்ப விரும்பாத முன்னெச்சரிக்கையுள்ள விவசாயிகள் இந்த ஈரத் திட்டுகளைத்தான் நாடி வருவார்கள். சாறு மிகுந்த ஒரு வகைப் புல் இத் திட்டுகளில் வளரும். கிராமத்தில் இதனை ''குழாய்ப் புல்'' என்று அழைத்தனர். இதன் காம்புத் தண்டின் மிருதுவான நெட்டியைச் சிறுவர்கள் விரும்பிச் சாப்பிடுவார்கள். பூக்கத் தொடங்கு முன்பே இந்தப் புல்லை வெட்டிவிட வேண்டும்; இல்லையேல் முற்றிப் போய் குச்சி போலக் கெட்டியாகிவிடும்; மாடுகள் இதனைச் சீண்ட மாட்டா.

விதைக்காக விட்டு வைக்கப்பட்டிருந்த பிர்ச் மரங்களில் அவர்களுக்கு அருகிலிருந்த ஒன்றின் உச்சி முடி கதகதப்பான செவ்வொளியில் மூழ்கி யிருந்தது. சூரியன் உதித்து மேலே எழுந்து வந்த போதிலும், இன்னும் அது தரையிலிருந்து கண்ணுக்குத் தெரியவில்லை.

படிப்படியாக தாழ்ந்து சென்ற ஒரு சரிவில் இருவரும் வேலையைத் தொடங்கினர். பியோதர் ஒரு முனையிலிருந்தும் சிலான்திய் பெத்ரோவிச் எதிர் முனையிலிருந்தும் ஆரம்பித்தனர். தொடங்கு முன் கிழவர் செவ்வொளி முடியுடைய அந்த பிர்ச் மரத்தின் முன்னால் நின்று, பியோதர் தன்னைப்

பார்த்துச் சிரிப்பானே என்று பயந்தபோதிலும் பக்தியோடு சிலுவைக் குறியிட்டுக் கொண்டார். அவர்தான் முதலில் இறங்கினர். நிதான மாகவும் திட்டமிட்ட முறையிலும் அவருடைய பன்னரிவாள் காற்றைக் கிழித்துக் கொண்டு சுழன்று சருக்சருக்கென வெட்டிற்று.

பியோதர் பிறந்து வளர்ந்த கிராமத்தில் ''நாற்புறமும் காடு, தலைக்குமேல் வானம் தெரியும்படி ஓர் ஓட்டை'' என்பதாகச் சொல்வார்கள். ஆற்றங்கரைப் புல்வெளிகளோ, உலர்ந்த பள்ளத் தாக்குப் புல்வெளிகளோ அருகாமையில் இல்லை. பியோதரின் தந்தை புல் அறுப்பதில் கிராமத் திலே கைதேர்ந்தவர்களில் ஒருவராகக் கருதப் பட்டார். இது குறித்து அவர் பெருமிதம் கொள்வார். ''சமதரையிலே அறுப்பது சுலபம் தான், ஆனல் நம்முடைய பகுதியில் பன்னரிவாளை வீசுவதே ஒரு தனிக் கலையாகும்'' என்று அவர் கூறுவார்.

பிற்காலத்தில் பியோதர் ஒரு சைக்கிளின் உடைமையாளனுகி, குரொம்த்ஸோவோவிலிருந்து பொல்ஷோவோ இயந்திர, டிராக்டர் நிலையத்துக் குக் கரடுமுரடான காட்டுப் பாதையில் செல்ல வேண்டியிருந்த இருபது கிலோமீட்டர் தொலை வையும் ஒரு மணி நேரத்தில் சைக்கிளில் கடக்கத் தெரிந்து கொண்டதும், தானும் தன் தந்தையும் பிளவுகளின் சரிவுகளிலும் எரிந்த திட்டுகளிலும் புதர் மண்டிய வெளிகளிலும் மேலும் கீழுமாய்ப் புல் அறுக்கச் சென்ற காலங்களை அடிக்கடி நினைத்

துக் கொள்வான். சைக்கிளில் அவன் முழு நேரமும் அந்தப் பாதையை மிகவும் தந்திரமாய்ச் சமாளித்துச் செல்ல வேண்டியிருந்தது. ஒவ்வொரு குழியையும், ஒவ்வொரு மணல் திட்டையும், குளம்புகளால் மிதிபட்டு கரடுமுரடாயிருந்த ஒவ்வொரு இடத்தையும், ஒவ்வொரு பள்ளத் தடத்தையும் அவன் சாமர்த்தியமாய்க் கடக்க வேண்டியிருந்தது — ஒன்றை விலகிச் சென்று கடக்கவேண்டியிருந்தது, மற்றென்றின்மீது சைக்கிளின் வேகத்தைக் குறைத்து இலாவகமாய்ச் செல்ல வேண்டியிருந்தது. காட்டில் புல் அறுப்பது இதே போன்றதுதான்.

அடர்த்தியான புல்லில் இதோ ஒரு சிறு புதர் மறைந்திருக்கிறது—கவனியாது அரிவாளை வீசி அதனுள் சிக்கவைத்துவிடக் கூடாது! அரிவாளின் முன்னல் கொத்துக் கொத்தாய்ப் புல் சாய்ந்து அடுக்கடுக்காய்த் தரையிலே விழுகிறது. சுற்றிலுமுள்ள புல்லிலிருந்து விடுவிக்கப்பட்ட புதர் தன்னை அம்மணமாக்கிய மனிதனைப் பார்த்துக் கடிந்து கொள்வதுபோல் சிலிர்த்துக் கொள்கிறது. ஆனல் பயனில்லை, அவன் அதைத் தாண்டிச் சென்று தொடர்ந்து புல்லை அறுக்கிறன்.... கலப்பின்றி அடர்த்தியாகவும் ஒரே சீராகவும் வளர்ந்த புல் திட்டு: ஒன்று, இரண்டு—பன்னரிவாள் முழு வீச்சுக்கும் பரவலாய்ச் சுழன்று பாய்கிறது. அரைகுறையாய் இல்லாமல் முழு அளவுக்கும் தோளிலிருந்து வீசுவதில் ஒரு தனி இன்பமல்லவா இருக்கிறது! ஆனல் அளவு மீறிய உற்சாகத்

தால் நிதானத்தைத் தவற விட்டுவிட வேண்டாம்—அதோ புல்லுக்குமேல் அடிக்கட்டை ஒன்று தலையைத் துருத்திக் கொண்டு காத்திருக்கிறது—அரிவாளைக் கவ்விக் கொள்வதற்காக....

புதர்கள், அடிக்கட்டைகள், விழுந்து கிடக்கும் பிர்ச்சின் மக்கிய அடித்தண்டு—யாவற்றிடமிருந்தும் விலகி, அவற்றைச் சாமர்த்தியமாய் சமாளிக்க வேண்டும்.

சில நேரங்களில் பியோதர் தனது மாமனாரைப் பற்றிய நினைவில்லாதவனாய் வேலையில் மெய்மறந்துவிட்டான்.

காட்டின்மீது சூரியன் உயர்ந்து சென்று காயத் தொடங்கினான். பியோதரின் சட்டை அவன் முதுகிலே ஒட்டிக் கொண்டுவிட்டது. சிலான்திய் பெத்ரோவிச்சின் சாணைக்கல் கரகரத்தது காதில் விழுந்ததும்தான் அவன் வேலையைச் சற்று நேரம் நிறுத்தினான். தானும் ஒரு பிடிப் புல்லை எடுத்து அரிவாளைத் துடைத்துக் கொண்டு தன்னுடைய சாணைக்கல்லை வெளியே எடுத்தான்.

இருவருக்கும் ஒரே நேரத்தில் தாகமெடுத்தது. தமது அரிவாள்களைக் கீழே வைத்துவிட்டு தத்தமது முனையிலிருந்து கிளம்பி புதர்களைக் கடந்து ஓடைக்குச் சென்றனர். சிலான்திய் குடித்து விட்டு வரட்டுமென பியோதர் ஒதுங்கி நின்றான். கிழவர் கீழே படுத்து நெடுநேரம் தண்ணீரை உள்ளுக்கிழுத்துக் குடித்தார். மூச்சு விடுவதற்காக இடையிடையே தலையை நிமிர்த்தியபோது, அவருடைய மஞ்சள் மீசையிலிருந்து நீர்த் துளிகள்

சொட்டின. வேண்டிய மட்டும் குடித்ததும் ஓடை கலங்கிவிடாதபடி ஜாக்கிரதையாய்த் தண்ணீரை அள்ளி முகத்தில் அடித்துக் கொண்டு வாய் பேசாமல் அங்கிருந்து நடந்தார். அவர் விட்டுவந்த இடத்துக்கு இப்பொழுது பியோதர் சென்றான். ஈரத் தரையில் குப்புறப் படுத்து இடையிடையே மூச்சு விடுவதற்காகத் தலையைத் தூக்கி, அவனும் தண்ணீர் குடித்தான்.

மத்தியானத்துக்குள் இருவரும் ஒருவரையொருவர் நெருங்கி வந்துவிட்டனர். இன்னும் இருபது தப்படிகள்தான் இருந்தன—கட்டைகளோ புதர்களோ அடிமரங்களோ இல்லாத சமமான தரை. அரிவாளின் ஒவ்வொரு வீச்சும், அவர்கள் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் மேலும் மேலும் இருவரையும் நெருங்கி வரச் செய்தன. முகம் செக்கச் சிவந்துவிட்டது; வியர்வை வழிந்தது; களைப்புற்றுவிட்டனர். கருமமே கண்ணுயிருந்த இருவரும் ஒருவரையொருவர் நெருங்கி வந்தனர்.

நேருக்குநேர் வந்து இருவரும் ஒருவரையொருவர் உற்று நேர்க்க நேரலாமல்லவா? அப்படி நேர்ந்தால் அக்கணத்தில் அவர்கள் என்ன செய்வார்கள்? இருவரும் நன்கு வேலை செய்து களைத்துப் போயிருந்தனர், இருவரில் எவரும் வேலையில் சளைக்கவோ பின்னடையவோ இல்லை, இருவரும் தம் மனத்துள் ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டனர்.... அவர்களுடைய கண்கள் நேருக்குநேர் சந்திக்க நேர்ந்தாலும் நேரலாம்.

நெருங்கி வந்து விட்டனர். சரக்-சரக்! ஒரு புறம் சிலான்தியின் அரிவாளும் மற்றொருபுறம் பியோதரின் அரிவாளும் துள்ளிப் பாய்ந்தன. சாறு மிகுந்த தளதளப்போடு புல் அடுக்கடுக்காய்ச் சாய்ந்து விழுந்தது.

திடீரென பியோதர் காளான் அடர்ந்த மண் மேட்டு முடியைப் போல் மிருதுவான ஒன்றைத் தனது அரிவாள் சதெக்கெனச் சீவிச் சென்றதை உணர்ந்தான். துணுக்குற்ற அவன் முகத்தைச் சுளித்துக் கொண்டு அரிவாளை உடனே பின்னுக்கு இழுத்தான். அதில் இரத்தம் படிந்திருந்தது. தரையில் விழுந்து கிடந்த புல்லிலும் ஓரிடத்தில் கருஞ் சிவப்புக் கறை பட்டிருந்தது; ஆனால் அரிவாளில் இருந்த இரத்தத்தைப் போல் அது அவ்வளவு பளபளப்பான சிவப்பாயில்லை. பழுப்பு நிறமுடைய உருவமற்ற ஒரு சிறு பிண்டம் அவன் காலடியில் கிடந்தது. முயல் குட்டி ஒன்றை அவன் அரிவாள் வெட்டித் துண்டித்து விட்டது.

சிலான்திய் பெத்ரோவிச் அரிவாளைக் கீழே போட்டுவிட்டு புல்லுக்குள் எதையோ தேடத் தொடங்கினார். அதைத் தேடிப் பிடித்ததும் மெள்ள நிமிர்ந்து நின்றார். பியோதர் அவரிடம் சென்றான்.

''உன் அரிவாள் இதன்மீதும் பட்டிருக்கிறது. கூர்முனை பட்டுக் காயமாகிவிட்டது.... இதோ பார், இதன் காலில் இரத்தம்.''

கிழவரின் உள்ளங் கையில் மற்றொரு முயல் குட்டி இருப்பதைக் கண்டான். அதன் மென்னிறக்

காதுகள் முடியடர்ந்த அதன் வளை முதுகுடன் ஒட்டிக்கொண்டிருந்தன. அதன் கருவிழிகள் அச்சமின்றி மேலே உற்றுப் பார்த்தன; அந்தப் பார்வையில் வலியும் வேதனையும் கலந்திருந்தன.

''இங்கு பல குட்டிகள் இருந்திருக்க வேண்டும். அது எனக்கு எப்படித் தெரியும்?'' குற்ற உணர்வுடன் பியோதர் முணுமுணுத்துக் கொண்டான்.

''கடவுள் படைத்த இந்த ஜீவன்களுக்கு சிந்தனை இல்லை, பாவம். ஓடிவிட வேண்டுமென்ற அறிவில்லாமலே அடி விழுகிறவரை இங்கேயே இருந்துவிட்டன.''

கிழவரின் குரலிலும் பழுப்பேறிய அவர் முகத்திலும் மெய்யான கருணை, பாசாங்கோ பசப்போ இல்லாத உண்மையான மனித வாஞ்சை பிரதிபலித்தது.

''புல்லுக்கடியில் இருப்பது நம் கண்ணுக்குத் தெரிவதில்லை....''

''ஆம், அதைப் பார்க்க முடியாதுதான். கொஞ்சம் துணி கிழித்துக் கொடு. காயம்பட்டக் காலில் கட்டுப் போட்டு இதை நம்முடன் வீட்டுக்கு எடுத்துச் செல்வோம். பெண்கள் இதனைக் கவனித்து ஆவன செய்வார்கள். உயிருள்ள ஜீவனுயிற்றே.''

எஞ்சியிருந்த கடைசித் திட்டிலும் புல்லை வெட்டி முடித்தபின் இருவரும் வீட்டுக்குப் புறப்பட்டனர். சிலான்திய் பெத்ரோவிச் இரு அரிவாள்களையும் எடுத்துக் கொண்டார். பியோதர் அந்த

வழுவழுப்பான கதகதப்பான முயல் குட்டியை ஜாக்கிரதையாய்த் தூக்கிக் கொண்டான்.

அன்று இரவு வழக்கமான இரண்டு சமையலுக்குப் பதிலாய் ஒன்றுதான் சமைக்கப்பட்டது. எல்லோருமாய்ச் சேர்ந்து முதியோர் அறையில் உட்கார்ந்து சாப்பிட்டனர். மேஜையில் பீர் பாட்டிலோ வோட்கா பாட்டிலோ இல்லை என்ருலும், கொண்டாட்ட மனோபாவம் நிலவியது.

சிலான்திய் பெத்ரோவிச்சும் பியோதரும் சுத்தமான சட்டைகள் அணிந்து அருகருகே அமர்ந்து வீட்டைப் பற்றிய விவகாரங்கள் குறித்து அமைதியாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

''இன்னும் ஒரு வாரம் காத்திருந்தால் புல் முற்றிப்போய்க் குச்சியாயிருந்திருக்கும்.''

''ஆம், கெட்டுப் போயிருந்திருக்கும். அந்த வெளியில் நீ புல் அறுத்தது பிரமாதமாயிருந்தது. புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை— ஆனுல் இவ்வேலையில் கைதேர்ந்த என்னையும் நீ மிஞ்சி விடும் முறையில் வெட்டினுய்.''

''இவ்வேலை எனக்குப் புதியதல்லவே, தெரியாமல் போவதற்கு. நகரத்தில் பிறந்து வளர்ந்தவனல்லவே நான்.''

''சொல்லாமலே தெரிகிறதே.''

அலெவ்தீனு இவானவ்னு கணப்படுப்புக்கு முன்னுல் ஒரு பலகையில் உட்கார்ந்து முயலின் காயமுற்ற காலில் ஈர இலைகளை வைத்து மூடி அருமையாக அதனுடன் பேசினுர்.

''நீ ஒரு அசடு, எதற்காக பயப்படுகிறாய்? குட்டி முயலே, தாவாதே? முன்பே அல்லவா நீ தாவியிருக்க வேண்டும்.... முன்பே செய்திருந் தால், உனக்குக் காயம் பட்டிருக்காதே.''

மேஜைமீது இருந்த 'போர்ஷ்ச்' சூப்பின் வா சனையிலிருந்து தொலைவில் விலகி அமர்ந்திருந்த ஸ்தேஷா பாலைச் சுவைத்தபடி மகிழ்ச்சி பொங் கிய கண்களால் அவர்கள் எல்லோரையும் பார்த்துக் கொண்டிருந்தாள். வீட்டில் இனிய அமைதி நிலவியது. பிணக்கும் பூசலும் மறக்கப் பட்டுவிட்டன.

தனது பெற்றோர்களுக்கும் பியோதருக்கும் இடையில் நிற்கும்படி ஆகிய அவள், எல்லோரை யும்விட அதிகமாய்த் துன்பமுற்று வந்தாள். இப் பொழுது யாவரையும்விட அவளே மிகவும் அதிக மாய் இன்பமடைந்தாள்.

வீட்டில் அமைதி நிலவிற்று, பூசல் மறக்கப் பட்டுவிட்டது.

14

மறுநாள் காலையில் வேலைக்குழுத் தலைவர் களில் ஒருவரான பெதோத் நோசவ் உள்ளே வந் தார்—உயரமானவர், குறுகலான தோள்களுடை யவர், தடித்த முகவாயில் நிரந்தரமாய்க் குட்டை முடிகள் நீட்டிக் கொண்டிருக்கும். சிலான்திய் ரியாஷ்கினைப் பார்ப்பதற்காக அடிக்கடி அவர் வந்து செல்வது வழக்கம். ஆனால் இவர்கள் இரு

வரும் நண்பர்களா, பகைவர்களா என்பதை இன்ன மும் பியோதரால் புரிந்து கொள்ள முடியவில்லை. தொப்பியைக் கழற்றுமலோ, உட்காராமலோ பேதோத் அறை நடுவில் நின்றபடி மூலையைப் பார்த்துப் பேசத் தொடங்கிஞராஞல், அவர் நல்ல செய்தி கூற வரவில்லை என்று அர்த்தம். ஆஞல் நேரே நடந்துவந்து பலகையில் உட்கார்ந்து, தூசி படிந்த பெரிய பூட்சுப் பாதங்களைக் குறுக்கே வராமல் ஓரத்தில் ஒதுக்கி வைத்துக் கொள்ள முயலுகிறவரைப் போல பலகைக்கடியில் நுழைத் துக் கொண்டாராஞல், நெடுநாளைய இரு அத்யந்த நண்பர்களாய் இருவரும் பேசிக்கொள்ளப் போகிருர்கள், மேஜைமீது ஒரு பாட்டில் கொண்டு வந்து வைக்கப்படுமென எதிர்பார்க்கலாம் என்று அர்த்தம்.

இம்முறை அவர் நடு அறையிலே நின்று யார் கண்ணையும் பார்க்காமல் பேசிஞர்.

''சிலான்திய், நாளைக்குப் புல் அறுக்கப் போக வேண்டும், தயாராயிரு'' என்று எவ்வித முகமனுமின்றி திடுதிப்பென்று கூறிஞர்.

ஏற்கனவே எச்சரிக்கையாகிவிட்ட சிலான்திய் ''அதற்கென்ன, வருகிறேன் — எல்லோரையும் போல நானும் வருகிறேன்'' என்ருர்.

''இவ்வருடம் நீ சமையல் வேலை செய்ய வேண் டாமென வர்வாரா என்னிடம் சொன்ஞர். கிளாவ் தியா இவ்வேலையைப் பார்த்துக் கொள்வாள். அவள் உடல் நலமற்றவள், புல் அறுத்து உலர்த்து வது அவளுக்குச் சிரமமாய் இருக்கும். உனக்கு

மட்டும் நீ புல் அறுத்துக்கொள்ள முடிகிறது; கூட்டுப் பண்ணைக்கும் கொஞ்சம் புல் அறுத்துத் தர முடியாமலா போய்விடும்?''

''வர்வாராவும் ஆச்சு, நீயும் ஆச்சு—உங்களுக்கெல்லாம் வெட்கமில்லையா, என்ன? நான் கிழவன். எனக்குப் புல் அறுத்துக் கொண்டேன்—உண்மைதான், ஆனால் அது எனக்குத் தாள முடியாத கடுமையான வேலையாகவே இருந்தது. பெதோத், என்னைச் சும்மாய் விட்டுவிடு, எப்பொழுதும் போல் நான் சமையல் வேலையைப் பார்த்துக் கொள்கிறேன்.''

''நான் என்ன செய்யலாம்? வர்வாராவின் உத்தரவு ஆயிற்றே.''

பெதோத் சட்டெனத் திரும்பி, பரணிக்கு அடியில் குனிந்து, தடித்த பூட்சுக் கால்கள் எழுப்பிய பலத்த சப்தத்துக்கிடையே வெளியே நடந்து சென்றார்.

''வர்வாராவின் உத்தரவாமே! அவருடைய கிழவரை மாத்திரம் வெளியே அனுப்பாமல் கணப்படுப்பருகே வைத்துக் கொள்கிறார்! இந்த பெதோத் உள்ளே வந்து மரம் மாதிரி அங்கே நின்றபோதே எனக்கு நெஞ்சு படபடத்தது. கோடை முழுதும் இவர்களுக்காக முதுகொடிய வேலை செய்கிறோம். ஆனால் கிடைப்பது என்ன? வாயைத் திறந்து கொண்டு காத்திருந்தால் முடிவில் ரொட்டியில் ஒரு சிறு துண்டை விட்டெறிவார்கள்!''

சிலான்திய் பெத்ரோவிச் குறுக்கிட்டு தனது மனைவியின் கூப்பாட்டை நிறுத்தினார்.

''போதும், போதும்! கூச்சல் போடாதே. வீட்டுச் சாராயம் எதாவது வைத்திருக்கிறாயா?''

''வீட்டுச் சாராயமா.... நினைத்தபோதெல்லாம் கேட்டால் நான் எங்கே போவதாம், இங்கே சாராய ஆலையா வைத்திருக்கிறேன்?''

மாலையில் வேலைக்குழுத் தலைவர் பெதோத் திரும்பவும் வந்தார். ஆனால் இப்பொழுது அவர் உள்ளே வந்த விதம் முற்றிலும் வேறானதாய் இருந்தது. தடதடவென நேரே பலகைக்கு நடந்து ஒன்றும் பேசாமல் அதன்மீது உட்கார்ந்து குல்லாயைக் கழற்றினார். உள்ளங்கையால் மோவாயின் முரட்டு முடிகளைத் தடவி ஒழுங்குபடுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தார். அவருடைய குரல் கண்டிப்பதாய் இருப்பினும் அதில் நேசபாவம் தொனித்தது.

''சிலான்திய், தந்திரக்காரக் கிழட்டு நரியப்பா நீ. உனது வயதை ஒரு சாக்காய்க் கூறுகிறாயே —சரியா அது? வயதானவன்தான், ஆனால் திடகாத்திரமாய்த்தானே இருக்கிறாய். கிளாவ்தியா உன்னை விட வயதில் இளையவள் என்றாலும் நோய்வாய்ப் பட்டவளாயிற்றே.''

இந்தப் பேச்சின் முடிவு எப்படி இருக்கும் என்பது பியோதருக்குத் தெரியும். அவனுடைய அறைக்குச் சென்று படுத்துக் கொண்டான். சற்று நேரத்தில் ஸ்தேஷா உள்ளே வந்தாள்.

''இப்படி நீ தனியே வரக் கூடாது, பியோதர்.

எழுந்து வா, எங்களுடன் வந்து உட்காரு—முறைக் காவது வந்து உட்காரு.''

பியோதர் சுவர் பக்கம் புரண்டு படுத்தான்.

''எனக்கு விருப்பமில்லை.''

ஸ்தேஷா சற்று நேரம் அவன் அருகே மௌன மாய் நின்றுவிட்டு, பிறகு திரும்பி வெளியே நடந் தாள்.

சிலான்திய் பெத்ரோவிச் திரும்பவும் சமை யல் வேலையைத்தான் கவனித்துக் கொள்ளப் போகிறார் என்பது மறுநாள் காலையில் எல்லோ ருக்கும் தெரிந்தது.

குறிப்பிடக் கூடியது எதுவும் நடைபெற்று விடவில்லை. கூச்சலோ, சச்சரவோ, இரவில் ரகளையோ எதுவுமில்லை. ஆனால் ரியாஷ்கின்களது வீட்டில் பழைய கெடுபிடி திரும்பவும் தலைதூக்கி விட்டது.

திரும்பவும் ஸ்தேஷா தன் கணவனுடைய கண்களும் தன் கண்களும் நேருக்குநேர் சந்திக் காதபடி பார்வையைத் திருப்பிக் கொண்டாள். திரும்பவும் பியோதரும் அவன் மாமனும் நேருக்கு நேர் வந்தபோது முகத்தைத் திருப்பிக் கொண் டனர். கிழவி திரும்பவும் ஓயாது முணுமுணுத்துக் கொண்டாள்: ''கடவுள் நமக்கு அருளியுள்ள மருமகனின் அழகே அழகு. என்னுடைய கிழவர் காலையிலிருந்து இரவு வரை ஓயாமல் வேலை செய் கிறார், ஆனால் இவன் கவலையின்றி சுற்றித் திரிகிறான். பன்றி அதன் வயிற்றளவுக்குச் சகதியை அப்பிக்கொண்டு நிற்கிறது; ஆனால் இவன் சுட்டு

விரலைக்கூட அசைப்பதில்லை. எல்லா வேலைகளை யும் நாமே செய்யட்டுமென நம் தலையிலே யாவற் றையும் கட்ட முயலுகிறான்.'' இந்தப் பேச்சு பியோதரின் காத்துக்கு எட்ட நேர்ந்தால், உடனே மறுநாள் அவன் ''கவட்டைக் கோலைக் கொடுங்கள்'' என்று கேட்பான். திரும்பவும் அவன் உறவுப் பெயரைச் சொல்லி அழைக்கா மலே பேசி வந்தான்.

பியோதர் அதிக நேரம் வீட்டில் தங்காதிருக்க முயன்றான். அதிகாலையிலே வேலைக்குப் புறப் பட்டுச் சென்றவன் இருட்டிய பிறகே வீட்டுக்குத் திரும்பினான். மத்தியானச் சாப்பாட்டை அவன் எங்கிருந்தானே அங்கேயே — கான்டீனிலோ, அல்லது டிரைவர்களுடனே—சாப்பிட்டு வந்தான். இந்தச் சாப்பாடுகளுக்கு அவன் பணம் கொடுக்க வேண்டியிருந்ததால், முன்பு போல் சம்பளம் பூராவையும் ஸ்தேஷாவிடம் அவனால் தர முடிய வில்லை. கிழவி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தித் தன் மனைவியைத் தனக்கு எதிராய்த் தூண்டிவிட முற்படுவாரென்பது அவனுக்குத் தெரியும். ''உனக்கு நல்ல கணவனாய் வாய்த்திருக் கிறான் பார்! குடித்துவிட்டு ஆடப் போய்விட் டான். குடும்பம் ஒன்று இருக்கிறது என்ற கவலை யின்றி சுற்றித்திரிகிறான்! எல்லாம் நமக்கு வந் துள்ள சோதனை!''

வேலை முடிந்து மாலையில் வீட்டுக்குத் திரும்பு வது அவனுக்குச் சகிக்க முடியாத ஒரு வேதனை யாகிவிட்டது. பகற்பொழுதெல்லாம் களைப்பென்ற

உணர்வுக்கே வழியின்றி வேலைகளிலே மூழ்கி விடுவான் — பெட்ரோல் கொண்டுவருவான்; கலப்பைகளுக்கு வேண்டிய ஆட்களைப் பற்றி ஏனைய வேலைக்குழுத் தலைவர்களுடன் வாக்குவாதம் புரிவான்; இன்னமும் அனுப்பப்படாத உபரி உறுப்புகளைப் பற்றி தொலைபேசியை எடுத்து வைத்துக் கொண்டு கூச்சலிடுவான்; பட்டறையிலிருந்து பண்ணை அலுவலகத்துக்கு ஓடி வருவான். மாலை வந்ததும் களைத்துத் தளர்ந்து விடுவான்.

கால்களை இழுத்துக் கொண்டு கிராமத்தின் வழியே நடந்து வருவான். படுக்கையில் படுத்து, வேதனை மிக்க சிந்தனைகளால் அலைக்கழிக்கப்படாமல் மற்றவர்களைப் போல நிம்மதியாய்த் தூங்க முடியவில்லையே. இச்சிந்தனைகளிலிருந்து எப்படி அவன் தப்ப முடியும்? வாயில் முகப்பில் தான் ஏறிச் செல்லும் புதிய படிகள் தனது மாமனார் அண்மையில் போட்டு வைத்தவை என்பதை அவனால் மறக்க முடியவில்லையே. அறையில் அவன் நடந்து சென்ற நீள்விரிப்பு ஸ்தேஷா தட்டிச் சுத்தப்படுத்திப் போட்டதாகும் என்பதையும், அவன் படுத்துக் கொண்ட அந்த படுக்கை அவள் சரி செய்ததாகும் என்பதையும் மறக்க முடியவில்லையே. ஒவ்வொரு அற்ப விவரமும் ஓயாமல் அவனுக்கு நினைவுபடுத்தி வந்ததே—நீ வசிக்கும் வீடு யாருடையது என்பதை மறந்துவிடாதே, நீ யாருக்குக் கடன் பட்டிருக்கிறாய் என்பதை மறந்துவிடாதே என்று அவனுக்கு நினைவுபடுத்தி வந்ததே! சில நேரங்களில் முழு மூச்சையும்

உள்ளுக்கிழுத்துச் சுவாசிப்பதற்கே அவனுக்குப் பயமாயிருந்தது — இங்குள்ள காற்றுகூட, அவன் சுவாசிக்கும் காற்றுகூட அவனுடைய தல்லவே.

இளைத்துப் போன தோற்றமளிக்கும் ஸ்தேஷா மௌனமாய், பல சந்தர்ப்பங்களில் கண்ணீரும் கம்பலையுமாய் அவனை எதிர் கொண்டழைப்பாள். இது அவனுக்குக் கொடுமையிலும் கொடுமை யாய் இருந்தது. கணவனுக்குரிய பரிவுடன் அவளை என்ன நடந்தது? ஏன் வருந்துகிறாய்? உனக்குத் தவறிழைத்தது யார்? என்று கேட் பதற்குக்கூட முடியாதவனாகிவிட்டானே. எப்படிக் கேட்க முடியும்? வாய் திறந்து பேச வேண்டிய அவசியமின்றியே யாவும் தெளிவாகத் தெரியும் போது எப்படிக் கேட்பான்? இந்த வாழ்க்கை அடியிலிருந்தே தவறானதாகிவிட்டது, ஆகவே அவள் அழுகிறாள். யார் தவறிழைத்தது? வேறு யார், அவளுடைய கணவனேதான்—இதுதானே அவளுடைய நினைப்பு. இந்நிலையில், எதுவும் கேட்காமல் இருப்பது மேலல்லவா? ஆனால் மௌன மாய் இருப்பதும் சுலபமாயில்லை. அவன் இங் கிருந்து எழுந்து வெளியே சென்று இரவை வேறு எங்காகவது—வைக்கோல் போருக்கு அடியிலே யுங்கூட—கழிக்க முடிந்தால் எவ்வளவு நன்றா யிருக்கும். ஆனால் அது முடியாத காரியமாயிற்றே. இது உன்னுடைய வீடு, நீ இங்குதானே இருந்தாக வேண்டும். உன் மனைவியுடன் ஒரே படுக்கையில் நீ படுக்கத்தானே வேண்டும்.

ஆகவே மாலை தவருமல் இவ்வாறே நடந்து வந்தது.

அதிக காலம் இது நீடிக்க முடியாதே. எப்படியும் ஒரு முடிவு வந்தாக வேண்டுமே. விரைவில் வாராதா, இம்முடிவு! எவ்வளவுதான் கொடிய முடிவாயினும், எவ்வளவுதான் பயங்கர முடிவாயினும், ஏதேனும் ஒரு முடிவு வந்தால் போதுமே. இந்தச் சித்திரவதையைவிட எதுவும் நன்ருய் இருக்குமே!

முடியாது — இது போல வாழ முடியாது!

முடியாது—ஆயினும் மாலை தவருமல் பியோதர் கால்களை இழுத்துக் கொண்டு கிராமத்தின் வழியே நடந்து ரியாஷ்கின்களது வீட்டுக்கு வந்து கொண்டுதான் இருந்தான்.

15

பியோதர் ஒரு நோட்டுப் புத்தகம் வைத்திருந்தான். அதைத் தனது கணக்ககம் என்பதாகச் சொல்வான். டிராக்டர்கள் செய்த வேலைகளையும் அன்ருடம் எவ்வளவு பெட்ரோல் செலவாயிற்று என்பதையும் அதில் அவன் குறித்து வைத்துக் கொள்வது வழக்கம். கைப்பட்டுக் கசங்கிப் பிசுக்கேறியிருந்த இந்த நோட்டுப் புத்தகத்தைத் தனது ஜாக்கெட்டுப் பையில் வைத்திருந்தான். ஒருநாள் அவன் ஜாக்கெட்டை வீட்டிலேயே வைத்துவிட்டுச் சென்ருன். ஜாக்கெட்டுடன் இந்த நோட்டுப் புத்தகமும் வீட்டிலேயே தங்கி விட்டது.

இதை எடுத்துச் செல்வதற்காக வயலிலிருந்து திரும்பி வந்தவன், சைக்கிளை வேலியிலே சாய்த்து வைத்துவிட்டு முற்றத்துக்குள் சென்ருன். வீட்டின் பின்புறத்தில் ஒரு வெள்ளாடு பரிதாபமாய்க் கத்துவதைக் கேட்டான். ரியாஷ்கின்களிடம் வெள்ளாடுகள் இல்லை. அந்நிய ஆடுதான் உள்ளே புகுந்திருக்க வேண்டும். அது வலி தாங்காமல் கதறிக் கொண்டிருந்தது. தனித்துத் திரிந்து கொண்டிருந்த ஆடு ஒன்று வேலியைத் தாண்டி உள்ளே குதிக்க முயன்று வேலியில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று பியோதர் நினைத்தான். வாயில் முகப்பிலிருந்து ஒரு கம்பைக் கையில் எடுத்துக் கொண்டு வீட்டைச் சுற்றிப் பின்புறம் சென்றவன் அப்படியே செயலற்று நின்று விட்டான்.

அந்த வெள்ளாடு வேலியிலே சிக்கிக் கொண்டு தொங்கவில்லை. கூர்மையான சிறு குளம்புகளை மண்ணுக்குள் அழுத்திக் கொண்டு நின்றது அது. ஸ்தேஷா பின்பக்கத்திலிருந்து தனது முழு பலத்தையும் கொண்டு அதனை அழுத்திப் பிடித்துக் கொள்ள, அலெவ்தீனு இவானவ்னு அதன் தலை மாட்டில் கையில் ஒரு கயிற்றுடன் நின்று ஏதோ செய்து கொண்டிருந்தார். கிழவியின் முகம் பியோதரைத் திடுக்குறச் செய்துவிட்டது—சாதாரணமாய் வழவழப்பாகவும் மெள்ள அதிர்ந்து கொண்டும் இருக்கும் அவர் முகம் இப்பொழுது ஆத்திரத்தால் கோரமாய் உருமாறியிருந்தது.

''ஏ பிசாசே, சைத்தானே!... ஸ்தேஷா, என் மகளே! கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ள மாட்டாயா நீ! அப்படித்தான்! திருட்டு மிருகமே!—இது உனக்கு நல்ல படிப்பினையாக இருக்கும்!''

அந்த வெள்ளாடு குரல்வளை நெரிக்கப்படுவதுபோல் அடித்தொண்டையால் கத்தியபடி முண்டியடித்துக் கொண்டு போராடியது.

என்ன நடக்கிறதென்பதை பியோதர் உணரலானுன்.... அதன் கொம்புகளை நெரித்துப் பிணைத்துக் கட்டிக் கொண்டிருந்தனர்.

வெள்ளாடுகள் தந்திரமானவைதான், ஓயாது நமக்குத் தொல்லை தரும் பிறவிகள்தான். அவை காய்கறிக் கொல்லைகளில் புகுந்து விடாதபடி தடுப்பது கடினம்தான். உள்ளே புகுந்த ஆடுகளை உதைத்து வெளியே விரட்டுவார்கள்; கழுத்துச் சட்டங்களை மாட்டுவார்கள்; கட்டைகளைக் கட்டி விடுவார்கள்—இவை யாவும் சகஜமாய்க் காணக் கூடியவையே. ஆனல் அவற்றின் கொம்புகளை நெரித்துப் பிணைத்திடும் கொடுஞ் செயலில் இறங்குவோரைக் காண்பது அரிது. இது பின்வருமாறு செய்யப்படுகிறது: பக்கவாட்டில் வளர்ந்துள்ள கொம்புகள் இரண்டும் ஒன்றையொன்று நெருங்கிவருமாறு நெரிக்கப்பட்டு கயிற்ருல் கெட்டியாக இணைத்துக் கட்டப்பட்டபின் ஆடு வெளியே விரட்டியடிக்கப்படுகிறது. இயற்கைக்கு முரணுய் எக்கச்சக்கமான நிலையில் கொம்புகள் இழுத்துக் கட்டப்பட்டதும் ஆடு வலி பொறுக்க மாட்டாமல் துடித்துக் கொண்டு ஓடுகிறது;

அமைதியின்றி தவிக்கிறது. அதன் சொந்தக்காரர் உடனே கயிற்றை அவிழ்க்காவிடில், அது அதற்குள்ள சொற்பப் புத்தியையும் இழக்கும்படி நேரும். பரிதாபமாய் மெள்ளக் கத்திக் கொண்டு தடுமாறியபடி நடக்கும், எதுவும் தின்னுது, பாலும் கொடுக்காது—சுருங்கக் கூறிஞல் கிராமவாசிகள் சொல்வது போல அது குட்டிச்சுவராகிவிடும், அனேகமாய் அது சாகும்படியே ஆகும்.

''அவ்வளவுதான் ஸ்தேஷா, விட்டுவிடு.... கொல்லேக்குள்ளா புகுந்தாய், திருட்டுப் பிசாசே! எங்களுடைய வெள்ளரிப் பிஞ்சுகளேத் தேடியா வந்தாய்!''

ஸ்தேஷாவும் அவள் தாயும் அந்த ஆட்டைக் கம்புகள் கொண்டு நையப் புடைத்து வெளியே விரட்டினர். பரிதாபமாய்க் கத்தியபடி அது பியோதரைத் தாண்டி அடித்துமோதிக் கொண்டு ஓடிற்று. அதன் கொடுந் துன்பத்திலிருந்து அதை விடுவிப்பதற்கு அவன் எதுவும் செய்வதற்கு முன்னல் அங்கிருந்து அது ஓடி மறைந்துவிட்டது.

அவமானமும் அருவருப்புமே அவன் உள்ளத்தில் எழுந்த முதலாவது உணர்ச்சி—காணச் சகிக்காத கோரச் செயலேத் தவிர்க்க முடியாதபடிக் காண நேரும்போது உள்ளத்தை வருத்தும் அதே உணர்ச்சி அவனிடம் மேலிட்டது. அவன் அங்கே நின்றதைக் கண்ட ஸ்தேஷா ஓரளவு இதை ஊகித்திருக்க வேண்டும். ஏனெனில் அவள் எதிர்ப் பக்கம் திரும்பி வெள்ளரிப் பாத்தியில் குனிந்து ஏதோ செய்தாள். கோபத்தால் கோவைப்

பழமாய்ச் சிவந்துவிட்ட முகத்துடன் கிழவி பியோதரைக் கண்ணெடுத்துப் பார்க்காமலே அவனைக் கடந்து சென்றார்.

''எங்களுடைய வெள்ளரியைத் திருட முயன்ற சனியன்! இனி இம்முயற்சியில் இறங்காது!''

நோட்டுப் புத்தகத்தை எடுக்க உள்ளே போகாமலே பியோதர் தனது சைக்கிளில் ஏறி வயலுக்குத் திரும்பிவிட்டான்.

இதன்முன் அவன் அனுபவித்திருந்ததைவிட மிகவும் கொடுமையான ஒரு பெருஞ் சுமை அவன் உள்ளத்தை வருத்திற்று. அந்த ஆடு அவன் கையில் அகப்பட்டிருந்தால், அது எளிதில் மறக்க முடியாதவாறு கட்டாயம் அதற்குப் பாடம் கற்பித்திருப்பான்—உண்மைதான். ஆனால் இவர்களை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை— அதுதான் அவனைப் பயங்கரமாய் வருத்திற்று. காயமடைந்த முயல் குட்டியை அருமையாக எடுத்து வைத்துக் கொண்டு காயத்தைக் கழுவிச் சுத்தம் செய்து கட்டுப் போட்டு ''குட்டி முயலே, அசடே'' என்றெல்லாம் அதனுடன் கொஞ்சியவர், இன்னொரு ஜீவனைப் பிடித்து இப்படிச் சித்திரவதை செய்தாரே—எப்படி அது? கிழவியின் முகம் அப்படிக் கோரமாய் மாறி காட்டுமிராண்டித்தனமாய் வெறிக் கோலம் பூண்டிருந்ததே! ''எங்களுடைய வெள்ளரியைத் திருட முயன்ற சனியன்!'' சரி, கிழவி போகட்டும், அவருக்கு ஏற்பட்ட மாற்றம் அப்படி ஒன்றும் வியக்கத்தக்கதல்ல என்பதாக வைத்துக் கொள்ளலாம். தன்

னுடைய வெள்ளரிக்காக மனிதனின் தோலையே உரித்தெடுக்கத் தயங்காத கிழவி என்று தள்ளி விடலாம். ஆனால் ஸ்தேஷா! ஏதோ சில வெள்ள ரிப் பிஞ்சுகளுக்காக இப்படி இவள் பைசாசமாக மாறுவதென்றால்.... ''தளதளப்பும் கவர்ச்சியும் மிக்கவள், தேன் போல் இனிப்பானவள்!''

பிரமாத முக்கியத்துவமுள்ள சம்பவமல்ல தான். அவர்கள் ஒரு வெள்ளாட்டுக்குத் தண்டனை அளித்ததைக் கண்ணுற்றான்—இது அவனைக் கலக்க முறச் செய்துவிட்டதென்று யாரிடமாவது கூறி னால், அவருக்குச் சிரிப்புத்தான் வரும். கவனியாது விட்டொழிக்க வேண்டிய விவகாரம்— மனதிலே வைத்துக் கொள்ளாமல் மறந்துவிடுவதுதான் நல்லது. ஆனால் வருகிற மாலையைப்பற்றி நினைத்த போது அவனால் சகிக்க முடியவில்லை. திரும்பவும் அங்கே போய், சுவரின் பின் பக்கத்தில் கிழவி முணுமுணுப்பதைக் கேட்க வேண்டுமா? அவர் களுடைய அடுப்பில் சமைக்கப்பட்ட சாப்பாட் டைச் சாப்பிட வேண்டுமா? கிழவருக்கு எதிரே வந்ததும் தலையைத் திருப்பிக் கொள்ள வேண்டு மா? ஸ்தேஷாவுடன் ஒரே படுக்கையில் படுத் துறங்கவேண்டுமா? இந்தச் சித்திரவதையை எவ் வளவு காலம் சகித்துக் கொள்வது? போதும், போதும்! முடிவு கட்ட வேண்டிய தருணம் வந்து விட்டது, வெளியேறிவிட வேண்டிய தருணம் வந்துவிட்டது!

ஆனால் சீக்கிரத்தில் குழந்தை ஒன்று பிறக்கப்

போகிறதே. பியோதர், நீ தந்தையாகப் போகிருயே!

என்ன செய்வது.... குழந்தைக்காக வேண்டி தான் அவர்களுடைய வழிக்குச் சென்று விடுவதா? கிழவியைப் போல வெள்ளரிப் பிஞ்சுகளுக்காக வெறிபிடித்து ஆடுவதா? யாவற்றுக்கும் முழுக்குப் போட்டுவிட்டு கிழவருடன் தானும் சேர்ந்து ''காலமெல்லாம் அவர்களுக்காக இடுப்பொடிய வேலே செய்ய வேண்டும்—அவர்கள் விரும்புவது அவ்வளவுதான்'' என்று பாட்டுப் பாடுவதா? குழந்தைக்காகத் தனது மனசாட்சியை விற்றுவிடுவதா?

முடியாது, அவனுல் செய்ய முடியாது! இதற்கு முடிவு கட்ட வேண்டிய தருணம் வந்துவிட்டது! வெளியேற வேண்டிய தருணம் வந்துவிட்டது!

காட்டை ஒட்டினுற்போல இருந்த புதர்களுக்கு அருகே டிராக்டர் ஒன்று தனக்குப் பின்னுல் கரிய உழவு சால்களே விட்டுக் கொண்டு ஊர்ந்து வந்தது.

மலர்கள் அடர்ந்த வரப்பில் சைக்கிளேச் சாய்த்துவிட்டு பியோதர் நேரே அந்த டிராக்டரிடம் சென்ருன். சிமோவ் அதனே ஓட்டி வந்தான். டிராக்டரை நிறுத்திவிட்டு அவன் சாவதானமாய்க் கீழே இறங்கி, கலப்பையில் வேலே செய்த புள்ளி முக இளேஞனேப் பார்த்துத் தலேயை ஆட்டினுன்.

''சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொள்.... சரி, பியோதர், பெட்ரோலுக்கு ஏற்பாடு செய்து விட்டாயா?''

பியோதர் புல்லின் மேல் படுத்துக் கொண்டான்.

''இல்லே, என்னுடைய நோட்டுப் புத்தகத்தை வீட்டில் வைத்து வந்துவிட்டேன்.''

''போய் எடுத்து வரக் கூடாதா?''

பியோதர் ஒரு கணம் பதில் சொல்லாமல் மௌனமாய் இருந்தான்.

''இதோ பார்'' என்ருன் இறுதியில். ''என்னுடைய சைக்கிள் அதோ இருக்கிறது. நீ போய் எனது நோட்டுப் புத்தகத்தை எடுத்து வந்து விடுகிருயா?''

''நீ போய்வர விரும்பவில்லேயா?''

''அதைப் பற்றிப் பேசுவானேன்? நீ போய் எடுத்து வர உனக்குச் சிரமமாய் இருக்குமா, சொல்?''

''அதெல்லாம் இல்லே, இரண்டு மிதி மிதித்தால் போய் வந்துவிடுவேன். நீ டிராக்டரைப் பார்த்துக்கொள், இதோ போய் எடுத்து வருகிறேன்.''

சிழோவ் புறப்படுவதற்காகத் திரும்பினுன். உடனே பியோதர் குதித்தெழுந்து அவன் சட்டைக் கையைப் பிடித்து அவனே நிறுத்திஞன்.

''இரு, இதோ போகலாம். நான் உனக்கு ஒன்று சொல்ல வேண்டும்.''

ஒரு சிறிய பிர்ச் மரத்தின் நிழலில் இருவரும் உட்கார்ந்தனர். பழைய குரோதங்களே மறந்து பல காலமாகிவிட்டது, ஆயினும் பியோதர் இது வரை குடும்ப விவகாரங்கள் குறித்து சிழோவுடன்

பேசியதில்லை. தனது வீட்டுப் பூசல்களைப் பற்றி ஏனையோருக்கு முன்னிலையில் பேச அவனுக்கு விருப்பமில்லை. அதுவும் சிழோவிடம் இவற்றைக் கூறி குறைபட்டுக் கொள்ள அவனுக்கு வெட்கமாயிருந்தது. ஆனால் இப்பொழுது அவனுக்கு எல்லாம் ஒன்றுதான் — சீக்கிரத்தில் எல்லோருக்கும் தெரிந்துவிடப் போகிறது, இன்றில்லை என்றால் நாளைக்குத் தெரிந்துவிடப் போகிறது. சிழோவின் காதுக்கும்தான் எட்டப் போகிறது — கண், மூக்கு ஆகிய பல இடைச்சேர்க்கைகளுடன் அவனுக்கு எட்டப் போகிறது. இந்த இடைச்சேர்க்கைகளைத் தவிர்க்க வழியில்லை — என்றுமே இருந்ததில்லை.

எனினும் பியோதர் நெடுநேரம் பேசாமலே புகை பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். சற்று வியப்புடன் சிழோவ் அவனைப் பார்த்தான். அவர்களுடைய தலைக்குமேல் பிர்ச் கிளைகள் மெள்ள சலசலத்தன.

''பேசாமல் இருக்கிறாயே, விஷயத்தைச் சொல்'' என்றான் சிழோவ் முடிவில்.

''இதோ பார், வீட்டிலே அவர்களிடம் சொல்லி விடு'' என்று ஆரம்பித்த பியோதர் அதோடு நிறுத்திக் கொண்டான். ''அவர்களிடம் சொல்லி விடு'' என்று உறுதியுடன் திரும்பவும் ஆரம்பித்தான். ''அங்கே நான் திரும்பிப் போகப் போவதில்லை—இல்லை. என்னுடைய சாமான்களை எடுத்து வைக்கச் சொல். புதிய முழங்கால் பூட்சு இருக்கிறது, மரப் பெட்டியில் இருக்கிறது....

பிறகு என்னுடைய குளிர்காலக் கோட்டு, சட்டைகள், ரேடியோப் பெட்டி இருக்கின்றன. இனி நான் உன்னுடன் வந்து தங்கப் போகிறேன்.''

''உனக்குக் கிறுக்கா பிடித்துவிட்டது? அப்படி என்ன சண்டை வந்தது?''

''நீ மாலையில் வந்து என்னுடைய சாமான்களை எடுத்துச் செல்வதாக அவர்களிடம் சொல்.''

''பியோதர்! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!''

''விளங்குவதற்கு என்ன இருக்கிறது? அது எனக்கு ஏற்ற இடமல்ல, அவ்வளவுதான். அவர்களுடைய வீட்டில் இனி என்னால் இருக்க முடியாது.''

''அப்படி என்ன நடந்தது?''

''அதெல்லாம் சொல்வதென்றால் நெடுநேரமாகும்.... சில விஷயங்களை வாயால் சொல்லி விளங்க வைக்க முடியாது. அவர்கள் மோசமானவர்கள், என்னால் அவர்களுடன் வாழ முடியவில்லை.... அதைப் பற்றி எல்லாம் என்னைக் கேட்காதே — என்னை வருத்தாதே. நான் சொல்கிறபடி செய். கேள்விகள் கேட்டு எனது புண்பட்ட உள்ளத்தை வதைக்காதே.''

பியோதர் மேலும் எதாவது சொல்லப் போகிறானா என்று காத்துக் கொண்டு சிமோவ் சிறிது நேரம் உட்கார்ந்தான். பியோதர் வாய் திறக்கவில்லை. பிறகு சிமோவ் தயங்கியபடி எழுந்து நடந்தான். தலையின் பின்புறம் தள்ளிவிடப்பட்ட அவன் குல்லாய், மேலே உயர்ந்து நின்ற அவனுடைய

தோள்கள், விலாப்புறத்துடன் ஒண்டிக் கொண்டு கூர்மையாகத் தெரிந்த அவன் முழங்கைகள்—யா வும் அவனுடைய அதிர்ச்சியையும் வியப்பையும் நன்கு புலப்படுத்தின.

பியோதர் சிகரெட்டுத் துண்டைச் சிண்டி விட்டு எழுந்து டிராக்டரிடம் சென்றான்.

ஜாக்கிரதையாக டிராக்டரை எடுத்தான். கலப்பையின் ஐந்து கொழுமுனைகளும் மண்ணைப் பெயர்த்துப் போட, டிராக்டர் அக்கலப்பையை முன்னே இழுப்பதை அவன் உணர்ந்தான். கலப் பை இழுத்துச் செல்லும் டிராக்டரின் தளராத சக்தியை உணர்ந்ததும் ஏற்பட்ட இந்த வழக்க மான உணர்வு, அவனை ஓரளவு அமைதியடையச் செய்தது.

சிமோரவ் சீக்கிரமாகவே திரும்பி வந்துவிட் டான்.

''அவர்களிடம் சொன்னாயா? யாவற்றையும் சொன்னாயா?''

''நீ சொன்னதை அப்படியே சொன்னேன்.''

''உம், என்ன நடந்தது?''

''ஸ்தேஷா அழுதாள், பிறகு கோபமடைந்து கூச்சல் போட ஆரம்பித்தாள். உன்னைத் திட் டினாள், என்னையும்கூடத் திட்டினாள். சீறி விழுந்து என் முகத்தைப் பிறாண்டி விடுவாள் போலிருந் தது.... முன்பெல்லாம் எவ்வளவு அழகாய் இருப் பாள்!...''

சிமோரவின் இந்தக் கடைசிச் சொற்கள் பியோ தரின் கண் எதிரே ஸ்தேஷாவின் உருவத்தைத்

தெரியச் செய்தன. கற்பமுற்றிருந்ததால் மேனி மங்கிப்போய், ஆத்திரத்தாலும் ஆவேசத்தாலும் உருக் குலைந்து கோரமாயிருந்த அவளது மெலிந்த முகமும், கலைந்த கூந்தலும் அவன் கண்முன்னே தெரிந்தன. ''முன்பெல்லாம் எவ்வளவு அழகாய் இருப்பாள்!'' சிமோவ் தன் மனத்தில் இருந்ததைத் தன்னை அறியாமலே வெளிப்படுத்திக் கொண்டுவிட்டான். இதுவரை அவன் பியோதரைப் பார்த்துப் பொறாமைப் பட்டிருக்கலாம்—சூட்டிக்கையான இளைஞன், எல்லாப் பெண்களும் அவன் பின்னால் ஓடுகிறார்கள். ஆனால் இப்பொழுது பொறாமைப்பட என்ன இருக்கிறது? உண்மையில் அவன் நிலை குறித்து சிமோவ் பரிதாபப்பட்டான்.

கோடைகால நண்பகலில் வயல்கள் சலனமற்றுச் சப்தமின்றி இருந்தன. பெட்ரோல், வெய்யிலில் சூடேறிய மண், கிளோவர் புல் இவை யாவற்றின் மணமும் ஒன்று சேர்ந்து காற்றிலே மிதந்தது. பியோதர் அப்படியே தரையில் படுத்து, தன் கதி இப்படி ஆயிற்றே, தனது வாழ்க்கை இவ்வாறு பாழாகிவிட்டதே என்று வாய் விட்டு அழ விரும்பினான்.

ஆனால் அற்ப வெட்க உணர்ச்சி மிகக் கொடிய துயரினும் வலிமையுடையதாயிற்றே.

சிமோவ் அவன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான், கலப்பையில் வேலை செய்த இளைஞன் வெறுங் கால்களுடன் அருகாமையில் இருந்தான். ஆகவே பியோதர் கீழே படுக்கவோ, அழவோ இல்லை.

16

முழுப் பைன் மரத் துண்டுகளாலான சாதாரண வீடுதான். மெல்லியப் பலகைகள் வேய்ந்த கூரையையும், கூரையின் முனையில் முக்கோணச் சுவரையும், பல சிறிய சன்னல்களையும் பெற்றிருந்தது. சன்னல்களுக்கு அடியில் ராஸ்பெரிச் செடிகள் இருந்தன. முற்றத்தின் மையத்தில் முதிய பிர்ச் மரம் ஒன்று நின்றது. அதில் கட்டப்பட்டிருந்த மெல்லிய கோலின் நுனியிலிருந்த குருவிக் கூட்டுப் பெட்டியை அது விண்ணோக்கி எறிய எத்தனிப்பது போலத் தோன்றியது. பின் பகுதியில் ஒரு கொட்டகை இருந்தது. அதற்குச் சென்ற பாதையில் புல் மண்டியிருந்தது. இவை யாவற்றையும் சுற்றி வேலி இருந்தது.

சாதாரண வீடுதான், குறிப்பிடத்தக்கது எதுவுமில்லை. கிராமத்தில் இருந்த ஏனைய பல வீடுகளைப் போன்றதுதான். வேலியும் இதே போல சாதாரணமானதுதான். பத்தடி உயரமுள்ளதல்ல, கூர்முனைகளுடைய மரத் துண்டுகளாலானதல்ல. மெல்லிய குச்சிகளை வைத்துக் கட்டப்பட்டது தான். ஆனால் உறுதியாகவும் நெருக்கமாகவும் இருந்தது—அண்டை வீட்டுப் பூனை அதனுள் பாதத்தைக்கூட நுழைக்க முடியாது. இந்த வேலியிடம் ஓர் இரகசிய பலம் இருந்தது—தாண்டிச் செல்ல முடியாதது அது.

பியோதரால் சகிக்க முடியவில்லை. அவன் போய்விட்டான்.

அவன் சென்றபின் ஒரு வாரத்தில் ஸ்தேஷா வுக்கு இருபதாவது பிறந்த நாள். வழக்கம்போல் அவளுடைய பெற்றோர்கள் அவளுக்கு அன்பளிப்பு வாங்கி வந்தனர்—ஓராடைக்கு வேண்டிய துணி. இதற்கு முந்திய ஆண்டு அவர்கள் சிறுச் சிறு செம் மலர்க் கொத்துகள் அச்சிட்ட நீல கிரேப் துணி வாங்கினர்; இப்பொழுது புள்ளியிட்ட லிலாக் பட்டு வாங்கினர். அது அவளுடைய மரப் பெட்டி யில் வைக்கப்பட்டது. வழக்கம்போல் முட்டை, வெங்காய, முட்டைக்கோஸ், மீன் பணியாரங்கள் தயாரித்து வைக்கப்பட்டன. அவளுடைய தந்தை எப்பொழுதும் போல் ஒரு பாட்டிலை வெளியே எடுத்து வந்து ஒரு சிறிய கிளாசை நிரப்பி அவ ளுடைய தாயிடம் கொடுத்தார். கிழவியும் எப் பொழுதும் போல் தன் மகளுக்கு முன்னால் அந்தக் கிளாசை உயர்த்தி ''எங்கள் ஒளிவிளக்கே, உன்னை வாழ்த்துகிறேன்! மகளே, எழிலுரு படைத்தவள் நீ, கண்ணைக் கவரும் நங்கை நீ, உன்னை வாழ்த்து கிறேன்!'' என்றார். அதைக் குடித்துவிட்டு இருமி னார்; வழக்கப்படி வோட்காவைக் கடிந்து கொண் டார்: ''அட கடவுளே! தாங்க முடியவில்லை— எனக்கு ஒத்து வராது இது! கிறிஸ்துவின் பகை யாகும் இந்த பானம்!'' கிழவர் எப்பொழுதும் போல் ''ஸ்தேஷா, உன்னுடைய உடல் நலத்துக் காக'' என்று சுருக்கமாய்க் கூறிவிட்டு கிளாசைக் கவிழ்த்து வாய்க்குள் ஊற்றிவிட்டு பந்தாவுடன் மீசையைத் தடவிக் கொண்டார். ஆம், யாவும் வழக்கம் போல் நடந்தேறின. ஒன்றேவொன்று

மட்டும்தான் இல்லாமற் போய்விட்டது—மகிழ்ச்சி மட்டும் இல்லாமற் போய்விட்டது. ஸ்தேஷா அவளுக்கு நினைவிலிருந்த காலம் முதலாய் இந்த விழாக்களில் அவள் அனுபவித்து வந்திருந்த அமைதியான, இதமான ஆனந்தக் களிப்பை இவ்வருடம் காண முடியவில்லை. எப்பொழுதும் போலவே யாவும் நடைபெற்றன. பியோதரைப் பற்றிக் குறிப்பிடாமலே இருந்தனர். யாவும் முடிவுற்றுவிட்டன — அதற்குமேல் கிழவியால் பொறுக்க முடியவில்லை. நெஞ்சுக்குமேல் கைகளைக் கட்டிக் கொண்டு தன் மகளை நெடுநேரம் உற்றுப் பார்த்தார், பெருமூச்செறிந்தபடி முடிவில் கூறினார்:

''என் கண்ணே, அவனை எண்ணி நீ மனம் வருந்தாதே. அவன் போகட்டும் விடு. உதவாக்கரை ஆள், சனியன் ஒழிந்தது நல்லதுதான்.''

கண்ணீர் பொங்கி வழிய ஸ்தேஷா அவளுடைய அறைக்கு ஓடினாள்.

கடந்த வாரங்களில் எத்தனையோ முறை அவள் தன் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுது புலம்பியிருந்தாள்.

இங்கே அவனுக்கு வாழ்க்கை அப்படி சகிக்க முடியாததாகவா இருந்தது? என் பெற்றோர்கள் மீது ஏன் அவனுக்கு இந்தக் காய்ச்சல்? ஐயோ, என் கதி இப்படியா ஆகணும்? சிரித்து விளையாடிக் கொண்டு குதூகலமாய் இருந்தானே, என்னை எப்படியெல்லாமோ கொண்டாடினானே—இப்படி மாறிவிடுவான் என்று யாராவது நினைத்திருக்க

முடியுமா?... முன்பு அவன் வர்வாராவிடம் ஓடிஞ னே—அதையாவது புரிந்துகொள்ளலாம். நான் சண்டை போட்டேன், கத்தினேன்; அம்மாவும் கூட அவனைத் திட்டிவிட்டார். ஆனால் இப்பொ ழுது —யாரும் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை யே. ஏன், அம்மாவுங்கூட எதாவது குறைப்பட்டுக் கொள்ள விரும்பியபோது, அவன் கோபப்படு வானே என்று பயந்து தூர விலகிச் சென்றல்லவா பேசி வந்தார். நான் தன்னிடம் ஓடி வந்து என்னை ஏற்றுக் கொள்ளுமாறு காலில் விழுந்து கெஞ்சு வேன் என்று நினைக்கிறன்? எவ்வளவு காலம் வேண்டுமானாலும் காத்திருந்து பார்க்கட்டுமே, நான் ஒன்றும் அவனிடம் போய்க் கெஞ்சப் போவதில்லை!

மனம் வெதும்பி அவள் கண்ணீர் வடித்தாள், வயிற்றினுள் குழந்தை கோபமாய் உதைத்தது.

ஆயினும் அவளுடைய வைராக்கியம் குலைந்து விட்டது.

வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்புகையில் தொலைவிலே அவனைக் கண்டாள். பண்ணை அலு வலகத்தின் முன்னல் ஒரு டிராக்டர் நின்று கொண் டிருந்தது. வர்வாரா ஸ்திப்பானவ்னவும் டிரை வர்களும் பலத்த குரலில் ஏதோ பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் சிரித்தது ஸ்தேஷாவின் காதில் விழுந்தது. வர்வாராவுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த பியோதரும் சிரித்தான். திருமணத்துக்கு முன்பு எப்படி இருந்தானே அதே நிலையில் அங்கு அவன் நின்று கொண்டிருந்தான்.

ஆனால் அவளோ—சால் போன்ற வயிறும் கண்ணுடியில் அவளால் பார்க்கச் சகிக்காத முகமுமுடையவளாகி விட்டாள்!

தொலேவிலே நின்று பார், மூலைக்குப் பின்னலிருந்து அவனை நோக்கு, உதடுகளைக் கடித்துக் கொண்டு கண்ணீர் வடி, கொதித்தெழு, சபி அவனை!... சிரிக்கிருன் பார்! நேரே அவனிடம் சென்று வெட்கமில்லாத அவன் முகத்திலே காரித் துப்பினுல் என்ன?—''என்னை இம்மாதிரியாக்கி விட்டு இங்கே ஓடி வந்துவிட்டாயே, மானங்கெட்டவனே!'' என்று எல்லாருக்கும் முன்னுல் ஏசினுல் என்ன? ஆனுல் அவர்கள் என்னைப் பற்றியா கவலைப்படப் போகிருர்கள்!... வர்வாரா. அந்த டிரைவர்கள், கிராமத்தினர் எல்லாருமே ஸ்தேஷா ரியாஷ்கினு பித்துக்குளி மாதிரி ஆடுவதைப் பார்த்துச் சந்தோஷமல்லவா அடைவார்கள்! நாங்கள் அவனைப் பாடாய்ப் படுத்திஞேம், பொறுக்கமாட்டாமல் வீட்டை விட்டு ஓடி வந்து விட்டான் என்று இப்பொழுதே ஊரெல்லாம் பேசுகிருர்கள். நாங்களா அவனைப் படுத்திஞேம்? அவனல்லவா எங்கள் வாழ்வை நாசமாக்கிவிட்டான்.

வீட்டில் வழக்கம்போல் ஸ்தேஷா படுக்கையிலே குப்புற விழவில்லை. அவள் கால்கள் அந்தத் தரையின் முழு நீளத்துக்கும் அவளைச் சுமந்து செல்வதற்குக்கூட சக்தியற்றவையாகி விட்டன. ஒரு நாற்காலியில் அப்படியே சாய்ந்துவிட்டாள். அடிவயிற்றிலே குழந்தை அசைவதை உணர்ந்ததும், பியோதர்மீது அவளுக்கு ஏற்பட்ட வெறுப்பு

அவளைச் சித்திரவதை செய்தது. என்னை இப்படி உதறியெறிந்துவிட்டுப் போய்விட்டானே! யாவற்றையும் மறந்துவிட்டானே! சிரித்துக் கொண்டல்லவா நிற்கிறான்!... வெட்கமில்லையா? என்ன துணிச்சல்!

நெடுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். இருட்ட ஆரம்பித்துவிட்டது. அதற்குமேல் அவளால் பொறுக்க முடியவில்லை. அவளைப் பிடுங்கித் தின்ற சோக சிந்தனைகள் அவளை வெறி கொண்டவளாக்கி வந்தன. குதித்தெழுந்து கதவருகே ஓடினாள். வெளியே குளிராயிருந்தது. மெல்லிய பருத்தியாடை உடுத்தியிருந்த அவளுக்கு உடம்பெல்லாம் நடுங்கிற்று. அப்பொழுதும் அவள் நிற்கவோ, சால்வையை எடுத்துச் செல்வதற்காக வீட்டுக்குத் திரும்பவோ இல்லை. கொழுந்து விட்டு எரிந்த அவளுடைய கோபம் தணிவதற்கு முன்பு அதனை எடுத்துச் சென்று அப்படியே அவன் தலையில் கொட்ட முடியாமற் போய்விடுமோ என்று நேரே ஓடினாள்.

எரெமேயெவ்னா என்ற வயது முதிர்ந்த அன்னையின் பெரிய வீட்டில் டிராக்டர் டிரைவர்கள் வசித்து வந்தனர். பேச்சுக் குரலும் தகரத் தட்டுகளில் கரண்டிகள் தட்டுப்படும் சப்தமும் சன்னல் வழியே வெளியே கேட்டன—அவர்கள் இரவு சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சன்னல் கண்ணாடியில் ஸ்தேஷா தடதடவென்று ஆத்திரமாய்த் தட்டினாள். வாயை மென்றபடியே சிமோவ் வெளியே வந்தான்; ஸ்தேஷாவைப்

பார்த்ததும் தலையை அசைத்துவிட்டு அவசர அவசரமாய்த் திரும்பி உள்ளே ஓடினான்.

அவள் கால்கள் அவளைத் தூக்க முடியாமல் திரும்பவும் துவளவே, அவள் சுவரில் சாய்ந்து நின்று கொண்டாள்.

பியோதர் வீட்டில் இருக்கும் போது எப்படி இருப்பானோ அதேபோல வெறுஞ் சட்டையுடன் வெளியே வந்தான். காலரின் பொத்தான்களைக் கழற்றிவிட்டிருந்தான். முகம் வெளிறிட்டுக் கலக்கமுற்றவனாய்த் தோன்றினான். சுளித்த புருவங்களின்மீது முடிகளில் ஒரு கொத்து சரிந்து விழுந்திருந்தது.... என்னதான் ஆயினும் இன்னமும் அவன் அவளுடைய கணவன்தானே. அவளுக்கு உயிரனையவன் அல்லவா? அந்த வெண்பட்டு முடிச் சுருள், தடிப்பேறிய அந்தக் குண்டுக் கைகள்— எல்லாமே உயிருக்கு உயிரானவை அல்லவா?... ஆனால் அவனால் சிரித்து மகிழ முடிகிறது; கவலையற்று வாழ முடிகிறது; குழந்தையைப் பற்றி மறந்தேவிட்டான்!

அவனைக் கண்டதும் ஸ்தேஷா முன்னால் வந்தாள்.

''தரையைப் பார்க்காதே, என்னைப் பார்!'' மூச்சை அடக்கிக் கொண்டு ஆத்திரமாய்க் கூறினாள். ''எப்படி இருக்கிறேன் பார்! ரொம்ப நன்றாயிருக்கிறேன், இல்லையா? ஏன் விழிக்கிறாய் குழந்தையை நினைத்தால் பயமாய் இருக்கிறதா?''

''என்னைத் திரும்பவும் வீட்டுக்குக் கூப்பிட்டுச் செல்வதற்காகவா வந்திருக்கிறாய்? நான் வரப்

போவதில்லை'' என்றான், வேதனையுடன்; அவன் குரல் கரகரத்தது.

''உன் காலில் விழுந்து கெஞ்ச வேண்டுமென்று எதிர்பார்க்கிறாயாக்கும்.''

''ஸ்தேஷா!''

''ஸ்தேஷா, என்ன ஸ்தேஷா வேண்டியிருக்கிறது!... ஸ்தேஷாவை நீ என்ன செய்து வைத்திருக்கிறாய் பார்! நல்லாயிருக்கா? பிடிக்கிறதா? கண்கொண்ட மட்டும் பார்! உன் மனைவி எப்படி ஆகிவிட்டாள் என்பதை நினைவில் வைத்துக் கொள், பிறகு வர்வாராவிடமும் உன் நண்பர்களிடமும் போய் அவளைப்பற்றிப் பேசி வயிறு குலுங்கச் சிரி!''

''ஸ்தேஷா! நான் சொல்வதைக் கேள்!...''

''முடியாது, நீ கேள் நான் சொல்வதை! துன்பப்படுவது நானேயன்றி நீயல்ல!''

''ஸ்தேஷா, அந்த வீட்டைவிட்டு வந்துவிடு, என்னிடம் வந்துவிடு! துன்பம் தரும் இந்த விவகாரத்தை மறந்துவிடுவோம், என்னிடம் வந்துவிடு!''

'' 'வந்துவிடு, வந்துவிடு! அந்த வீட்டைவிட்டு வந்துவிடு!...' என் அப்பாவும் அம்மாவும் உனக்கு என்ன கெடுதல் செய்தார்களாம்? அவர்கள் மேல் ஏன் உனக்கு இந்த வெறுப்பு?எந்நேரமும் உன் மனசாட்சியைப் பற்றி பேசுகிற ஆளல்லவா நீ?... இப்பொழுது எங்கே போயிற்று அந்த மனசாட்சி? உனக்கு மனசாட்சியும் இல்லை, ஒன்றுமில்லை!'' ஸ்தேஷா உச்சத் தொண்டையில் கூச்சலிட்டாள். டிரைவர்கள் வெளியே வாயில் முகப்புக்கு

வருவதைப்பற்றிக் கவலைப்படாமலே கூச்சல் போட்டாள். ''நீ மனிதனல்ல, காட்டு மிருகம்! பேய்! என் வாழ்வைப் பாழாக்கிவிட்டாய்!''

''கத்தாதே, கட்டுப்படுத்திக் கொள். வெட்கமாயில்லையா உனக்கு?''

''என்னையா கேட்கிறாய், வெட்கமாயில்லையா என்று? என் முகத்தைப் பார்ப்பதற்கு உனக்குத் துணிச்சல் இருக்கிறதா? சீ—! வெட்கங்கெட்டவனே.... மானங்கெட்டவனே.... இந்தா, வாங்கிக்கொள்!'' நேரே அவன் முகத்தில் காரித் துப்பிவிட்டு அவன் சட்டையைப் பிடித்துக் கொண்டாள். அவன் அவளுடைய முன்கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''ஸ்தேஷா! ஸ்தேஷா! வேண்டாம்! கட்டுப்படுத்திக் கொள்! சுற்றிலும் எத்தனை பேர் இருக்கிறார்கள் பார்!''

அவன் பிடியிலிருந்து தன்னை விடுத்துக் கொள்ளப் போராடிப் பார்த்துவிட்டு, கீழே சரிந்து மண்டியிட்டு உட்கார்ந்து அவனுடைய கைகளைக் கடிக்க முயன்றாள்.

''எத்தனை பேர் இருந்தால் எனக்கென்ன? நல்லா பார்க்கட்டுமே!''

அவர்களைச் சுற்றிலும் கூட்டம் கூடிவிட்டது.

துடியாய்த் துடித்த அவள் கைகளை விடாமல் பிடித்துக் கொண்டே பியோதர் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டான்.

திடீரென அவள் துவண்டு அவன் காலடியில் விழுந்தாள். அவன் தன் பிடியைத் தளர்த்தி

அவளுடைய கைகளைக் கீழே விட்டான். மிதிபட்டுக் கிடந்த அந்தப் புல்லில் முகத்தை அழுத்திக் கொண்டு ஸ்தேஷா சப்தமின்றி அழுதாள். அவளுடைய தோள்கள் விம்மியெழுந்து உலுங்கியாடின. பியோதர் குமைந்து போய்ச் செயலற்று அவளருகே நின்று கொண்டிருந்தான்.

''தூக்குங்கள் அவளை! வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள்—வாயைப் பிளந்துகொண்டு வேடிக்கை பார்க்கும் இந்தக் கூட்டத்திலிருந்து தூர அழைத்துச் செல்லுங்கள்!'' இவ்வாறு இரைந்த படி வர்வாரா ஸ்திப்பானவ்னு சுற்றிலுமிருந்தோரை விலக்கிக் கொண்டு உள்ளே புகுந்தார்.

டிரைவர்களில் ஒருவனும்—வாட்டசாட்டமானவன், லியோஷ்கா சுபோத்தின் என்று பெயர்—கொல்லுப் பட்டறைத் தொழிலாளி இவான் புரோனினுமாய்ச் சேர்ந்து, ஸ்தேஷாவை ஜாக்கிரதையாகத் தூக்கி நிற்க வைத்தனர்.

''பெண்ணே, இப்படி வா அம்மா நீ! இம்மாதிரி நிலைகுலைந்து போகலாமா? மெள்ள வா! வீட்டுக்குக் கொண்டுபோய் விடுகிறோம்—வா நீ.''

அவர்கள் தூக்கிவிட்டதும் ஸ்தேஷா தன் எதிரே வர்வாரா ஸ்திப்பானவ்னு இருப்பதைப் பார்த்துவிட்டு திரும்பவும் முண்டியடித்துக் கொண்டு வலிமையான அவர்களது கரங்களிலிருந்து பிய்த்துக் கொள்ள முயற்சித்தாள்.

''எல்லாம் நீங்கள் செய்த வேலைதான்! புல்லிலே நெளியும் பாம்பாய்ப் பிறந்த நீங்கள்தான்! அவனை இப்படியெல்லாம் செய்யச் சொன்னது

நீங்கள்தான்! இந்த உலகத்திலிருந்தே எங்களை ஒழித்துவிட விரும்புகிறீர்களே! உங்களுக்கு நாங்கள் என்ன செய்தோம்? ஏன் இந்தக் குரோதம்?''

வர்வாரா ஸ்திப்பானவ்னு ஒன்றும் சொல்லாமல் ஸ்தேஷாவை வெறிக்கப் பார்த்தபடி நின்ருர்.

''பெண்ணே, நீ இப்படியெல்லாம் பேசக் கூடாது'' என்று கொல்லுப் பட்டறைத் தொழிலாளி புரோனின் ஸ்தேஷாவுக்குப் புத்திமதி சொன்னுன். ''இப்படிப் பேசுவது சரியல்ல. நான் சொல்கிறேன்—இது நல்லாயில்லை. பேசாமல் எங்களுடன் வா, வீட்டுக்கு அழைத்துச் செல்கிருேம்.''

''நீங்கள் எல்லாருமே இப்படித்தான்! ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்கள்தானே!... ஏன் எங்கள்மீது உங்களுக்கு இந்த வெறுப்பு? யாருக்கும் நாங்கள் தீங்கிழைக்கவில்லையே! பாடுபட்டுச் சம்பாதித்துத்தானே சாப்பிடுகிருேம்!''

அவர்கள் மெள்ள அவளை அழைத்துச் சென்றனர். அத்திசையிலிருந்து நெடுநேரம் அவளுடைய விம்மலைக் கேட்கமுடிந்தது.

பியோதர் அன்று இரவு சிழோவையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு வர்வாரா ஸ்திப்பானவ்னுவின் வீட்டுக்குச் சென்ருன்.

''வேருெரு கூட்டுப் பண்ணைக்கு என்னை மாற்றி விடும்படிக் கேட்கப் போகிறேன். இது போன்ற ஒரு ரகளைக்குப் பிறகு என்னுல் இங்கு வாழ முடியாது. இப்பொழுது நான் இயந்திர, டிராக்டர்

நிலையத்துக்குப் போகிறேன். தற்போதைக்கு என்னுடைய வேலையை இவன் கவனித்துக் கொள்வான்.'' பியோதர் தலையை ஆட்டிச் சிழோவைச் சுட்டிக்காட்டினன். சிழோவ் கலக்கமுற்றவனாய்க் கால்களை மாற்றிமாற்றி வைத்து நின்றான்.

''வர்வாரா ஸ்திப்பானவ்னா, நீங்கள் இவனிடம் பேசி இந்த எண்ணத்தை விட்டொழிக்கும்படிச் செய்யுங்கள்.''

அவர்கள் வந்தபோது வர்வாரா ஸ்திப்பானவ்னா புத்தகம் படித்துக்கொண்டிருந்தார். தான் படித்த பக்கத்தில் எதை அடையாளமாய் வைக்கலாமென்று அவசரமின்றி மேஜையில் தேடினார். பிறகு ஒரு சாவியை எடுத்துப் புத்தகத்தில் வைத்து மூடினார். புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு தீர்மானமாய்க் கூறினார்: ''நீ இங்கிருந்து போவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்.''

''அனுமதிக்க வேண்டியது நீங்களல்ல, இயந்திர, டிராக்டர் நிலையம்தான். அது அனுமதியளிக்கப் போவதில்லை எனக்குத் தெரியும். ஆனால் என்ன ஆனாலும் இனி நான் இங்கு இருக்க மாட்டேன்! வேலையையே துறந்துவிடவும் தயாராகிவிட்டேன். இங்கு யார் முகத்திலும் என்னால் விழிக்க முடியாது—வெட்கமாயிருக்கிறது. எப்படி என்னால் இங்கு தங்க முடியும்?''

''அதெல்லாம் எனக்குத் தெரியும், ஆனால் நான் உன்னை விடப் போவதில்லை. இப்பொழுது தான் நாங்கள் சிக்கல்களிலிருந்து வெளிப்பட்டுத் தலைதூக்க ஆரம்பித்திருக்கிறோம். உன்னுடைய

வேலைக்குழுதான் எங்களுக்கு இருக்கும் பிரதான ஆதாரம். அறுப்பு அறுத்தாக வேண்டும்—வேலைக் குழுத் தலைவர்களை மாற்றுவதற்கு இதுவல்ல நேரம். உனக்குப் பதில் எங்களுக்குக் கிடைக்கப் போவது எப்படிப்பட்ட ஆளாய் இருக்குமோ, பகவானுக்குத்தான் தெரியும்! முடியாது — வேண்டுமானுல் நீ போய் முயற்சி செய்துபார். அதை என்னுல் தடுக்க முடியாது. ஆனுல் உன் பின்னுலேயே நானும் வந்து நிற்பேன் என்பதை நினைவில் வைத்துக் கொள். வட்டாரக் கட்சிக் கமிட்டி, வட்டார நிர்வாகக் குழு, பிறகு உன் னுடைய இயந்திர, டிராக்டர் நிலையத்துக்குங்கூட நான் நேரில் சென்று பேசுவேன், எப்படியும் நீ இங்கிருந்து போகாதபடி பார்த்துக் கொள் வேன். ஆகவே இந்த எண்ணத்தை விட்டுவிடு— அதுதான் நல்லது. வெட்கத்தைப் பொறுத்த வரை.... நீயே கொஞ்சம் யோசித்துப் பார். வேகம் தணிந்து நீ நிதானமடைந்தபின் அமைதி யாக ஆலோசனை செய்து பார். இது போன்ற ஒன்றிலிருந்து ஓடிவிட முயல்வது சரியல்ல என் பதை நீயே உணர்ந்து கொள்வாய்.''

''இல்லை, ஆலோசித்துப் பயனில்லை! நான் போய் வருகிறேன், வணக்கம்! சிழோவிடம் சொல்லியிருக்கிறேன்; என்ன செய்ய வேண்டு மென்பது பற்றி நீங்களே நேரில் அவனிடம் கூறுங்கள்.''

பியோதர் வாயிற் பக்கம் திரும்பி வெளியே நடந்தான்.

''குடும்ப வாழ்க்கை என்ன ஆயிற்று, பார். இருவரும் இரு வேறு திசைகளில் இழுத்தால், வண்டி அதிக தூரம் போக முடியுமா? ஸ்தேஷாவும் பியோதரும் இந்த நெடுஞ்சாலையில் ஒன்றிணைந்து சென்றிருக்கவேண்டும். ஆனால் இருவரும் இரு வேறு வகையினர். என்ன செய்வது? இளைஞனே, இதிலிருந்து நீ படிப்பினை பெற வேண்டும். அவரவரும் எப்படிப்பட்டவர் என்பதைப் புரிந்து கொள்.'' சிழோவ் எப்படிப்பட்டவன் என்பதை வர்வாரா ஸ்திப்பானவ்னு தனக்குள் நிதானமாய் எடை போட்டுப் பார்த்தார்.

''இருந்தாலும், உங்களால் அவனைத் திரும்பும்படிச் செய்ய முடியாதா?'' என்று தயங்கிக் கொண்டே அவன் கேட்டான்.

''எங்கே திரும்பச் செய்வது — கூட்டுப் பண்ணைக்குத்தானே?''

''ஆம், அதுவும்தான். ஆனால் அவன் மனைவியிடம் திரும்பச் செய்வது பற்றிக் கேட்டேன். குழந்தை பிறக்கப் போகிறதே!''

''ரியாஷ்கின்களுடைய வீட்டுக்கு அவனைத் திரும்பிவிடச் செய்ய வேண்டும் என்கிறாயா? என்னால் முடியாது—அந்தப் பொறுப்பை நான் ஏற்க மாட்டேன். இந்த ரகளையை நீ பார்த்தாயல்லவா? வீட்டில் தினசரி இவ்வாறு நடைபெற்றால் என்ன செய்வது? சுற்றிலும் கூட்டம் கூடாமல் நான்கு சுவர்களுக்குள் தனிமையில் நடைபெறும் —அவ்வளவுதானே வித்தியாசம்? அவனை அங்கு திரும்பிப் போகும்படி முயற்சி செய்து பயனில்லை

—அவனால் தாக்குப்பிடிக்க முடியாது, மறுபடியும் வெளியே வந்துவிடுவான். அந்த வீட்டிலிருந்து ஸ்தேஷாவை வெளியே வரச் செய்வதென்றால்— அது வேறு விஷயம். ஆனால் அவள் விடாமல் அங்கேயே ஒட்டிக் கொண்டிருக்கிறாள் — பிய்த் தெடுத்து வெளியே கொண்டுவருவது எளிய காரி யமல்ல. அவர்களை எனக்குத் தெரியும்—தம் முடையது எதையும் இலகுவில் விட்டுக் கொடுக்கக் கூடியவர்களல்ல அவர்கள்.''

''குழந்தை பிறக்கப் போகிறதே!''

''நம்பிக்கையளிப்பதாய் இருப்பது அது ஒன்றுதான். பிறக்கும் குழந்தை ஸ்தேஷாவுக்கு நல்ல புத்தியைத் திரும்பச் செய்யலாமென நினைக் கிறேன்.... சரி, நீ போய்வா.''

''என் வேலைகளைப் பற்றிய உத்தரவு என்ன?''

''உத்தரவு ஒன்றும் தேவையில்லை. நீ செய்து வரும் வேலையையே நாளைக்கும் தொடர்ந்து செய்; நாளை மறுநாள் பியோதர் திரும்பி வந்து விடுவான்.''

''அவன் திரும்பி வருவான் என்று என்னால் நம்பமுடியவில்லை. பிடிவாதமாயிருக்கிறான்.''

''சரி, யாருக்குப் பிடிவாதம் அதிகம் என்று பார்ப்போம். நீ போகிற வழியில் அர்ஸேன் தியைச் சந்தித்து, நான் அவரை இங்கு வரச் சொன்னதாகச் சொல். எனக்குப் பதில் அவர் இங்கிருந்து வேலைகளைக் கவனித்துக் கொள்வார். நாளைக்குப் பூராவும் நான் பல்வேறு அலுவலகங் களுக்கும் போய்வந்தாக வேண்டும். உன்னுடைய

பியோதர் எனக்கு நல்ல வேலை வைத்திருக்கிறான்.''

திரும்பவும் அவர் தனது புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்.

17

வர்வாரா ஸ்திப்பானவ்ஞுவின் பிடிவாதமே வெற்றியடைந்தது. பியோதர் தொடர்ந்து பண்ணையிலேயே இருக்க வேண்டியதாயிற்று. அவனுடைய விவகாரம் குறித்து கிராமம் பூராவிலும் எல்லோரும் திரும்பத் திரும்பப் பேசாமல் இருக்கவில்லை. ஆயினும் பியோதரின் காதுக்கு இவையெல்லாம் எட்டவில்லை. மக்கள் அவனை எப்பொழுதும் போலவே நடத்தி வந்தனர்.

ஆனல் ஸ்தேஷா வழக்கம் போல கிராமத்தின் வழியே நடந்து வேலைக்குப் போய்வருவது இத்தகைய சித்திரவதையாகிவிடுமென நினைத்தே இருக்க மாட்டாள். அந்நியக் கண்கள் சன்னல்களிலிருந்து, வாயில்முகப்புகளிலிருந்து — எல்லா இடங்களிலிருந்தும் — தன்னையே உற்றுப் பார்த்துப் பின்தொடர்வது போல இருந்தது அவளுக்கு. யாரைப் பார்த்தாலும் அவளுக்கு அச்சமாயிருந்தது. வழியில் தான் சந்திப்பவர்கள் பின்பக்கத்திலிருந்து தன்னை உற்று கவனிப்பார்கள் என்று பயந்தாள். வேருெரு கிராமத்திலிருந்து வருவோருங்கூட — பால் கொண்டு வரும் வண்டிக்காரர்

போன்றவருங்கூட — தன்னைத் திரும்பிப் பார்ப்பா ரென அஞ்சினாள்.

இவர்கள் கண்டிக்க வேண்டியது பியோதரை யே அன்றி தன்னையல்ல என்று அடிக்கடி நினைப் பாள். அவன்தான் என்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டான், நடுத் தெருவில் நிறுத்திவிட்டு ஓடிவிட் டான், குழந்தை பிறக்கப்போகும் சமயத்தில் இப்படி என்னைக் கைவிட்டுவிட்டான்! ஆனால் இவர் கள் பியோதரைக் கண்டனம் செய்யாமல், என்னை யல்லவா கண்டிக்கிறார்கள்! இது நியாயமா? உல கில் இப்படி நியாயம் இல்லாமற் போகலாமா?

இனி அவன் குனிந்த தலையோடு தன்னிடம் திரும்பி வருவானென அவள் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் எங்கேனும் அவனைத் தான் சந்திக்கலாம் என்ற நம்பிக்கையுடன்தான் இருந்தாள்.

ஒரு முறை இருவரும் சந்திக்கவே செய்தனர். ஆனால் பியோதருடன் வேறு சிலரும் இருந்தனர். அவன் முகம் சிவந்துபோய் சிரமப்பட்டு அவளுக்கு முகமன் கூறினான்; ஆனால் அவள் பதில் சொல்லா மலே நடந்து வந்துவிட்டாள். எஞ்சிய தூரம் முழுதும் அவள் தனது சால்வைக்குள் ஆத்திரமாய் விரல்களை மடக்கிக் கைகளை இறுக மூடிக் கொண்டு நடந்தாள். உள்ளுக்குள் அவளுக்குத் தாங்க முடி யாத சீற்றம் — இம்முறை தன் கணவன்மீது மட்டு மல்ல, அந்தக் கூட்டுப் பண்ணைமீதும், கிராம மக்கள்மீதும் — எல்லோர்மீதும், யாவற்றின்மீதும் — அவளுக்குச் சீற்றம். இவர்களால்தான் அவன் தன்னிடம் திரும்பி வர வெட்கப்படுகிறான். எல்

லாக் கஷ்டத்துக்கும் இவர்கள்தான் மூலகாரணம். அவன் தன் சொந்த குடும்பத்தாரைக் காட்டி லும் அந்நியர்களையே உயர்வாகக் கருதுகிருன். இது அவர்களுக்குத் தெரியும். அதனுல்தான் அவனைக் கண்டிப்பதற்குப் பதில் ஆதரிக்கிருர்கள். இது என்ன நியாயம்?

வெண்பனி பெய்தவுடனேயே குளிர்காலம் வந்துவிட்டது. பியோதர் இயந்திர, டிராக்டர் நிலையத்துக்குக் குடி போய் விட்டான்; நெடு நாட்களுக்கு அங்கேயேதான் இருப்பான். இனி அவள் காத்திருப்பதற்கு ஒன்றுமில்லை. விரை வில் குழந்தை பிறந்துவிடும். தன் கதி இப் படியா ஆக வேண்டும்? கன்னியுமல்ல, விதவை யுமல்ல, கைவிடப்பட்ட மனைவியாகக் காலம் தள்ள வேண்டியதாகிவிட்டதே.

சிலான்திய் பெத்ரோவிச் துயரமான மோன நிலையில் இருந்துவந்தார். வழக்கமான அவரது கண்டிப்பும் கடுமையும் மறைந்துவிட்டன. ஸ்தேஷா அழுதபோது அவருக்குரிய முறையில் ஆறுதல் கூறிஞர்: "பரவாயில்லை, அழு. அழுவது நல்லதுதான், மனச் சுமை குறையும்.... உன் வாழ்க்கை உன் முன்னுல் இருக்கிறது. நல்ல காலம் வரும், திடமாய் இரு! எங்களுடனே இரு, நாங் கள் உனக்கு அந்நியமானவர்களல்ல. எப்படி யாவது இந்தத் துன்பத்திலிருந்து மீண்டு வெளி வந்துவிடுவோம்."

அவளுடைய தாய் அவளுடன் சேர்ந்து அழுது நேரத்துக்கு ஒரு விதமாய்ப் பேசி வந்தார். ஒரு

சமயம் இப்படிச் சொல்வார்: ''அவனை நீதி மன்றத்துக்கு இழுத்துச் செல்; நீதிமன்றம் அவனைத் திரும்பிவரச் செய்யும். அவனுக்கு என்ன? — சுலபமாய் ஜீவனும்சம் கட்டிவிடுவான். ஆனால் பணம் நமக்கு நேர்ந்த இழிவை அகற்றவா போகிறது? அப்படித்தான் அவனிடமிருந்து எவ்வளவு பணம் கிடைக்கப் போகிறது? அவன் என்ன சம்பாதித்து விடுகிறான்?'' இன்னொரு சமயம் வேறொரு விதமாய் மகளுக்குப் புத்திமதி சொல்வார்: ''கண்ணே, அவனைப் பற்றி நினைத்து வருந்தாதே. இன்னும் கொஞ்ச காலம் காத்திரு — எப்பொழுதும் போல நீ கவர்ச்சி மிக்கவளாகிவிடுவாய், அன்று அலர்ந்த மலர்களைப் போல எழில் நிறைந்தவளாகிவிடுவாய். இந்த உதவாக்கரைத் தடியனைக் காட்டிலும் எவ்வளவோ சிறப்பான இளைஞன் உனக்குச் சீக்கிரத்தில் கிடைப்பான்—கவலைப்படாதே! அவனை நாம் சும்மா விடப் போவதில்லை. குழந்தைக்காக அவன் பணம் கொடுத்து வந்தாக வேண்டும்.''

ஆனால் ஸ்தேஷா அவள் தந்தைக்கோ தாய்க்கோ ஒருபோதும் தோன்றியிருக்க முடியாத ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். காம்சமோல் இப்பொழுது அவள் நினைவுக்கு வந்தது. இது வரை அது அவளுக்குத் தேவைப்படாததால் அதை அறவே மறந்திருந்தாள், ஆனால் இப்பொழுது அதனை நினைத்துக் கொண்டாள்.

முதலாவது முறையாக வெண்பனி பெய்ததும் அவள் அத்திசையில் போன ஒரு சறுக்கு

வண்டியில் வட்டாரக் காம்சமோல் கமிட்டிக்குப் புறப்பட்டுச் சென்ருள். அவளை வழியனுப்பி வைக்கையில் அவள் தாய் ''வர்வாராவை மறந்துவிடாதே; அவளை நமக்கு எதிராகத் தூண்டியவள் வர்வாராதான் என்று அவர்களிடம் சொல்'' என்ருர். அவளுடைய தந்தை ''சரி, போய் என்ன ஆகிறதென்று பார்த்துவிட்டு வா'' என்று அடித்தொண்டையால் சுருக்கமாய்ச் சொன்ஞர்.

காம்சமோல் செயலாளரின் அலுவலகம் சுத்தமாகவும் வசதியாகவும் இருந்தது. அது மட்டுமல்ல— செயலாளராய்ப் பணியாற்றுகிறவர் ஒரு பெண் என்பதை உள்ளே நுழைந்தவுடனே உணர முடிந்தது; பெண்ணின் கைவன்மையை அங்கிருந்த ஒவ்வொன்றிலும் காண முடிந்தது. சன்னல் மேடையில் இருந்த தொட்டிச் செடிகள் அலுவலகங்களில் காணக்கூடிய வழக்கமான சோனிச் செடிகளல்ல; சிகரெட்டுத் துண்டுகளையே எருவாகக் கொண்டு வளர்ந்தவையல்ல. கொத்துக் கொத்தாய் மலர்கள் பூத்துத் தொங்க, தளதளப்பான இலைகள் தழைத்துப் பிதுங்க, உயரமாய் வளர்ந்து கொழுகொழுவென்றிருந்த செடிகள் அவை. ஸ்டாலினது தொகுப்பு நூல்களுக்கு அடியில் தூய வெள்ளை விரிப்பு தெரிந்தது. முற்றிலும் காரிய நோக்குடன் தயாரிக்கப்பட்ட சோபையற்ற அந்த மசிக்கூட்டுப் பெட்டியின் பக்கத்தில் ஒரு சிறு அலங்காரப் பதுமை நின்றது—

பளபளப்பான கருமணி விழிகளையுடைய பீங்கான் முயல் அது.

செயலாளரான நீனு கிளாசிச்செவா மெல்லிய நீள் விரல்களும் பொசபொசப்பான முடிகளும் புருவங்களுக்கிடையே தெளிவாகத் தெரிந்த ஒரு கோடுமுடையவர். ஸ்தேஷாவை வரவேற்று அவர் ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டினார்.

''தயவு செய்து இப்படி அமருங்கள். என்னால் ஆக வேண்டியது என்ன?''

ஸ்தேஷா தன்னுடைய கதையைச் சொல்லத் தொடங்கினாள். நிலைகுலையாது அமைதியாகப் பேச முயன்றாள், அரும்பாடுபட்டாள்; ஆனால் செயலாளரின் பார்வையில் வெளிப்பட்ட பரிவும் அனுதாபமும் அவளுடைய திடச் சித்தத்தையும் கட்டுப்பாட்டையும் குலைத்துவிட்டன. தாரையாய்க் கண்ணீர் பெருக அவள் விம்மி அழுதுவிட்டாள். உடனே நீனு ஒரு கிளாஸ் தண்ணீர் ஊற்றிக் கொடுத்து இதமாக — ஆனால் அதிகார பந்தாவுடன் — பேசினார்.

''சரி, தொடர்ந்து பேசுங்கள்.''

''என்னுடைய பெற்றோர்களை அவனுக்குப் பிடிக்கவில்லை, ஏனோ என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. உன் வீட்டைவிட்டு வந்துவிடு, அப்பா அம்மாவை மறந்துவிடு, பிறகு நான் உன்னோடு வாழ்வேன் என்றான்.''

''அப்பா அம்மாவை மறந்துவிட வேண்டுமா?... சரி, சொல்லுங்கள்.''

''ஆனால் எனக்குக் குழந்தை பிறக்கப் போ கிறது—இன்னும் சில நாட்களில் பிறந்துவிடும். நீங்களே சொல்லுங்கள் — எப்படி நான் என் வீட்டைவிட்டு வெளியேறி எங்கோ ஒரு ஜாகையில் போய் இருப்பேன்—எங்கள் இருவரிடமும் சொந்த மாக ஒரு சிறு பொருள்கூட கிடையாது.... வெளியே போய் இருந்தால் நான் ஒரு தாதியை வேலைக்கு அமர்த்திக் கொண்டாக வேண்டும். எங்கள் கூட்டுப்பண்ணையின் தலைவர்தான் அவனைத் தூண்டிவிட்டு இப்படியெல்லாம் ஆடும்படிச் செய் தார்—மனைவியைக் கைவிடும்படித் தூண்டினார். அவர் ஏன் இப்படிச் செய்ய வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. பொறுமையா, பொச் செரிப்பா....'' கண்ணீர்த் துளிகளின் வழியே ஸ்தேஷா ஏக்கத்துடன் அந்தப் பீங்கான் முயலை உற்றுப் பார்த்தாள்.

''வெட்கக்கேடு!'' செயலாளரின் மெல்லிய விரல்களிலிருந்த பருத்த பென்சில் பலமாய்க் காகிதத்தில் அழுந்திக் கோடிட்டது.

நீனா கோபப்படாமல் இருப்பது எப்படி? ஒரு பெண்ணல்லவா அவர் உதவியை நாடி வந்திருந் தாள்? பாவம், கொடுந் துயரின் கண்ணீரை அவ ளால் கட்டுபடுத்த முடியவில்லை; முகம் மெலிந்து களங்கப்பட்டிருந்தது; அவளுடைய பருத்த வயிறு தாங்காது அவள் சட்டை கிழிந்துவிடும் போலிருந்தது.... தாயாகப் போகிறவளாயிற்றே! இந்நிலையிலே அவளைக் கைவிட்டு ஓடுவதா? வெட்கக்கேடு! வெட்கக்கேடு!

''என்னிடம் வந்தது நல்லதுதான். அழாதீர்கள், வருத்தப்படாதீர்கள். யாவற்றையும் நாங்கள் ஒழுங்கு செய்துவிடுகிறோம். பியோதர் சொலவேய்க்கோவ்! இயந்திர, டிராக்டர் நிலையத்தின் மிகச் சிறந்த வேலைக்குழுத் தலைவர் ஆயிற்றே! ஆச்சரியமாய் இருக்கிறதே!''

செயலாளர் ஸ்தேஷாவின் முன்கையைப் பிடித்து, உடல்நலமில்லாதவரை அழைத்துச் செல்வதுபோல மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் கதவருகே அவளை அழைத்துச் சென்றார். ஸ்தேஷா இன்னமும் அழுது கொண்டுதான் இருந்தாள். அவள் அழுகைக்குக் காரணம் வருத்தம் மட்டுமல்ல; தன்னைப் பார்த்துப் பரிதாபப்பட ஒருவர் கிடைத்தாரே என்ற எண்ணமும் ஒரு காரணமாகும்; அவர்பால் அவளுக்கு எழுந்த நன்றி உணர்வுங்கூட காரணமாய் இருந்திருக்கலாம்.

''உங்களுக்கு எனது நன்றி, ஆழ்ந்த நன்றி! முதன்முதலாய் எனக்கு அன்பு காட்டி ஆறுதலாய்ப் பேசியவர் நீங்கள்தான். கிராமத்தில் எல்லாரும் நான்தான் குற்றவாளி என்பதுபோல என்னைக் கடுப்புடன் பார்க்கிறார்கள்.''

''வெட்கக்கேடு! இந்தக் காலத்திலும் இது போன்ற ஓர் அநியாயம் நடைபெறுகிறதே! நாங்கள் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வோம், எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம். தோழர் சொலவேய்க்கவா, நீங்கள் கவலைப்படக் கூடாது.''

ஸ்தேஷா வெளியே போனதும், நீனு கிளாசிச் செவா தொலைபேசியிடம் சென்றார்.

''இயந்திர, டிராக்டர் நிலையத்தின் காம்சமோல் செயலாளரைக் கொடுங்கள்!... ஷூரவ்லோவ் தானே பேசுவது? சரி, சொலவேய்க்கோவையும் அழைத்துக் கொண்டு நேரே இங்கு வாருங்கள்! உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்!'' தொலைபேசி ரிசீவரைக் கீழே வைத்துவிட்டு, ''வெட்கக்கேடு!'' என்று உரக்கக் கூறிக் கொண்டார்.

பியோதர் சொலவேய்க்கோவ் காதலைத் துச்சமாக நினைத்துக் காலால் மிதித்ததானது, காம்சமோல் கண்ணோட்டத்தின்படி கொடுங் குற்றமாகுமென நீனு கிளாசிச்செவா கருதினார். இது போதாதென்று, தாயாகப் போகிற மனைவியைப் புறக்கணிப்பது கொடுமையிலும் கொடுமையல்லவா!...

நீனுவே கடந்த இரு ஆண்டுகளாய் குரீல் தீவுகளில் நிறுத்தப்பட்டிருந்த படைகளைச் சேர்ந்த ஒரு லெப்டினண்டுடன் கடிதங்கள் பரிமாறிக்கொண்டு வந்தார். அவருக்குப் புத்தகங்கள் அனுப்பிவந்தார். ஒவ்வொரு புத்தகத்தின் தலைப்புப் பக்கத்திலும் தெளிவான கையெழுத்தில் ஒரு குறிப்பு வரைந்தனுப்பினார். இக்குறிப்புகள் புனிதமான கருத்துக்களை வெளியிட்டன என்றாலும், அடிக்கடி கையாளப்பட்டுச் சப்பிட்டுப் போன மாமூல் வாசகங்களாகவே இருந்தன. எப்பொழுதும் அவர் இந்தக் குறிப்புகளுடன்''வீத்யா, இச்சொற்களை நினைவில்

வைத்துக் கொள்'' என்றொரு வாக்கியத்தைத் தவறாமல் சேர்த்துக் கொள்வது வழக்கம். ஆனால் — பாவம்—சில காலமாய் வீத்யாவின் கடிதங்கள் மிக மிகச் சொற்பமாகிவிட்டன.

18

எல்லாம் சுலபமாகவல்லவா இருந்திருக்க வேண்டும்—ஏன் இந்தக் கஷ்டம்? ரியாஷ்கின் களிடமிருந்து முறித்துக் கொள்வதென ஏற்கனவே அவன் முடிவாகத் தீர்மானித்துவிட்டான்; சிலான்திய் பெத்ரோவிச்சுடனும் அலெவ்தீனா இவானவ்னாவுடனும் ஒரே வீட்டில் தான் வாழ்வது முடியாத காரியம் என்பதை அவன் உணர்ந்து விட்டான்; ஸ்தேஷா தனக்கு ஏற்ற மனைவியல்ல, அவளைப் பற்றி தான் நினைத்திருந்தது தவறாகி விட்டது என்பதை ஐயமறக் கண்டுகொண்டுவிட்டான்—ஆகவே இனி ஏன் தொடர்ந்து அவன் தன்னைத் தானே வருத்திக் கொண்டு துன்புற வேண்டும்? அவர்களிடமிருந்து முறித்துக் கொண்டு வந்துவிட்டான், அதோடு எல்லாம் முடிவுற்று விட்டது. இனி இவை யாவற்றையும் மறக்க வேண்டியதுதானே.

ஆனால் பியோதரால் மறக்க முடியவில்லை.

இரவில் தூக்கமின்றி புரண்டு புரண்டு படுத்துக் கொண்டான். ஒரு சிறு விவரம் பாக்கியில்லாமல் ஸ்தேஷா அவன் கண்முன்னே தெரிந்தாள் — பருத்துப் புடைத்திருந்த அவள் சட்டை, சிவந்து உருமாறியிருந்த அவள் முகம், வெறுப்பால் கறுத்

திருந்த அவள் கண்கள் ஆகிய யாவும் தெரிந்தன. அவன் முகத்தைப் பிறாண்டுவதற்காகத் தன் முன் கைகளை அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள முண்டியடித்து முயன்ற அவள், துவண்டு சரிந்து மண்டியிட்டு உட்கார்ந்ததை நினைத்துக் கொண்டான். எல்லோர் முன்னிலையிலும் அவன் மீது அவள் காரித் துப்பினாள், அவனைப் பார்த்துக் கூச்சல் போட்டாள், திட்டினாள்—இதையெல்லாம் நினைத்துப் பார்த்தபோதும் அவள்மேல் அவனுக்குக் கோபம் வரவில்லை. எப்படி வரும்? அவள் ஒரு மனிதப் பிறவிதானே, இன்பமாய் வாழ வேண்டுமென விரும்பினாள், அவளுக்குக் கிடைத்த இன்பமெல்லாம் கணவனில்லாமல் தனித்து விடப்பட்டதுதான், அதுவும் குழந்தை பிறக்கப் போகும் சமயத்தில்.

அவள்மீது அவனுக்குப் பரிதாபமே ஏற்பட்டது—இந்தப் பரிதாப உணர்ச்சிக்குத் தான் இடமளித்துவிடக் கூடாதென்பது அவனுக்குத் தெரியும். திரும்பிப் போவதா? மூச்சு விடுவதற்குக்கூட பயந்து முகத்தைத் திருப்பிக் கொண்டே வாழ்வதா?... முடியாது! முழுக்குப் போட்டுவிட்டு வந்துவிட்டான்! முறித்துக் கொண்டு வந்துவிட்டான்! அது இறுதியானது.

அப்படியானால் அவன் என்ன செய்யலாம்?

பியோதர் இவ்விடத்தைவிட்டுப் போக விரும்பினான், தன்னை அறியாத வேறொரு இடத்துக்குச் செல்ல விரும்பினான். அங்கே போய் அவனுக்கு ஏற்ற வாழ்வைத் தேடிக் கொள்ளலாம்,

ஸ்தேஷாவுக்குப் பணம் அனுப்பி வரலாம்.... ஆனால் வர்வாரா ஸ்திப்பானவ்னா தன்னை முந்திக் கொண்டு எல்லா இடங்களுக்கும் போய்விட்டார். வட்டார நிர்வாகக் குழுவின் தலைவரே தன்னைக் கூப்பிட்டு அனுப்பிவிட்டார்.

''உன் வேலையை விட்டு விலகவா விரும்பு கிறாய்?'' என்று அவர் கேட்டார். ''என்ன காரணம்?''

''என்ன காரணம்?'' எல்லாரும் இதே கேள்வி யைத்தான் கேட்டனர். ஆனால் அவனால் இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. தன் மனைவியை விட் டுத் தான் ஏன் பிரிய நேர்ந்ததென்பதை விவரிக்க வேண்டியிருக்கும்; தனது சொந்த விவகாரங்களை யெல்லாம் எல்லோருக்கும் முன்னிலையில் போட்டு உடைக்க வேண்டியிருக்கும். ஆகவே தான் விரும் பினாலும் விரும்பாவிட்டாலும் இங்கேயே இருப் பதைத் தவிர வேறு வழியில்லை.

சிழோவும் வர்வாரா ஸ்திப்பானவ்னாவும் பியோ தரின் ஏனைய நண்பர்களும் அவனுடைய மனைவி யைப் பற்றி அவனிடம் பேசுவதேயில்லை. புண் பட்ட மனதைக் கிளறி விடுவானேன்?

பெருந்தொல்லை நெருங்கி வருகிறதென்ற வேதனை மிக்க எண்ணம் மனதை வாட்ட பியோ தர், மெக்கானிக் அர்க்காதிய் ஷுரவ்லோவுடன் வட்டாரக் காம்சமோல் கமிட்டிக்குச் சென்றான்.

நீனா கிளாசிச்செவா முகத்தைச் சுளித்துக் கொண்டு தலையை அசைத்து நாற்காலியைச் சுட்டிக்காட்டினார். வந்தவர்களுடன் உடனே

பேசாமல், அவர்கள் அவரை நன்கு பார்ப்பதற்கும் அவரது மன நிலையைப் புரிந்து கொள்வதற்கும் அவகாசம் கிடைக்கும்படி எதையோ தொடர்ந்து படித்தபடி உட்கார்ந்திருந்தார். முடிவில் கண்களை உயர்த்தி பியோதரைப் பார்த்தார்.

''தோழர் சொலவேய்க்கோவ்!'' என்று தொடங்கி, சிறிது நேரம் மௌனமாயிருந்தார். ''அரை மணி நேரத்துக்கு முன்புதான் உங்கள் மனைவி, இப்பொழுது நீங்கள் இருக்கும் அதே இடத்தில் உட்கார்ந்திருந்தார்.''

கண்டனம் தெரிவிக்கும் கடுமையானதொரு பார்வை. திரும்பவும் சிறிது நேரம் மௌனம். பியோதர் ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்தான், ஆனுல் அவன் முகம் வாடிவிட்டது.

''கணவனுல் புறக்கணிக்கப்பட்டு' விட்டதாகச் சொன்னுர்! குழந்தை பிறக்கப் போகிற நேரத்தில்! கண்ணீரும் கம்பலையுமாய்க் காட்சியளித்தார்! துயரம் பொறுக்கமாட்டாமல் தன்னையும் மீறி அழுதார்!... ஏன், பேசாமல் மௌனமாய் இருக்கிறீர்கள்? என் முகத்தைப் பார்ப்பதற்கு அச்சமாயிருக்கிறதா?''

பியோதர் வாய் திறக்கவில்லை, கண்களையும் உயர்த்தவில்லை, அசையக்கூடவில்லை.

''வெட்கமாகவா இருக்கிறது?... காம்சமோல் உறுப்பினரான உங்களைக் கேட்கிறேன்—இது போன்ற அவக்கேடான முறையில் நீங்கள் நடந்து கொண்டதன் காரணம் என்ன?... இது உங்கள் சொந்த விவகாரம் என்று நினைக்க வேண்டாம்.

குடும்ப வாழ்க்கை பற்றிய பிரச்சினைகள் சமுதாயப் பிரச்சினைகளாகும். நீங்கள் சொல்லக் கூடியது என்ன?... உங்கள் பதிலுக்காகக் காத்திருக்கிறேன்.''

''யாவற்றையும் விளக்கிக் கூறுவதெனில் நெடுநேரம் ஆகும்.''

''உங்கள் மனைவியும் நீங்களும் காலத்துக் கொவ்வாத முறைகளை விட்டொழிப்பதற்கு உதவியாக இருக்குமெனில், பகல் முழுதும், ஏன் இரவு முழுதும் வேண்டுமானாலும் உட்கார்ந்து உங்கள் விளக்கத்தைக் காது கொடுத்துக் கேட்கத் தயாராயிருக்கிறேன்.''

பியோதரின் நெற்றியில் வியர்வைத் துளிகள் தோன்றிவிட்டன. யாவற்றையும் அல்லவா அவன் சொல்லியாக வேண்டும்—இருவரும் சந்தித்தது எப்படி, ஸ்தேஷா தன் உள்ளத்தைக் கவரக் காரணம் என்ன, அவளுடைய அந்த நீல ஆடை, அவள் ஆடையின் கழுத்துக்குள் தெரிந்த அந்த மிருதுவான உட்குழிவுஇவற்றை எல்லாம் அல்லவா சொல்லியாக வேண்டும். இருவரும் எப்படிக் குடும்ப வாழ்க்கையைத் தொடங்கினர் என்பதையும் அடுப்படியிலிருந்து அவள் சிவந்த முகத்துடன் வந்தபோது அவன் இதயத்தில் நிரம்பிய இன்ப உணர்வையும் அல்லவா எடுத்துரைத்தாக வேண்டும். அவளுடைய தந்தையைப் பற்றி, அந்தக் குதிரையைப் பற்றி, அந்த முயலையும் ''எங்களுடைய வெள்ளரியைத் திருடிய'' அந்த வெள்ளாட்டையும் பற்றி எல்லாம் அல்லவா விளக்கி

யாக வேண்டும். யாவற்றையும் அவன் விளக்கிச் சொல்வது எப்படி? மிகவும் முக்கியமானது, யாவற்றுக்கும் மையமானது எது?

''அது நல்ல குடும்பமல்ல'' என்றான்.

''ஏன் அப்படி?''

''அவர்கள் கூட்டுப் பண்ணையின் உறுப்பினர்கள்தான் என்றாலும், அதன்பால் பகைமை கொண்டவர்கள். 'அவர்கள் நம்மைச் சரிவர நடத்தவில்லை, நன்றிகெட்டவர்கள்.... இடுப்பொடிய அவர்களுக்காக நாம் வேலை செய்வதுதான் மிச்சம்' என்று நாள் முழுதும் எந்நேரமும் முணுமுணுப்போருடன் வாழ்வது கடினம். அவர்கள் முணுமுணுப்பது கூட்டுப் பண்ணையைப் பற்றித் தான்....''

''தாயாகப் போகும் மனைவியை இதற்காகக் கைவிட்டு விடுவதா? மனைவியை நீங்கள் திருத்தியிருக்க வேண்டும்! மனைவிக்கு மட்டுமின்றி மனைவியின் பெற்றோர்களுக்கும் போதனை அளித்து எல்லோரையும் நேர் வழிக்குக் கொண்டுவந்திருக்க வேண்டும்! காம்சமோல் உறுப்பினர் ஒருவர் தம் குடும்பத்துக்குக் கிடைத்துவிட்டார் என்பதை உடனே அவர்கள் உணரும்படிச் செய்திருக்க வேண்டும்!''

''சொல்வது சுலபம், செய்வது கடினம். வயதானவர்களைத் தமது மனோபாவத்தை மாற்றிக் கொள்ளச் செய்வது முடியும் காரியமா?'' என்று பியோதர் ஆட்சேபம் செய்தான். ஆனால் மறு கணமே அவன், வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்

திராமல் ஏன் பேசினேம் என்று வருத்தப்பட்டுக் கொண்டான். நீனு கிளாசிச்செவா பலமாக மேஜையைத் தட்டினர்.

''நீங்கள் சொல்ல விரும்புவது இவ்வளவு தானு?... ஒன்றும் செய்வதற்கில்லை என்று கையை விரிப்பதைக் காட்டிலும் மானக்கேடு வேறு எதுவுமில்லை. அவர்களுக்குப் போதமளிப்பதற்கு நீங்கள் முயற்சி செய்தீர்களா? செய்யவில்லை என்றுதான் கூறுவேன்!''

பேசியும் விவாதித்தும் பயனில்லை. சிலான்திய் பெத்ரோவிச் எத்தகையவர் என்பது வர்வாரா ஸ்திப்பானவ்னுவுக்குத் தெரியும், ஆகவே அவர் விளக்கங்கள் எவையுமின்றி பியோதரைப் புரிந்து கொண்டுவிட்டார். இந்த வாய்ப்பேச்சுக்காரரை மு யாஷ்கின்களுடன் வாழ்ந்து பார்க்கும்படி அனுப்ப முடிந்தால் நன்ருயிருக்குமே என்று அவன் நினைத்தான். சிலான்திய் போன்ருேருக்குப் போதமளிப்பதில் எந்த அளவுக்கு அவர் வெற்றி பெற முடியுமென்று பார்க்கட்டுமே.

''ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? சொல்வதற்கு ஒன்றும் இல்லையா? உங்கள் மனைவி காம்சமோலில் இல்லை. இது ஒன்றே போதும், உங்கள் மனைவியிடம் உங்களுக்கு அக்கறை இல்லை என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு. உங்கள் மனைவி எத்தகையவர் என்பதைச் சற்று நேரத்துக்குமுன் நான் நேரில் காண முடிந்தது—ஒளிவுமறைவில்லாத சாதாரணமான பெண்தான் அவர், அசடு இல்லை என்று நிச்சயமாகக் கூறலாம்—இது போன்ற ஒரு

பெண் நல்ல காம்சமோல் உறுப்பினராகிவிட முடியும்.''

''என் மனைவி முன்பு காம்சமோலில்தான் இருந்தாள். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு.... உறுப்பினர் உரிமை தானாகவே ரத்தாகும்படி விட்டு விட்டாள். அப்பொழுது ஏன் வட்டாரக் கமிட்டி அவளைச் சிறந்த காம்சமோல் உறுப்பினராக்கத் தவறியதாம்?''

''அப்படியா?... எனக்கு அது தெரியாது.... ஆனால் வட்டாரக் காம்சமோல் கமிட்டியைக் குறைகூறுவதற்கு நீங்கள் முற்படக் கூடாது. இந்த வட்டாரத்தில் சுமார் ஆயிரம் காம்சமோல் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு தனி உறுப்பினருக்கும் வட்டாரக் கமிட்டி போதமளிப்பது சாத்தியமல்ல. உங்களைப் போன்றவர்கள்தான் இவர்கள் எல்லோருக்கும் நாங்கள் போதமளிப்பதற்குத் துணை புரிய வேண்டும். ஆனால் நீங்கள் எப்படி துணை புரிந்திருக்கிறீர்கள்? குழந்தை பிறக்கப் போகும் சமயத்தில் மனைவியைக் கை விட்டுவிட்டுத் தனியே போய்விட்டீர்கள். துணை புரிவதற்குப் பதில் பெரிய குற்றமே புரிந்திருக்கிறீர்கள்!''

மேற்கொண்டு ஆட்சேபம் தெரிவிக்க பியோதருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. நீனாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தான். நீனா கிளாசிச்சொவா, மாண்புடன் கம்பீரமாய் ஒலிக்கும் ''மனிதன்'' என்னும் சொல்லைப் பற்றி மக்சீம் கோர்க்கிய் கூறியதை

மேற்கோளாகக் குறிப்பிட்டார். நிக்கலாய் ஓஸ்திரோவ்ஸ்கியால் எத்தனை உணர்ச்சித் துடிப்புடன் காதலிக்க முடிந்தது என்பதை எடுத்துரைத்தார். டிசம்பரிஸ்டுகள்* வரைக்கூடச் சென்று, அவர்கள் சைபீரியாவுக்குக் கடத்தப்பட்டு கடுங்காவலில் வைக்கப்பட்டபோது அவர்களது மனைவிமார்கள் மனமுவந்து தாமும் அவர்களுடன்கூடச் சென்றதைச் சுட்டிக்காட்டினார். டிசம்பரிஸ்டு இயக்கத்தைச் சேர்ந்த பிரபுக்குல-ஜனநாயகவாதிகளுக்கும்கூட தமது மனைவிமார்களுக்குப் போதமளிக்கத் தெரிந்திருந்தது என்பதை அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

பியோதருடன் பேசி அடங்கியதும் நீனா, அர்க்காதிய் ஷுரவ்லோவின் பக்கம் திரும்பினார். இது வரை அவர் இருந்த இடம் தெரியாமல் ஒரு மூலையில் ஒடுங்கியிருந்தார்.

''இயந்திர, டிராக்டர் நிலையத்தின் காம்சமோல் நிறுவனத்தினுடைய செயலாளர் நீங்கள். உங்களுக்குக் கண் தெரியாமலா போய்விட்டது? காம்சமோல் உறுப்பினர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று தெரிந்து கொள்வது உங்கள் கடமையா, இல்லையா? வட்டாரக் கமிட்டியிடம் நீங்கள்

---

* **டிசம்பரிஸ்டுகள்** என்போர் பண்ணையடிமை முறையையும் எதேச்சாதிகாரத்தையும் எதிர்த்துப் போராடிய புரட்சிகர ருஷ்யப் பிரபுக் குலத்தவர்கள். இவர்களுடைய கலகம் 1825 டிசம்பர் 14ல் நடைபெற்றது.

இது பற்றி ஒன்றும் சொல்லாதிருந்தது ஏன்?''

பருத்த உருவமும் அன்பு உள்ளமும் கொண்ட அர்க்காதிய் ஷுரவ்லோவ் டிராக்டர் டிரைவர்களிடமிருந்து பியோதரின் வீட்டுத் தொல்லைகளைப் பற்றி நிறையக் கேட்டிருந்தார். ஆனால் அவர் பேச முடியாமல் வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தார். நீனாவின் சொற்பெருக்கு—முக்கியமாய், புகழ் மிக்கோரிடமிருந்து நீனா எடுத்துரைத்த அந்த மேற்கோள்கள்—அவரைக் கல்லாய்ச் சமைமயச் செய்துவிட்டன. நீனாவுடன் அவர் வாதாடுவது எப்படி? புயல் அடித்து ஓயட்டுமெனக் காத்திருப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை.

''சரி, இனி ஆகவேண்டியதைப் பார்க்கலாம்!'' அந்த மேஜையின் மீது போடப்பட்டிருந்த கண்ணாடியின் மேல் நீனா தனது மெல்லிய உள்ளங்கையால் தட்டினார். சம்பாஷணை முடிந்து விட்டதென்பதன் அறிகுறி அது. ''காம்சமோல் உறுப்பினருக்கு ஒவ்வாத செயல் ஒன்று வெளிச்சத்துக்கு வந்துள்ளது! செயற்குழுக் கூட்டத்தில் இதை நாங்கள் விவாதித்து முடிவெடுப்போம். தோழர் சொலவேய்க்கோவ், உங்களுக்குப் பத்து நாள் அவகாசம் தருகிறேன். இந்தக் கூட்டத்துக்கு முன்னால் உங்கள் செயலைப்பற்றி ஆழமாய்ச் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன்!''

இயந்திர, டிராக்டர் நிலையத்துக்கு அருகே பியோதர் வாடகைக்கு எடுத்திருந்த சிறிய அறைக்கு அவன் தனியே திரும்பி வந்தான்.

வட்டாரக் கமிட்டியின் அலுவலகத்துக்கு வெளியே ஷுரவ்லோவ் பார்வையை அவனிடமிருந்து வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, ''விவகாரம் போகிற போக்கைப் பார்த்தால், நன்றாய் இல்லையே; மோசமான திருப்பமாயல்லவா இருக்கும் போலிருக்கிறது?'' என்று கூறி அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

ஆம், நன்றாய் இல்லைதான். பியோதர் பல ஆண்டுகளாய்க் காம்சமோலில் இருந்து வந்தான். அவனுக்கு இருபத்தைந்து வயதாகியது; கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. இதுவரை அவன் கண்டிக்கப்பட்டதில்லை, அவன் வேலைகள் போற்றப்பட்டே வந்திருந்தன. காம்சமோல் அவனுக்கிட்ட பணிகளைக் குற்றங்குறையின்றி நிறைவேற்றி வந்திருந்தான். ஆனால் இப்பொழுது சோதனை வந்ததும் அவன் மோசமான காம்சமோல் உறுப்பினன் என்றல்லவா பெயரெடுத்து விடுவான் போலிருக்கிறது? அவன் மோசமான உறுப்பினன் என்பது ஒருவேளை மெய்தானோ? ஆனால் அவன் எவ்வாறு நடந்து கொண்டிருக்க வேண்டும்? அவர்களைத் திருத்தியிருக்க வேண்டும், அவர்களுக்குப் போதமளித்திருக்க வேண்டும் என்றார்.... மொத்தத்தில் அவர் நிரம்பப் பேசினார், பழங் காலத்துக்குக்கூட சென்று டிசம்பரிஸ்டுகளைப் பற்றி எல்லாம் சொன்னார். ஆனால் எப்படி போதமளிப்பது, அவர்களை எப்படித் திருத்துவது என்பது குறித்து அவர் ஒன்றுமே சொல்லவில்லை. போதமளியுங்கள்,

போதமளியுங்கள் — • அதற்குமேல் ஒன்றும் சொல்லவில்லை!

கூட்டம் நடைபெறும். யாவற்றையும் விவாதிப்பார்கள். வட்டாரம் பூராவும் இதைப் பற்றி பேச்சு அடிபடும். எல்லாம் முடிவடைந்துவிட்டதாக அல்லவா நினைத்திருந்தான். எவ்வளவோ துன்பப்பட்டான், சகித்திருந்து பார்த்தான், முடிவில் இந்தக் கொடுமைக்கு ஒரு முடிவு தேடிக் கொண்டான்—ஆனால் யாவற்றையும்விட கடுமையான சோதனை இனிமேல்தான் வரப் போகிறது என்றல்லவா தெரிகிறது? மோசமான திருப்பம் தான், இதைவிடவும் மோசமாயிருக்க முடியாதே.

குளிர்கால முன்னிருட்டு வீடுகள் மீதும் கொல்லைகள்மீதும் கவிழ்ந்து கொண்டிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் வெண்பனித் திவலைகள் மிதந்து வந்தன. யாவும் வெறிச்சோடிப் போய் நிசப்தத்தில் மூழ்கியிருந்தன. சன்னல்களில் விளக்குகளின் ஒளி தெரிந்தது—ஒவ்வொரு விளக்கும் ஒரு குடும்பத்தைக் குறித்தது. அவரவருக்கும் தனக்கென ஒரு குடும்பமும் தனக்கென ஓர் இல்லமும் இருந்தன. ஆனால், பியோதரே, உனக்கு இருப்பது—உன்னுடைய பிரம்மச்சாரி அறைதான். விரிப்பின்றி நிற்கும் அந்த மேஜை மீதுள்ள ரேடியோப் பெட்டியும் ஒரு மூலையில் கிடக்கும் படுக்கையும்தான்.... இருபத்தைந்து வயதானவனுங்கூட சில நேரங்களில், கேட்பாரற்று நடுத் தெருவில் விடப்பட்ட சிறு குழந்தை போல தவிக்க நேர்கிறது.

19

ஒரு மாதமாய் ஸ்தேஷா வீட்டிலிருந்து வெளியே அனேகமாய் காலெடுத்து வைக்கவில்லை. இதற்கு முன்பாவது அவள் வெண்ணெய் ஆலைக்குப் போய்வர வேண்டியிருந்தது. இப்பொழுது பேறுக்கால விடுமுறை பெற்று வீட்டிலே இருந்தாள். அவள் கண்ணுற்றது சுற்றிலுமிருந்த நான்கு சுவர்கள்தான். சன்னல் கண்ணாடியில் படிந்து கோலமிட்டிருந்த உறைபனி, சன்னலுக்கு வெளியே இருந்த அந்தச் சிறிய முற்றத்தையும் கூட இப்பொழுது அவள் கண்ணுக்குத் தெரியாதபடி தடுத்துவிட்டது. காலையிலிருந்து இரவு வரை அவளுடைய வேதனை மிக்க சிந்தனைகள் அவளை நச்சரித்துப் பிடுங்கித் தின்றன. எத்தனையோ முறை திரும்பத் திரும்ப யாவற்றையும் சிந்தித்தாகி விட்டது. தன்னைத் தானே சித்திரவதை செய்து கொள்வதைத் தவிர அவள் புதிதாகச் சிந்திப்பதற்கு ஒன்றுமில்லை. ஒவ்வொரு நாளும் பொழுது விடிந்ததும் இதே சோகக் கதைதான்.... நாள் தவறாமல், முடிவின்றி, நிவாரணமின்றி இதே கதைதான்.... நாளையுங்கூட இப்படியேதான் இருக்கும்.

ஆனால் இன்று அவள் சென்றுவந்த பயணத்தின் நினைவு அவளுடைய மனத்துள் இருந்தது—கடுந் திருப்பங்களில் சாய்ந்தாடிய அந்தச் சறுக்கு வண்டி, கடுங்குளிர்க் காற்றிலே அவ்வண்டியின் உலர்ந்த புல்லிலிருந்து எழுந்த வாடை, வெண்

பனியில் ஆழப் புதைந்திருந்த பிர் மரத் தோப்புகள், வட்டாரக் காம்சமோல் செயலாளரின் அன்பு கனிந்த பார்வை, அனுதாபத்தோடு ஒலித்த அவர் குரல்.... ஸ்தேஷா புதுத் தெம்பு பெற்று வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.

தரை முழுதும் சிராயும் மரச் செதிள்களும் குவிந்திருந்தன. பாதியளவு பூர்த்தியான ஒரு பெரிய சறுக்கு வண்டி அறையின் நடுவில் நின்றது. அதிலிருந்து வீசிய காட்டுச் செர்ரியின் நெடி மூக்கைத் துளைத்தது. அவள் தந்தை ஒரு கோடரியைத் தூக்கிப் பிடித்து அதன் முனையைத் தீட்டிக் கொண்டிருந்தார். சறுக்கு வண்டிகள் செய்வதில் அவர் கைதேர்ந்தவர். ஆனால் எப்பொழுதாவது தான் செய்வார். நெடுந்தொலைவிலுள்ள கூட்டுப் பண்ணைகளிலிருந்து வருவோருக்கே அவற்றை விற்பார். வெளியே சென்று அனுவசியமாய்ப் பேச்சைப் பரப்ப வேண்டாமென்று அவர்களை எச்சரித்து அனுப்புவார். இல்லையேல் பண்ணையில் தனக்கு இவ்வேலையை அளிக்கலாமென்ற எண்ணம் வர்வாராவுக்கு உதித்துவிடும். தான் சறுக்கு வண்டிகள் செய்து கொடுக்க, கூட்டுப் பண்ணை அவற்றை விற்பனை செய்யும்; முடிவில் வேலைநாள் அளவைக்ளில் கிடைக்கும் ஊதியத்துடன் தான் திருப்தியடைய வேண்டியதாகிவிடும். இதை விட லாபகரமான சிறந்த வழியை சிலான்திய் தெரிந்து வைத்திருந்தார்.

உள்ளே வந்த தன் மகளைக் கிழவர் ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டுப் பேசாமலே தொடர்ந்து

வேலையில் ஈடுபட்டார். அவருடைய கூர்மையான கோடரி முனையிலிருந்து மெல்லியச் சிராய்த் தூள் பொலபொலவென உதிர்ந்தன.

ஆனால் அவள் தாய் உடனே சரமாரியாகக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்.

''கண்ணே, என்ன ஆயிற்று? அவர்கள் என்ன சொன்னார்கள்?''

ஸ்தேஷா தனது சால்வையைத் தளர்த்தி விட்டுக்கொண்டுகோட்டைக் கழற்றாமலே பெஞ்சு மீது உட்கார்ந்தாள். நம்பிக்கை ஆர்வத்துடன் துடித்த குரலில் அவள் நடந்ததை நடந்தபடிக் கூறத் தொடங்கினாள். செயலாளர் அவளை எப்படி வரவேற்றார், எப்படி அன்பாகப் பேசினார், கையைப் பிடித்து எப்படி வாயிற்படிக்கு அழைத்து வந்தார் என்பதை எல்லாம் விவரமாய்க் கூறினாள்.

அலெவ்தீனா இவானவ்னா குறுக்கிட்டு வெற்றி முழக்கமிட்டார். ''பயலுக்கு நல்லா சூடு போடுவார்கள்! பாடம் கற்பிப்பார்கள்! நல்லா வேண்டும்!''

''எல்லாம் வெற்றுப் பேச்சு'' என்று சிலான்திய் பெத்ரோவிச் வெடுக்கெனக் கூறினார். ''ஏதோ பெரிதாக நடந்துவிடப் போவதாக நினைத்து ஏமாறுகிறீர்கள். இவர்கள் எல்லோருமே ஒரே அச்சிலிருந்து வார்க்கப்பட்டவர்கள்தான்.''

ஸ்தேஷாவுக்கு அவள் தந்தையின் பேச்சு முறையின்மீது — அவளுடைய வாழ்க்கையில் முதன்முதலாய் எனலாம் — வெறுப்புணர்ச்சி

ஏற்பட்டது. ஏன் அவள் தந்தையின்மீதுகூட— அவருடைய கூனிய தோள்கள், அவர் நெற்றியில் ஒட்டிக் கொண்டிருந்த நரை முடிகள், சோகம் தோய்ந்த அவர் முகம், கோடரித் தலையைப் பிடித்துக் கொண்டிருந்த அவரது கணுவிழுந்த முரட்டுக் கரங்கள்.... யாவற்றின்மீதும் அவளுக்கு அருவருப்பு உண்டாகியது. இவர் ஏன் இப்படிப் பேச வேண்டும்? எப்பொழுதுமே இப்படித்தான் —எதைப் பற்றியும் யாரைப் பற்றியும் மோசமாகத்தான் நினைப்பார். உலகில் நல்லவர்களும் தான் இருக்கிறார்கள்! எத்தனையோ பேர் இருக்கிறார்களே!

''எல்லாமே வெற்றுப் பேச்சு என்று சொல்வதற்கில்லை. ஒருவேளை அவர்கள் அவனுக்குப் பாடம் கற்பித்தாலும் கற்பிக்கலாமே'' என்று அவள் தாய் சந்தேகம் தொனிக்கும் குரலில் சொன்னார்.

''சரி, பாடம் கற்பிப்பதாகவே வைத்துக் கொள்வோம். அவனைச் சந்திக்கு இழுக்கிறார்கள், ஏதேனும் தண்டனை அளிக்கிறார்கள் என்று கூட வைத்துக் கொள்வோம்—அதனால் நமது ஸ்தேஷாவுக்கு என்ன லாபம்?''

அலெவ்தீனா இவானவ்னா ஒன்றும் சொல்லவில்லை. ஸ்தேஷாவுங்கூட மௌனமாகிவிட்டாள். அவள் வீட்டுக்குத் திரும்புகையில் அவள் மனதில் ஒளிவிட்ட அந்தச் சிறு இன்பச் சுடர் அணைந்துவிட்டது.

"''பத்து நாள் அவகாசம் தருகிறேன். உங்கள் செயலைப்பற்றி ஆழமாய்ச் சிந்தித்துப் பார்க்கும் படி வேண்டுகிறேன்.'' தேவையற்ற வேண்டு கோள்.... எப்பொழுதாவதுதான், வேலையிலே மெய்மறந்துவிடும் போதுதான் அவனால் மறக்க முடிந்தது. மற்றபடி காலையிலிருந்து இரவு வரை அவன் ஓயாமல் சிந்தித்துக் கொண்டுதான் இருந் தான்; ஆனால் பயனில்லை, எவ்வழியும் இருப்ப தாகத் தெரியவில்லை.

கால் ஆண்டுக்கான கலாசார நடவடிக்கைத் திட்டத்தைப் பற்றிய விவாதத்துடன் கூட்டம் ஆரம்பமாகியது. பிறகு வேறு விவகாரங்களைப் பரிசீலனை செய்தனர். இந்நேரம் முழுதும் பியோ தர் தனியே உட்கார்ந்து பொறுக்க முடியாத வேதனையுடன் காத்திருந்தான். இப்படிச் சித்திர வதை செய்யாமல் சீக்கிரமாய் முடிக்க மாட்டார் களா....

முடிவில் நீனு கிளாசிச்செவா தனது காரியார்த்த முகபாவனையைக் கண்டிப்பும் கடுமையுமிக்க தாக மாற்றிக் கொண்டு அறிவித்தார்: ''இனி பியோதர் சொலவேய்க்கோவின் விவகாரத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வோம்.''

எல்லோருடைய முகமும் அதே பாவனையைப் பெற்றுவிட்டது. இந்த வட்டாரத்திலேயே மிகப் பெரியதான ''நேர்வழிக்'' கூட்டுப் பண்ணையின் காம்சமோல் கிளையினது செயலாளரான ஸ்தி யோப்பா ருக்கவ்கோவ் மட்டும்தான் பியோத ரின் பக்கம் திரும்பிப் பார்த்தார்; அவர் பார்வை

கண்டிப்பதாகவே இருந்ததென்றாலும் அதில் குறும்புத்தனமான ஒளி பளிச்சிட்டது; "என் னப்பா, உன்னையும் செயற்குழுக் கூட்டத்தின் முன்னால் கொண்டு வந்து நிறுத்திவிட்டார்களா?" என்று கூறுவது போலிருந்தது அந்தப் பார்வை. உயர்நிலைப் பள்ளியின் பௌதிக ஆசிரியரான லெவ் சஹாரவிச்—அவருடைய நீண்ட நேர் முடிகள் அவர் கன்னத்திலே சரிந்து விழுந்தன—மூக்குக் கண்ணாடியின் வழியே தரையை உற்றுப் பார்த்த படி உட்கார்ந்திருந்தார்.

"சில நாட்களுக்கு முன்பு சொலவேய்க்கோ வின் மனைவி என்னிடம் வந்திருந்தார்...." ஒரே சீரான குரலில் நீனா தனது உரையை நிகழ்த்தினார். "எப்பக்கமும் சாயாமல் நடுநிலையிலிருந்து பேசு கிறேன், உண்மைகளை உங்களுக்கு எடுத்துரைக் கிறேன்" என்ற தோரணையில் இருந்தது அவர் குரல்.

அவருடைய குரலின் தொனியைக் கேட்டதும் எல்லோரது முகமும் மேலும் கடுமையாகிவிட்டது. வட்டார விவசாய அலுவலகத்தின் கால்நடை நிபுணரான ஈரச்கா மஸ்க்வினாவால் பொறுக்க முடியவில்லை.

"மானக்கேடு!" என்றார்.

நீனா உண்மை விவரங்களைக் கூறும் காரிய வாதக் குரலில் ஸ்தேஷாவின் தோற்றத்தையும், அழுது சிவந்திருந்த அவள் கண்களையும், உணர்ச்சி மேலிட்டு கரகரத்த குரலையும் விவரித்தார். அவள் கருக்கொண்டபின் எத்தனை மாதங்களில்

பியோதர் அவளை விட்டுப் பிரிந்தான் என்பதைக் குறிப்பிட்டார்.

''சுருக்கமாய் இதுவே இந்த விவகாரத்தின் சாரம்'' என்று கூறி முடித்ததும், பியோதரின் பக்கம் திரும்பி ''தோழர் சொலவேய்க்கோவ், செயற்குழுக் கூட்டத்துக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?''

பியோதர் எழுந்து நின்றான்.

விவகாரத்தின் சாரமா? இரு வேறு நிலைகளிலிருந்து இந்த விவகாரத்தை எடுத்துரைக்கலாமே —ஒன்று தன்னுடைய நிலை, மற்றொன்று ஸ்தேஷா, அவள் தந்தை, அவள் தாய் இம்மூவரது நிலை. இம்மூவரது நிலையிலிருந்து மட்டும்தானே நீனா இந்த விவகாரத்தை எடுத்துரைத்தார்.

தனது பூட்சுகளை உற்றுப் பார்த்தபடி அவன் நின்றான்.... சாத்தியமல்ல, யாவற்றையும் தெளிவாக இங்கு எடுத்துரைப்பது சாத்தியமல்ல. ஸ்தேஷாவின் நிலையைப் புரிந்துகொள்வது சுலபம், கண்ணெதிரே தெரியும் நிலை அது.

''நீங்கள் என்னைச் சிந்தித்துப் பார்க்கும்படிச் சொன்னீர்கள்'' என்று அவன் நீனாவின் பக்கம் திரும்பி உற்சாகமில்லாத குரலில் மெள்ளக் கூறினான். ''நான் எவ்வளவோ சிந்தித்துப் பார்த்து விட்டேன்.... என்னால் திரும்பவும் அந்த வீட்டுக்குப் போக முடியாது. அவர்களுக்குப் போதமளித்துத் திருத்துவது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. ஸ்தேஷா என்னிடம் வந்து வாழட்டும், அப்பொழுது வேண்டுமானால் நான் அவளுக்

குப் போதமளிக்க முயற்சி செய்யலாம். வேறென்றும் எனக்குத் தோன்றவில்லை.... நான் திறந்த மனத்துடன் பேசுகிறேன்.'' அவன் மௌனமாகி விட்டான், யாரையும் பார்க்காமலே பெருமூச்செறிந்தபடி உட்கார்ந்து கொண்டான். ''நான் சொல்லக் கூடியது இவ்வளவுதான்.'' திரும்பவும் நாற்காலியில் கூனிக் குறுகிக் கொண்டு விட்டான்.

''நான் ஒரு வார்த்தை சொல்லலாமா?'' பியோதர் பக்கம் திரும்பி எரித்துவிடுவதுபோல அவனைப் பார்த்தபடி ஸ்தியோப்பா ருக்கவ்கோவ் கேட்டார். ''உன்னை ஓர் இன்னல் எதிர்நோக்கியது. அதை நீ எப்படிச் சமாளித்தாய்? கதவை இழுத்து மூடிக்கொண்டு ஓடிவிட்டாய்! காம்சமோல் உறுப்பினர் ஒருவர் செய்யக்கூடிய காரியமா இது? இல்லை! அவமானகரமான நடத்தையாகும்!... ஆனால், தோழர்களே....''

நீனா கிளாசிச்செவா உடனே காதைத் தீட்டிக் கொண்டு கேட்கத் தலைப்பட்டார். ஸ்தியோப்பாவை நீனா நன்கு அறிவார். ஒருவரின் நல்ல இயல்புகளை அவர் வரிசையாய் எடுத்துரைத்துப் புகழ்பாடித் தனது பேச்சைத் தொடங்கினாரானால், நிச்சயமாய் மிகக் கடுமையான கண்டனத்துடன்தான் பேச்சை முடிப்பார். இதற்குப் பதில், ஆவேச முழக்கத்துடன் ஆரம்பித்தாரானால், குற்றங் காணவோ கண்டனம் செய்யவோ இடமில்லை என்பதாகவே கூறி முடிப்பார். இரு சந்தர்ப்பங்களிலும் ''ஆனால், தோழர்களே....'' என்ற இரு

சொற்கள்தான் இணைப்புப் பாலமாக அமைந்து விடும்.

இம்முறை ஸ்தியோப்பா ஆவேச முழக்கத்துடன் தொடங்கினர்; நீனு உடனே எச்சரிக்கையாகிவிட்டார்.

''ஆனால், தோழர்களே!... பியோதர் சொலவேய்க்கோவின் மனைவி முன்பு காம்சமோல் உறுப்பினராக இருந்தார் என்பதைக் கேட்டோம். பிற்பாடு விலகிச் சென்று விட்டார்! இதற்கு யார் பொறுப்பாளி? வட்டாரக் கமிட்டியும், காம்சமோலின் முதிய உறுப்பினர்களான நாமும், எல்லோருக்கும் முதலாய் சொலவேய்க்கோவின் மனைவியும்தான்!''

ஸ்தியோப்பா ருக்கவ்கோவ் உருவத்தில் சிறியவர்,சென்னிற முடிகளுடையவர்,முகத்தில் புள்ளிகள் விழுந்தவர். ஆனால் கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த பெண்களில் பலரும் அவர்களது செயலாளரின் கவனத்தைக் கவர விரும்பினர். நடை,உடை, பாவனையில் அவர் கம்பீரமாய் இருப்பார்; கைகளை வீசி தனது சொற்களுக்கு வலிவு தேடி அழுத்தம் திருத்தமாய், பசு மரத்தில் ஆணி அறைவது போலப் பேசுவார்.

''குற்றம் அனைத்தையும் நாம் சொலவேய்க்கோவின் தலையில் போடக் கூடாது. ஆனால் இங்கு இதுவேதான் செய்யப்படுகிறது—எல்லாக் குற்றமும் ஒன்றுதிரட்டப்பட்டு ஒரு பெரும் குவியலாய் அவன் தலையில் சுமத்தப்படுகிறது!... குற்றத்தில் அவனுக்கும் பங்கு உண்டு—உண்மைதான்,

மறுக்கவில்லை! ஆனால் அவன்மீது அப்படி ஒன்றும் அதிகமாய்க் குற்றங்கூற முடியாது. ஆகவே எச்சரித்தாலே போதும் என்று நான் முன்மொழிகிறேன்.''

''மனைவியைப் புறக்கணித்துக் கைவிட்டிருக்கிறார்! அதிகமாய்க் குற்றங்கூற முடியாது என்கிறாயே! எச்சரித்தால் போதுமா? அவர் செய்த குற்றத்தைப் பார்க்காததுபோல இருந்துவிட வேண்டுமென்பதே இதன் பொருள். வேறு எவ்வகையில் இதனைப் புரிந்துகொள்வது?'' நீனா கிளாசிச்செவாவுக்கு வந்த கோபத்தில் அவர் எழுந்து நின்றுவிட்டார்.

''அவரை நாம் காம்சமோலிலிருந்து விலக்கிவிட வேண்டும், அதுவுங்கூட போதுமான தண்டனையாகாது!'' என்று ஈரச்கா மஸ்கினா இடையில் புகுந்து ஒரு போடு போட்டார். சங்கடமான நிலைமையாதலால் அவருக்கு முகம் சிவந்துவிட்டது. கூட்டத்துக்கு வந்திருந்த செயற்குழு உறுப்பினர்களில் அவரே வயதில் சிறியவர். நீனாவுக்குப் பிடிக்காதவாறு எதாவது சொல்விடப் போகிறேமோ என்று எந்நேரமும் அவருக்கு பயம்.

வாக்குவாதம் எழுந்தது—பியோதரைக் கடுமையாகவோ, சாதாரணமாகவோ கண்டிப்பதா, அல்லது எச்சரிக்கை மட்டும் போதுமா? பியோதர் இந்த வாக்குவாதத்தில் சிரத்தை கொள்ளாமல் அவனுடைய நாற்காலியில் ஒண்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

''பிரதான விஷயத்தை விட்டுவிட்டு எதையோ விவாதித்துக் கொண்டிருக்கிறோம்!''—விவாதத்தில் ஈடுபட்டிருந்தோரைத் தனது மூக்குக்கண்ணாடி வழியே கோபமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த லெவ் சஹாரவிச் கூறினார்.''பியோதரை நாம் கண்டிக்கலாம், தீர்மானத்தைக் காகிதத்தில் குறித்துக் கொண்டுவிடலாம். இது மிகவும் சுலபமே. ஆனால் அவர் மனைவி துன்பப் படுகிறார்; அவருங்கூடத்தான் துன்பப்படுகிறார்—அவரைப் பாருங்களேன்! காகிதத்தையும் மசியையும் கொண்டு எல்லாக் கோளாறுகளையும் குணப் படுத்த விரும்புகிறோம்.''

நெற்றியிலிருந்து முடிகளைப் பின்புறம் தள்ளி விட்டுக் கொண்டு அவர் மெதுவாகவும் அமைதியாகவும் பேசினார். அமைதியான சுவாபமுடையவர், கூட்டங்களில் எப்பொழுதாவதுதான் பேசுவார். ஆனால் அவர் பேசுவதை எல்லோரும் கவனமாய்க் கேட்பார்கள். ஏனெனில் ஏனையோர் நினைத்துப் பார்க்காத பலவற்றையும் அவர் எடுத்துரைப்பார். தவிரவும் மற்றவர்களைக் காட்டிலும் அவர் அதிகம் தெரிந்தவர், அவருடைய கல்வியறிவை யாவரும் மதித்துப் போற்றினர்.

''இன்று நாம் கூடியது எதற்காக? கண்டிப்பதற்கு மட்டும்தானா? நம்மையொத்த ஒருவருக்கு உதவுவதற்காக இங்கு நாம் வந்தோம்.''

''ஆம், அது உண்மை—உதவுவதற்காகத் தான் வந்தோம்!'' என்றார் நீனா, உற்சாகத்துடன்.

''எப்படி உதவுவது என்பதுதான் கேள்வி'' என்ருர் லெவ் சஹாரவிச். ''அதுதான் கேள்வி. என்னைப் பொறுத்தவரை, எப்படி உதவுவதென்பது எனக்குத் தெரியவில்லை.''

''தோழர் சொலவேய்க்கோவ்'' என்று கூறி பியோதரைப் பார்த்தார் நீளு. ''நீங்கள்தான் சொல்ல வேண்டும்—உங்களுக்கு வேண்டிய உதவி என்ன? சொல்லுங்கள், நாங்கள் அதை உங்களுக்கு அளித்திடுகிருேம்.''

உதவியா?... என்ன சொல்வதென்று புரியாமல் பியோதர் சுற்றிலும் பார்த்தான். என்ன உதவி அளிக்க முடியும்? ஸ்தேஷாவை அவளுடைய பெற்ருேர்களிடமிருந்து விலகி வரச் செய்ய முடியுமா? வட்டாரக் கமிட்டி அவளைப் பெற்ருேர்களது வீட்டை விட்டு வந்துவிடும்படி உத்தரவிட முடியாது. அப்படியே அது உத்தரவிட்டாலுங்கூட, அவள் அதற்குப் பணியப் போவதில்லை.

''எனக்குத் தெரியவில்லையே'' என்று அவன் சோர்வுடன் பதிலளித்தான்.

எல்லோரும் மௌனமாயிருந்தனர். நீளு அதிருப்தியடைந்தவராய் பியோதரிடமிருந்து பார்வையைத் திருப்பிக் கொண்டார். இப்பொழுதும் கூட திடச்சித்தம் இல்லாமலிருக்கிருனே.

''அவருக்கு எப்படி உதவி செய்வதென்பது நமக்குத் தெரியவில்லை'' என்று லெவ் சஹாரவிச் தொடர்ந்து பேசினுர். ''நமக்குத் தெரியவில்லையாதலால், கண்டிப்பது பற்றிய இந்த வாக்குவாதம் அனைத்தும் அர்த்தமற்றதாகும்.''

''அப்படியென்ருல், சொலவேய்க்கோவின் நடத்தை கண்டிக்கப்பட வேண்டியதல்லவா?'' கோபத்தின் கொதிப்புடன் ஒலித்தது நீருவின் குரல். லெவ் சஹாரவிச் தனது தோள்களை உலுக்கிக் கொண்டார்.

''நாம் அவரைக் கண்டிப்பதாக வைத்துக் கொள்வோம்—அதனுல் நிலைமையில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுவிட முடியுமா! எல்லாம் எப்பொழுதும் போலவேதான் இருக்கும்.''

நீரு ஆவேசமாகப் பேசத் தொடங்கினுர். வட்டாரக் கமிட்டியின் செயற்குழுவுக்குள்ள பொறுப்புகளை லெவ் சஹாரவிச் சரிவர புரிந்து கொள்ளவில்லை என்று நீரு கூறினுர். சொல வேய்க்கோவை நாம் கண்டித்தோமாருல் அது ஏனையோருக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கும்.... அவர் நெடுநேரம் பேசினுர். வழக்கம்போல் இலக்கியத்திலிருந்தும் பெரியார்களது வாழ்க்கையிலிருந்தும் உதாரணங்கள் குறிப்பிட்டார். அவர் பேசி முடித்ததும் திரும்பவும் வாக்குவாதம் நடைபெற்றது—எச்சரிப்பதா, அல்லது கண்டிப்பதா என்று. லெவ் சஹாரவிச் கடுப்புடன் மௌனமாய் உட்கார்ந்திருந்தார். இறுதியில் கண்டிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தெருவில் ஸ்தியோப்பா ருக்கவ்கோவ் வேகமாய் நடந்து பியோதரை வந்தடைந்தார். எடுப்பான ஆட்டுத்தோல் கோட்டும் ஆட்டுத்தோல் தொப்பியும் அணிந்து மிகவும் எடுப்பான தோற்ற

முடையவராய் விளங்கினர். அவருடைய கூட்டுப் பண்ணையில் அவரே மிகவும் மிடுக்கான இளைஞர் என்று கருதப்பட்டதில் வியப்பில்லை.

''அந்த ஆசிரியர் மட்டும் தலையிடாமல் இருந்திருந்தால் நாங்கள் உன்னைத் தப்பிக்க வைத்திருப்போம்'' என்று ஸ்தியோப்பா அத்யந்த நண்பனுக்குரிய குரலில் கூறினர். ''அவர் கல்வியறிவுடையவர், நல்ல உள்ளம் கொண்டவர் என்பது மெய்தான் — ஆனல் சாமர்த்தியம் போதாது.''

வட்டாரக் காம்சமோல் கமிட்டியில் சாமர்த்தியமானவர் யாரேனும் உண்டெனில் அது ஸ்தியோப்பாவேதான் என்று அவர் உறுதியாக நம்பியதைப் பெருமிதம் குடிகொண்ட அவரது முக பாவனையிலிருந்தே ஊகித்துக் கொண்டுவிடலாம்.

பியோதர் தோள்களை உலுக்கிக் கொண்டான்.

''கண்டனமானல் என்ன, எச்சரிக்கையானல் என்ன—எல்லாம் ஒன்றுதான்; இதனல் என்னுடைய விவகாரம் எவ்வகையிலும் எளிதாகிவிடவில்லை. இன்று நீங்கள் எல்லோரும் நிறையப் பேசினீர்கள், ஆனல் நாளைக்கே யாவற்றையும் மறந்துவிடப் போகிறீர்கள். பிறத்தியார் கஷ்டங்களைச் சகித்துக் கொள்வது ரொம்ப சுலபம்.''

ஸ்தியோப்பா வியப்புற்றவராய் சீழ்க்கையடித்துக் கொண்டார். ''இதை நீ இப்படியா எடுத்துக் கொள்கிருய்? அது சரியல்ல, தம்பி!''

20

ஒரு நாள், இயந்திர, டிராக்டர் நிலையத்தில் பியோதர் மாலை நெடுநேரம் வரை இருந்துவிட்டான்—வேலை மிகுதியாய் இருந்ததால் அல்ல, துயரமிக்க தனது சிந்தனைகளுடன் தன் அறையின் நான்கு சுவர்களுக்குள் தனிமையில் இருக்கப் பொறுக்கமாட்டாத காரணத்தால்.

அவன் வீட்டுக்குத் திரும்பியபோது நெடுநேரமாகிவிட்டது. சறுக்கு வண்டியில் பூட்டப்பட்டிருந்த குதிரை ஒன்று, வேலிக்கு அருகே நின்று கொண்டிருந்தது. பியோதர் அவனுடைய அறைக்குள் நுழைந்ததும், இக்னத் தாத்தா அணைந்து போய்க் கொண்டிருந்த கணப்படுப்பருகே அமர்ந்து வீட்டுக்காரருடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

''தம்பி, நெடுநேரம் எங்கோ நீ அரட்டையடித்துவிட்டு மெள்ள வந்திருக்கிறாய்'' என்றார் கிழவர். ''இப்பொழுது நான் இருட்டிலே வீட்டுக்குப் போயாக வேண்டும்.''

''என்ன ஆயிற்று? எதற்காவது நான் வேண்டுமா?''

''வீட்டிலே என் எஜமானி உன்னிடம் ஒரு தகவல் தெரிவிப்பதற்காக என்னை அனுப்பினாள்'' பாத்தியதையோடு இக்னத் தாத்தா வீட்டுக்காரர் பக்கம் திரும்பினார் (இருவரும் அதற்குள் அன்யோன்ய நண்பர்களாகிவிட்டனர் என்பது தெரிந்

தது): ''திராபீம், நீ உன் அறைக்குப் போய்ச் சேர், நாங்கள் இருவரும் சொந்த காரியமாய்க் கொஞ்சம் பேச வேண்டும்.''

''சரி, வேண்டிய மட்டும் நீங்கள் இரகசியம் பேசிக் கொள்ளுங்கள், ஆனால் கணப்படுப்பின் தகட்டை மூட மறந்துவிடாதீர்கள்.'' அவர் வெளியே போய்ச் சேர்ந்தார்.

இக்னாத் தாத்தா பியோதரின் பக்கம் திரும்பினார்.

''இன்று சிலான்தியும் நானும் உன் மனைவியை மருத்துவமனைக்குக் கொண்டுபோய்விட்டோம். அதான் நடந்தது.''

''என்ன?!''

''ஒன்றுமில்லை, குழந்தை பிறக்கப் போகிறது.... ஏன் நீ எதிர்பார்க்கவில்லையா? உன்னிடம் சொல்லி விட்டு வரும்படி என் கிழவி என்னை அனுப்பினாள். சிலான்தியே இதைச் செய்திருக்கலாம், ஆனால் அவன் உன்னிடம் வரமாட்டான் என்று சொன்னாள்.''

''அவளை எப்பொழுது அழைத்துச் சென்றீர்கள்?''

''இன்று பிற்பகல்.''

''அப்படியென்றால் குழந்தை பிறந்திருக்குமே?''

''அது எனக்குத் தெரியாது. இம்மாதிரி விவகாரங்கள் எல்லாம் எங்களுக்கு அப்பாற்பட்டவை.''

வெண்பனி உருகி நனைந்திருந்த தன் குல்லாயை

பியோதர் வேகமாய்த் தலையில் வைத்துக் கொண்டான்.

''இக்னுத், நான் போய் வருகிறேன். நேரே அங்கே போகிறேன். இயந்திர, டிராக்டர் நிலையத்துக்கே நீங்கள் வந்து சொல்லியிருக்கலாமே.''

அவனுடைய கடைசிச் சொற்கள் கதவுக்கு வெளியிலிருந்து மிதந்து வந்தன.

தலையை ஆட்டியபடி இக்னுத் தனது கோட்டை எடுத்துப் போட்டுக் கொள்ளத் தொடங்கினார். பிறகு அவருக்குக் கணப்படுப்பைப் பற்றிய நினைவு வந்தது. அதற்கருகே ஒரு நாற்காலியைப் போட்டு அடித் தொண்டையைக் கனைத்துச் சபித்துக் கொண்டே மேலே ஏறி தகட்டை மூடினார்.

''திராபீம், ஓ திராபீம்!'' என்று கத்தினார். ''இரவிலே கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிடாதே! குளிர் காய்வதற்காக அவன் இடையிடையே வந்தாலும் வருவான்.''

வேகமாய் அடியெடுத்து வைத்து பியோதர் விரைந்து சென்றான், பிறகு ஓட ஆரம்பித்து விட்டான்....

ஏன் ஓட வேண்டும்? அவனுக்கு ஏன் இந்தப் பரபரப்பு? ஸ்தேஷாவின்மீது அவனுக்கிருந்த ஆசையெல்லாம் மறைந்துவிட்டது போலல்லவா எண்ணியிருந்தான்? கொடுந் துயரால், சிறிதும் பெரிதுமாய் அவன்மீது மழைபோல் கொட்டிய இன்னல்களால் அது நசுக்கப் பட்டு விட்டதென்று அல்லவா எண்ணியிருந்தான்? அவள்பால் அவனுக்கிருந்த அன்பெல்லாம் நிலச்சரிவில் அகப்

பட்ட மலர்ச் செடிபோல் புதையுண்டிருக்க வேண் டுமே! அவனை ஆட்டி வைத்தது, குழந்தையிடத் தில் அவன் உள்ளத்திலே எழுந்த பாசமாய் இருக் குமோ? ஆனால் குழந்தையை அவன் இன்னும் பார்க் கவே இல்லை, அதன் உருவத்தை அவன் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. கற்பனைகூட செய்ய முடியாத ஒன்றின்மேல் பாசம் உண்டா வது எப்படி?... மூழ்கிப் புதையுண்டுவிடாமல் எஞ்சியிருப்பது ஏதேனும் இருக்குமோ? முண்டி யடித்துக் கொண்டு மேலே வருவது, இன்னும் உயிருடன் இருப்பது ஏதேனும் இருக்குமோ?

மருத்துவமனை கிராமத்துக்கு வெளியே ஒரு தோப்பினுள் இருந்தது. ஓடோடி அதன் பெரிய வாயிலை வந்தடைந்த பியோதர், அப்படியே நின்றுவிட்டான்.

அடித்து மோதிக்கொண்டு இங்கு ஓடி வந்தா னே—எதற்காக? அவளை வாழ்த்துவதற்காகவா?... அவனுடைய வாழ்த்துக்கள் அவளுக்கு வேண்டுமா, என்ன? கொண்டாடி மகிழ்வதற்காகவா ஓடி வந்தான்? எப்படி ஆகுமோ என்று யாரால் கூற முடியும்? கிடைக்கப் போவது இன்பமா, அல்லது மேலும் ஒரு துன்பச் சுமையா? ஆனால் திரும்பிச் சென்று படுக்கையிலே படுத்து உறங்குவதென் பது முடியாத காரியம்! அவன் மனைவி பிள்ளைப் பெறப் போகிறாள்! இது போன்ற சந்தர்ப்பத்தில் சாதாரணமாய் எவரும் மலர்களும் அன்பளிப்பு களும் வாங்கிச் செல்வார் என்பது அவன் நினை வுக்கு வந்தது. ஆனால் பியோதர் வெறுங்கையோடு

வந்து நிற்கிருன்—இதோ நான் வந்து நிற்கிறேன், என்னை ஏற்றுக் கொள் என்று சொல்வது போல. இது சரியல்ல, அவன் எதாவது வாங்கிச் சென்றாக வேண்டும்.

பியோதர் திரும்பி நடந்தான்.

இரவு பன்னிரண்டு மணி வரை திறந்திருக்கக் கூடிய கடை ஒன்று இருந்தது. பாவ்லா பாவ்லவ்ன இரட்டை மோவாயையுடைய வாட்டசாட்டமான பேருருவம் கொண்ட அன்னை—ஆறு மணி முதல் நள்ளிரவு வரை கடை மேஜைக்குப் பின்ஞல் நின்று இரவில் நேரம் கழித்து வரும் வாடிக்கைகாரர்களுக்கு வேண்டியதைத் தருவார். இவர்களில் பலரும் லாரி டிரைவர்கள். வண்டியை நிறுத்திவிட்டு ஏதேனும் வாங்கிச் சாப்பிடுவதற்கும், யாரேனும் பயணிகள் கிடைத்தால் ஏற்றிச் செல்வதற்கும் அவர்களுக்கு இது வசதியான இடமாக இருந்தது.

''பியோதர்!'' வியந்து கூச்சலிட்ட வண்ணம் கடையின் மேஜைப் பக்கத்திலிருந்து ஒருவன் அவனைத் திரும்பிப் பார்த்தான்—அவன் குல்லாயிற்கு அடியிலிருந்து முரட்டுச் சுருள் முடிகள் வெளியே தெரிந்தன; காற்றிலும் கடுங்குளிரிலும் முகம் சிவந்துபோய் கரடுமுரடாய் இருந்தது; கண்கள் மகிழ்ச்சியால் பளிச்சிட்டன. குரொம்த்ஸோவோ கூட்டுப்பண்ணையைச் சேர்ந்த வாஸ்யா வியுபீமவ் தான் அது. பியோதரின் கையைப் பிடித்துப் பலமாய்க் குலுக்கிஞன்.

''பாவ்லா பாவ்லவ்ன, அலமாரியிலிருந்து இன்

ெருரு பாட்டில் எடுங்கள்! எனது பழைய நண் பனைச் சந்திக்கிறேன்!''

''வாஸ்யா! வேண்டாம் — சந்தோஷமாய் உட்காருவேன், ஆனால் இப்பொழுது முடிய வில்லை! எனக்கு நேரமில்லை!''

''பியோதர்! நீயா இப்படிப் பேசுகிருய்? உன்னைப் பார்த்து ஓராண்டு ஆகிறதே!''

''என் மனைவி மருத்துவமனையில் இருக்கிருள் —குழந்தை பிறக்கப் போகிறது. அவளுக்கு ஏதா வது வாங்கிச் செல்ல வேண்டுமென்று இங்கு ஓடி வந்தேன்.''

''ஓ-கோ, அப்படியா சேதி!... கொண்டாடு வதற்கு இதுதானே சரியான நேரம். சரி, சரி, எனக்குப் புரிகிறது. தம்பி! என் வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்! உன் கையைக் கொடு! இது போன்ற ஒரு நேரத்தில் நீ உன் நண்பனையும் மறக் கலாம், உன்னையுங்கூட மறக்கலாம்—தவறில்லை. மகன் பிறக்கட்டும், பியோதரே, உனக்கொரு மகன் பிறக்கட்டும்! பிறப்பது மகனாகத்தானே இருக்கும், இல்லையா? உன்னை வாழ்த்திப் பானம் அருந்துகிறேன்! சரி, சரி, உன் அவசரம் எனக்குப் புரிகிறது. எங்களையெல்லாம் முந்திக் கொண்டு விட்டாயே நீ! நானும் திருமணம் செய்துகொள்ள லாமென்று இருக்கிறேன்.''

வாஸ்யா ஏகக் கூச்சலிட்டுக் குதூகலமாய்த் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான். சுற்றிலு மிருந்த ஏனையோர் பியோதரைப் பார்த்து மௌன மாய் மனதுக்குள் மெச்சிக் கொள்ள, அவன்

மிட்டாய்களும் கடையில் பல காலம் இருந்ததால் காகிதம் கசங்கிவிட்ட சாக்கலெட்டுகளும் வாங்கி யெடுத்துக் கொண்டான்.

''எங்களே விட்டுப் பிரிந்து இப்படி மறைந்து போய்விட்டாயே! ஆளேப் பார்க்கவே முடிய வில்லே; ஒரு தகவலும் தெரியவில்லே! இருக்கும் இடம் தெரியாமல் மறைந்துவிட்டாயே....இங்கே நான் சாவகாசமாய்க் கொஞ்ச நேரம் தங்கி யிருந்து கொண்டாடிவிட்டுப் போக முடிந்தால் நன்ருயிருக்கும். ஆனுல் அந்தத் தீவன அடர்வுகளே உடனே நான் கொண்டுபோய்ச்சேர்க்காவிட்டால், எங்களுடைய பொலிக்கார்ப்பவிச் என் உயிரை வாங்கிவிடுவார். இருந்தாலும் நீ கவலேப்படாதே, அங்கே எல்லா ஆட்களிடமும் நான் போய்ச் சொல் கிறேன்—நம்முடைய பியோதர் சொலவேய்க் கோவுக்கு மகனும் வாரிசும் வாய்த்துவிட்ட தென்று! சரி, நீ அவசரமாய்ப் போக விரும்பு கிருய்.... போய் வா, நான் தாமதப்படுத்த விரும்பவில்லே. திரும்பவும் உன் கையைக் கொடு!''

இந்தச் சந்திப்புக்கு முன்பு பியோதரின் மன தில் குழப்பமும் பரபரப்பும் குடிகொண்டிருந் தன. வாஸ்யாவின் குதூகலமான ஆரவாரத் துக்குப் பிறகும் இந்தப்பரபரப்பு இருக்கத்தான் செய்தது; ஆனுல் இப்பொழுது அதனுடன் பூரிப் பும் நன்னம்பிக்கையும் சேர்ந்து கொண்டுவிட் டன. எவ்வளவு பெரிய முட்டாள் அவன்! யாவும் மிகவும் சுலபமாய் இருக்கையில், எண்ணுத எண்ண

மெல்லாம் எண்ணி மண்டையை உடைத்துக் கொண்டானே—குழந்தை பிறக்கப் போகிறது, அவன் தந்தையாகப் போகிருன், இனி ஸ்தேஷா தன்னுடன் வந்து வாழ வேண்டுமென்று அவன் உரிமையுடன் கோரலாமே! நிச்சயம் அவன் நினைக்கிறபடிதான் நடந்தேறும்! யாவும் சரியாகி விடும்!

வெறிச்சோடிப் போன தெருக்களின் வழியே ஓட்டமாய் ஓடி, பியோதர் திரும்பவும் மருத்துவ மனையை வந்தடைந்தான்.

பிள்ளைப்பேறு மனையின் வரவேற்பறையில் ஒரேவொருவர் மட்டும்தான் இருந்தார்—அவர் வயது முதிர்ந்தவர்; நல்ல கோட்டும் உயரமான ஆட்டுத்தோல் தொப்பியும் அணிந்திருந்தார்; அலுவலகத்தில் வேலை செய்பவர் போல் தோன்றிஞர். வேகமாய் நடந்துவந்ததிஞலும், ஏதோ பெரிய காரியம் நடக்கப் போகிறது என்ற துடி துடிப்பாலும் அவன் இதயம் படபடவென அடித்துக் கொண்டது. உள்ளே ஒரே அமர்க்களமாயிருக்கும், எல்லோரும் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருப்பார்கள் என்று அவன் நினைத்திருந்தான். ஆஞல் பிரகாசமான விளக்கு வெளிச்சத்தில் மூழ்கியிருந்த சுத்தமான அந்தப் பெரிய அறையில் தன்னந்தனியாயிருந்த ஒரேவொரு ஆள், அமைதியாக அவனைப் பரிவுடன் உற்று நோக்கிஞர்.

''இதுதான் உனக்கு முதல் தடவையா?'' என்று அவர் கேட்டார்.

''எது முதல் தடவை?'' பியோதருக்கு முதலில் புரியவில்லை.

''உன் மனைவி இங்கு வந்திருப்பது இதான் முதல் தடவையா?''

''ஆம்'' என்று பியோதர் பெருமூச்சு விட்டான். அவருடைய மன அமைதி அவனுக்குச் சற்று சாந்தியளிப்பதாய் இருந்தது.

''உன்னைப் பார்த்தாலே தெரிகிறதே. நான் ஒவ்வொரு ஆண்டும் இங்கு வருகிறேன். இது எனக்கு நான்காவது தடவை.''

நர்ஸ் கொஞ்சம் துணிமணிகளை — ஒரு கோட்டு, சால்வை, கம்பளி பூட்ஸ் முதலானவற்றை—கொண்டுவந்தார்.

''இதோ இருக்கு, பெற்றுக் கொள்ளுங்கள்.''

அந்த முதியவர் அவற்றை எடுத்து, சாவதானமாய் மடித்து, யாவற்றையும் சேர்த்து வைத்துக் கட்டினார்.

''மனைவியைக் கொண்டுவந்துவிட வேண்டும், பதிலுக்கு ஒரு மூட்டையை வாங்கிக் கொள்ள வேண்டும். நான் போய்வருகிறேன். நீ கவலைப் படாதே. இதெல்லாம் சர்வ சாதாரணமானது. உனக்கு வேண்டியது என்ன—ஆண் பிள்ளையா, பெண் பிள்ளையா?''

''ஆண் பிள்ளைதான்.''

''அப்படியென்றால் பெண் பிள்ளைதான் பிறக்கும்.''

''ஏன்?''

''அனுபவ வாயிலாய் நான் தெரிந்து கொண்

டது இது, பெண் பிள்ளைகள்தான் எனக்குப் பிடிக்கும், ஆனால் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் எனக்குக் கிடைப்பது ஆண் பிள்ளைதான். இதுவும் நல்லதுதான், ஒன்றும் குறைந்து போய் விடவில்லை. ஒவ்வொன்றுக்கும் எப்பேர்பட்ட தொண்டை தெரியுமா? வீட்டில் கலகலப்பில்லாமல் சலிப்பு ஏற்படுமோ என்று பயப்பட வேண்டியதில்லை.''

நேசபாவத்துடன் அவர் தலையை ஆட்டி விடை பெற்றுக் கொண்டு வெளியே சென்றார். அவர் சென்றதும் நர்ஸ் கதவை மூடிவிட்டு பியோதரின் பக்கம் திரும்பினார்.

''பெயர் என்ன?''

''சொலவேய்க்கோவ், பியோதர் சொலவேய்க்கோவ்.''

''பியோதர் என்று இங்கு யாருமில்லையே. ஸ்தேஷா சொலவேய்க்கோவாவின் கணவர் தானே நீங்கள்? இன்று அவர் இங்கு சேர்க்கப் பட்டார். அவருக்கு எதாவது கொண்டுவந்திருக் கிறீர்களா? என்னிடம் கொடுங்கள். தவறாமல் அவரிடம் சேர்ப்பித்துவிடுகிறேன்.''

''குழந்தை பிறந்துவிட்டதா?''

''அவ்வளவு சீக்கிரமாய் நடந்துவிடும் காரிய மல்லவே, பேசாமல் வீட்டுக்குப் போய் படுத்துத் தூங்குங்கள். உங்களுக்குத் தகவல் தெரிவிக்கிறோம்.''

''இங்கேயே காத்திருக்கிறேன்.''

''வேண்டாம், வீட்டுக்குப் போவதுதான் நல்லது. சில சமயம் மூன்று நாட்கள் வரை காத்

திருக்க நேர்ந்தாலும் நேரலாம்—அவசரப்பட்டுப் பயனில்லை.''

பிள்ளைப்பேறு மனையின் ஒளிமயமான சன்னல் களுக்கு அருகே பியோதர் நெடுநேரம் மேலும் கீழுமாய் நடந்தபடி காதைத் தீட்டிக் கொண்டு கவனமாய்க் கேட்டேன் — ஸ்தேஷா கூச்சல் போடும் சப்தம் இரட்டைக் கண்ணுடிக் கதவுகளைத் தாண்டிக் கொண்டு வந்து கேட்குமா என்று. ஆனால் அவன் பூட்சுகளுக்கு அடியில் வெண்பனி கரகரக்கும் சப்தம்தான் காதில் விழுந்தது.

அன்று இரவு பல முறை அவன் அந்த சன்னல் களுக்கு அருகே வந்து, சுவர் ஓரமாய் நடந்தான். கடுங்குளிரான இரவு அது, இடையிடையே வெண் பனி பெய்தது. ஆனால் பியோதரின் கண்களுக்கு இதமான கோடை பருவப் பொழுது விடிவது தெரிந்தது. பனித் துளிகள் பளிச்சிட்ட புல்வெளி யும் அதன் வழியே சென்ற கருமையான இரு வரிசைகளில் அமைந்த தடங்களும் அவன் கண் ணெதிரே தெரிந்தன—ஒரு வரிசை அவனுடைய கால் தடம், மற்றொன்று அவன் மகனது கால் தடம். இருவரும் மீன்பிடிப்பதற்காகப் போய்க் கொண்டிருந்தனர். யாவற்றையும் அவன் தெளி வாகக் கண்டான்—பனித் துளி படிந்த புல்வெளி, நனைந்த புல்மீது வரிசையாகத் தெரிந்த தடங்கள், மூடுபனியின் கடைசித் திரள்கள் புதர்களிடையே சிக்குண்டுவிட்டது போலத் தோன்றிய ஆற்றங் கரை ஆகிய யாவற்றையும் கண்டான். மிகவும் முக்கியமான ஒன்றை மட்டும்தான் அவனால் காண

முடியவில்லை—அவன் மகனை அவனால் காண முடிய வில்லை. வெண்பட்டு போன்ற முடிகளையுடைய தலை, தோள்மீது இருந்த நீண்ட தூண்டில் கம்பு —இவைதான் அவன் கண்ணுக்குத் தெரிந்தன.... இவை போதாவே!

அங்கமெல்லாம் ஜில்லிட்டுப் போக, அவன் வீட்டுக்குத் திரும்புவான். ஆனால் விளக்கை ஏற்றவு மில்லை, உடைகளைக் களையவுமில்லை; கணப் படுப்பருகே அமர்ந்து குளிர் காய்ந்தான். தன் மகனைப் பற்றி, பனி படர்ந்த புல்வெளியையும் அதன் வழியே சென்ற இரு தடங்களையும் பற்றி சிந்தித்த வண்ணம் அமர்ந்திருந்தான். திராபீம் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்க, கதவு தாளிடப் படாமல் இருந்ததே, எப்படி அது என்று இடையிடையே நினைத்து வியப்புற்றுக் கொண் டான். அவர் மறந்து போயிருக்க வேண்டும்— அதுவும் நல்லதுதான். அவரை எழுப்பாமலே வந்து போக முடிகிறது.

அன்று இரவு பியோதர் தூங்கவே இல்லை. ஆயினும் வேலையின்போது அவனுக்குக் கொஞ் சம்கூட களைப்பாய் இருக்கவில்லை. மணிக்கு ஒரு முறை ஆவலுடன் தொலைபேசியிடம் ஓடி, என்ன ஆயிற்று என்று விசாரித்தான். ஆனால் ஒவ்வொரு தடவையும் ஏமாற்றமடைந்து திரும்பினான்.

ஸ்தேஷா பிள்ளையைப் பெற்றெடுத்தபோது அந்திப்பொழுதாகிவிட்டது.

21

வலி வந்த ஒவ்வொரு முறையும் ஸ்தேஷா படுக்கையில் புரண்டு அலறினாள். ''எனக்கு இது வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!'' என்று கூச்சலிட்டாள். வலி பொறுக்க மாட்டாமல் கத்துவோரின் கூச்சலைக் கேட்டுப் பழகிப் போன டாக்டர்களும் நர்சுகளும் இதைப் பொருட்படுத் தாமலே இருந்தனர். அவளுடைய கூப்பாட்டை அவர்கள் தமக்குரிய முறையில் புரிந்துகொண் டனர்: ''இந்தச் சித்திரவதை எனக்கு வேண் டாம்!'' என்று கத்துகிறாளென எண்ணிக் கொண் டனர். ஆனால் ஸ்தேஷாவின் அலறல்களுக்கு வலி மட்டுமல்ல காரணம். ''எனக்கு இது வேண் டாம்!'' என்பது குழந்தையைக் குறித்தது. தானே கைவிடப்பட்ட மனைவி, தனக்கு ஏன் குழந்தை?

பிறகு அந்தச் சிறு மூட்டையை அவளிடம் கொண்டுவந்தனர். வெள்ளைத் துணிச் சுற்றுகளுக் குள்ளிருந்து செக்கச் சிவந்த சின்னஞ்சிறு முகம் தெரிந்தது. அதனை ஸ்தேஷாவின் படுக்கையில் வைத்தனர். டாக்டர்கள், நர்சுகள், அவளுக்குப் பக்கத்துப் படுக்கைக்கு உரியவரும்கூட இன்முகத் துடன் சுற்றிலும் நின்று, வாழ்த்துக் கூறினர். எல்லோரும் அன்பு பொங்க அவளைப் பார்த்த னர். ஒரு புதிய மனிதப் பிறவி உலகில் தோன்றி யுள்ளது, யாராலும் அந்நிகழ்ச்சியை அலட்சியப் படுத்த முடியுமா?

கதகதப்பான அந்தச் சிறிய வாய் முலைக் காம்பைக் கவ்விக் கொண்டது. அவளுடைய அங்கமெங்கும் ஒருவகை நூதன இன்ப உணர்ச்சி பாய்ந்தோடிற்று. ஸ்தேஷா குழந்தையிடம் நகர்ந்து மெள்ள அதைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள். பெரிய பெரிய முத்துக்களாய் அவள் முகத்தில் கண்ணீர் உருண்டு வழிந்தது. இந்தக் கண்ணீர் அவளுடைய உள்ளக் குமுறல் தணிந்துவிட்டதைக் குறித்தது; ''எனக்கு வேண்டாம் குழந்தை'' என்று நினைத்தோமே என்ற வெட்க உணர்ச்சியைக் குறித்தது. அவள் வடித்த இன்பக் கண்ணீர் அது; தன்பால், இந்தப் புதிய மனிதப் பிறவியின்பால், அறியா ஜீவனாய் தன் மார்புடன் ஒட்டிக்கொண்டுவிட்ட கதகதப்பான, உயிருள்ள இந்தச் சிறு மூட்டையின்பால் அவள் உள்ளத்தில் ஊற்றெடுத்த பரிதாபத்தின் கண்ணீர் அது.

இரண்டாம் முறை அவள் அக்குழந்தைக்குப் பாலூட்டி, மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு அதன் சுருங்கிய கன்னத்தையும் சிவந்திருந்த அதன் கொழுந்துக் காதையும் ஆராய்ந்தபோது, தன்னை யாரோ பார்த்துக் கொண்டு நிற்பதை உணர்ந்தாள். தலையை உயர்த்திப் பார்த்தாள். படுக்கை ஓரத்தில் பியோதர் நிற்பதைக் கண்டாள். வியப்பும் அச்சமும் அவன் முகத்தில் குடிகொண்டிருந்தன.

அவர்கள் முகமன் கூறிக் கொள்ளவில்லை. பியோதர் உட்கார்ந்து கொண்டான்; சங்கடமான ஒரு சில தருணங்கள் காத்திருந்துவிட்டு, பிறகு

அவளைக் கேட்டான்: ''உனக்கு எதாவது வேண்டுமா? ஆப்பிள் கொண்டுவந்திருக்கிறேன்....'' ஸ்தேஷா கோபப்படவில்லை, வேறு பக்கம் தலையைத் திருப்பிக் கொள்ளவில்லை என்பதைக் கண்டதும், அவன் முகம் இன்முறுவலால் மலர்ந்து விட்டது. ''ஓகோ, இப்படியா இருக்கிறாள்.... மகள் பிறந்திருக்கிறாள்! பிரமாதம், பிரமாதம்!''

ஸ்தேஷா மறுக்கவில்லை—பிரமாதம்தான், சந்தேகமில்லை!

''எந்நேரமும் தூங்குகிறாள். இதோ சப்புகிறாள், அதற்குள் — இதோ பார் — தூங்கிவிட்டாள்.''

பியோதர் அதிக நேரம் இருக்கவில்லை. எல்லாம் அந்தக் குழந்தையைப் பற்றியேதான் பேசிக் கொண்டிருந்தார்கள்: அவள் எடை என்ன? குழந்தைத் துணிகள், சட்டைகள், ஒரு கம்பளி — அவளுக்கு இன்னும் வேறு என்னென்ன வாங்க வேண்டும்?

நர்ஸ் ஒருவர் வந்தார். ஒரு நிமிடம் உள்ளே போய் எட்டிப் பார்த்துவிட்டு வந்துவிடுவதாகக் கூறியவர், கால் மணி நேரமாகியும் இன்னும் கிளம்பவில்லையே என்று பியோதருக்கு நினைவு படுத்தினார். உடனே அவன் எழுந்துவிட்டான்; அதன் பிறகுதான் அன்போடு ஆனால் தீர்மானமாய்க் கூறினான்: ''ஸ்தேஷா, இனி நீ என்னுடன் வந்து வாழப் போகிறாய், வேறு எங்கும் போகப் போவதில்லை.''

ஏனோ தெரியவில்லை, இக்கணத்தில் இருந்தது போல் இதன்முன் எக்காலத்திலும் அவளுக்கு

அவன் இவ்வளவு நெருங்கியவனாக, அன்புக்குரிய வனாக இருந்ததில்லை. வெண்ணிற மருத்துவமனை மேலங்கி அணிந்து, தோள்களின் அளவு பத்தாமல் அது இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்க, அவனுடைய நீண்ட கரங்கள் அந்த அங்கியின் கைகளுக்கு வெளியே துருத்திக் கொண்டு தொங்க, முகத்திலே ஆழ்ந்த சிந்தனை பிரதிபலிக்க அவன் நின்றுகொண்டிருந்த இத்தருணம் போல், வேறு எத்தருணமும்—அவர்களுடைய திருமணத்துக்கு முன்புகூட—அவளுக்கு இவ்வளவு அருமையான வனாக இருந்ததில்லை.

இருந்தபோதிலும் அவள் அரைமனதுடன் கொஞ்சம் ஆட்சேபம் தெரிவிக்கவே செய்தாள்.

''பியோதர், என் அம்மா வீட்டில் இருந்தால் தான் குழந்தைக்கு நல்லது. அம்மாவுடன் இருந்தேனானால் குழந்தையைக் கவனித்துக் கொள்ள உதவியாக இருக்கும்.'' ஆனால் அவள் குரலில் ஏக்கமும் ஐயப்பாடும் தொனித்தன.

மறுநாள் அவளுடைய தாய் வந்திருந்தார். ஸ்தேஷா மெள்ள நழுவி வரவேற்பறைக்கு வந்துவிட்டாள். மெலிந்து போயிருந்தாள்; அகன்ற கண்களும் கலைந்த தலையுமாய்த் தோற்றமளித்தாள். அலெவ்தீனா இவானவ்னா உடனே புலம்ப ஆரம்பித்துவிட்டார்: ''நம்முடைய கதி இப்படியா ஆகணும்! ஆண்டவனுக்கு நம்மீது கோபம் போலும்....'' ஆனால் அவர் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டு, காரியவாதக் குரலில் தொடர்ந்து பேசினார்:'' நீ மனம் வருந்தக் கூடாது.

உனக்கு வேண்டியவை யாவற்றையும் நான் தயாரித்துவைத்துவிட்டேன் — குழந்தைத் துணிகள் ஏழும், சிறிய உடுப்புகள் சிலவும் தயாரித்து வைத்திருக்கிறேன்; அப்பா ஒரு தொட்டில் செய்திருக்கிருர்.

''அம்மா, நான் பியோதரிடம் போயிருக்கப் போகிறேன்'' என்று ஸ்தேஷா இடைமறித்துத் தயக்கத்துடன் சொன்ஞள். ''என்னை அவன் தன்னிடம் வந்துவிடுமாறு அழைத்தான்.''

''வந்துவிடுமாறு அழைத்தாஞ? அப்படியா சேதி, அவனுடைய மனசாட்சி அவனைக் குத்துகிறதாக்கும். ஆஞல் நம்மிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு, திரும்பவும் நம்முடன் வந்து வாழும்படி வைக்குமளவுக்கு அது குத்தவில்லை.''

''திரும்பவும்நம்முடன்வந்திருக்கமாட்டான்.'' ஸ்தேஷா தன் தாயின் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டு அழத் தொடங்கிவிட்டாள். ''கணவன் இல்லாமல் குழந்தையை மட்டும் வைத்துக் கொண்டு எப்படி நான் வாழ்வேன். எல்லோரும் ஏளனமாய் என்னைச் சுட்டிக்காட்டுவார்களே!''

''இதெல்லாம் என்ன? இதற்கு அனுமதியளித்தது யார்? நர்சுகள் எல்லோரும் என்ன நினைத்துக் கொண்டிருக்கிருர்கள்? உடனே படுக்கைக்குப் போய்ச் சேர், அங்கிருந்து நகரக் கூடாது, தெரியுமா?... நான் சொன்னது காதில் விழுந்ததா? படுக்கைக்குப் போய்ச் சேர்!'' வயதான ஓர் அன்னை கதவடியில் நின்று கொண்டிருந்தார். டாக்டர் அவர்.

ஸ்தேஷாவின் கலைந்த தலையை அலெவ்தீனு இவானவ்னு வருடிவிட்டாள்.

''என் கண்ணே, நீ கவலைப்படக்கூடாது, வருந்தாதே.... கிளம்பு, திரும்பிப் போய்விடு. இதோ பார், டாக்டர் உன்மேல் கோபப்படுகிறூர்.''

காலையில் குளிராயிருந்தது. இரவில் வெண்பனி பெய்திருந்தது. கிராமம் முழுதும் சுத்தமாய்க் கழுவிவிடப்பட்டது மாதிரி தோற்றமளித்தது. கூரைகள், சாலை, வேலி ஓரங்களில் குவிந்திருந்த வெண்பனி—யாவற்றிலிருந்தும் இதமான ஒளி வெளிக்கிளம்புவது போலத் தோன்றியது. காற்றுங்கூட நன்கு கழுவப்பட்டது போல் அவ்வளவு தூய்மையாகவும் புத்துணர்வூட்டுவதாகவும் இருந்தது. புகைபோக்கிகளிலிருந்து புகை மேலே எழுந்தது. ரொட்டி சுடப்படும் மணம் காற்றிலே நிறைந்து, பசியைத் தூண்டுவதாயிருந்தது. மருத்துவமனையிலிருந்து அவசரமின்றி மெள்ள வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த அந்தச் சிறிய குடும்பத்தின் மீது அமைதியும் இன்பமும் தவழ்ந்து விளையாடின.

தொட்டில் வாங்க பியோதருக்கு நேரமில்லாமற் போய்விட்டது. இரு நாற்காலிகளைச் சேர்த்து வைத்து தற்போதைக்கு அவர்கள் குழந்தைக்கு ஒரு படுக்கை தயாரிக்க வேண்டியதாயிற்று. இது பற்றி அவனுக்கு நெஞ்சு குறுகுறுத்தது.

''ஆனல் இப்பொழுதுதானே உண்மையில் நாம் குடித்தனம் ஆரம்பிக்கிறேம்'' என்று அவன்

நியாயம் கூறிக் கொண்டான். ''இந்நிலையில் இருப்பது நாம் மட்டுமல்லவே. எல்லோருமே மிகப் பலவும் இல்லாத நிலையில்தானே தொடங்குகிருர்கள். சிறிது காலமானதும் நமக்கும் எல்லாம் கிடைக்கும்—அறை அல்லது சொந்த வீடேகூட கிடைக்கலாம்; காய்கறித் தோட்டம், ஆடுமாடுகள் முதலானவையும் கிடைக்கும். எல்லாம் பிரமாதமாகிவிடும்!''

ஸ்தேஷா மறுபேச்சின்றி ஒத்துக்கொண்டுவிட்டாள்; அவள் குறைப்பட்டுக் கொள்ளவில்லை.

அதே நாளன்று அவர்கள் குழந்தையின் பெயரைப் பற்றி தீர்மானித்துவிட்டனர்—ஓல்கா.

மறுநாள் காலை, முதலாவது விருந்தினர் வந்து சேர்ந்தார். பியோதரையோ, ஸ்தேஷாவையோ பார்ப்பதற்காக வந்தவரல்ல அவர்.

கதவு தட்டப்பட்டது. பிறகு ஓர் இளம் பெண் கதவருகே நின்று கையுறை ஒன்ருல் தனது ரோமத்தோல் காலரிலிருந்த வெண்பனியைத் தட்டிக் கொண்டார்.

''வணக்கம்.ஓல்கா சொலவேய்க்கோவா வசிப்பது இங்குதாஞ?''

பியோதரும் ஸ்தேஷாவும் கணப் பொழுது திகைப்புற்று பதிலளிக்காமல் தடுமாறினர். ஆமாம், ஓல்கா சொலவேய்க்கோவா வசிப்பது இங்குதான்.... அவளுடைய வாழ்க்கை ஆரம்பமாகி பத்து நாட்கள்தான் ஆயின; நேற்று முதல் தான் அவள் தனக்கென ஒரு பெயரைப் பெற்ருள்;

நேற்றிலிருந்துதான் இந்த அறையில் வசித்து வருகிருள்.

''ஆம், இங்குதான்—உள்ளே வாருங்கள்!''

அந்த இளம் பெண் கோட்டைக் கழற்றி விட்டு, கைப்பெட்டியிலிருந்து ஒரு வெள்ளை அங்கியை எடுத்தார். பிறகு வெந்நீர் கொண்டு வரச் சொல்லிக் கைகளைக் கழுவிக் கொண்டார்.

''நீங்கள் ஒரு தொட்டிலுக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். அது மிகமிக அவசியம்.''

அவர் ஸ்தேஷாவுடன் உட்கார்ந்து நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தார். குழந்தையைக் குளிப்பாட்டுவதற்குத் தண்ணீரின் வெப்பம் எவ்வளவு இருக்க வேண்டும், எந்தெந்த நேரத்தில் பாலூட்ட வேண்டும், தூங்க வைக்க வேண்டும், வெளியே எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை யெல்லாம் ஸ்தேஷாவுக்கு நினைவுபடுத்திஞர். ஸ்தேஷா அவரைக் கொஞ்சம் தேநீர் குடிக்கும் படி வேண்டிஞள். ஆஞல் அவர் வேண்டாமென்று தடுத்துவிட்டார்.

''நான் போய்ப் பார்க்க வேண்டியவர்கள் மற்றும் பலரும் இருக்கிருர்கள்.''

இந்த டாக்டர்தான் அவர்களைப் பார்க்க வந்த முதல் விருந்தினர். விரைவில் இவரைத் தொடர்ந்து ஏனைய எல்லோரும் வந்தனர். தினமும் பல பேர் வந்து சென்றனர்.

முதன்முதலில் வந்தவர்களில் ஒருவரும், சிறிதும் எதிர்பாராத விருந்தினராக வந்தவருமாவார், வர்வாரா ஸ்திப்பானவ்ஞ. கோட்டைக்

கழற்றி வீசிவிட்டு கதவருகே நின்று கைகளைத் தேய்த்துக் கொண்டார்.

''இருங்கள், கொஞ்சம் காத்திருங்கள், வந்து விட்டேன்'' என்றார், அவருடைய அடித் தொண்டையால். ''என்னிடமுள்ள குளிரைக் கொஞ்சம் அகற்றிவிட்டு வருகிறேன். பிறகு உங்கள் மகளை வந்துபார்க்கிறேன். வேண்டியநேரம்இருக்கிறது.''

முதலில் அவர் தான் கொண்டுவந்திருந்த பொட்டலத்தைப் பிரித்தார்.

''இதோ, இது உனக்காக.'' அவர் ஸ்தேஷா வின் பிடிவாதமான மௌனத்தைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் அவள் பக்கம் திரும்பினார். ''கூட்டுப்பண்ணை உனக்கு அளிக்கும் அன்பளிப்பு இது. இதோ பார், பியோதர், உன் மனைவி போதிய அளவு சாப்பிடுகிறாளா என்று நீ கவனித்துக் கொள்ளவேண்டும். குழந்தைக்கு அவள் உணவளிப் பவள் என்பதை நினைவில் வைத்துக் கொள்! ஸ்தேஷா, இங்கே வா. நீ அழிச்சாட்டியம் பண் ணுவதில் அர்த்தமில்லை, ஊமை போல பாசாங்கு செய்துப் பயனில்லை. இனி நாம் இருவருக்கு மிடையே மனத்தாங்கல் ஏற்படக் காரணம் இல்லை. நாம் நண்பர்களாக வேண்டும். இப்படிவா. இது என்னுடைய அன்பளிப்பு — வெள்ளைத் துணி. குழந்தைத் துணிகளுக்காக இதை நீ உபயோகித்துக் கொள்ள முற்பட்டு விடாதே. அதற்கு உன் கணவனுடைய பழைய சட்டைகள் போதும். அவற்றைக் கிழித்து நன்றாய் கொதிக்க வைத்து எடுத்துக்கொள். அவள் அழுக்கு பண்ணு

வதற்கு எந்தத் துணியானாலும் ஒன்றுதான்.... நான் கொடுக்கும் இந்தத் துணி சட்டைகளும் தலையணை உறைகளும் தைப்பதற்காக. நீ கெட்டிக்காரத் தனமாய்க் குடித்தனம் செய்ய வேண்டும்.''

அந்நியர்களிடமிருந்து—அதுவும் வர்வாரா ஸ்திப்பானவ்னாவிடமிருந்து—அன்பை எதிர்பார்க்கக்கூடியவளாக வளர்க்கப்பட்டவளல்ல ஸ்தேஷா. முதலில் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆனால் இரு நாற்காலிகளையும் கவனித்த வர்வாரா ஸ்திப்பானவ்னா, தச்சுத் தொழிலாளர் எகோரை அன்றைய தினமே ஒரு தொட்டில் செய்து தரச் சொல்வதாய்க் கூறியதும், ஸ்தேஷா அப்படியே மனமுருகிவிட்டாள்.

வர்வாரா குழந்தையிடம் சென்று கட்டை குட்டையான தனது விரலை அதன் மூக்கு முன்னால் ஆட்டினார். உடனே குழந்தை வீரெனக் கத்திற்று.

''வீர், வீர்!'' என்று வர்வாரா தானும் அதே மாதிரி கத்திக் காட்டினார். அவர் முகத்தின் ஒவ்வொரு சுருக்கமும் அவருடைய மகிழ்ச்சியை அறிவித்தது.''அட்டகாசமானக் குரலாகத்தான் இருக்கிறது! பியோதர், உன்னுடைய மகள்தான் என்பது நன்றாய்த் தெரிகிறது. ரியாஷ்கின்கள் சந்தோஷப்பட்டாலும் சரி, கோபப்பட்டாலும் சரி ஒரு நாளும் இது போல சப்தம் போடமாட்டார்கள்; எதாயினும் தமக்குள்ளே வைத்துக் கொண்டுவிடுவார்கள்.''

எதனாலோ தெரியவில்லை, இதைக் கேட்டுங் கூட ஸ்தேஷா கோபப்படவில்லை.

சிழோவும் வந்து சென்றான். கைகளைச் சுத்தமாய்த் தேய்த்து அலம்பி, முகச் சவரம் செய்து முடித்துக் கொண்டு, ஒப்பனை மணம் வீச வந்திருந்தான். எல்லோருமாய்ச் சேர்ந்து தேநீர் அருந்தினர்; பிஸ்கட்டுகள் வேண்டாமென்று சிழோவ் பிடிவாதமாய் மறுத்துவிட்டான்.

முடிவில் சிலான்திய் பெத்ரோவிச்சும் அலெவ்தீனா இவானவ்னாவும் வந்து சேர்ந்தனர். அவர்களை உபசரிக்க பியோதர் தன்னால் இயன்றதனைத்தையும் செய்தான். ஓடிப் போய் கிழவருக்கு ஒரு பாட்டில் வோட்கா வாங்கி வந்தான். அவர்களை "அப்பா", "அம்மா" என்று அழைத்தான். ஆனால் சீக்கிரத்திலேயே மௌனமாகிவிட்டான்.

பாட்டனாரும் பாட்டியாரும் மகிழ்ச்சிகரமான கலகலப்பான விருந்தினர்களாயில்லை. சிலான்திய் பெத்ரோவிச் பானமருந்த மறுத்துவிட்டார். "ஏற்கனவே நேரமாகிவிட்டது. காலத்தில் நான் குதிரையைத் திருப்பிக் கொண்டுபோய் விடாவிட்டால், வர்வாரா என் தோலை உரித்துவிடுவார்." கிழவி மேஜையின் பக்கமே வரவில்லை. உதடுகளை இறுக மூடிக் கொண்டு வாய் திறக்காமல் கதவருகே அமரிக்கையாய் உட்கார்ந்திருந்தார். பரிதாபப்படும் முறையில் அவ்வப்பொழுது தன் மகளையும் பிறகு குழந்தையையும் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய பார்வையும் பாவனையும் தெளிவாக உரைத்தன: சந்தோஷமாய் இருப்ப

தாய் ஏன் பாசாங்கு செய்ய வேண்டும், நீங்கள் ஏழைகள், அல்லலுறும் பிறவிகள் என்பதுதான் தெரிகிறதே.... கணப்படுப்பின் பக்கத்தில் குழந்தைத் துணிகள் தொங்கிக் கொண்டிருந்த அந்தச் சிறிய அறை பூராவையும் இடையிடையே உற்றுப் பார்த்துக் கொண்டார். பியோதரின் பக்கம் பார்க்காமலே இருக்க வேண்டுமென்று முயற்சி செய்தார்.

அவர்கள் சொல்ல விரும்பியதையெல்லாம் ஐந்தே நிமிடங்களில் சொல்லி முடித்திருக்கலாம். ஆனால் கிழவரும் கிழவியும் கடமையுணர்வுடன் அரை மணி நேரம் உட்கார்ந்திருந்தனர்—அவசரப்பட்டுக் கொண்டு கிளம்பிவிட்டதாகத் தோன்றாமலிருப்பதற்கு இது போதுமான நேரமாகும்.

அந்த அரை மணி நேரம் பூராவும் பியோதருக்குத் தான் தனது சொந்த வீட்டிலில்லாமல், திரும்பவும் ரியாஷ்கின்களுடைய வீட்டிற்கு வந்துவிட்டது போன்ற உணர்ச்சி இருந்து வந்தது. ஸ்தேஷா, அந்நாட்களில் செய்தது போலவே, தன் கணவனைப் பார்ப்பதற்கு பயந்து, கண்களைக் கவிழ்த்துக் கொண்டிருந்தாள்.

ரியாஷ்கின்களுடைய வீட்டுச் சூழ்நிலை திரும்பவும் தலைகாட்டுகிறது என்று பியோதர் எண்ணினான். சனியன்கள், இன்னமும் எங்கள் வாழ்க்கையைக் குட்டிச் சுவராக்கிவிட்டுத்தான் விடுவார்கள் போலிருக்கிறது. ஸ்தேஷா என் பக்கம் திரும்பாமலே இருக்கிறாளே.... அவனுடைய சம்பளம் எவ்வளவு, இயந்திர, டிராக்டர் நிலையம்

அவனுக்கு எப்பொழுது வீடு அளிக்கும், வசந்தத்தில் அவனுக்குக் கொல்லை நிலம் ஒதுக்கிவிடுவார்களா என்றெல்லாம் கிழவர் கேட்ட கேள்விகளுக்கு அவன் சோர்வுடன் பதிலளித்தான்.

ஆனால் அவர்கள் புறப்பட்டுச் சென்றதும் ஸ்தேஷா தனது பழைய உற்சாக நிலையைத் திரும்பவும் பெற்றுவிட்டாள். தன் பெற்றோர்கள் அதிக நேரம் தங்காமல் கிளம்பியது குறித்து உண்மையில் அவள் மகிழ்ச்சியுற்றது போலத் தோன்றியது.

ஸ்தேஷாவும் பியோதரும் சிறிதும் எதிர்பாராத விருந்தினராக, வட்டாரக் காம்சமோல் கமிட்டியின் செயலாளர் நீனு கிளாசிச்செவா வந்தார்.

அவர் ஒரு நிமிடத்துக்கு மேல் தங்கவில்லை; கோட்டைக்கூட கழற்றவில்லை.

''எனக்கு நேரமில்லை, உண்மையில் கொஞ்சங்கூட அவகாசமில்லை. ஒரு விநாடி வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போகலாமென்று ஓடி வந்தேன். நீங்கள் இருவரும் சேர்ந்து வாழ்வது எவ்வளவு சிறப்பாய் இருக்கிறது, பாருங்கள்! சபாஷ், இப்படியல்லவா இருக்க வேண்டும்!... உங்கள் குழந்தை எவ்வளவு இனியவளாய் இருக்கிறாள்! மூக்கும் முழியுமாய் எவ்வளவு நன்றாய் இருக்கிறாள்! கொடுத்து வைத்தவள் — வருங்காலம் இவளுக்கே உரியதாகும்! இவளுடைய வாழ்நாளில் கம்யூனிசத்தை நேரில் காண்பாள்!''

முன்பு நீனு தன்னிடம் காட்டிய அன்பையும் பரிவையும் நினைத்து ஸ்தேஷா பூரிப்படைந்தாள்.

தனது குழந்தையை நீனு இவ்வாறு மெச்சிப் புகழ்வதைக் கேட்டதும் அவள் முகம் செவ்வொளி வீச மலர்ச்சியுற்றது. பியோதருக்கும் முகம் சிவந்துவிட்டது; அவன் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டான். சிறிதளவும் அவன் மனதில் கடுப்போ காய்ப்போ இருக்கவில்லை.

பியோதரிடமும், ஸ்தேஷாவிடமும், குழந்தையிடமும், யாவருக்கும் முதலாய்த் தன்னிடமும் முழுத் திருப்தி கொண்டவராய், நீனு அங்கிருந்து புறப்பட்டுச் சென்முர். ''தனிப்பட்டவர்களது சொந்த பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வு காண வேண்டி வந்தது; ஆனுல் மெச்சத்தக்கவாறு அவற்றுக்கு நாம் தீர்வு காண்டோம் என்று நான் உரிமையுடன் கூறலாம்'' என்று இனி அவர் சொல்லிக் கொள்ளலாம் அல்லவா?

பியோதரின் மிகச் சிறிய பிரம்மச்சாரி அறையில் அந்த ஆரம்ப நாட்கள் இனிமை மிக்கனவாய் இருந்தன.

22

பியோதரின் நண்பர்கள் இப்பொழுது பியோதருக்கு ஒரு மகள் உண்டென்ற கருத்துக்குத் தம்மை விரைவில் பழக்கப்படுத்திக் கொண்டனர்.

விருந்தினர்களின் வருகை, வாழ்த்துக்கள் தெரிவித்தல், அன்பளிப்புகள் கொடுத்துச் செல்லுதல் — இவை யாவும் விழா மனப்பான்மையை ஏற்படுத்தின. விரைவில் இவை முடிவுறலாயின.

சாதாரண அன்றாட வாழ்க்கை ஆரம்பமாயிற்று. ஸ்தேஷாவுக்கு இது ஒரு புது வகை வாழ்க்கை — பிறந்தகத்தை விட்டு அவள் வெளியே வந்திருப்பது இதுவே முதல் தடவை.

திராபீம் நிக்கீத்திச் கல்யாணமாகியும் பிரம்மச்சாரியாக வாழ்ந்தவர். அவர் மனைவி பெரும் பகுதி நாட்கள் ஊருக்குக் கிளம்பிவிடுவார். அவர்களுடைய புதல்வர்களைப் பார்த்துவிட்டு வரப் புறப்பட்டுவிடுவார். அவர்களுக்கு ஆறு புதல்வர்கள், நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்தனர். ஆகவே திராபீம் அவர் மனைவியை அதிகம் பார்க்கச் சந்தர்ப்பமில்லாமலே இருந்து வந்தது. அவர் ஒரு தச்சுத் தொழிலாளர். சனிக்கிழமை தோறும் குடித்துவிட்டு மாலையில் வீட்டுக்கு வருவார். அப்பொழுது அவர் தனது வீட்டில் குடியிருந்தோரைப் பார்த்துப் பேசத் தவறுவதில்லை. கால்விரல் நுனியிலே நின்று ஆடியபடி, குழந்தைத் தொட்டிலின் பக்கம் விழிகளை உருட்டிக் காட்டி, முன்விரலை ஆட்டி எச்சரிக்கை செய்துவிட்டுக் குசுகுசுவென்று சொல்வார்:

''உஸ்-ஸ்! சப்தம் செய்யமாட்டேன், ஓசையில்லாமல் வருவேன்....'' மறுகணமே எதையாவது தட்டி—மேலே ஒரு கிண்ணம் இருக்கும் நாற்காலியையோ, காலி வாளியையோ—கீழே தள்ளி, குழந்தையை முழிக்க வைத்துவிடுவார். பிறகு உட்கார்ந்து பேச ஆரம்பிப்பார்—எப்பொழுதும் ஒரே விஷயத்தைத்தான் சொல்வார்.

''உங்களை நான் இங்கிருந்து போகச் சொல்ல

மாட்டேன். இங்கேயே நீங்கள் குடியிருந்து வாருங்கள். உங்களுக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்டேன்!''

அவர்கள் இங்கு குடியிருந்து வருவது அவருக்குப் பிடிக்கவில்லை என்பதை அவருடைய இந்தப் பேச்சு பியோதருக்கும் ஸ்தேஷாவுக்கும் தெளிவாகப் புலப்படுத்தி வந்தது. பிரம்மச்சாரியைக் குடிவைத்துக் கொள்வது ஒன்று; ஆனால் குழந்தையையுடைய ஒரு குடும்பத்தைக் குடிவைத்துக் கொண்டு, குழந்தைத் துணிகள் காய்ந்து கொண்டும், நாள் முழுதும் கணப்படுப்பு எரிந்து கொண்டும், குழந்தை அழுது கொண்டும் இருக்க நேர்வது முற்றிலும் வேறொன்று. திராபீம் இத்தகைய சங்கடங்கள் இருக்க முடியும் என்பதை மறந்து எவ்வளவோ காலமாகிவிட்டது.

திராபீம் அலுத்துக் கொள்ளவில்லை, அவர்களைக் குறைகூறவில்லை என்பது, ஸ்தேஷாவிடம் இங்கு கட்டுண்டு நெருக்கடியான நிலையிலே இருக்கிறோம் என்ற உணர்வை அதிகரிக்கவே செய்து வந்தது.

ஓர் இரவு பியோதர் மிகவும் நேரம் கழித்து வீட்டுக்கு வந்தான். ஸ்தேஷா தூங்கிவிடவில்லை —பிறந்த வீட்டை நினைத்துக் கொஞ்சம் கண்ணீர் வடித்தவாறு படுத்திருந்தாள். கணவன் உட்கார்ந்து இரவு சாப்பாடு சாப்பிடுவதைப் பார்த்துவிட்டுத் தலையைத் திருப்பிக் கொண்டாள். அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது. அவன் காதுகள் மேலும் கீழுமாய் அசைந்தாட அதோ அசை

போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கான். சாப்பாடு கிடைத்துவிட்டது என்று சந்தோஷப்படுகிறவனைப் போல அவன் முகத்திலே பரம திருப்தி குடிகொண்டிருந்தது.

''ஸ்தேஷா'' என்று அவன் அருமையாகக் கூப்பிட்டான். ''ஸ்தேஷா, இங்கே வாயேன், உனக்கு நான் ஒரு செய்தி சொல்ல வேண்டும்.''

''சொல்லேன்—என்ன அது?''

''நாங்கள் கட்டடம் கட்டப் போகிறோம். இயந்திர, டிராக்டர் நிலையம் ஒரு குடியிருப்புக் காலனியே கட்டப் போகிறது. இன்று யாவற்றையும் கணக்கிட்டுத் திட்டமிட்டனர்—டிராக்டர் டிரைவர் ஒவ்வொருவருக்கும் ஒரு குடித்தனப் பகுதியும் வேலைக்குழுத் தலைவர் ஒவ்வொருவருக்கும் ஒரு முழு வீடும் கட்டுவதென்று ஏற்பாடாகியுள்ளது. எப்படியிருக்குமென்று யோசனை செய்து பாரேன்!... பிரமாதமாய் இருக்கும் இல்லையா? நமக்குச் சொந்த வீடு கிடைத்துவிடும், காய்கறித் தோட்டம் போட்டுக் கொள்வோம், சன்னல்களுக்கு அடியில் மலர்கள் இருக்கும்....''

''அதற்கு இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும்?''

''மாஸ்கோ ஒரே நாளிலா கட்டி முடிக்கப் பட்டது? ஏ, ஸ்தேஷா! நீ கொஞ்சம் பொறுத்திருந்து பாரேன், நாம் கொஞ்சம் நிலை பெறும் வரை நீ பொறுத்திருக்க வேண்டும்! குழந்தை சற்று பெரியதாகட்டும், நாம் இருவரும் படிக்கத் தொடங்கி விடுவோம். நானும் உன்னைப் போலத்

தான், உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்கவில்லை. பல்வேறு பயிற்சித் திட்டங்களிலும் சேர்ந்து இந்தக் குறையை நிவர்த்தி செய்துகொள்ள முயன்றேன். கல்லூரியில் அடியெடுத்து வைக்கும் அளவுக்கு முன்னேறினால் எவ்வளவு நன்றாயிருக்கும்!''

''சரிதான், மாணவரே — வந்து படுத்துக் கொள்'' என்று ஸ்தேஷா அன்பு தவழக் கூறினாள்.

தூங்குவதற்குமுன் சிறிது நேரம் ஸ்தேஷா ஆசைக் கனவு கண்டு கொண்டிருந்தாள். பழைய கனவுகள்தான் — அவளுடைய சொந்த வீடு, அவள் காய்கறித் தோட்டம், ஆடுமாடுகள். அவளுடைய பெற்றோர்களுடைய வீட்டைப் போல் பரணிகளும் பலகைகளும் தேதிகள் கிழித்தெடுக்க வேண்டிய சுவர்க் காலண்டரும் கொண்டதாயிராது—வர்ணம் பூசிய தரையும் சித்திரங்களுமுடையதாய் இருக்கும்.... அதிகாலையில் நான் எழுந்துவிடுவேன், வெறுங் காலுடன் தோட்டத்துக்குச் செல்வேன். சன்னல்களுக்கு அடியில் மலர்கள்.... இருப்பது நல்லதுதான், ஆனால் மலர்களைச் சாப்பிட முடியாதே. நாம் காய்கறித் தோட்டம் பயிரிட வேண்டும்.... அதிகாலையில் முட்டைக் கோஸ் இதழ்கள் பனி படிந்து மங்கியிருக்கும், தொட்டால் ஜிலீரென்றிருக்கும். பியோதர் படிப்பான்; இயந்திர, டிராக்டர் நிலையத்தின் டைரக்டராலும் ஆகிவிடுவான்! கல்விஞானமுடையவனாய் இருப்பான்! நானும் படிக்க வேண்டுமென்கிறான்.... ஏன், நான் எதற்காகப் படிக்க வேண்டும்? வீட்டை நிர்வகிப்பதற்கும் காய்கறித் தோட்

டத்தைக் கவனித்துக் கொள்வதற்கும் குழந்தைகளை வளர்த்திடுவதற்கும் தெரிந்திருக்க வேண்டியவை யாவும் எனக்கு தெரியும், இது போதாதா? எனக்கு வாய்த்திருக்கும் கணவனுக்குப் புதுப் புது கருத்துக்கள் உதித்த வண்ணமுள்ளன. என் மணாளனே, உன்னுடன் வாழ்வது இலேசான காரியமல்ல போலத் தெரிகிறதே!

23

அவளுடைய தாய் வந்தார், பிறந்த வீட்டின் நினைவுகளையும் தன்னுடன் கொண்டு வந்திருந்தார். கணவன் எவ்வளவுதான் சன்னலுக்கு அடியில் இருக்கப் போகும் மலர்களைப் பற்றி பேசினாலும், பிறந்த வீட்டை—அந்தப் பழம்பெரும் பிர்ச் மரத்தையும் வசந்த பருவத்தில் புல் வளர்ந்துவிடும் அந்த ஒற்றையடிப் பாதையும் — யாராலும் மறந்துவிட முடியாதே. அடிக்கடி அது நினைவுக்கு வந்துகொண்டுதானே இருக்கும். வாழ்க்கை எவ்வளவுதான் சிறப்பானதாய் இருப்பினும், அதை நினைத்து சில நேரங்களில் இரண்டு சொட்டுக் கண்ணீர் வடிக்கத்தானே வேண்டியிருக்கிறது. பியோதருக்கு அவள் பெற்றோர்களை கொஞ்சமும் பிடிக்கவில்லை என்றாலுங்கூட, அம்மா அம்மா தானே. பொழுது விடிந்ததும் அம்மாவின் குரல் ஒலிக்குமே: ''கண்ணே, இன்னும் கொஞ்சம் தூங்கு; என் அருமை மகளே, தூங்கு நீ.'' தினமும் உள்ளதை மகிழ்வித்த குரலல்லவா அது?

பியோதர் வீட்டில் இல்லை. ஸ்தேஷா கட்டுக்

கடங்காத ஆர்வத்துடன் தன் தாயை வரவேற்று உபசரித்தாள்.

''உன் கணவன் உன்னிடம் எப்படி நடந்து கொள்கிறான்?'' தேநீரைச் சுவைத்தவண்ணம் அலெவ்தீனா இவானவ்னா விசாரித்தார்.

''என்னிடம் ரொம்ப அருமையாய் நடந்து கொள்கிறான், அம்மா. அன்பாய் இருக்கிறான். முடிந்ததெல்லாம் செய்கிறான்.''

''ஆமாம்,உன்னைப் பார்த்தாலே தெரிகிறதே, உன்னிடம் எவ்வளவு அருமையாய் இருக்கிறான் என்று. இப்படித் துரும்பாய் இளைத்துவிட்டாயே, என் மகளே! பார்க்கப் பாவமாய் இருக்கிறது!''

கோப்பைகளில் தேநீர் ஆறிப்போக இருவரும் சேர்ந்து அழுதனர்.

அன்று மாலை பியோதர் அறைக்குள் நுழைந்ததும் ஸ்தேஷா அவனிடம் கூறினாள்: ''இங்கேயே என்றால் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்க முடியாது.என் வீட்டுக்குப் போகப் போகிறேன்.... சில காலம் அங்கு இருந்துவிட்டு வருவேன். ஒரு மாதமோ, இன்னும் கொஞ்சம் அதிகமோ இருப்பேன்.''

பியோதர் திடுக்குற்றுவிட்டான். அவள் கூறிய சொற்கள் மட்டுமல்ல காரணம்—அவள் குரல் கம்மிப்போய் ஆத்திரமானதாய் இருந்தது, அவள் கண்கள் கவிழ்ந்திருந்தன.

''ஸ்தேஷா, உன்னை நான் அங்கே போகவிட மாட்டேன்.... மாட்டவே மாட்டேன். கொஞ்ச

காலம் பொறுத்திரு, நமக்கு புது இடம் கிடைத்து விடும்; ஒரு தாதியை அமர்த்திக் கொள்ளலாம்.... உன்னை அந்த வீட்டுக்கு நான் போகவிட மாட்டேன். நீ அங்கே போனால் திரும்பவும் நம்மிடையே யாவும் பாழாய்ப் போய்விடும். அந்த வீட்டின் காற்றுகூட அத்தனையும் விஷமாய் இருக்கு. அதை சுவாசித்தவுடனே திரும்பவும் நீ எனக்கு அந்நியமானவள் ஆகிவிடுவாய்.''

''நீதான் விஷமாய் இருக்கிறாய், நீதான் அந்நியமாய் இருக்கிறாய்!''

அவனைப் பார்த்துக் கூச்சல் போட வேண்டும் போலிருந்தது அவளுக்கு. சன்னலுக்கு அடியில் மலர்களையுடைய வீடெல்லாம் வெறுங் கதை, என்றுமே அவர்கள் நிலை இதைக் காட்டிலும் ஒன்றும் மேம்பட்டுவிடாது என்று சொல்ல விரும்பினாள். அவள் சந்தோஷமாய் இருக்க வேண்டுமென அவன் விரும்பினால், அவளை அவன் இங்கே வைத்திருக்கக் கூடாது; அவளுடைய பெற்றோர்களுடன் இருந்தால்தான் அவள் நல்லபடியாக இருக்க முடியும். சுகமாய் வாழ வேண்டிய இடத்தை விட்டுவிட்டு இன்னொரு இடத்துக்குப் போய்க் கஷ்டப்படுவார்களா?... ஆனால் அவள் பேசத் தொடங்குவதற்குள், அவர்களுடைய இரைச்சலைக் கேட்டு குழந்தை விழித்துக் கொண்டு அலறியது. தொட்டிலிடம் பாய்ந்தோடி ஸ்தேஷா அதைத் தூக்கி வைத்து அணைத்துக் கொண்டு புலம்பினாள்: ''ஓல்கா, நம்மைக் கவனிப்பார் யாருமில்லை! நிர்க்கதியாய் விடப்பட்டிருக்கிறோம்! உன்னுடைய அப்பா நம்மைக் காட்

டிலும் அந்த டிராக்டர்களைப் பற்றிதான் அதிக மாய்க் கவலைப்படுகிறார்!''

ரியாஷ்கின்களின் வீட்டிலிருந்து அந்த விஷக் காற்று இங்குங்கூட கசிந்து வந்துவிட்டது. பியோதரால் பேசாமல் மௌனமாயிருப்பது மிகவும் சிரமமாயிருந்தது, ஆனால் பேசியும் பயனில்லை. அவன் எதாவது பேச ஆரம்பித்தால், பெரிய ரகளைதான் ஏற்படும்.

வேலை முடிந்ததும் பியோதர் மேஜை விளக்குக்கு இறுதியில் ஒரு மூடாக்கு வாங்குவதற்காகக் கடைக்கு விரைந்தான்—கண்ணாடி மூடாக்கு; உட்புறம் பால்போல் வெண்மையாகவும், மேற்புறம் கோடையின் முடிவிலுள்ள இலைகளைப்போல் கரும் பச்சையாகவுமுள்ள மூடாக்கு.

தான் வாங்கிச் செல்லக்கூடியதைப் பார்த்து ஸ்தேஷா மட்டற்ற மகிழ்ச்சி கொள்வாளென அவன் எதிர்பார்க்கவில்லைதான். அவள் விரும்பியது மேஜை விளக்கு மூடாக்கல்ல. தன்னுடைய வீட்டுக்கு, தன்னுடைய பெற்றோர்களிடம் போகவே அவள் விரும்பினாள். வாய் பேசாமல், முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு நடமாடினாள் அவள். அறை போட்டது போட்டபடி அலங்கோலமாய் இருந்தது. தன்னுடைய உடை, தோற்றம் இவைபற்றிக்கூட அவள் கவனமின்றி அசட்டையாய் இருந்தாள். ஆனால், பியோதரே, இதையெல்லாம் நீ பொருட்படுத்தாதே, கொஞ்சம் பொறுத்திரு. இயந்திர, டிராக்டர் நிலையத்தில் பெரிய

பெரிய காரியங்கள் நடந்தேறப் போகின்றன. அமைதியான காய்கரொதீஷ்சே கிராமத்துக்குப் பக்கத்தில் குடியிருப்புக் காலனி ஒன்று உதித்தெழப் போகிறது. ஸ்தேஷா இப்பொழுது கடுகடுப்பாய் இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். பொறுத்திருப்பேன், அவள் என்னைவிட்டுப் பிரிந்து அங்கே போகாமல் தடுத்ததற்காக என்னை அவள் போற்றிடப் போகும் காலம் வரும். திரும்பவும் என்னிடம் பிரியமாய் இருப்பாள்; கச்சிதமாகவும் திருத்தமாகவும் பார்ப்பதற்கு நேர்த்தியாகவும் கவர்ச்சியாகவும் இருப்பாள் — ஊரெல்லாம் தேடினாலும் கிடைத்தற்கரிய அருமை மனைவியாக இருப்பாள்!

ஆம், அந்தக் காலம் வரும்.... மாலையில் பியோதர் வீட்டுக்கு வருவான், நிலவொளியுள்ள இரவுபோல் அறை தண்ணொளியுடன் இதமாயிருக்கும், மேஜைமீதுள்ள விளக்கினடியில் ஒரு சிறு திட்டு மட்டும் பளிச்சென வெளிச்சமாயிருக்கும், அதில் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொள்ளும்படி வருந்தியழைப்பது போலிருக்கும். அவன் படிப்பான், அவளையும் படிக்கச் செய்துவிடுவான். காலமெல்லாம் அவள் அவனுக்கு நன்றி செலுத்துவாள்.

தான் வாங்கிவந்ததைக் கையில் இடுக்கிக் கொண்டு படிகளில் ஏறிக் கம்பளிப் பூட்சுகளைத் தட்டி வெண்பனியை உதறித் தள்ளினான்.

யாரையும் காணவில்லை. வர்வாரா ஸ்திப்பானவ்னா அனுப்பி வைத்திருந்த அந்தத் தொட்டில்

காலியாயிருந்தது. ஸ்தேஷாவின் பெரிய கரிய ஒட்டுப்பலகைத் துணிப் பெட்டி அந்த மூலையில்தான் இருக்கும் — அதையும் காணோம். படுக்கையில் இருக்க வேண்டிய மெத்தைப் போர்வையும் மறைந்துவிட்டது—அதுவும் ஸ்தேஷாவினுடைய தே. சிழோவின் அன்பளிப்பான ஒரு கிலுகிலுப்பை கேட்பாரற்று தரை நடுவில் கிடந்தது.

பியோதர் தான் வாங்கிவந்ததை மேஜைமேல் வைத்துவிட்டு, மனம் ஒடிந்துபோய் அப்படியே உட்கார்ந்துவிட்டான்.

உன்னுடைய மேஜை விளக்கு மூடாக்கும், அவளைப் படிக்க வைப்பதென்று நீ போட்டிருந்த திட்டங்களும் என்ன ஆயின.... அவள் போய்விட்டாள்.... அவர்கள் வந்து அழைத்துச் சென்றார்களா, அல்லது அந்தப் பக்கம் செல்லும் லாரி எதாவது கிடைத்ததா—தெரியவில்லை. எப்படியிருந்தால் என்ன? அவள் போய்விட்டாள். கதை முடிந்துவிட்டது. ரியாஷ்கின்களிடம் போய் அவளைத் திரும்பி வரும்படி நான் கெஞ்சப் போவதில்லை. போதமளித்து அவளை முன்னேறச் செய்வதற்கு எனக்குத் தெரியவில்லை என்று வட்டாரக் கமிட்டி சொல்லிக் கொண்டு இருகட்டுமே. என்னால் முடியும் காரியமல்ல அது. அவ்வளவு தான்....

அவன் நெஞ்சு பிளக்கும்படி, திடீரென நினைத்துக் கொண்டவனாய் வேதனையுடன் வாய்விட்டு முனகினான்: ''ஓல்காவையும் தூக்கிக் கொண்டு போய்விட்டாளே!''

இலையுதிர் காலம். வெளிச்சமின்றி சோபை யற்றிருந்த சன்னல்களில் மழைத் தண்ணீர் வழிந் தோடியது.

கோடை முழுதுமே மழையாகத்தான் இருந் தது. ஆகஸ்டு மாதத்தில்தான் மேகமூட்டம் இல் லாத நாட்களைப் பார்க்க முடிந்தது— நீலமயமான நிர்மல வானமும் காய்ந்து கொதிப்பூட்டாமல் கதகதப்பாய் மட்டுமிருந்த கதிரவனும் இனிமை யாயிருந்தன. அந்நாட்களில் சுகப்லீனவோ மக்கள் பயிர் நிலங்களிலிருந்து கொண்டுவர வேண்டிய யாவற்றையும் திரட்டிக் கொண்டுவந்து சேர்த்து விட்டனர். கணக்குப் போட்டுப் பார்த்தபோது, கோடை மோசமானதாகவே இருந்ததென்றாலுங் கூட, அறுவடை சிறப்பானதாகவே அமைந்து விட்டதென்பதைக் கண்டனர்.

இலையுதிர் காலம். மழைத் தண்ணீர் வழிந்தோ டிய சன்னல்கள். வீட்டுக்குள் இருட்டாகவும் அமைதியாகவும் இருந்தது. கணப்படுப்பின் மேலிருந்து பூனை கீழே குதிப்பதுகூட துணுக்குறச் செய்வதாயிருந்தது. ''சனியனே, இங்கே தலை காட்டாதே, ஓடி விடு!''

குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. கிழவரும் கிழவியும் இருப்பதே தெரியவில்லை — தூங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும். இது போன்ற ஒரு மாலையில் வேறு என்ன செய்ய முடியும்? இலை யுதிர் காலம், ஓயாத மழைத் தூறல், தண்ணீர் வழிந்தோடும் சன்னல்கள்.

அந்த சன்னல்களை ஸ்தேஷா வெறிக்கப் பார்த்

துக் கொண்டிருந்தாள். அவள் சிந்தனைகள் எதி லும் நிலைக்காமல் ஓய்ந்துபோய் திரிந்துகொண் டிருந்தன. எல்லாமே இப்படி ஓய்ந்துபோய் அலுப்புத் தட்டுவதாய் உள்ளனவே! சலிப்பும் சோர்வும் தாங்காமல் வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது அவளுக்கு. முன்னமேதான் அழுது பார்த்துவிட்டாளே — பயனில்லை. அவளுடைய சோர்வும் மனச் சுமையும் குறையவில்லையே.

கிராமத்தில் பண்ணை அலுவலகத்துக்குப் பக் கத்தில் மன்றக் கட்டிடம் மின்விளக்குகளின் ஒளி யில் ஜகஜோதியாய் இருந்தது. திரளான மக்கள் உள்ளே குவிந்து கொண்டிருந்தனர். கூட்டுப் பண்ணை அறுவடை விழாக் கொண்டாடியது.

பக்கத்து கிராமம் ஒன்றிலிருந்து பெயர் பெற்ற அக்கார்டியன் வாத்தியக்காரர் ஒருவரை அழைத் திருந்தார்கள். அக்கம்பக்கத்துக் கிராமங்களி லிருந்து இளைஞர்களும் யுவதிகளும் வந்து சேர் வார்கள். பியோதரும் அங்கேதான் இருப்பான். அற்புதமாய் நடனமாடக் கூடியவன், எல்லா நிகழ்ச்சிகளிலும் அவன் முக்கியஸ்தனாய்த் திகழ் வான்.

அவளுக்கு அவன் தவறாமல் பணம் கொடுத்த னுப்பி வந்தான். மகளை ஒருவேளை நினைவில் வைத் திருப்பான், ஆனால் மனைவியை மறந்தேவிட்டான். அவனுக்கு என்ன—நடனமாடுவான், சிரிப்பான், மகிழ்வான். சுதந்திரமானவன், குழந்தை என்னும் சுமையால் கட்டுண்டவனல்ல....கிராம மக்களுக்கு மிகவும் பிடித்தவன், எல்லோரும் அவனைப்

போற்றிப் புகழ்ந்தனர். நூறுவது தடவையாக ஸ்தேஷா தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்: தனது குடும்பம் யாருக்கும் பிடிக்காமற்போன தன் காரணம் என்ன? யாருடைய பொருளையும் அவர்கள் பறித்துக் கொண்டுவிடவில்லை, எதையும் திருடிவிடவில்லை. எல்லோரையும் போலத் தான் அவர்களும் வாழ்ந்து வந்தனர்; யாருக்கும் தீங்கிழைத்துவிடவில்லை;நேர்மையாய் உழைத்துத் தான் ஜீவனம் நடத்தி வந்தனர். தம்மீது யாருக்கும் கோபம் வரும்படி அவர்கள் என்ன செய்து விட்டனர்? இருப்பினும் யாருக்கும் அவர்களைப் பிடிக்கவில்லையே....

''ஏ ஸ்தேஷா! கண்ணே! இருட்டிலே உட்கார்ந்து கொண்டு எதைப்பற்றி அப்படிச் சிந்தனை செய்கிறாய்?'' அட்டகாசமாய்க் கொட்டாவி விட்டபடி அவள் தாய் கணப்படுப்பின் பரணியிலிருந்து இறங்கி கம்பளிப் பூட்சுகளை தரையில் தேய்த்து தத்துபுத்தென்று நடந்து வந்தார். ''விளக்கு ஏற்றி வைக்கிறேன்.''

தூக்கத்தால் சுரந்துபோய், புழுக்கத்தால் வெளிறிட்டிருந்த தன் தாயின் முகத்தை ஸ்தேஷா மங்கலான விளக்கொளியில் பார்த்தாள்.

''மின்விசையுங்கூட இப்படித்தானே ஆயிருக்கு. சிலருக்குக் கிடைத்திருக்கிறது, சிலருக்கு இல்லை. நிர்வாகக் குழுவைச் சுற்றி நின்று தாளம் போடுகிறவர்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைத்து விடுகிறது.''

தனது ஓயாத இந்த முணுமுணுப்பு அவருக்

குங்கூட அலுப்புத் தட்டுவது போல ஒலித்தது கிழவியின் குரல்.

''அம்மா!'' கோபம் பொங்கும் கரகரப்பான குரலில் ஸ்தேஷா குறிக்கிட்டாள்.

''என்ன அது?'' என்று அலெவ்தீனா இவானவ்னா திடுக்குற்றுப்போய்க் கேட்டார். கொஞ்ச காலமாய் அவருடைய மகள் ரொம்பத்தான் மாறிவிட்டாள், படுமோசமாகிவிட்டாள். எந்நேரமும் அழுவதும், தன்னைப் பெற்ற தாயிடமே வெடுக்குவெடுக்கெனப் பேசிச் சீறி விழுவதுமாய் விட்டாள். முன்பெல்லாம் இப்படி இருந்ததே இல்லை அவள்.

''அம்மா.... கிராமத்தில் நம்மை யாருக்கும் பிடிக்கவில்லையே, அது ஏன்?''

''எல்லாம் பொறாமைதான், மகளே, பொறாமைதான் காரணம். பொறாமைதான் எல்லாப் பகைமைக்கும் வித்து.''

''நம்மைப் பார்த்துப் பொறாமைப்படுவதற்கு என்ன இருக்கிறது. நாம்தான் எதிலும் சேராமல் ஒதுங்கியிருக்கிறோம். சோபையின்றி வாழ்கிறோம். எல்லோரிடமிருந்தும் விலகி வேலிகட்டி அடைத்துக் கொண்டு தனியே இருக்கிறோம்.''

''ஸ்தேஷா, இப்பொழுதெல்லாம் என்னால் உன்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை. என் கண்ணே, நீ முன்பிருந்தது போலில்லை, அடியோடு மாறிவிட்டாய்.''

''புரிந்து கொள்ள முடியவில்லையா? அது ஒன்றும் அப்படிக் கடினமானதல்லவே. திருமணம்

செய்து கொண்டேன், என் கணவனை இங்கே அழைத்து வந்தேன். ஓயாமல் அவனைத் தொல்லை செய்து இங்கிருந்து ஓடிவிடும்படிச் செய்தீர்கள். மற்றவர்கள் எல்லோரும் வாழ்வதைப் போல நானும் வாழ விரும்புகிறேன்! ஆனால் நீ இடந்தர மாட்டேன்கிறாய்! இங்கிருந்து போய் என் கணவனுடன் வாழத் தொடங்கினேன். அங்கேயும் வந்து நீ என் காதுக்குள் முணுமுணுத்து அவன்மீது எனக்கு விரோதம் உண்டாக்கினாய். அவன் பேச்சை நம்பாதே, அவன் சொல்வதெல்லாம் பொய் என்று சொல்லி என்னை எந்நேரமும் நச்சரித்தாய்.... நீ சொன்னபடி நான் அவன் பேச்சை நம்பவில்லை— என்ன ஆயிற்று பார்! இயந்திர, டிராக்டர் நிலையத்துக்கு அருகில் என்ன கட்டியிருக்கிறார்கள் பார்! என் விருப்பப்படி என்னை வாழவிட மாட்டேன்கிறாய்! நீங்களும் எதையும் புரிந்துகொள்ள மாட்டேன்கிறீர்கள், என்னையும் இப்படி முட்டாளாக்கித் திண்டாடவிட்டிருக்கிறீர்கள்!''

''அட தெய்வமே! உனக்கு என்ன ஆயிற்று? திரும்பவும் ஏன் கூச்சல் போடுகிறாய்? நீ பேசுவது உன் தாயிடம் என்பதை மறந்துவிடாதே! என்ன பேசுகிறோம் என்று யோசித்துப் பேசு!''

''எல்லாம் யோசித்துப் பார்த்துவிட்டேன்! வேண்டிய மட்டும் யோசித்து விட்டேன்! இனி யோசித்து ஒன்றும் பயனில்லை!''

''கடவுளே, நான் பெற்ற மகளிடமிருந்தே இந்த வயதுக் காலத்திலே நான் பேச்சு வாங்க வேண்டுமா?''

அவர்களுடைய கூச்சலைக் கேட்டு அவள் தந்தை அங்கே வந்துவிட்டார். அவருடைய கடுமை யான பார்வை அவள் மகள்மீது படிந்தது.

''ஸ்தேஷா, திரும்பவும் ஆரம்பித்துவிட்டா யா? உனக்குத் தக்க பாடம் கற்பிக்கிறேனு இல்லையா, பார்!''

''போதிய அளவு நீங்கள் பாடம் கற்பித்து விட்டீர்கள்! உங்கள் பாடங்கள் என் வாழ்க்கை யைப் பாழாக்கிவிட்டன!''

சிலான்திய் பெத்ரோவிச் சீற்றமடைந்து, போதும் என்று சைகை செய்து காட்டினர்.

''குடும்பத்துக்கு வாய்த்த ஒரு பீடை நீ! ரியாஷ்கின்களிடையே சண்டையோ சச்சரவோ இருந்ததே இல்லை. இப்பொழுது நீ அழுது புலம் பாமலும் கூச்சலிடாமலும் இருக்காத நாளே இல்லை.''

''எல்லாம் அவன்தான் காரணம்! அவளுக்குக் கிடைத்த அந்தக் கணவன்! அவளை நச்சுப்படுத்தி விட்டான்! நச்சுப் பாம்பு மாதிரி இங்கே வந்தான், நமக்கு மானக்கேடு விளைவித்து ஒரு குழந்தையை விட்டுவிட்டு ஓடிவிட்டான்! எல்லாம் அவன் செய்த வேலை! அவன்தான் காரணம்!''

''நீங்கள் என் வாழ்வைப் பாழாக்கிவிட்டீர் கள்! பாழாக்கிவிட்டீர்கள்!'' என்று ஸ்தேஷா புலம்பினுள்.

இதே நேரத்தில் மன்றத்து அறையில் அக்கார் டியன் இசை வெள்ளம் பெருகி ஓடிற்று. நாற்புற

மிருந்தும் பியோதரை முன்னே வருமாறு வேண்டு கோள்கள் எழுந்தன. ஆனால் அவன் பிடிவாத மாய் ஒதுங்கி நின்றான். இறுதியில், கூட்டத்தினர் ஒதுங்கி நின்று காலி செய்து கொடுத்த வட்டத்தி னுள் அவன் தள்ளிவிடப்பட்டான். அவன் தோள் களிலிருந்து நழுவிக் கீழே விழுந்த ஜாக்கெட்டை யாரோ ஒருவர் எடுத்துக் கொடுத்து உதவினார்.

இலேசாய் நடுங்கிய கையினால் பியோதர் தன் முடிகளைப் பின்புறம் தள்ளிவிட்டுக் கொண்டான். சுற்றிலும் நெருக்கியடித்துக் கொண்டு நின்றவர்க ளது முகங்களில் தன் பார்வை படாதபடி திருப் பிக் கொண்டு வேண்டுமென்றே சிரத்தையில்லாத வனைப் போல் அந்த வட்டத்தைச் சுற்றி நடந் தான். ஆயினும் யாருக்கும் தெரியாமல் சிறிதுசிறி தாய் நடையைத் துரிதமாக்கி, முடிவில் அக்கார் டியன் வாத்தியக்காரரைப் பார்த்து ''ஆரம்பி!'' என்றான். உடனே அந்த இசைக் கருவி படபடத்து இசைக்க ஆரம்பித்தது. நாதங்கள் அடித்து மோதிக்கொண்டு கிளர்ந்தெழுந்தன. சன்னல் கண் ணாடிகள் எதிரொலித்தன; தளவரிசைப் பலகை கள் பாதத்துக்கடியில் கரகரத்தன; குரல்களின் ரீங்காரம் விம்மிப் பெருகி ஆனந்தக் களிப்பாகி விட்டது. ஆம், வாழ்வெல்லாம் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கவாமுடியும்? எல்லோரும் கொஞ்சம் நகருங்கள், நக்ருங்கள்! எனக்கு இடம் போதாது!

சுற்றிலுமிருந்தோர் தாளம் தவறாது கை தட்டி உச்சத் தொண்டையில் கூச்சலிட்டனர். அவர்களுடைய தோள்கள் புடைத்தெழுந்து

மோதிக் கொண்டன. திடீரென்று பியோதர் தரையைத் தட்டிவிட்டு, வெளிறிட்டு வியர்த்துப் போய், எல்லோர் தலைக்கும் மேலே தொலைவில் உற்றுப் பார்த்தபடி ஆடாமல் அசையாமல் நின்றான். அக்கார்டியன் இசை புலம்பி ஓய்ந்தது. குரல்களின் ஆரவாரம் நின்றது. திடுதிப்பென ஏற்பட்ட அந்த நிசப்தத்தில் பலரும் பெருமூச்சு விடும் சப்தம்கூட காதில் விழுந்தது. பியோதரின் பார்வை சென்ற பக்கம் எல்லாத் தலைகளும் திரும்பின.

வெளியே, மழைநீர் வழிந்தோடிய சன்னல் கண்ணாடியில் அழுந்தியிருந்த ஸ்தேஷாவின் முகம் அரசபுரசலாய்ப் பளிச்சிட்டது....

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2

ஷோ-ரூம்

6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை-1

19/43, பெரிய கடைத் தெரு, கோயமுத்தூர்-1

சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி-8

பஸ் நிலையம், தஞ்சாவூர்

Вл. Тендряков

НЕ КО ДВОРУ

на тамильском языке

Перевод сделан по книге
«Падение Ивана Чупрова. Не ко двору»,
Государственное издательство
художественной литературы,
Москва, 1956 год.

விளாதீமிர் பியோதரவிச் தெந்திரியாக்கோவ் 1923ல் பிறந்தவர். மாபெரும் தேசபக்தப் போரின்போது போர்முனையிலே போராடினார். யுத்தம் முடிவுற்ற பின் மாஸ்கோ எழுத்தாளர் கல்லூரியில் பயிற்சியை முடித்துப் பட்டம் பெற்றார்.

1952ம் ஆண்டு முதலாய் அவருடைய புத்தகங்கள் பலவும் வெளிவந்திருக்கின்றன. **மருமகன், அற்புதம் காணீர், காலத்தின் நடையைப் பின்தொடர்வோம், நீதி விசாரணை, அசாதாரணமானது, இறுதி முடிவு** முதலானவை வாசகர்களால் மிகவும் வரவேற்கப்பட்டு இலக்கியத் துறையில் அவருக்கு வெற்றி கிட்டச் செய்தன.

வி. தெந்திரியாக்கோவ் தமக்கே உரிய கதைப் பொருள்களையும் எழுத்துப் பாணியையும் வாழ்க்கைக் கண்ணோட்டத்தையும் கொண்டு இலக்கியத் துறையில் பணியாற்றி வருகிறார்.